உ

# திருவாரூர்க் கோவை

எல்லப்ப நயினர் இயற்றியது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

இது

குறிப்புரை முதலியவற்றுடன்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

77

சென்னை:

கேஸரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)

விஷு ௵ சித்திரை மீ

Copyright Registered] [விலை ரூ. 1-4-0

1944

40477
M. I. P. PROJECT
Microfilmed

# மேற்கோளாகக் காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு.
அம்பிகா - அம்பிகாபதி கோவை.
அருணைக், அருணைக்கலம் - அருணைக்கலம்பகம்.
ஐங் - ஐங்குறுநூறு.
கந்த - கந்தபுராணம்.
கந்தரலங் - கந்தரலங்காரம்.
கம்ப - கம்பராமாயணம்.
கலி - கலித்தொகை.
குலோத் - குலோத்துங்க சோழன்.
குற்றாலப், திருக்குற்றாலப் - திருக்குற்றாலப் புராணம்.
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு.
குறுந் - குறுந்தொகை.
கைலைபாதி - கைலைபாதி காளத்திபாதி யந்தாதி. [யார்.
சிற் - திருச்சிற்றம்பலக் கோவை
சீவக - சீவகசிந்தாமணி.
சுந்தர - சுந்தரமூர்த்தி நாயனார்
சூ - சூத்திரம். [தேவாரம்.
தக்க - தக்கயாகப்பரணி.
தஞ்சை - தஞ்சைவாணன்கோவை
தண்டி - தண்டியலங்காரம்.
தனிப் - தனிப்பாடல். [பது.
திணைமாலை - திணைமாலை நூற்றைம்
தியாகராச - தியாகராசலீலை.
திருஞா - திருஞானசம்பந்தர் தேவாரம்.
திருநா - திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.
திருவரங்கக் - திருவரங்கக் கலம்பகம்.
திருவா - திருவாசகம்.
திருவால - திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம்.
திருவாரூர் நான்மணி - திருவாரூர் நான்மணி மாலை.
திருவாரூர் மும்மணிக் - திருவாரூர் மும்மணிக்கோவை.
திருவாவடுதுறைக் - திருவாவடுதுறைக்கோவை.
திருவிளை - திருவிளையாடற் புராணம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியர் உரை.
நம்பி - நாற்கவிராச நம்பியகப் [பொருள்.
நள - நளவெண்பா.
நற் - நற்றிணை.
நால்வர் நான்மணி - நால்வர் நான்மணிமாலை.
நாலடி - நாலடியார்.
நெடுநல் - நெடுநல்வாடை.
நேமி - நேமிநாதம்.
பட் - பட்டினப்பாலை.
பட்டினத்துப் - பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.
பரிமேல் - பரிமேலழகர் உரை.
பி - ம் - பிரதிபேதம்.
பிரபு - பிரபுலிங்கலீலை.
பிரமோத்தர - பிரமோத்தர காண்டம்.
புறநா - புறநானூறு.
பெரிய - பெரியபுராணம்.
பெரிய திரு - பெரிய திருமொழி.
பெருங் - பெருங்கதை.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப் படை
பேர் - பேராசிரியர் உரை.
மதுரைக் - மதுரைக்காஞ்சி.
மதுரைக்கலம் - மதுரைக்கலம்பகம்.
மலைபடு - மலைபடுகடாம்.
முத் - முத்தொள்ளாயிரம்.
வெங்கைக், திருவெங்கைக் - திருவெங்கைக்கோவை.

# பொருளடக்கம்


முதற்குறிப்பகராதி ... ... ii

1. முகவுரை ... ... iv—ix

2. திருவாரூர்த் தலச்செய்திகள் ... ... x—xii

3. நூலாசிரியர் வரலாறு ... ... xii—xvii

4. நூலாராய்ச்சி ... ... xvii—xxxii

[திருவாரூர்த்தலம் - காவிரி - சோழநாடு - வன்மீகநாதர் - ஸ்ரீ தியாகேசர் - வேறு சிவதலங்கள் - நாயன்மார் - சாஸ்திரக் கருத்துக்கள் - இதிகாச புராண வரலாறுகள் - உதயணன் - மரம், செடி, கொடி, விலங்கு, பறவை என்பனவற்றின் இயல்புகள் - வழக்கங்கள் - அரிய செய்திகள் - தமிழ் - இசைச்செய்திகள் - நீதிகள் - பழமொழிகள் - சிலவகை வழக்கு - அகப்பொருட் செய்திகள் - குறிப்பு - அணிகள் முதலியன - சொற்றொடர்களும் சொற்களும் - செய்யுள் விகாரம்.]

5. திருவாரூர்க் கோவை மூலமும் குறிப்புரையும் ... ... க - ககரு

6. சிறப்புப்பாயிரம் ... ... ககரு

7. கோளுக்கள் ... ... ககசு - ககக

8. செய்யுள் முதற்குறிப்பகராதி ... ... ககஉ - ககஅ

9. தனிப்பாடல்கள் ... ... ககஅ - உ00

உ

கணபதி துணை

# முகவுரை

சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

"பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே."

திருச்சிற்றம்பலம்

**த**மிழின் பகுதிகளுட் சிறந்ததென்று தொன்றுதொட்டுப் பாராட்டப் பெற்று வருவது பொருளிலக்கணம். அப்பொருள் அகம், புறமென்னும் இரண்டு பகுதிகளையுடையது. அவற்றுள்ளும் சிறந்தது அகப்பொருள். அதனைப் பரிபாடல், "தள்ளாப் பொரு ளியல்பிற் றண்டமிழ்" என கூ-ஆம் பாடலிற் சிறப்பிக்கின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகப்பொருளைப்பற்றிய இயல்களே பெரும்பாலன. பிற்காலத்தெழுந்த இலக்கண நூல்களுள் புறப்பொருளிலக்கணங்களினும் அகப்பொருளிலக்கணங் களே மிகுதியாக உள்ளன. ஆலவாய் இறைவனியற்றிய இலக்கண மொன்றையுடைய பெருமை இவ்வகப் பொருளைச் சார்ந்துள்ளது.

இலக்கியங்களுள்ளும் எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்தும் முற்றும் அகப்பொருட் செய்யுட்களாலேயே அமைந்தன; பரிபாடலிலும் பல பாடல்கள் அகப்பொருளமைதியையுடையன. பிற்காலத்தில் இயற்றப்பெற்ற பிரபந்தச் செய்யுட்களில் அகப் பொருட்டுறை அமைந்தவை பல. பல பிரபந்தங்கள் அகப் பொருட்டுறையையே பொருளாக உடையன. அவற்றுள் தலைமையை

யுடையது கோவை. அகப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாதற் பொருட்டே இவ்வகைப் பிரபந்தங்கள் இயற்றப்பெற்றனவென்று தோற்றுகின்றது. இறையனாரகப் பொருளுரையில் அந்நூலுட் கூறப்படும் இலக்கணங்களுக்கு இலக்கியமாகப் பாண்டிக்கோவை யென்னும் நூலினுள்ள செய்யுட்களும் நாற்கவிராசநம்பி இயற்றிய அகப்பொருள்விளக்கவுரையில் தஞ்சைவாணன் கோவை முழுவதும் காட்டப் பெற்றிருத்தலும், களவியற்காரிகை யென்னும் புனை பெயரையுடைய நூலின் உரையில் திருக்கோவையார், பாண்டிக் கோவை யென்னும் இரண்டிலுமுள்ள செய்யுட்கள் காட்டப் பெற்றிருத்தலும் இக்கருத்தை வலியுறுத்தும்.

அகத்துறைச் செய்யுட்களை இயற்றுவதில் கவிஞர்களுக்குப் பேரார்வம் உண்டென்பதை அவர்கள் தம் நூல்களுள் எங்ஙனமேனும் அவ்வகைச் செய்யுட்களை அமைத்திருத்தலாலும் அகத்துறையமைந்த தனிப்பாடல்கள் பல இயற்றியிருத்தலாலும் உணரலாம். தேவாரத்திலும் பிற சைவத் திருமுறைகளிலும் திவ்யப்பிரபந்தத்திலும் இத்தகைய செய்யுட்கள் பல உண்டு.

அகத்துறைகளைப் பொருட்டொடர்பு அமையும்படி கோவை யாக்கி அவற்றிற்குரிய செய்யுட்களை அமைத்தலின் கோவையென் னும் பெயர் அமைந்தது. பொருட்டொடர்புடையதாதலின் இது பொருட்டொடர் நிலைச்செய்யுளாகும். பொருள்பற்றிக் கோக்கப் பெற்றதைக் கோவையென்று வழங்கும் மரபு பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றன் பெயராகிய ஆசாரக்கோவை யென்பதனாற் புலப்படும். தமிழ்ச்செய்யுட்களை நிரல்பட அமைத்தலைக் கோத்த லென்று வழங்குதல்,“ கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே ” (தக்கயாகப்பரணி) என்பதனால் அறியப்படுதலின் கோவை யென்னும் பெயர் நூலுக்கு ஏற்புடையதாகின்றது.

இக்கோவைநூல்களைச் சமயாசாரியரும், பெருங்கவிஞரும் இயற்றியிருக்கின்றனர். மாணிக்கவாசகர் திருக்கோவையாரை அருளி யதும், கலைமகளின் திருவவதாரமாகக் கருதப்படும் ஒளவையார் அசதிக் கோவையையும், கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் காங்கேயன் நாலாயிரக்கோவையையும் பாடியதும் இதற்கு உதா ரணங்களாம்.

தமிழிற் கோவை நூல்கள் அளவிறந்தனவாகக் காணப்படுகின் றன. இப்பொழுது தெரிவனவற்றுட் பழமையானவை திருச்சிற்றம் பலக்கோவையும், பாண்டிக்கோவையுமாகும். அவற்றின் பின்னே

தலங்களைப்பற்றியும் உபகாரிகளைப்பற்றியும் எழுந்த கோவைகள் பல. தமிழ் நாட்டிலுள்ள பெரிய சிவதலங்களிற் பெரும்பாலனவற்றிற்குக் கோவை நூல்கள் உண்டு. பழங்கோவைகளிற் பொருட்சிறப்பும் சங்கநூற் பொருளமைதியும் காணப்படும். பிற்காலத்துக் கோவைகளிற் சொற்பொருளணிகளும் சாஸ்திரக்கருத்துக்களும் தலவிசேடங்களும் மிகுதியாக உண்டு. ஒரே பொருளமையப் பாடவேண்டியிருத்தலின் இவ்வகை நூற்செய்யுட்களில் வேறுபாட்டு நயம் தோற்றுதற்காகச் சிலேடை, மடக்கு, தொனி முதலிய அணிகளைப் பிற்காலத்துப் புலவர் அமைக்கத் தொடங்கினர் போலும்.

எல்லாத் துறைகளும் அமையப் பாடிய கோவைகள் ஐந்திணைக் கோவையென்றும், ஒரே துறையிற் பல செய்யுட்கள் அமைந்திருப்பவை ஒரு துறைக்கோவை யென்றும் மொழிக்கு முதலாகும் உயிர்வருக்கத்தும் மெய்வருக்கத்தும் ஒவ்வோரெழுத்திற்கும் ஒவ்வொரு செய்யுள் அமைந்திருப்பவை வருக்கக்கோவை யென்றும் கூறப்படும். ஒருதுறைக் கோவைகளில் இதுவரை வண்டோச்சி மருங்கணைதல், நாணிக்கண் புதைத்தல், வெறிவிலக்கென்னும் துறைகளில் அமைந்தனவே உள்ளன.

கோவைப்பிரபந்தம் கட்டளைக் கலித்துறையால் இயற்றப் படவேண்டும். அதில் அமைந்த தமிழ் நூல்களுட் பெரும்பாலன கோவை நூல்களே; ஆதலின் அவ்வகைச் செய்யுளைக் கோவைக் கலித்துறை யென்றே வழங்கலாயினர் (வீரசோழியம், யாப்புப். 17, உரை.) இப்பிரபந்தம் நானூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களை உடையது. பிற்காலத்துக் கோவைகளிற் பெரும்பாலன நாற்கவிராசநம்பி இயற்றிய அகப்பொருளிலக்கணத்தின்படி அமைந்த துறைகளை உடையன. அவ்விலக்கணநூற் சூத்திரப் பகுதிகளையே துறைப் பெயர்களாக அமைத்திருப்பதனால் இது விளங்கும். ஒரே துறையை இரண்டு முதற் பலவாகப் பிரித்தும் சிலவற்றை ஒன்றாக்கியும் அமைத்துச் செய்யுட்கள் இயற்றுதலினாலும், ஒரே துறைக்குப் பல செய்யுட்களை அமைத்தலாலும் இவ்வகைப் பிரபந்தங்களில் ஒன்றனுக்கொன்று செய்யுட்டொகையில் வேறுபடும்.

கோவைகள் கைக்கிளை, களவு, கற்பு என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும் கைக்கிளை முதற் பொருள்வயிற்பிரிவு இறுதியாகவுள்ள 33-கிளவிகளையும் உடையன. இவற்றில் வறிதுநகைதோற்றலென்னும் துறைக்குரிய செய்யுளையன்றிப் பிற செய்யுட்கள் அகப்பொருளிற் கூற்றுக்குடையவர்களாகச் சொல்லப்பட்ட தலைவன் முதலியோர்

கூற்றுக்களாக இருக்கும். வறிதுநகை தோற்றலைக் கவியின் கூற்றாகச் சிலர் அமைப்பர்; சிலர் தலைவன் கூற்றாக்குவர். இக்கூற்றுக்களில் தலைமையையுடையன தலைவன், தலைவி, பாங்கியென்னும் மூவர் கூற்றுக்களே. இவைகளே கோவையிற் பெரும்பகுதியாக அமையும். இவற்றின் தலைமையை அறிந்தே திருவள்ளுவர் தமது திருக்குறட் காமத்துப்பாலில் இம்மூவர் கூற்றுக்களையே அமைத்தனர்.

கோவைகளிற் பாட்டுடைத்தலைவன் களவித்தலைவனென இரு தலைவர்கள் கூறப்படுவார்கள். பாட்டுடைத்தலைவன் நூலாற் புகழப் படுபவன்; அவன் பெயர், வரலாறு முதலியன செய்யுட்களிற் சார்த்து வகையாற் சொல்லப்படும். களவித்தலைவன் கோவையின்பொருட் டொடர்பாகிய வரலாற்றுக்குத் தலைவன்; இவனது இயற்பெயர்கூறல் மரபன்று; வெற்பன், நாடன், விடலை, ஊரன், சேர்ப்பன் முதலிய திணைநிலைப் பெயர்களால் இவன் குறிக்கப்படுவான்.

திருவாரூர்க் கோவையென்பது திருவாரூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ தியாகராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு உண்ணாமுலை எல்லப்பநாயினாரென்னும் புலவர் திலகராற் பாடப்பெற்றது. இது காப்பு, அவையடக்கம் என்பவற்றோடு 517-செய்யுட்களையுடையது; தியாகப் பெருமானுடைய சிறப்பையும் திருவாரூர்த்தலத்தின் பெருமையையும் பலபடப் பாராட்டுவது; சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது.

இந்நூலின் சிறப்பை நான் பல வருஷங்களுக்கு முன்பே அறிந்தேன். மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் நான் பாடங் கேட்டுவந்த காலத்தில் அக்கவிஞர் பெருமான் இதன் செய்யுட்களிற் சிலவற்றைச் சொல்லிச் சொல்லி மனமுருகிப் பாராட்டுவார்கள்.*

நான் பாடங் கேட்டுவந்த காலத்தில் திருவாவடுதுறையிலிருந்த ஒரு தவசிப்பிள்ளையிடமிருந்து கிடைத்த சுவடியொன்றைப் படித்து வந்தேன். பிறகு ஏட்டுச்சுவடிகளைத் தேடியபோது இந்நூற் பிரதிகள் பல கிடைத்தன. அவை வருமாறு:—

1. திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர்கள் பிரதி: இதில் ஒவ்வொரு களவியின் முன்னும் நம்பியகப் பொருட் சூத்திரமும், ஒவ்வொரு செய்யுளின் முன்னும் கொளுவும் காணப் படுகின்றன. இதில் 502-செய்யுட்கள் உள்ளன.

---

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், 2-ஆம் பாகம், பக்கம் 240, பார்க்க.

2. ஷையார் எழுதிய பிரதி ஒன்று: அபூர்த்தியானது.

3. பின்னத்தூர் ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கள் பிரதி ஒன்று: இது மிகப் பழையது.

4. பண்டித ஸ்ரீ சந்தானமையங்காரவர்கள் உபகரித்த பிரதி ஒன்று: இதில் ஒவ்வொரு செய்யுளின் முன்பும் கொளு எழுதப்பட்டுள்ளது; இதிலுள்ள செய்யுட்டொகை, 449.

5. ஜாம்பவானோடைப் பக்கத்தில் 150 வருஷங்களுக்குமுன் இருந்த அம்பலவாண முனிவரென்பவரது பிரதி: மிகப் பழையதாகவும் சிதிலமாகவும் உள்ளது.

6. சேலம் சபாபதி முதலியாரவர்கள் பிரதி: சிதிலமானது.

இவற்றையன்றி அவ்வப்போது கிடைத்த வேறு சில பிரதிகளையும் பார்த்துப் பாடபேதங்களைக் குறித்து அதிகமாக இருந்த செய்யுட்களையும் எழுதிக்கொண்டேன். ஒவ்வொரு துறைக்கும் பல கோவைகளிலுள்ள செய்யுட்கள் தொகுத்து எழுதப்பட்டுள்ள கோவைக்கொத்தென்னும் ஏட்டுச்சுவடியில் திருவாரூர்க் கோவைச் செய்யுட்களும் உள்ளன. அவற்றையும் பார்த்துப் பாட பேதம் குறித்துக் கொண்டேன். இங்ஙனம் பல பிரதிகளிலும் காணப்பட்ட செய்யுட்களைத் தொகுத்துப் பார்த்ததில் 514-செய்யுட்கள் இருந்தன.

இந்நூல் மூலமட்டும் பல வருஷங்களுக்குமுன், ஸ்ரீமான் ஆ. மே. சென்னகேசவலு நாயுடு என்பவரால் அச்சிடப்பெற்றது. அதில் 496 செய்யுட்களே காணப்படுகின்றன. பல பாடல்களில் திருத்தமான பாடம் இல்லை. அதில் விநாயகர் காப்பாக,

> "ஆரூர்த் தியாகர்க் கணிகோவை நீமகிழ்ந்து
> சீருருஞ் சொல்லதனுற் செப்பவே - காரூர்
> கரிமுகத்து மோதகக்கைக் கன்றுனே பாதம்
> பரிவதுற்றுக் காக்குநெஞ்சே பார்"

என்னும் செய்யுளொன்று அதிகமாக உள்ளது.

ஸ்ரீ தியாகேசப் பெருமான் திருவருளால் இந்நூல் குறிப்புரை முதலியவற்றோடு 1937-ஆம் ௵ ஜூலை மாதம் என்னால் முதன் முறையாக வெளியிடப் பெற்றது. கோவையின் பொருட்டொடர்பை அறிந்துகொள்ள வேண்டுவோர் கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்களில் கோடீச்சுரக் கோவைக்கு நான் எழுதியுள்ள பொருட் டொடர்பினுல் அறியலாகும்.

எனக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளில் இரண்டில் மட்டும் காணப்பட்ட கொளுக்கள் தனியே இந்நூலின் பின்னே பதிப்பிக்கப்

பட்டுள்ளன. அவற்றின் உதவியினுற் சில செய்யுட்களின் பொருள்கள் விளங்கின. அவற்றுள் குறிப்புரையில் எழுதப்படாத சில செய்யுட்பொருள் வருமாறு :—

57. "கருத்தக லாதமின் கண்ணுகு மாவிடங் காவிடமே":—கண்மா இடம் ஆகும்; மா இடம் - திருமகளின் உறைவிடமாகிய கடல்.

66. "வளமார் தளிரு மதுவார் கனியும் வடுவுங்கொண்டோர், இளமாவெனநின்றதால்":—கனியென்றது அதரத்தினை.

99. "மாதின் குவிமுலைக் கண்ணு கியதிந்த மன்னர்கண்ணே":—இத்தலைவரின் கண் தலைவியின் நகிலிற் பதிந்து அதன் கண்ணைப் போலாகியது.

கொளுவில்லாத செய்யுட்கள்: 34 (11, 26, 33, 44, 94, 188, 194, 195, 214, 285, 311-2, 336, 344-5, 352, 380, 393, 413, 428-9, 434, 448, 454, 457, 459, 463, 466-8, 470, 485, 487, 494.) இக்கொளுக்கள் திருச்சிற்றம்பலக் கோவையார்ச் செய்யுட்களுக்குக் கொளுக்கள் இருந்தலை நினைந்து ஒருவரால் இயற்றப் பெற்றனவென்று தோற்றுகின்றது. இங்ஙனமே திருவம்பலக் கோவையென்றதொரு நூலிலும் பழனிக்கோவையிலும் கொளுக்கள் காணப்படுகின்றன.

இந்நூலை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து வழக்கம்போல் உதவிபுரிந்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், கலைமகள் ஆசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை,
16-4-1941.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# திருவாரூர்த் தலச் செய்திகள்

திருவாரூரென்பது சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்று; காவிரியின் தென்பாலுள்ளது. இதற்குரிய தேவாரப்பதிகங்கள் : 34 (திருஞா. பதிகம், 5; திருநா. 21; சுந்தர. 8.) திருவாசக முதலிய பலவற்றிலும் இத்தலம் மிகவும் பாராட்டப்பெற்றுள்ளது.

பதினோராந் திருமுறையில் உள்ள சேரமான்பெருமாள் நாயனார் இயற்றிய திருவாரூர் மும்மணிக்கோவையும், பெரிய புராணத்தி லுள்ள திருவாரூர்ச் சிறப்பும் இத்தலப்பெருமையை நன்கு விளக்கும்.

திருவாரூர் அரநெறி, பரவையுண் மண்டளியென்பனவாகிய பாடல் பெற்ற வேறு இரண்டு ஸ்தலங்கள் இதனிடத்தே உள்ளன.

இத்தல சம்பந்தமாக உள்ள பிற தமிழ் நூல்கள் வருமாறு :—

1. கமலாலயச் சிறப்பு: இது வடமொழியிலுள்ள கமலாலய மாஹாத்மியமென்பதன் மொழிபெயர்ப்பு; சிதம்பரம் ஸ்ரீமறைஞான சம்பந்தரென்பவரால் கி. பி. 1547-ஆம் வருஷம் (சகவருஷம் கசசகக) இயற்றப் பெற்றது;

2. திருவாரூர்ப் புராணம்: நிரம்பவழகிய தேசிகருடைய மாணாக்கராகிய அளகைச்சம்பந்தரென்பவரால் நாகரகண்டமென்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகச் செய்யப்பெற்றது; இந்நூல் கி.பி. 1592-ஆம் வருஷம் (சகவருஷம் கருகச) அரங்கேற்றப் பெற்றது;

3. தேரூர்ந்த சோழ புராணம்: மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலிலிட்டு ஊர்ந்த வரலாற்றைக் கூறுவது;

4. தியாகராச லீலை: திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் கி. பி. 1845-ஆம் வருஷம் இயற்றப்பெற்றது; தியாகராசப் பெருமான் இயற்றிய 360 லீலைகளுள் முதல் 13 லீலைகளையும் 14-வது லீலையின் முற்பகுதியையும் உடையது;

5. திருவாரூர் நான்மணிமாலை: ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் இயற்றியது ;

6. தியாகராசர் பள்ளு : 16-ஆம் நூற்றூண்டில் கமலை ஞானப் பிரகாசர் இயற்றியது ;

7. தியாகராசர் குறவஞ்சி : பதினேழாம் நூற்றூண்டில் இயற்றப்பெற்றது;

8. திருவாரூர்ப் பன்மணிமாலை : இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் பாடியது ;

9. திருவாரூர் ஒருதுறைக்கோவை : வெறிவிலக்கென்னும் துறையில் அமைந்த நானூறு செய்யுட்களையுடையது ; கீழ்வேளூர்க் குருசாமி தேசிகரென்பவர் இயற்றியது ;

10. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ் ;

11. திருவாரூர் மாலை ;

12. கமலாம்பிகை மாலை ;

13. தியாகராசர் கழிநெடில் ;

14. தியாக வசந்தக் கலிப்பா ;

15. திருவாரூர் உலா : அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது.

இவற்றையன்றிப் பல தனிப்பாடல்களும் வடமொழி தென் மொழிக் கீர்த்தனங்களும் உண்டு.

வடமொழியில் இத்தலவரலாறுரைக்கும் நூல்கள் : (1) அஜபா ரஹஸ்யம், (2) ஆடகேச்வர மாஹாத்மியம், (3) கமலாலய மாஹாத் மியம், (4) நாகரகண்டம், (5) தியாகராஜ லீலை, (6) சமத்காரபுர மாஹாத்மியம், (7) தியாகராஜ மாஹாத்மியம், (8) தேவயாகபுர மாஹாத்மியம், (9) தேவாச்ரய மாஹாத்மியம், (10) முசுகுந்தபுர மாஹாத்மியம், (11) ராமகயா மாஹாத்மியம், (12) ஸ்ரீபுர மாஹாத் மியம், (13) ஸ்கந்தபுர மாஹாத்மியம், (14) க்ஷேத்திரவர மாஹாத் மியம் என்பன.

இத்தலத்துக்குரிய ஆகமம் காமிகம்.

விராட்புருஷனுடைய மூலாதாரமெனவும், பூமிதேவியின் இதய கமலமெனவும், பஞ்ச பூதத் தலங்களுள் பிருதிவித்தல மெனவும், தேவர்கள் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இட மாகக் கொண்டு இறைவன் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளின மையின் வன்மீகபுரமெனவும், தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தருவதெனவும், தன்னிடமுள்ள உயிர்க

ளெல்லாம் சிவகணங்களாதலின் ஸ்பரிச தோஷம் முதலியன இல்லாத தெனவும், நன்றிகொன்ற பாவத்தையும் தீர்க்கும் பெருமை வாய்ந்த தெனவும், ஸ்ரீ காசிக்கும் தில்லைக்கும் மேலானதெனவும், ஸப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும், அம்பிகை தவஞ் செய்தமை யின் பராசக்தித் தலமெனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமையால் கமலாலயம் ஸ்ரீபுரம் எனவும், வீதி விடங்கராகிய ஸ்ரீ தியாகேசர் எழுந்தருளியிருத்தலின் வீதி விடங்கமெனவும் இத் தலம் கூறப்படும்.

சோழ அரசர்கள் முடிகவித்தற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன் ருக இருந்ததன்றி அவர்களுடைய இராசதானியாக உள்ளதும், சங் கர சேவகனென்னும் சோழமன்னனது வேண்டுகோளின்படி ஸ்ரீ தியாகேசர் அரச வடிவந்தாங்கிப் பல வருடங்கள் அரசாட்சி செய்தது, மனுநீதிச் சோழர் ஒரு பசுவின் குறையைத் தீர்த்தற்பொருட்டுத் தம் செல்வப் புதல்வன்மீது தேரைச் செலுத்தித் திருவருளை வெளிப் படுத்தியது, ஸ்ரீ தியாகேசர் 'பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பால் தூதன்று' சென்றது, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தது ஆகிய நிகழ்ச்சி களுக்கு இடமாக உள்ளதும் இத்தலமே.

கழற்சிங்க நாயனர், செருத்துணை நாயனர், சோமாசி மாறர், தண்டியடிகள் நாயனர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடி கள், விறன்மிண்ட நாயனரென்பவர்கள் இங்கே வழிபட்டுப் பேறு பெற்றனர்.

ஸ்தல விநாயகர் :—வாதாவி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர் முதலியோர்.

ஸ்வாமியின் திருநாமங்கள் :—புற்றிடங்கொண்டார், வன்மீகநாதர் முதலியன.

அம்பிகைகள் இருவர் :—(1) கமலாம்பிகை, (2) அல்லியங் கோதை,

ஸ்தலத்தின் மற்றைத் திருநாமங்கள் :—ஆடகேச்வரம், கலி செலாநகரம், சத்திபுரம், சமற்காரபுரம், தேவயாகபுரம், தேவாசிர யம், முசுகுந்தபுரம், மூலாதார நகரம், ஸ்ரீ நகரம், ஸ்கந்தபுரம் முதலியன.

தீர்த்தங்கள் :—உருத்திரகோடி, கயை, சங்கதீர்த்தம், சர்வதீர்த் தம், சூரிய புட்கரிணி, தேவதீர்த்தம், வாயுதீர்த்தம், விசுவாமித்திர

தீர்த்தம் முதலியன. இவற்றுள் தேவதீர்த்தமென்பது கமலாலய மென்றும் கூறப்படும். இதன் நாற்புறத்தும் கூச-கட்டங்கள் உள்ளன. பண்டைக் காலத்தில் இதில் ஒரு யாகம் நடந்தபொழுது நடுவநாயன ரென்னும் சிவலிங்கப் பெருமான் பரிவாரங்களுடன் இதன் இடையே பிரதிஷ்டிக்கப் பெற்றாரென்று திருவாரூர் மாலையால் தெரி கின்றது.

வழிபட்டுப் பேறு பெற்றோர் :—அகத்தியர், அசன், அரிச்சந்தி ரன், இடையனொருவன், இந்திரன், இராமன், கருணாகரத் தொண்டை மான், குலிசராசன், கேமசருமன், கோகரணர், கோடிமுனிவர், சங்க முனிவர், சண்டதருமன், சமற்காரவரசன், சனகாதிநால்வர், சித்த ரொருவர், சித்தீசனென்னுமரசன், தசரதர், தசார்ணவதேசத்தரசன், திரிசங்கு, திருடனொருவன், திருமகள், திருமால், துருவாசர், நளன், பசுவொன்று, பட்டினசாமி என்னும் வணிகன், பதஞ்சலி, பிரமர், மனுநீதிச்சோழர், முசுகுந்த சக்கரவர்த்தி, மூன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தங்கள், மன்மதன், மேனகை, வாணாசுரன், விசுவா மித்திர முனிவரென்பவர்கள்.

ஸ்ரீ வன்மீகநாதர் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் திரு மூலட்டானமென்றும் பூங்கோயிலென்றும் கூறப்படும்.

ஸ்ரீ தியாகராசர் :—இவர் முதலில் திருப்பாற்கடலில் திருமாலால் வழிபடப்பெற்றுப் பின்பு அவரால் இந்திரனுக்கும் பின்பு அவனால் முசுகுந்த சக்ரவர்த்திக்கும் அளிக்கப்பெற்று அப்பால் அவ்வரசனால் இத்தலத்திற்கு எழுந்தருளியவர். இவர் அராக்கச்சையையும் ஆடரவக் கிண்கிணிக்காலையும் தியாகவிநோதமென்னும் பரிவட்டத்தை யும் உடைவாளையும் உதர பந்தனத்தையும் வீரகண்டயமென்னும் வாளையும் தலைச்சீராவையும் உடையவர். மேற்கூறிய பரிவட்டம் ஐந்து கோடுகளையுடையதாய்த் தியாகவன்னமெனவும் இக்காலத்தில் வழங்கும்.

இவருடைய திருநாமங்கள் :—அசைந்தாடிய பெருமான், அடிக் காயிரம் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியும் ஆடுவார், அருமைப் பெருமாள், இரத்தின சிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கம்பிக்காதழ கர், கருணாகரத் தொண்டைமான், கனகத்தியாகேசர், கிண்கிணிக் காலழகர், செங்கழுநீர்த்தாமர், செம்பொற் சிங்காதனாதிபதி, செவ்வந் தித் தோட்டழகர், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமாள், திருவந்

திக் காப்பழகர், மணிக்தண்டிலசைந்தாடிய பெருமான், முன்னிலும் பின்னழகர், வள்ளல், வீதிவிடங்கப் பெருமானென்பனவும் இவற்றின் பரியாயப் பெயர்களுமாம்.

திருவிழா :—மாதந்தோறும் இதில் நடைபெறுமாயினும் மார்கழி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் நடைபெறும் திருவிழாக்களே மிக்க விசேடமுடையன ; "முந்து விதானம்" என்னும் தேவாரப் பதிகத்தால் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின் பெருமை நன்கு புலப்படும்.

பாத தரிசனம் :—மார்கழித் திருவாதிரையும் பங்குனி யுத்தரமும் ஸ்ரீ தியாகேசருடைய பாத தரிசனத்திற்குரிய விசேட காலங்கள்.

நடனம் :—ஹம்ஸ நடனம், அஜபா நடனம், நாதாந்த நடனம், புயங்க நடனம் என்று இவர் நடனம் பாராட்டப்பெறும்.

தேவ சபை :—இது தியாகேசர் எழுந்தருளியிருக்குமிடம்.

திருச்சாலகம் :—இது தென்றல் தவழ்ந்து வருவதற்கு ஸ்ரீ தியாகேசருக்கு நேரே தென்பாற் சுவரில் அமைக்கப் பெற்றுள்ள கற்பல கணி.

வாத்தியங்கள் :—சுத்த மத்தளம், பஞ்சவாத்தியங்கள், பஞ்சானன முரசு முதலியன.

மாணிக்கத்தண்டு :—இஃது இவரை எழுந்தருளப் பண்ணும் பிள்ளைத்தண்டு அல்லது திருவாடுதண்டிற்கு உரிய பெயராக அமைந்துள்ளது.

பச்சைக்கருப்பூரம் :—மற்றைத் தலங்களில் ஸ்வாமி திருத்தேருக்கு எழுந்தருளும் தினத்தின் முதல்நாளில் கிருஷ்ண கந்தம் சாத்தப்படுவதுபோல் இவருக்கு அத்தினத்திற் பச்சைக் கருப்பூரம் சாத்துதல் மரபு.

தியாகக் கோடி :—இவருடைய துவசம் இப்பெயரால் வழங்கும்.

ஆழித்தேர் :—இஃது இவருடைய திருத்தேரின் திருநாமம் ; "ஆழித்தேர் வித்தகனை யான்கண்ட தாரூரே" என்பது தேவாரம்.

இடபதேவர் :—இவர் தியாகேசருடைய சந்நிதியிலுள்ள திருநந்தி தேவர். நின்ற திருக்கோலமாகவே உள்ளார்.

திருவந்திக்காப்பு :—இவருடைய ஆராதனைக் காலங்களுள் திருவந்திக்காப்பு மிக்க விசேடமுடையதென்பர்.

தேவாசிரயம் :—தரிசனத்திற்கு வரும் தேவர்கள் முதலியோர் சமயம் பார்த்துக்கொண்டு தங்கியிருத்தற்கு முன்பு இடமாக இருந்ததென்றும், அந்த இடத்தில் இப்பொழுது ஆயிரக்கால் மண்டபமுள்ளதென்றும் சொல்லுவர்.

திருவீதிகள் :—(க) அடிமுடி நேடிய திருவீதி, (உ) செந்தாமரை நாறிய திருவீதி, (ங) பொன் பரப்பிய திருவீதி, (ச) புகழாபரணத் திருவீதி என்று சில திருவீதிகளின் பெயர்கள் இத்தலத்தில் வழங்கும்.

ஐந்து வேலி :—இத்தலத்திற் கோயில், குளம், செங்கழுநீரோடை என்பவற்றுள் ஒவ்வொன்றும் ஐவைந்து வேலியாக உள்ளதென்பர்.

இத்தலத்திற் பல பெரிய வடமொழி தென்மொழி வித்துவான்களும், சைவசமயநூல் வல்லவர்களும், சைவப் பெரியார்களும், சங்கீத வித்துவான்களும், தொண்டர்களும் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தனர். இதில் அவதரித்த பல பெரியார்கள் தமிழ், வடமொழி, சங்கீதம், சமயம் முதலிய துறைகளில் தம்முடைய அறிவுத்திறனை வெளியிட்டிருக்கிறார்கள்.

---

# எல்லப்ப நயினர்

இந்நூலின் ஆசிரியராகிய * எல்லப்ப நயினரென்பவர் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலே விளங்கியவர்; பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் ஒருங்கு வாய்ந்தவர்; தென்மொழி

---

*தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தமிழ்ப்பண்டிதராக இருந்த ஸ்ரீ திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகரெழுதிய 'பதினாறும் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் வரலாறு' என்னும் நூல் இதனை எழுதுவதற்கு உதவியாக இருந்தது.

வடமொழியென்னும் இரண்டிலும் வன்மை பெற்றவர். இவரது இருமொழிப் புலமை,

"முத்தமிழ்க் கோவைசெய் தான்வட சொற்களுக்கும்
புண்ணியான வன்திரு வுண்ணு முலையெல்ல பூபதியே"

என்னும் இந்நூற் சிறப்புப்பாயிரப் பகுதியால் வெளியாகின்றது.

இவர் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள தாழைமா நகரிலே பிறந்தவர்; திருவண்ணாமலைத் தலத்திலே பேரன்புடையவராக இருந்தார்; அத்தல புராணத்தையும், அருணையந்தாதி, அருணைக்கலம்பக மென்பவற்றையும் இயற்றினர். அவற்றையன்றித் திருவிரிஞ்சைப் புராணமும், தமிழ்ச் சௌந்தரியலகரியின் உரையும் இவரால் இயற்றப் பெற்றன.

எல்லன், எல்ல நயினன், எல்ல பூபதி, உண்ணுமுலை யெல்லப்ப நயினரென இவர் வழங்கப்படுவார். இவர் காலிங்கராயன் கோத்திரத்தவராதலின் காலிங்கராயன் உண்ணுமுலை எல்லப்ப நயினரெனவும், எல்லன் காலிங்கனெனவும் குறிக்கப் பெறுவதுண்டு. இவராற் பாடப்பெற்ற சில செய்யுட்களும் இவரைப் பாராட்டிப் பாடப்பெற்ற சில செய்யுட்களும் சிலாசாஸனங்களிற் காணப்படுகின்றன. இவர் சில தலங்களிற் சில திருப்பணிகள் செய்வித்திருக்கின்றனர்.

இக்கவிஞர்பால் வெறுப்புக்கொண்ட பரமேசுவரப் புலவரென்பவரொருவர் அக்காலத்தில் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தனர். இவ்விருவரும் ஒருவரை யொருவர் இழித்துப் பாடிய இரண்டு செய்யுட்கள் தமிழ்நாவலர் சரிதையில் உள்ளன.

இவர் அடக்கமென்னும் அருங்குணமுடையவரென்பதை இக்கோவையிலுள்ள அவையடக்கச் செய்யுட்கள் புலப்படுத்தும்.

முருகக் கடவுளிடத்திலும் இவர் பேரன்புடையவரென்பதை,

"கதையா யிதுசொல்லப் போதுநங் காவிற் களிறுபுக்காற்
சிதையா தனதழை கண்டறி யேஞ்செங்கை வேலர்போற்றுள்
இதயார விந்தத் திருத்திய காலிங்க னெல்லன் வெற்பில்
மதயானை யைத்தழை யேசெற்ற தாமிவர் வல்லபமே"

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. இந்நூலுக்குக் காப்புரைக்கையில்

விநாயகக் கடவுளோடு 'வானவரைக் காக்குமயில் வாகனக்' கடவுளை யும் கூறுதலும், தலைமகள் மணம்பொருட்டாகத் துர்க்கையைப் பர வியதாகப் பிறர் கூறியிருப்ப இவர் செவ்வேளைப் பரவியதாகக் கூறு தலும் (340), நற்றாய் கூற்றில்,

"..................................மயில் வாகனனை
வேந்தனைச் சேந்தனை வேலா யுதனைச்செவ் வேளைவள்ளி
காந்தனை"

என முருகக்கடவுளைப் பாராட்டிக் கூறுதலும் (361), செவிலி தெய் வம் வாழ்த்தலென்னும் துறையில் (386) அவள் முருகக் கடவுளை வேண்டுவதாகக் கூறுதலும் இக்கருத்தை வற்புறுத்தும். இவர் முரு கக் கடவுள்மீது தனியே இயற்றிய சில பிரபந்தங்கள் இருத்தலும் கூடும். அவை இப்பொழுது கிடைக்கவில்லை.

இந்நூலை ஆராயும்பொழுது, இவர் சொல்லணி பொருளணிகளை எளிதில் அமைத்துக் கவிபாடும் ஆற்றலுடையவரென்பதும், எதுகை மோனை முதலியன வருத்தமின்றிப் பாடும் போக்கிலே அமையும் நாவன்மை யுடையவரென்பதும், சிவபக்தி அடியாரிடத்தன்பு முத லிய நற்குணங்களுடையவரென்பதும் புலனாகின்றன. இவருடைய கவித்துவம் மிகச் சிறந்ததாக இருத்தலின் இக்கோவையை, 'அருட் கோவை' என்று சிறப்புப்பாயிரம் பாராட்டுகின்றது. தஞ்சைவாணன் கோவைப் பிரதிகள் சிலவற்றில் அக்கோவைச் செய்யுளில்லாத சில துறைகளுக்கு இக்கோவைச் செய்யுட்கள் அமைக்கப் பெற்றிருத் தலும் இதனுடைய பெருமையை விளக்கும். இந்நூற் செய்யுட்களுக் குரிய பாடபேதங்கள் மற்றக் கோவைகளைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர் கள் யாவரும் இக்கோவையின்பால் அன்புற்றுப் பெற்றுப் படித்து வந்தார்களென்றும், அங்ஙனம் பலராற் படித்து மனனம் செய்யப் பெற்ற காரணத்தால் பாடபேதங்கள் அதிகமாயினவென்றும் கருத இடமுண்டு.

இவ்வாசிரியருடைய புலமைத் திறத்தைப் பின்னுள்ள நூலா ராய்ச்சியினால் ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

---

# நூலாராய்ச்சி

திருவாரூர்க் கோவையாகிய இந்நூலில் திருவாரூர்த்தலத்தின் செய்திகளும், அகப்பொருட் செய்திகளும், அரிய பல விஷயங்களும், எதுகை மோனை நயங்களும், சொல்லணி பொருளணிகளும் அங்கங்கே விரவிப் பலவகைச் சுவைகளை அளித்து நிற்கின்றன.

## திருவாரூர்த் தலம்

தலச்செய்திகளைச் செய்யுட் போக்கிலே சொற்பொருள் நயத்தோடு தொடுத்து அமைத்தல் இக்கோவையாசிரியர் இயல்பு.

திருவாரூர்த் தலத்தின் பெயர்களுள் ஒன்றாகிய கமலாலயம் (147, 290, 444) என்பதும், அதன் மரூஉவாகிய கமலை (2, 150, 195) என்பதும் இதிற் பலவிடங்களிற் காணப்படுகின்றன. இதன் பழமையை இக்கோவையாசிரியர்,

"கற்ப கோடியினும், அழியா நிலைபெற்ற வாரூர்" (134),
"திருவீற் றிருக்கும், முன்னே யிடங்கொண்ட வாரூர்" (172)

என்று வெளியிடுகின்றார்;

"திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

என்பது தேவாரம்.

இத்தலத்திற் பிறந்தார் நற்பேறு பெறுவரென்னும் ஐதிஹ்யம்,

"அறந்தான் மிகவும் புரிந்தார் பெறும்பய னத்தனையும்
பிறந்தார் பெறுந்திரு வாரூர்" (216)

என்பதிற் சொல்லப்படுகின்றது. பிறந்தார் முத்தி பெறுவதற்குரிய ஆரூரும் இறந்தார் முத்தி பெறுவதற்குரிய காசியும் ஒருவகையில் இனமாதலின் இவ்விரண்டு தலத்தையும் ஒருங்கெடுத்துக் கூறுதல் மரபு; இதனை,

"காசி யுடன்புக ழாரூர்" (388)

என்று வெளிப்படுத்துவர்.

இங்குள்ள குளம் வாவி மதிலென்பன தனித்தனியே ஐவைந்து வேலி யளவுடையன வென்னும் செய்தி,

" ... ... ... ... குளம் வாவிமதில்
ஐவேலி யாந்திரு வாரூர்" (209)

என்பதிற் சொல்லப்படுகின்றது.

சிறந்த தலமாகிய இதன்கண் ஸ்ரீ தியாகேசப்பெருமானது ஆலயத்திலும் மற்ற இடங்களிலும் வேத கோஷமும் ஆகம முழக்கமும் இசையொலியும் நிரம்பி விளங்கின; இது 'சைவ சமயத்தை வளர்க்கும் தாயகமோ!' என்று யாவரும் வியக்கும்வண்ணம் அமைந்திருந்தது. ஆதலின் இங்கே வந்து ஈடுபட்ட ஆசிரியர் வேதத்தின் ஒலியைக் கேட்டு,

" ஆர விருக்கொலி யாரூரர்" (135)

என்றும், சைவாகமங்களின் முழக்கத்தைக் கேட்டு,

" ... ... ... ... திரு வீதிதொறும்
சைவா கமந்திக ழாரூர்" (43),

" கிள்ளை, சைவாக மஞ்சொலு மாரூர்" (227)

என்றும் பாடுகின்றார். இத்தலத்திற் சைவத்தின் உயர்நிலை கண்டு,

" சைவந் தழைத்திடு மாரூர்" (341)

என்று பாராட்டுகின்றார்.

தம் காலத்தே இத்தலத்திற் கேட்ட கீதவிசையைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்,

" கெண்டைகொண் டலர்ந்தகண்ணி னார்கள்கீத வோசைபோய்
அண்டரண்ட மூடறுக்கு மந்தணாரூர்"

எனப் பாடியருளினார். இவ்வாசிரியரோ, இயற்றமிழும் இசைத்தமிழும் ஒன்றனோடொன்று கலந்து கேட்டார் செவியிலும் உள்ளத்திலும் முழங்குவதை யறிந்து,

" இயலோ டிசைமுழங் காரூர்" (267)

எனப் பாடுகின்றார். சுந்தரமூர்த்தி நாயனார்,

" யாழ்முயன் றிருக்கு மாரூர்"

என்று பாடினார்; இவர்,

" வீணைக் குலமுழங் காரூரர்" (14)

என்று பாடுகின்றார்.

## காவிரி

இவ்வாரூர் * 'காவிரிக் கோட்டினில் திகழ்வது' (357) ஆதலின், அக்காவிரி பலவிடங்களிற் பாராட்டப்பெறுகின்றது. சையமலையிலிருந்து இழிதரும் காவிரிநதி (417) இருகரையும் பொருது அலைத்து (501) வெண்சங்கைப் பந்தாடியும் (38), தன் திரையில் தவழும்படி சுமந்தும் (41), அச்சங்கு சூலோடு உலவி (206) முத்தை உயிர்ப்ப (34) அம்முத்தைக் கரையினிற் சேர்த்தும் (357) திருவாரூரைச் சூழ்ந்து (85, 137, 502) உலவுவதை இக்கவிஞர் புகழ்கின்றார். அவ்வாற்றில் உலவும் கயல்கள் மங்கையர் விழிகாட்டுவதும் (112), அதன்கண் அன்னங்கள் மேவிப் படிவதும் (164) சொல்லப்படுகின்றன.

பொய்யாத நீர்ப் பெருக்குடையதென்று காவிரியைப் பண்டைப் புலவர் போற்றுவர். இவரும்,

"காவிரிநீர் பொய்யா நூலவும்" (281)

என அமைக்கின்றார். இங்ஙனம் காவிரியின் பொய்யாத் தன்மையை வெளிப்படையாகத் தெரிவிக்கும் இவர் பிறிதோரிடத்தில், 'பொய்யாத காவிரியையுடைய தலைவர் பொய்யார்' என்னும் பொருள் குறிப்பிற் புலப்படும்படி,

"... ... ... ... நிறைபுனற்கா
வேரியர் பொய்ப்பரன் றேநெஞ்ச மேசொன்ன மெய்ம்மொழியே" (31)

என்று கூறுகின்றார். காவிரியை ஆரூருக்கு விசேடணமாக்கிப் புகழ்வதன்றி இங்ஙனமே துறையிற் கூறப்படும் செய்தியோடு இணைத்துப் பாராட்டுதலை வேறு சில செய்யுட்களிலும் காணலாம்:

பாங்கி தலைவன் தந்த கையுறையை மறுக்குங்கால், 'நீ காவிரியில் உலவும் வலம்புரி யீன்ற முத்தினாலாகிய மாலையைத் தரினும் வாங்கேம்' எனக் கூறுவதாகவுள்ள,

"மடைகாட்டும் பொன்னி வலம்புரி யீன்ற மணிதொடுத்த
தொடைகாட்டி னும் தொடோம்" (119)

என்னும் செய்யுட்பகுதி காவிரியின் பெருமையை விளக்குகின்றது.

---

* காவிரியின் பிரிவுகளையும் காவிரியாகவே கூறுதல் மரபு; திருவாரூரிற் காவிரியிலிருந்து பிரிந்துவரும் ஓடம்போக்கியாறு உள்ளது.

தகையணங் குறுத்தலென்னும் துறைச்செய்யுளில்,

“ பாஞேயு நீற்றின ராரூர்த் தியாகர் படைத்தபொன்னி
ஆஞேடு கங்கை குமரியின் மூழ்கின ராயிழையாய்
வேஞேர் பிறப்பிலன் ஞேவணங் காவர் ” (78)

என்னும் பகுதியில், காவிரியில் மூழ்கினவர் சுவர்க்கபதவியை அடைவரென்னும் செய்தி சொல்லப்படுகின்றது. இதன்கண் கூறப்பட்ட மூன்று தீர்த்தங்களில் காவிரியை முதற்கூறியது அதற்கொரு தலைமையைக் காட்டுதற்பொருட்டேயாகும்.

வாயில் மறுக்கப்பட்ட பாணன் தலைவனை நோக்கி, ‘ தலைவியின் தோழியர் என்மேல் எறிந்த கற்களின் தொகுதியைக் கொண்டு காவிரி நதிக்கு அதன் தொடக்கமுதல் கடலொடு கலக்கு மிடம் வரையிற் கரைபோடலாம்’ (461) என்று கூறுவதாகவுள்ள பகுதியால் காவிரி மிக நீண்ட தென்பதும், அதற்கு ஒரு காலத்திற் கரை போடப்பட்டதென்பதும் குறிப்பிக்கப்படுகின்றன.

## சோழ நாடு

இத்தகைய சிறப்பெய்திய காவிரியினுல் வளம் பெருக்கப்படும் சோழ நாட்டைக் காவிரி நாடென்றே பலகாலும் (148, 178, 211, 285, 288, 311, 343, 417, 426, 440, 480, 500) கூறுவர். காவிரிப்புனல் பாயும் நாடாதலின் புனனுடென்னும் பெயர் அது பெற்றதை,

“ ..............................உயர்ந்த பொன்னித்
திரையோ விடும்புன னுடு ” (68)

என்று ஒருவாறு குறிப்பிப்பர். அந்நாட்டை அகளங்க நாடென்பர் (31, 452); அதற்குத் திருவாரூர் அணியாகத் திகழ்வதென்பர் (307) ; அந்நாட்டுக்குரிய நேரிமலையைப் பாராட்டுவர் (21, 31, 363, 368, 389, 508.)

## வன்மீகநாதர்

திருவாரூர் மூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்தியை,

“ வன்மீக நாதர் ”,
“ புற்றிடத்தே வேர்கொண்டிருப்பவர் ” (1),
“ புற்றி லமர்ந்தவர் ” (237),
“ மென்புற் றமர்ந்தவர் ” (248),
“ புற்று லயங்கொண்ட வாரூரர் ” (399)

எனப் புகழ்வர். தேவர்கள் கறையானாக வந்து அமைத்த புற்றில் அப்பெருமான் எழுந்தருளியிருப்பவ ரென்பதை,

" செல்வாய் திருத்திய வன்மீக நாதர் " (94)

என்பதில் தெரிவிப்பர்.

## ஸ்ரீ தியாகேசர்

ஸ்ரீ தியாகராசரை அசைந்தாடிவருபவர் (414, 452), அஞ்சப் பாதத்தவர் (256), அடிக்காயிரம்பொன் அளிப்பவர் (59, 372, 475), அருமைப் பெருமாள் (காப்பு), ஆடரவக்கிண்கிணிப்பாதத்தர் (193), கம்பிக்காதழகர் (176, 331, 439), கமலேசர் (459), செம்பொற்றியாகர் (3 முதலியன), செவ்வந்தித் தோட்டார் (6), தியாகப் பெருமாள் (காப்பு), தியாகவிநோதர் (235), திருந்திறைக் கோலத்தர் (379), தேவரகண்டர் (66 முதலியன), மணிச்சிங்காதனத்தினர் (497), வீதிவிடங்கர் (காப்பு, 1, 126, 137) என்னும் திருநாமங்களாற் பரசுவர். அவருடைய தண்டைக்காலும் (513), திருநடனமும் (288), திருத்தேரும் (475), தியாகக் கொடியும் (143, 262) பாராட்டப் பெறுகின்றன.

அப்பெருமான் சுந்தர மூர்த்தி நாயனாருக்காகத் தூது சென்றதும் (40, 99, 142, 226, 482, 483), அந்நாயனார் ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தே வரச்செய்ததும் (40), அந்நாயனாராற் புகழப் பெற்றதும் (483), ஞானசம்பந்தரது தேவாரத்தைப் பெற்றதும் (250, 481), முசுகுந்தன் தவத்தால் திருவாரூருக்கு எழுந்தருளியதும் (492), சோணாட்டை அரசுபுரிந்ததும் (250), சோமாசிமாற நாயனாரது யாகத்துக்குச் சென்றதும் (270), மனுச் சோழனுக்கு அருள்புரிந்ததும் (52, 354) ஆகிய வரலாறுகள் இடையிடையே பலவாறு இயைபுபடுத்திச் சொல்லப்படுகின்றன.

இந்திரன், திருமகள், திருமால், பிரமன், மனு, முசுகுந்தனென்பவர்கள் இத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்ற செய்தியை இந்நூலால் அறியலாம்.

ஸ்ரீ தியாகேசர் அடியார்க்கெளியராகி அவர்கள் மனத்தில் எப்பொழுதும் உறைபவரென்பதை,

'...............தென் னாரூர்த் தியாகர் தமதடியார்
மனம்பிரிந் தாலு முனைப்பிரியேன்'' (28)

என்பதனால் உணர்த்துகின்றார். அன்பர்களுக்கு அருள்செய்வதையே தம் கடப்பாடாக அப்பெருமான் கொண்டுள்ளாரென்பதை,

"வரந்தரலே, வேலைய தாந்திரு வாரூரர்" (308),

"வரங்கொடுக்கும், வேலைக்கு ணிற்பவ ராரூரர்" (387),

"...............தம்மைத் தேடுகின்ற
பேருக்கு முன்செல்லு மாரூர்த் தியாகர்" (416)

என்பவற்றில் தெளிய வைக்கின்றார்.

## வேறு சிவதலங்கள்

எடுத்துக்கொண்ட நூலுக்கேற்பத் திருவாரூரைப் பலபடியாகப் பாராட்டும் இக்கவிஞர் பிற சிவதலங்களையும் புகழ்கின்றார். இம்முறை திருச்சிற்றம்பலக் கோவையார் முதலியவற்றிற் கண்டதே.

திருவண்ணாமலையிற் பேரன்புடையவராகிய இவ்வாசிரியர் அதனை,

"அண்ணா மலையுறை யாரூர்த் தியாகர்" (274, 469)

என வெளிப்படையாகவும்,

"சுடர்க்கிரி" (31, 460)

எனப் பரியாய வாயிலாகவும் எடுத்துக் கூறுவர். பின்னும், கச்சி (274), கயிலை (393), காசி (388), கொல்லிமலை (21, 86), திருப்பூந் துருத்தி (490), திருப்பூவணம் (447), திருவையாறு (490), தில்லை (383), பொதியில் மலை (231, 281, 289, 298, 464, 473) என்னும் தலப்பெயர்களையும், சிவபிரான் திருக்கழுக்குன்றத்திற் கழுகினாற் றொழப்பெறுவது (244), திருச்செங்காட்டிலும் திருவெண்காட்டிலும் நடனம் புரிந்தது (111), மதுரையில் நரியைப் பரியாக்கியது (125), சங்கத்தேயிருந்து தமிழாராய்ந்தது (174), கால்மாறி யாடியது (465) என்பவற்றையும் இதன்கண் அமைத்திருக்கின்றார்.

## நாயன்மார்

ஆனாயநாயனார், இயற்பகை நாயனார், ஏனாதி நாத நாயனார், பூசலார் நாயனார் (291) என்பவர்களையும், முன்னம் எச்சிலையும்

தெண்ணீரையும் இட்ட வேடராகிய கண்ணப்பரையும் (366, 459), அம்பரென்னும் ஊரில் வாழ்ந்த மறையோராகிய சோமாசிமாற நாயனாரையும், பரவை நாச்சியாரிடத்து இறைவனைத் தூது விடுத்த சுந்தரமூர்த்தி நாயனாரையும் இவர் பாடுகின்றார்.

"தொண்ட ரேத்தவன்று விருந்தாக வந்தவர்" (166)

என்பதிற் குறிப்பிட்ட தொண்டர்கள் இளையான்குடிமாற நாயனார் சிறுத்தொண்ட நாயனார் முதலியோராவர்.

## சாஸ்திரக் கருத்துக்கள்

சிவபிரானையும், சிவதலங்களையும், சிவனடியார்களையும் இவ்வாறு அழகுபெறப் போற்றிப்பாடும் இக்கவிஞர் சைவ சமய நூல்களில் நல்ல தேர்ச்சி பெற்றவரென்று தெரிகின்றது. இவருடைய சாஸ்திர அறிவை விளக்குவதற்கு,

"ஊனந்த மான மயமொரு நாலு மொழித்துநமக்
கானந்த மேமய மாக்கியதால்" (67),

"தமையா தரித்துத் தொழுவார் பழவினைச் சஞ்சிதத்தின்
சுமையாற வைத்தரு ளாரூர்த் தியாகர்" (236),

"சுமைப்போ லிருந்த வினைமாற்றி யென்னையுந் துய்யவன்பர்
தமைப்போ லருள்செய்த வாரூர்த் தியாகர்" (437),

"வேதாந்த மாய்ப்பர நாதமு மாய்ப்பர விந்துவுமாய்
நாதாந்த மானவ ராரூரர்" (440)

என்பன சில எடுத்துக்காட்டுகளாம்.

"....................அஞ்செழுத் தான விளக்
கில்லா வகமன்ன பொல்லா வகத்தி லிருத்தினளே" (349)

என்பதனால் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பெருமையும் அதன்பால் இவருக்குள்ள பக்தியும் புலப்படுகின்றன.

## இதிகாசபுராண வரலாறுகள்

தென்மொழியிலும் வடமொழியிலும் நற்பயிற்சியுடைய இந்நாவலர் அவ்விரு மொழிகளிலுமுள்ள இதிகாச புராணங்களைப் படித்தும் கேட்டும் அறிந்தவர். இந்நூலில் அங்கங்கே அவற்றிலுள்ள வரலாறுகளை உவமை வாயிலாகவும் பிறவாறாகவும் எடுத்தாளுகின்றார்.

அவ்வகையில் சிவபுராணச் செய்திகள் பலவும், சிவபிரான் அருச்சுன னுக்காக வேடுவரானது (198) முருகக்கடவுள் வள்ளியின்பால் மயல் பூண்டது (50) என்பனவும், திருமால் அமுதங் கடைந்தது (4, 166) மச்சாவதாரத்தில் ஏழு கடலையும் குடித்தது (54) வராகாவதாரத்தில் பூமியைக் கடலினின்றும் எடுத்தது (357) வாமனாவதாரத்தில் மாவலியிடம் மண் இரந்தது (5) இராமாவதாரத்தில் சீதையுடன் காடு சென்றது (411) தன் மகனைப் பிரிந்த துயர் பொறாமல் தசரதன் இறந்தது (398) காட்டில் ஒரு மானால் சீதையைப் பிரிந்தது (179) சீதை இராமனது மோதிரம் பெற்று மகிழ்ந்தது (435) கிருஷ்ணாவ தாரத்தில் ஆயர் மனையில் வளர்ந்தது (166) கோவியரோடு அள வளாவியது (444) காளிங்க நர்த்தனம் செய்தது (47) பாரத யுத்தத் தில் சக்கரத்தாற் சூரியனை மறைத்தது (239) என்பனவும், பிரமனும் இந்திரனும் பெண் மயல் பூண்டது (50) இந்திரன் மலைச்சிறகுகளை அரிந்தது (186) என்பனவும், அகத்தியர் விந்தமலையை அடக்கியது (47) வாதாவியை வில்வலன் மீண்டும் மீண்டும் உயிர்ப்பித்தது (482) இந்துமதி ஒரு மாலையால் உயிர் நீங்கியது (168) சந்தனு ஒரு பெண்ணைக் கங்கையினின்றும் கொண்டது (356) திரௌபதி பாண்டவர்களுடன் காடு சென்றது (366) என்பனவும் இந்நூலில் வந்துள்ளன.

## உதயணன்

பெருங்கதை யென்னும் அருந்தமிழ்க் காப்பியத்தின் தலை வனாகிய உதயணனது பெருங்கீர்த்தியைப் படித்தறிந்த இவர் அவன் யானைகளை அடக்கும் ஆற்றலுடையவனென்பதைப் புலப்படுத்திக் கிளவித் தலைவனுக்கு உவமையாக அமைக்கின்றார்:

"சிந்துர வத்தவ னேரண்ணலே" (482.)

## மரம், செடி, கொடி, விலங்கு, பறவை என்பவற்றின் இயல்புகள்

இயற்கையில் உண்டாகிய மரஞ் செடிகொடிகள் விலங்குகள் முதலியவற்றின் இயல்புகளைக் கவிஞர்கள் அறிந்து சிந்தித்து மகிழ் வார்கள். தாம் கண்ட அவ்வியல்புகளைத் தம் நூல்களில் அமைத்தல் அவர்கள் வழக்கம். இக்கவிஞரும் அங்ஙனமே பல செய்திகளை இந் நூலின்கண் வெளியிடுகின்றார்:

மாம்பூவும் (226) தாமரைப்பூவும் (499, 500) பனியாற் கருகுதலும், தினையின் கதிர் அணிலின் வாலைப்போன்றிருத்தலும் (183) இவர் கூறும் தாவர இயல்புகளிற் சில.

கரடி புற்றைத் தோண்டுதல் (193) என்பற்ற புழுக்கள் வெயிலால் இறத்தல் (248) புலி மண்ணிற் படிந்து செவிசாய்த்து வால் சுற்றி வாய்திறந்து கண்ணிற் குறித்துப் பாய்ந்து இரை கொள்ளுதல் (255) யானை தன் நிழலைத் தானே கோபித்தல் (333) நாய் பன்றியைக் கண்டு அஞ்சுதல் (445) என்னும் விலங்கினியல்புகளும், அன்றிற்பறவை அலகோடு அலகு கோத்துக்கொண்டு அளவளாவுதல் (257) அன்னச் சேவலின் சிறைக்குள் பெண்ணன்னம் அடங்கி மகிழ்தல் (501) காக்கை குயிலை வளர்த்தல் (393) சாதகப்புள் மழைத்துளியை விரும்புதல் (469) என்னும் பறவைகளினியல்புகளும் இந்நூலிற் சொல்லப்படுகின்றன.

## வழக்கங்கள்

மக்கட்கூட்டத்திற் பலவேறு வகையினருடைய இயல்புகளையும் வழக்கங்களையும் அறிந்த இப்புலவர் அவற்றை உரிய விடங்களில் அமைத்து அழகுபடுத்துகின்றார் :—

பொது வழக்கங்கள் :—கிறிய கிற்றைக் கடவாமை (10, 139), ஒருருக்கும் மற்றோருருக்கும் இடையே எல்லைக்கல் இடுதல் (30), தேற்றாங்கொட்டையால் நீரைத் தெளிய வைத்தல் (55), அரிய பொருள்களை மூடி முத்திரையிடுதல் (207), மாளிகையைத் திறவுகோல்கொண்டு திறத்தல் (225), கடன் கொடுப்பார் முறிச்சீட்டும் பிணையும் கொள்ளுதல் (90), ஓலையில் எழுதி மைதீற்றுதல் (303), திருமுகத்தில் கடையீடு (கையெழுத்து) இடுதல் (485), திருநாமங்களை உருவேற்றுதல் (106), தழையைக்கொண்டு அபிமந்திரித்தல் (141), திருவிழாவிற் கொடியேற்றுதலும் தேரோடுதலும் (158.)

அரசர் வழக்கங்கள் :—அரசர் அறப்புறங்காத்தல் (492), தோற்றோர் வென்றவருக்குத் திறையிடுதல் (118, 215, 306), தோற்றோர் புற்பிடித்து ஓடல் (430.)

தொழிலாளர் வழக்கங்கள் :—சேணியர் பாவில் நூற்குழலை ஊடே செலுத்துதல் (174), மருத்துவர் புண்ணிற் காரம் பூசுதல் (218), கொல்லர் கம்பியச்சிற் கம்பியைக் கோத்து வாங்கல் (281), சுரை யோட்டால் வீணைப்பத்தர் அமைத்தல் (461.)

மகளிர் வழக்கங்கள் :—பேதைப்பருவ மகளிர் சிற்றிலிழைத்துச் சிறு சோறடுதல் (391), இளைய மகளிர் பந்தாடுதல் (89), கிளி வளர்த்தல் (391), மணம் புரிகையில் அம்மி மிதித்தல் (184), மணத்தின் போது அறுகம்புல்லால் நீர் தெளித்தல் (420), கோபத்தாற் கையை அசைத்தல் (267), அச்சத்தாற் கைந்நெரித்து வயிற்றை அதுக்குதல் (399), கற்புடை மகளிர் தெய்வந் தொழாமை (341.)

நிமித்தங்கள் :—மகளிர்க்கு வலத்தோள் துடித்தல் நன்னிமித்தம் (382), காக்கை கரைதல் விருந்தினர் வரவைப் புலப்படுத்தல் (392-3), தலைவர் வரவைக் கூடற்சுழியால் மகளிர் பார்த்தல் (322.)

ஐந்திணை வழக்கங்கள் :—

குறிஞ்சி :—கானவர் ஏணிகொண்டு மலைத்தேனை எடுத்தல் (80), கற்பூரங் கொடுத்து உப்பு வாங்குதல் (86), கட்டும் கழங்கும் பார்த்தல் (354), முருகக்கடவுளுக்கு மயில் விடுதல் (386), வேங்கைமரம் மலர்கின்ற காலத்தில் மணம்புரிதல் (271), தலைவன் அனுப்பிய பரிசத்தை யானைமேலேற்றி நகர்வலஞ் செய்வித்தல் (336.)

பாலை :—எயினர் ஈத்திலையால் வேய்ந்த குரம்பையில் வாழ்தல் (378), பார்வை மிருகத்தால் விலங்குகளைப் பிடித்தல் (399), எயின மகளிர் மயிற்பீலியை உடுத்து வெண்குன்றிமணிமாலையையும் புலிப் பற்றாலியையும் அணிதல் (404.)

முல்லை :—இடையர் பசுவைத் தாமணியிற் கட்டுதல் (38), கார் காலத்திற் புல்லாங்குழல் ஊதுதல் (316), நிரைகளின் உணவுக்காக மரங்களை ஒடிந்து தொங்கும்படி வெட்டுதல் (400.)

மருதம் :—உழவர் பயிருக்கு எருப்போட்டு நீர்விட்டு வேலி கட்டித் தளையாக்குதல் (108), மள்ளர் முத்தைக் கூலிக்கிடுதல் (404.)

நெய்தல் :—நெய்தற்பறை (238.)

## அரிய செய்திகள்

உத்தம ஆடவர் அடியில் கயல் சங்கம் தாமரை யென்பவற்றின் குறி யிருத்தல் (267), கண்ணீர் உப்புச் சுவையுடையது (293.)

## தமிழ்

சிவபிரான் பாதஞ் சிவக்கப் பரவைதன்பால் தூதுபோனதற்குக் காரணம் அவருக்குப் பசுந்தமிழின்பாலுள்ள வேட்கையே

யென்றும் (99), அச்செயலால் தமிழின் மேன்மை வெளிப்படுகின்ற தென்றும் (483) இந்நூலாசிரியர் கூறுவர். பாண்டியர் தமிழாராய்ந்த செய்தியை இரண்டிடங்களிற் புலப்படுத்துகின்றார் (117, 128); தமிழை ஆராய்ந்து போற்றிய மன்னர்களுட் பாண்டியர்களே யாவரினும் சிறந்தவர்களாதலின், "வழுதி செழுந்தமிழ்" என்று அம் மன்னர்களுக்கே தமிழை உரிமைப்படுத்துகின்றார். அவர் நாடு தமிழ் நாடெனச் சொல்லப்படும் வழக்கு இங்கே நினைத்தற்குரியது. வடிக்குஞ் செழுந்தமிழ் (278), ஆயுந்தமிழ் (463), செந்தமிழாஞ் செல்வம் (483) என்று தமிழைச் சிறப்பிக்கின்றார்.

## இசைச்செய்திகள்

"வண்டு சீகா மரம்பயி லாரூரர்" (46),
"பாடுவ ராம்பண் குறிஞ்சி" (198)

என்பவற்றில் இசைக்குரிய பண்கள் இரண்டு சொல்லப்படுகின்றன. இப்பண்கள் தமிழ்முறைப்படி சமைந்தன. குறிஞ்சி நிலத்துக்குரியார் குறிஞ்சிப்பண்ணைப் பாடுவரென்றது அந்நிலத்துக்கு அப் பண் உரிமையாதல் பற்றி.

"வண்டு காம்போதி பாடும்" (232)

என்பதில் இராகப்பெயர் ஒன்றும்,

"பாணுற்ற வண்டு" (367)

என்பதில் இசைப்பாட்டும் குறிக்கப்படுகின்றன.

## நீதிகள்

மேலோர் இரங்குவர் கீழோர் விரோதிப்பர் (33); கொண்கனைப்பிரிந்தாற் பொறுத்திருத்தல் குலப்பெண்கள் கடமை (171); மன்னவன் முறை செய்யாத நாடு சிதையும் (490); அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் காரணம் (507.)

## பழமொழிகள்

நெருப்பாறு மயிர்ப்பாலம் (18), பனையேறுவாரைத் தாங்குவார் யார் (131), கிஞ்சுகங் காத்த கிளிபோல (109), போகாத ஊர்க்கு வழி தேடுவது (197), பழகப் பழகப் பாலும் புளிக்கும் (224), ஒவ்வோரிலையாகத் தேடுதல் (230), வெண்ணெய் திரளுகையில் தாழி உடைந்ததுபோல் (242), பொய் சொன்னாலும் பொருந்தச் சொல் (303), பெண் புத்தி பின்புத்தி (312), பொய் சொன்னா

ஊரில் மழை பெய்யாது (318), யானைக்கெட்டியது ஆட்டுக்குமாகும் (353), வெறுவாய் மெல்பவர்க்கு அவல் கிடைத்தாற்போல (446), எடுத்தவர் கைப்பிள்ளை (470), பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் (475.)

## சிலவகை வழக்கு

துன்பம் நீங்குதலை விடிவதென்றல் (39), பாவியென்று தம்மையும் (406) தம்மைச் சார்ந்தவர்களையும் (246, 388, 412) கூறிக் கொள்ளுதல், தெய்வமே யென்று கூறி இரங்குதல் (310, 396), தகாத செயல் கண்டு, ‘ இது கலிகால மன்றோ ?’ எனக் கூறுதல் (484), பெண்களைப் பெண் பிறப்பாளரென்றல் (171), வருந்தாதே என்பதை வருந்தாதேகொள் என்றல் (473.)

## அகப்பொருட் செய்திகள்

தலைவனை ஒரு நாட்டுக்கு அரசனாகக் கூறும் மரபைப் பின்பற்றி இவரும் அங்ஙனமே அமைப்பர் (275, 288 முதலியன.) தோழி செவிலியின் மகளென்பதை 438-ஆம் செய்யுளில் தெளிய வைக்கின்றார்.

இதில் உள்ள கூற்றுவகைகள் 18. அவை வருமாறு :—

(1) தலைவன் கூற்று - 154, (2) தலைவி கூற்று - 99, (3) தோழி கூற்று - 191, (4) பாங்கன் கூற்று - 13, (5) பாங்கியர் கூற்று - 1, (6) நற்றாய் கூற்று - 16, (7) செவிலி கூற்று - 22, (8) அந்தணர் கூற்று - 1, (9) உழையர் கூற்று-2, (10) கண்டோர் கூற்று-6, (11) கலந்துடன் வருவோர் கூற்று-1, (12) பரத்தையர் கூற்று-2, (13) பாணன் கூற்று-1, (14) முக்கோற் பகவர் கூற்று-1, (15) முன்சென்றோர் கூற்று-1, (16) வாயில்களின் கூற்று-1, (17) விறலி கூற்று-1, (18) கவிஞன் கூற்று-1.

நற்றாய் கூற்றுக்களுள், ‘ நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றல் ’ (361) என்பது ஒன்று. இறையனாரகப் பொருளுடையாரும் (சூ. 28), அகப்பொருள் விளக்கத்தில் நாற்கவிராச நம்பியாரும் (சூ. 52) நற்றாய் தமருக்குக் கூற்றினால் அறத்தொடு நில்லாமற் குறிப்பினாற் பெறவைப் பாளெனக் கூறுவர். பின்னதனை யொட்டி யெழுந்த கோவைகளுள் நற்றாய் அறத்தொடு நிற்குந் துறை காணப்படவில்லை. இக்கோவையில் அங்ஙனம் ஒருதுறை காணப்படுகின்றது.

தொல்காப்பியத்துக் களவியற் சூத்திரமாகிய,

"தாயறி வுறுதல் செவிலியோ டொக்கும்" (சூ. 47)

என்பதன் உரையில் நச்சினார்க்கினியர்,

"செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாற்போல நற்றாயும் தந்தைக்கும் தன்னைக்கும் அறத்தொடு நிற்கு மென்றவாறாயிற்று. அது 'எனவாங், கறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட, என்னையர்க் குற்றுரைத் தாள் யாய்' (கலி. 39) என்பதனால் உணர்க."

என்றெழுதினர்,

தமிழ்நெறி விளக்கமென்னும் இலக்கணத்தில்,

"கிளந்த தமர்வயி னற்றாய் கிளத்தலும்" (சூ. 22)

என்னும் விதியும், அச்சூத்திரத்தின் உரையில்,

"கலந்தாங் கிளமுலைக் கற்புடை மடந்தையைக்
குலஞ்சா லொழுக்க நோக்கி
நலஞ்சா லண்ணற்கு நேர்வது நடையே" (111)

என்னும் இலக்கியமும் காணப்படுகின்றன. இக்கோவையின் ஆசிரியர் இவற்றைப் பின்பற்றியே மேற்கூறிய துறையை அமைத்தனர் போலும்.

பிற்காலக் கோவைகளிற் காணப்படாத சில துறைகள் இக் கோவையில் உள்ளன; சில துறைகள் பலவாக்கப் பட்டிருக்கின்றன; சில துறைகள் காணப்படவில்லை.

புதுத்துறைகள் :—(க) வளம்படவுரைத்தல் (86), (உ) முகம்புகு கிளவி (87-9), (ங) பிரிவுடன் படுத்தல் (305), (ச) செலவழுங்குவித் தல் (306), (ரு) பாங்கி விடுத்தல் (308), (சு) வன்புறை (317), (எ) வன்புறை யெதிரழிந்திரங்கல் (318), (அ) தலைவி மகிழ்ச்சி (329), (கூ) இரவின் நீட்டம் (345), (க0) முரசறைதல் யார்க்கென்று இருளை கூறல் (358), (கக) நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றல் (361), (கஉ) தலைவன் பொழில்கண்டு வியத்தல் (374), (கங) கழையொடு புலம்பல் (406), (கச) புறவொடு புலம்பல் (407), (கரு) வரையொடு புலம்பல் (408.)

விரிந்த துறைகள் :—(க) பாங்கி உலகியல் உரைத்தல், நீவரை கென்றல் (114-5), (உ) பாங்கி தலைமகளைக் குறியிடத்துக்கொண்டு சேறல், பாங்கி குறியுய்த்து நீங்குதல் (205-6), (ங) காமமிக்ககழிபடர் கிளவி, அளியொடு புலம்பல், குருகொடு புலம்பல் (293-5.)

இல்லாத துறைகள் :—(க) பாங்கி தலைவியைப் பாங்கிற்கூட்டல் (164-ஆம் செய்யுட்குப் பின் இருக்கவேண்டியது) (உ) இகந்தமை இயம்பல் (344-க்குப்பின்), (ங) செவிலி மனைவாழ்க்கைத் தன்மை யுரைத்தல் (439-க்குப்பின்), (ச) இருவர் காதலும் அறிவித்தல் (௯௪க்குப் பின்.)

## குறிப்பு

இந்நூலுட் பலவகைக் குறிப்பினுற் பொருள்விளக்கும் செய்யுட்களிற் சில வருமாறு :—130, 149, 153, 203, 463.

## அணிகள் முதலியன

உவமை, உருவகம், தற்குறிப் பேற்றம் (10 முதலியன), புணர் நிலையணி (39, 432), பரிவருத்தனை (144, 334, 384), வேற்றுரு காரண விபாவனை (240), எண்ணணி (245, 323, 402), நுட்பவணி (252, 274, 385), சொற்பின் வருநிலை (19 முதலியன), விரோதம், சிலேடை, வேற்றுப்பொருள் வைப்பு முதலிய பொருளணிகளும், மடக்கு (5, 17 முதலியன), எழுத்துக் குறிப்பு (219) முதலிய சொல் லணிகளும், தொனி (9,64 முதலியன), வழியெதுகை (2, 56 முதலி யன), முரண் (3, 7 முதலியன) முதலியனவும் அங்கங்கே அமைந்து படித்துணர்ந்து இன்புறுதற்குரியனவாக விளங்குகின்றன.

## சொற்றொடர்களும் சொற்களும்

இவருடைய வாக்கில் வடசொற்களும் தொடர்மொழிகளும் விரவிப் பயிலும்; பூகாடவி (65), மேகாடவி (283), சோகானலம் (283), விரகானலம் (299), சோமானலம், காமாயுதம் (300), தந்தாசலம் (296), பூகாமி, சலகாமி (320), சதபாதம் (379), தாரா தரம், தராதரம் (428) என்பன வடமொழிச் சொற்றொடர்களிற் சில.

உற்பூதமென்ற சொல்லைத் (71, 86) திடீரென்று தோற்றுத லென்னும் பொருளிலும், ஏதுவென்னும் சொல்லை (81) உவமை யென்னும் பொருளிலும் அமைப்பர். நாதமென்னும் வடமொழிப் பெயர்ச்சொல்லிலிருந்து நாதி (32,245) என்னும் வினைச்சொல்லைப் புனைந்தமைப்பர். இப்படியே தமிழிலும் வடுவென்ற பெயர்ச் சொல்லிலிருந்து வடுக்கின்ற (510) என்னும் வினையை உண்டாக்கிப் பெய்வர்.

இவருடைய செய்யுட்களில் முருகுவெற்பென்னும் தொடர் பல காலும் வந்துள்ளது.

மாதுளையை மாதளையென்றும் (37, 113), தூதுளையைத் தூதளை தூதுவளையென்றும் (113, 421), வெயிலை வெய்யிலென்றும் (365), நந்தனவனத்தை நந்தாவன மென்றும் (296) ஆள்வர். நலங்குதல் (155), அதுங்குதல் (156) என்னும் சொற்கள் உலகவழக்கிற் பெரும் பாலும் பயில்வன. சொல் என்பது வழக்கில் உகரச்சாரியை பெற்றுச் சொல்லு என வரும்; அச்சாரியையை இவர் செய்யுளிலும் பெற வைத்திருக்கின்றார் (440.) ரகர லகரங்கள் தம்முள் ஒன்றற்கொன்று போலியாக வருதலை ஏரேம் (180), குலைத்தல் (235) என்னும் இரண்டும் தெரிவிக்கின்றன.

## செய்யுள் விகாரம்

மேன்மேலென வரற்பாலது மென்மேலெனவும் (247), தேயத்துள்ளோர் தங்கலையென்பது தேயத்துள்ளோர் தன்கலையெனவும் (130), தொண்டர் தம்மாவி யெனற்பாலது தொண்டர் தன்னுவி யெனவும் (305) இதனுள் வந்தன; இவற்றைச் செய்யுள் விகார மென்று அமைத்துக் கொள்க.

இதுகாறும் ஆராய்ந்து வகுத்துக்காட்டியவற்றால் இந்நூலாசிரியர் தியாகராசப்பெருமானிடத்துப் பேரன்பு, சிவதலங்களிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் பக்தி, புராண இதிகாசங்களில் பயிற்சி, உலகியல்புகளை நன்குணர்ந்த புலமை, பொருளிலக்கணம் அணியிலக்கணம் முதலியவற்றை அறிந்த திறமை, அலங்காரங்கள் அமையும் வண்ணம் செய்யுளியற்றும் ஆற்றல் முதலியன உடையவரென்பது பெறப்படும். இக்கோவையில் இவர் அகப்பொருட்டுறைகளைக் கோத்ததோடு அமையாது தம்முடைய பலவகையாற்றல்களையும் இயல்புகளையும் புலப்படுத்தும் சொற்பொருள்களையும் நயங்களையும் கோத்தமைத்திருக்கின்றார். இந்நூலை "முத்தமிழ்க் கோவை" என்று சிறப்புப்பாயிரம் பாராட்டுதல் தக்கதென்பதைத் தமிழ் விருந்து நுகரும் அன்பர்கள் அறிவார்களென்பதில் தடையில்லை.

உ

கணபதி துணை

# திருவாரூர்க் கோவை

## காப்பு

[விநாயகரும் முருகரும்]

(வெண்பா)

வீறுதியா கப்பெருமாள் வீதிவிடங் கப்பெருமாள்
கூறுமரு மைப்பெருமாள் கோவைக்குப்—பேறுடனே
வாக்குதவு மைந்துகர வாரணமும் வானவரைக்
காக்குமயில் வாகனனுங் காப்பு.

## அவையடக்கம்

(கட்டளைக் கலித்துறை)

1. பாடிய சொற்குற்றம் பன்னிரண் டாமகப் பாட்டுறுப்பின்
நீடிய குற்றங் கிளவியொன் றேடொன்று நேர்மையின்றிக்

---

## குறிப்புரை

(காப்பு) தியாகப் பெருமாள் - ஸ்ரீ தியாகேசர்; பெருமாள் - பெருமையை யுடையவர் (திருவாரூருலா, 28.) வீதிவிடங்கரென்பது ஸ்ரீ தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று. ஐந்துகர வாரணம் - விநாயகக் கடவுள். வாரணமும் மயில்வாகனனும் கோவைக்குக் காப்பாவாரென்க.

(பிரதி பேதம்.) 2-ஆம் அடி : கூறு மகிமைப்.

(அவையடக்கம்)

1. பன்னிரண்டாகிய அகப்பாட்டுறுப்புக்களாவன : "திணையே கைகோள் கூற்றே கேட்போர், இடனே காலம் பயனே முன்னம், மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென, அப்பா லாறிரண் டகப் பாட் டுறுப்பே" (நம்பி. சூ. 211.) கிளவி - கைக்கிளை, இயற்கைப்

கூடிய குற்ற மலங்காரக் குற்றமிக் கோவையிலே
தேடிய பேர்கண் மணற்சோற்றி லுங்கல்லைத் தேடுவரே. (க)

2. காவிற்கு ணிம்பக் கனிதேடி யேவருங் காகநல்ல
மாவிற் கனிக்கு வருங்கோ கிலந்துன் மதியுடையோர்
பாவிற் பழுது வருமதெங் கேயெனப் பார்ப்பரது
மேவிற் களைந்து நலமே புகழுவர் மேலவரே. (உ)

---

## நூல்

### க. கைக்கிளை

காட்சி

1. தேர்கொண்ட காமன் கவிகையும் வேழமுஞ் செஞ்சிலையும்
போர்கொண்ட வம்பு மகுடமுங் கொண்டொரு புற்றிடத்தே

---

புணர்ச்சி முதலியன. மணற்சோற்றிற் கல்லைத் தேடுவது போலுமென்பது ஒரு பழமொழி

(பி - ம்.) 1-2. உறுப்பு நீடிய.

2. கா - சோலை. நிம்பக்கனி - வேப்பம்பழத்தை ; "உண்டு குண மிங் கொருவர்க் கெனினுங்கீழ், கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டு மலர்ச், சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே, காக்கை விரும்புங் கனி" (நன்னெறி.) கோகிலம் - குயில். வருமது எங்கே - வருவது எவ்விடத்தில். அது மேவின் - அக்குற்றம் பொருந்துமாயின்.

(பி - ம்.) 2. துன்மதியவரும்.

(நூல்)

1. **இதுமுதல் 13 செய்யுட்கள் தலைவன் கூற்று.**

காமன் கவிகை - சந்திரன் (முகம்) ; வேழம் - யானை ; அவன் வேழம் இருள் (கூந்தல்) ; சிலை - கரும்பு (புருவம்) ; அம்பு - தாமரை (கை), குவளை (கண்), முல்லை (பற்கள்), மாந்தளிர், அசோகந்தளிர் (மேனி) ; மகுடமென்றது கொங்கைகளை. புற்றிடத்தே வேர் கொண்டிருப்பவர் : புற்றிடங் கொண்டாரென்பது இத்தலத்து மூர்த்தியின் திருநாமம் ; வன்மீகநாதரென்பது வடமொழிப் பெயர். தோகை - மயில். மேகம் உலாவும் சோலையிற் கண்டமையாலும் சாயலாலும் மயிலென்றான் (குறள், 1081, பரிமேல்.)

இச்செய்யுளில், தலைவியின் உறுப்புக்களைக் காமனுக்குரிய பொருள்களாகவே கூறியது ஒரு நயம்.

வேர்கொண் டிருப்பவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
கார்கொண்ட காவி லொருபசுந் தோகையென் கண்ணுற்றதே. (க)

ஐயம்

2. வேதாவின் றண்ணிட மோமக வானுறை விண்ணிடமோ
வாதா சனவிறை நண்ணிட மோவிந்த மண்ணிடமோ
காதாருங் கண்ணி யிடத்தார் தியாகர் கமலையன்னார்
பாதார விந்தத் துகள்வீழ மாதவம் பண்ணியதே. (உ)

துணிவு

3. கார்க்குன் றுரித்தவர் செம்பொற் றியாகர் கமலையன்னார்
வார்க்குன் றிரண்டிலும் வேரோடும் வல்லியும் வள்ளையிலே

---

2. வேதா - பிரமன். மகவான் - இந்திரன். வாதாசன இறை - காற்றை உணவாகவுடைய பாம்புகளுக்கு அரசன்; ஆதிசேடன். அவன் நண்ணிடம் நாகலோகம்; இது போகவதியெனப் பெயர்பெறும். கமலை - திருவாரூர்; கமலாலய மென்பதன் மரூஉ. இவர், தன்பால் இருத்தற்குத் தவம்பண்ணிய இடம் பிரமலோகம் முதலியவற்றுள் யாதோ வென்க இவள் தெய்வமகளோ, நாககன்னிகையோ, மானிடமகளோ வென்பது கருத்து.

(பி - ம்.) 1. தன்னிடமோ. 3. காதார் கருங்கண்ணி பங்கார்.

3. கார்க்குன்று - யானையை. அடிக்கோராயிரம் பொன்சொரியும் பெருமானுதலின், தியாகேசரைச் செம்பொற்றியாகரென்றார்; "ஓரடிக் கோர், ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே, போயிரந்து தூது சொல்லப் போக்கினேய்" (தமிழ்விடுதூது, 99-100); "அடியொன்றுக், குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து, பெய்யுந் தியாகப் பெருமானே", "பெய்யுமடிக் காயிரம் பொன்னென்னப் பேறளிக்கும், கையும்" (திருவாரூருலா, 173-4, 429.) வாரையுடைய குன்று: நகில்கள். வல்லி - கொடிவடிவமாக எழுதப்பட்ட சந்தனக்கோலம். குன்றில் கொடியின் வேர் தடையின்றிச் செல்லுமென்பது ஒரு நயம். வள்ளை - வள்ளைக் கொடி போன்ற காது. தோடு - காதணி; மானிடரால் இழைத்துச் செய்யப்பட்டமையின் ஐயம் நீங்க ஏதுவாயிற்று. பிறை: நெற்றி; திலதம் வேர்வையால் அழிந்திருத்தலின் ஐயம்நீக்குதற்குரியதாயிற்று; "வண்டே யிழையே வள்ளி பூவே, கண்ணே யலமர லிமைப்பே யச்சமென், றன்னவை பிறவு மாங்கவணிகழ, நின்றவை களையுங் கருவி யென்ப" (தொல். களவு. 4.) பாரார் - பூமியிலுள்ளவர்.

சேர்க்கின்ற தோடும் பிறைமே லிருக்குந் திலதமுநாம்
பார்க்குந் தொறுமிவர் பாராரென் றுண்மை பகர்கின்றவே. (௩)

குறிப்பறிதல்

4. அன்றுகண் டோநஞ் சமுதத்தை யாழியி லம்புயன்மால்
சென்றுகண் டேத்துந்தென் னாரூர்த் தியாகர் திருமிடற்றில்
ஒன்றுகண் டோமற்றை யொன்றுவிண் ணாட ருலகிற்கண்டோம்
இன்றுகண் டோநெஞ்ச மேயிவர் பார்வை யிரண்டினுமே. (௪)

---

## உ. இயற்கைப் புணர்ச்சி

இரந்து பின்னிற்றற்கு எண்ணல்

5. நாலா ரணன்றொழு மாலா னவருமுன் னாளிரந்து
மேலான மாதரை யெய்தின ரால்வயன் மேவுமன்னம்
பாலாழி போனிறை யாரூர்த் தியாகர் பணிவரைமேல்
மாலான நாமு மிரந்தெய்த லாமிந்த மாதரையே. (க)

---

ஈற்றடியிற் சொன்முரண் வந்தது. தொய்யில் முதலியன தெய்வ மகளிர்க்கு இன்மையின் தலைவனுக்கு இருந்த ஐயத்தை நீக்கின.

(பி - ம்.) 1. உரித்தவ ராரூர்த் தியாகர். 2. குன்றிரண்டினும் வேரோட்டும் வள்ளையும்.

4. அன்று - அமுதங்கடைந்த அந்நாளில்; பண்டறி சுட்டு. நஞ்ச முதத்தை - நஞ்சையும் அமுதத்தையும். திருமிடற்றில் ஒன்று: விடம்; மற்றையொன்று: அமுதம். பார்வை இரண்டு - மருட் பார்வை, அருட் பார்வை; மருட் பார்வையை நஞ்சென்றும், அருட் பார்வையை அமுதமென்றும் கூறினான்.

(பி - ம்.) 4. இவள் பார்வை.

5. முன்னாள் இரந்து - முற்காலத்தில் மாவலியினிடத்தில் யாசித்து. மா தரை - பெரிய பூமியை. அன்னத்தின் தொகுதிக்குப் பாற்கடல் உவமை. மால் ஆன நாமும் - மயக்கத்தை உடையேமாகிய நாமும். மாதரை - தலைவியை. பண்டைக்காலத்தில் மால் இரந்து மா தரை அடைந்ததுபோல, இப் பொழுது மாலான நாமும் இரந்து மாதரை அடையலாம். மாதரை: சிலேடை; இப்படியே இத்தொடரைச் சிலேடையி லமைத்துப் பாடிய செய்யுட்கள்: "பொன்றிரளால், மாதரையா னாயிழைசூழ் மாதரையா னீதுவண்டு, மாதரையா னைமையென்சொல் வாய்" (அருணைக்கலம். 80); "மாதரையெல் லாந்தூற்றும், கொண்டலையுந் தூதுவிடக் கூடுமோ" (அழகர் கிள்ளைவிடுதூது, 203.)

(பி - ம்.) 1. நாலாரணந் தொழும். 2. மேயுமன்னம்.

### இரந்து பின்னிலை நிற்றல்

6. கட்டுற்ற செவ்வந்தித் தோட்டார் தியாகர் கமலைவெற்பில்
மட்டுற்ற மாலைக் குழலீர்கண் வேலையென் மார்பகத்தே
விட்டுப் பராமுக மாகிநின் றீரந்த வேல்கள்வந்து
பட்டுப் பறிந்த பசும்புண்ணை யாயினும் பார்த்திடுமே. (உ)

### முன்னிலையாக்கல்

7. கொங்தேறு கொன்றைய ராரூர்த் தியாகர் குளிர்சிலம்பிற்
பங்தே யணைவிரற் பைங்தொடி யீரிந்தப் பைம்பொழிற்கே
வந்தேன் றனக்கு மிருந்தேன் றனக்கும் வனமலர்வாய்ச்
செந்தேன் விருந்திட வோநின்ற காரணஞ் செப்புகவே. (ங)

### மெய்தோட்டுப் பயிறல்

8. இந்நாரி மன்மதன் விஞ்ஞாரி யல்ல ளிவையிவள்கண்
விஞ்ஞாரி யில்வண்டு மல்லகண் டீர்மக மேருவில்லிற்

---

6. செவ்வந்திப்பூவால் இயற்றப்பட்ட தோட்டையணிந்த திருச்செவியை யுடையவர்; செவ்வந்தித் தோட்டழகரென்பது ஸ்ரீ தியாகேசரின் திருநாமம்; "செவ்வந்திப் பூமென் றோடும், மன்பொலியுஞ் செங்கழுநீர் மாலையும்" (தியாகராசலீலை, வீதிவிடங்கர்.) மட்டு - தேன். கண்வேலை - கண்ணாகிய வேற்படையை. வேல்களென்றான் கண்கள் இரண்டாதலின். பறிந்த - உருவியதனால் உண்டான.

(பி - ம்.) 1. தோட்டாலழகர். 2. எம். 4. பட்டுப்பதிந்த; யாகிலும்.

7. கொங்து - கொத்து. பங்தே: ஏ, அசைநிலை. இருந்தேன் றனக்கும் - கரிய வண்டுக்கும். வந்தேனுக்கு, அழகிய மலர்போன்ற வாயிடத்திலுள்ள செந்தேனை விருந்திடவோ; வண்டுக்கு வனத்திலுள்ள மலரில் உள்ள செந்தேனை விருந்திடவோ; சிலேடை.

வந்தேன், இருந்தேனென்பன முரண்.

(பி - ம்) 2. பைங்தொடி யீருங்கள் பைம்பொழிற்கே.

8. இ நாரி - இப்பெண்; எழுவாய். மன்மதன் வில் நாரி - மன்மதன் வில்லிலுள்ள நாண்; அது வண்டொழுங்கு; வண்டு இனங்கண்டு சேருமாதலின் அதனைக் கூறினான். இவையென்றது கண்களை. வில்நாரியிலுள்ள அம்புகள்; அவை மலர்களாதலின் அவற்றில் வண்டு சேரும். பன்னகம் - பாம்பை. ஓதியில் வாழும் - கூந்தலில் வாழும், படித்து வீட்டில் வாழும்; சிலேடை. சுரும்பினமே, அறிந்து எழுமென்க.

பன்னாகம் பூட்டிய வாரூர்த் தியாகர் பணிவரைமேற்
சொன்னா லறிந்தெழு மோதியில் வாழுஞ் சுரும்பினமே. (ச)

9. சோதி பரந்த சுரும்பினங் காளிந்தத் தோகையிழைப்
பாதி மருங்கொடி யாதகல் வீர்பதி னாலுலகெண்
வீதி விடங்கர்தென் னாரூர்த் தியாகர் வியன்சிலம்பில்
ஓதி யிருந்து மறிவிலை யோசொலு முங்களுக்கே. (ரு)

போய் பாராட்டல்

10. ஆறில குஞ்சடை யாரூர்த் தியாக ரணிவரைமேல்
கூறிய நின்முக நீங்கா வழகினைக் கொள்ளைகொண்டு
வீறிய திங்க ளிருட்போ தெழக்கண்டு வேள்வளைத்துக்
கீறிய கீற்றல்ல வோபரி வேடங் கிளிமொழியே. (கூ)

11. விளக்கின்ற பேரரு ளாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
முளைக்கின்ற கோடு நிகர்முலை யாயுன் முகத்தழகை
இளைக்கின்ற திங்கள் கவர்ந்தே குதல்கண் டிரதிபதி
வளைக்கின்ற கோடதன் றோபரி வேடம் வளைந்ததுவே. (எ)

---

(பி - ம்.) 1. இன்னாரி மன்மதனின்னாரி; இவர்கண். 2. அன்று கண்டீர். 3. பன்னாரி பூட்டிய.

9. இழைப்பாதி மருங்கு - நூலிழையின் பாதியைப்போன்ற இடை; "இழைகிழிக் குஞ்சிறு பாதியிற் பாதி யிடையும்" (127) என்பர்பின்; **வெங்கைக்.** 9, பார்க்க. ஓதியிருந்தும் - கூந்தலில் இருந்தும், படித் திருந்தும்.

(பி - ம்.) 2. அகலீர். 3. தென்னாரூரிறையவர் மேருவெற்பில்.

10. ஆறு - கங்கை. வேள் - காமன். பரிவேடம் - சந்திரனைச் சூழ்ந்த ஊர்கோள். கீற்றைக் கீறுவது அதனைத் தாண்டி அப்பாற் செல்லாமைப் பொருட்டு; "கீறிய கீற்றினை யுங்கடவாள்" (139) என்பர் பின். திருவாவடுதுறையாதீன ஸ்தாபகராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி தம்முடைய ஞானாசிரியரான சித்தர் சிவப்பிரகாசர் கீறிய கீற்றாலாகிய அறையைக் கடவாமல் அதனுள்ளே இருந்தாரென்னும் வரலாறு இங்கே அறிதற்பாலது.

11. கோடு நிகர் - யானைக்கொம்பை ஒத்த. வளைக்கின்ற கோடு - கீறிய கீற்று. வளைந்ததுவாகிய பரிவேடம் கோடதன்றோ?

(பி - ம்.) 4. கோடல்லவோ.

12. கைத்தல மேற்ற மழுவார் தியாகர் கமலைமின்னே
உத்தம மாமுன் முகம்போல வேண்டி யுழலுந்திங்கள்
கொத்தலர் கஞ்ச மழகையெல் லாங்கொள்ளை கொள்ளுமென்றே
எத்தனை தூரத்திற் கண்டாலு மூடு மிதழ்க்கதவே. (அ)

இடம்பெற்றுத் தழாஅல்

13. வேளைக் கருங்குயில் வாவென் று கூவு மிடறுவிண்ட
பாளைக் கமுகிற் படர்ந்தேறு மல்லிகைப் பந்தருண்டு
பூளைச் சடையர் கமலையன் ஞர்மெய்ப் புளகமுண்டு
தோளைப் புணர்தற் கிதுவே நிமித்தமுஞ் சூழலுமே. (கூ)

வழிபாடு மறுத்தல்

14. வீணைக் குலமுழங் காரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
சேணைத் தடவு மணத்தள வேயுனைச் சேர்ந்தடைந்தேன்
பூணைப் பொருவுமென் ஞணக லாமற் புரந்தருள்வாய்
நாணைப் புரப்பது முல்லையன் றேவிந்த நானிலத்தே. (கo)

---

12. உழலும் - அழகைப் பெறுதற்குத் திரிகின்ற. கஞ்சம் - தாமரைப் பூ; எழுவாய். அழகை - தனது அழகை. சந்திரன் நின்முகம் போல ஆவதற்கு முயன்று அதற்கோருபாயமாக அம்முகத்தையொத்த தன் அழகைக் கொள்ளை கொள்ளுமென்று அஞ்சித் தாமரை அச் சந்திரனைக் கண்டவுடன் தன் இதழை மூடிக்கொள்ளும். இது தற்குறிப்பேற்றவணி.

(பி - ம்.) 1. கமலைவெற்பில். 3. கஞ்சத்தழகை.

13. கூவும்: முற்று. கமுகமரத்திற் படர்ந்தேறும் மல்லிகைக் கொடியாலமைந்த பந்தர்; கொடிவீடு; இதனை வடமொழியில் 'லதாக்ருகம்' என்பர். பூளை - ஒருவகைப் பூடு; இது சிவபெருமானுக்கு உகந்தது; "பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானை", "பூளை யுந்நறுங் கொன்றையும் மதமத்தமும் புனைவாய்" (தேவாரம்.) புளகம் - மயிர்க்கூச்சு. குயில் வாவென்றலின் நிமித்தமுண்டென்றான்.

(பி - ம்.) 1. கூவ; கூவுமிட மிருண்ட.

14. **இது தலைவி கூற்று.**

சேணை - நெடுந்தூரத்தை. பூணை - ஆபரணத்தை. நாணத்தைப் பூணுகக் கூறுதல் மரபு; "பெண்பா லவர்கட் கணியாய்ப்பிரி யாத நாணும்" (சீவக. 1961.) முல்லை - கற்பு, முல்லைக்கொடி. இதில் சிலேடையொடு பொருந்திய வேற்றுப்பொருள் வைப்பணி வந்தது.

(பி - ம்.) 1. வீணைக்குழன் முழங்காரூரர். 2. சேணைக்கிளரு மணத்தளவேயுனைச் சென்றடைந்தேன்.

### இடையூறு கிளத்தல்

15. நான்குதிக் கும்வளர் தேமா நறுங்கனி நைந்துபசுந்
தேன்குதிக் குந்திரு வாரூர்த் தியாகர் திகழ்வரைமேற்
கான்குதிக் குங்குழ லீரென தாசைக் கடலில்விழி
மீன்குதிக் குங்கொலென் றேபுதைத் தீரிரு மென்கைகொண்டே.

16. வெம்போ தகவுரி யாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
செம்போ தகத்துத் திருவனை யீர்மலர்ச் செங்கையினால்
அம்போதி தன்னை யடக்கிய நீர்வெற் படக்கினுமைக்
கும்போ தயமுனி யென்றேத்து மிந்தக் குவலயமே. (கஉ)

### நீடுநினைந்திரங்கல்

17. கடியாரந் துற்ற கழிக்கானற் புன்னையங் காவினின்று
நெடியா மயங்கி நினையுநெஞ் சேவெண் ணிலாமுடியர்
துடியார் கரத்தர் கமலையி லேயலர் தூற்றுகின்ற
கொடியாரைச் சேர்ந்த கொடியாரெந் நாளருள் கூருவதே. (கங)

---

15-7. **தலைவன் கூற்று.**

15. நைந்து - நைதலால்; எச்சத்திரிபு. நான்கு திக்கும் தேன் குதிக்கும்; இந்த மடக்கு, "மலர்சோலைத் தேன்குதிக்கு நான்கு திக்கும்" (**குற்றலப்.** திருநாட்டுச். 20) என்பதிலும் காணப்படுகின்றது. கான் - நறுமணம்.

(பி - ம்.) 1. திக்குந்திகழ். 2. திருவாரூரர் செம்பொற்றியாகர் வெற்பில்.

16. போதகம் உரி - யானைத்தோலை யணிந்த. செம்போது அகத்து - செந்தாமரைப் பூவினிடத்து. அம்போதி - கடல்; என்றது கண்களை. வெற்பென்றது தனங்களை. அகத்திய முனிவர் கடலையுண்டதும் விந்த மலையை அழுத்தியதுமாகிய செய்திகள் இங்கே அறிதற்குரியன.

(பி - ம்.) 2. செம்போதகத்திற் றிருவனையீர்; இருசெங்கையினால், உங்கள் செங்கையினால். 4. என்றேயும்.

17. கடி ஆரம் - ஒளியையுடைய முத்துக்கள். நெடியா - தாமதித்து; நெடித்தல் - தாமதித்தல் (**பெருங்.** க. 54 : 89.) துடி - உடுக்கை. அலர் தூற்றுகின்ற கொடியார் - பூவை உதிர்க்கின்ற பூங்கொடி, பழிமொழியைக் கூறுகின்ற கொடிய மகளிர்; சிலேடை. சேர்ந்த கொடியார் - தலைவி.

(பி - ம்.) 2. நெடிதாயிரங்கி, நெடிதாமயங்கி.

### மறுத்தெதிர் கோடல்

18. தாலம் பருக வருங்கன லாறு தனக்குமயிர்ப்
பாலஞ் சமைத்த படியொக்கு மேபவ ளாசலத்தின்
கோலம் புனைபவ ராரூர்த் தியாகர் குவட்டிலிந்த
வேலன்பர் காமத்தை நாணிறை காட்டி விலக்குமதே. (கஅ)

### வறிதுநகை தோற்றல்

19. மிகைதோற் றியபொழி லாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
தகைதோற் றிடுமன்பர்க் கின்பமுந் தோற்றிடத் தண்டளவின்
முகைதோற் றிடவெண் முருந்தமுந் தோற்றிட முத்தினத்தின்
தொகைதோற் றிடமட மான்முகத் தேநகை தோற்றியதே. (கரு)

### முறுவற்குறிப்புணர்தல்

20. யானே சகோரஞ் சகோரங்கள் வாட வெறித்தவெயில்
தானே நமது விரகா னலஞ்சஞ் சரீகமுடன்
தேனே றுகொன்றைய ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மானே மதிய மதிநில வேயிந்த மானகையே. (கசு)

---

18. **தலைவி கூற்று.**

தாலம் - பூமியை. நெருப்பாற்றுக்கு மயிர்ப்பாலமென்பது ஒரு பழமொழி; "பொருபடையாற், றுக்கினர் நெருப்பாற்றிற் றள்ளினர் மயிர்ப்பாலம், போக்கினர்" (**திருக்குற்றலப்.** கண்டக சேதனச். 46.) பவளாசலத்தின் - பவளமலையினது. நாணையும் நிறையையும் காட்டி; நிறை - மனத்தை ஒருவழியே நிறுத்தும் தன்மை. விலக்குமது - விலக்குவது. விலக்குமது ஒக்கும்.

(பி - ம்.) 1. தாலம்பரவ. 1-2. வெண்ணெய்ப்பாலம். 3. கோலம் படைப்பவர். 4. நாணிமை.

19. **கவியின் கூற்று.**

தகை - பெருமை. தளவின்முகை - முல்லையின் அரும்பு. முருந்தம் - மயிலிறகின் அடிக்குருத்து; "குருந்தநின் றரும்பின முருந்தம்" (**கம்ப.** வனம்புகு. 45.) தோற்றிட - தோன்ற, தோல்வி அடைய.

20-30. **தலைவன் கூற்று.**

20. சஞ்சரீகம் - வண்டு.

முயங்குதலுறுத்தல்

21. வல்லிக்கு நாணற்ற மட்டோநெஞ் சேநம்மை வாட்டுமதன்
வில்லிக்கு நாணற்று விட்டதன் றேவினி வேலிதொறும்
நெல்லிக்கு முத்துதி ராரூ ரிறையவர் நேரிவெற்பிற்
கொல்லிக் குவடன்ன பூண்முலை மேற்சென்று கூடுதுமே. (கஎ)

புணர்ச்சியின் மகிழ்தல்

22. முன்னேயொ ரின்ப மிடையே மயக்க முயக்கமதன்
பின்னே யறிவுக்கு மெட்டாத வானந்தம் பெற்றமையால்
மின்னேயுஞ் செஞ்சடை யாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
பொன்னே யெனக்கு நிகரோ வமரர் புரந்தரனே. (கஅ)

புகழ்தல்

23. கைவாய் மழுவைத்த வன்மீக நாதர் கமலைவெற்பில்
வெவ்வாய் வனத்திற் றவம்புரிந் தாலும் விரைநிறைந்த
கொவ்வாய் குமுதக் குளிர்மல ரேயென் கொடியிடையாள்
செவ்வாய் தனக்கினி யொவ்விரோவ் வீர்மெய் சிவக்கினுமே.

---

21. வல்லிக்கு - பூங்கொடி போன்ற தலைவிக்கு; வல்லி: ஆகுபெயர். நாண் - நாணமென்னும் குணம். வில் இக்கும் - வில்லாகிய கரும்பும். நாண் - வில்லின் நாண். வேலி - வயல். நெல் இக்கு முத்து உதிர் - நெல்லும் கரும்பும் முத்துக்களை உதிர்க்கின்ற. நேரிவெற்பு - சோழ நாட்டில் உறையூருக்குத் தென்பாலிருந்த மலை. கொல்லிக்குவடு - கொல்லிமலை.

(பி - ம்.) 1. மனம் வாட்டு. 2. நாணற்றது மனமேயினி; வேலியெல்லாம்.

22. முதலில் காட்சியின்பம், இடையிலே ஐயத்தாலுண்டான மயக்கம், அதன்பின் முயக்கமும் ஆனந்தமும் பெற்றமையாலென்க. முயக்கம் - தழுவுதல். மின் ஏயும் - மின்னலை ஒத்த. பொன்னே - திருமகள் போல்வாய்.

(பி - ம்.) 3. மின்னேருஞ். 4. நிகரெவர் தாமிந்தப் பூமியிலே.

23. கைவாய் - கையினிடத்தே. வெவ்வாய் வனத்தில் - வெம்மை வாய்ந்த காட்டில், விருப்பம் வாய்ந்த நீரில்; வனம் - காடு, நீர்; இவை தவஞ் செய்தற்குரிய இடங்கள்; சிலேடை. கொவ்வாய் - கொவ்வைக் கனியே. மெய் சிவக்கினும் - வடிவம் சிவந்தாலும்; மெய் - இஃது உண்மையே, சிவக்கினும் - நீவிர் கோபித்தாலும் என்பது வேறு பொருள்.

(பி - ம்.) 1. கைவாண்; கயிலைவெற்பில். 2. வெவ்வாயிடத்திற்; விறனிறைந்த. 4. செவ்வாயிதழ்க்கனியொவ்வாயொவ்வாய்.

## ௩. வன்புறை

### அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்

24. பணியேறு செங்கைய ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
கணியேறு காவி லலர்த்தொடை யேகலை யேவளையே
அணியே பழம்படி யேயணிந் தேனமு தேயெனது
மணியேயென் கண்ணின் மணியேநின் னையத்தை மாற்றுகவே.

### பெருநயப் புரைத்தல்

25. விடைக்குன் றுகைப்பவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
தொடைக்குந் தளத்துறை வண்டினங் காடொலை யாவமுதம்
படைக்குங் குமுதமும் போண்ட கூடப் பரப்பைவெளி
அடைக்குங் கமல முகையுமுண் டோவுங்க ளாவியிலே. (உ)

### தெய்வத்திறம் பேசல்

26. பேர்கூடு மன்னங்கள் பால்கூடு நீரைப் பிரிக்குமென்கை
வார்கூடுந் தண்முலை யிருண்மை யேர்மதிக் கீற்றுடனே

---

24. பணி - பாம்பு. கணி - வேங்கைமரம். அலர்த்தொடை - மலர்களாலாகிய மாலை. கலை - ஆடை. அணி - ஆபரணம். தொடையே... அணியே: ஏகாரங்கள் எண்ணுப் பொருளன. பழம்படியே - முன்போல. அமுதே, மணியே, கண்ணின் மணியே: ஏகாரங்கள் விளிப் பொருளன; அடுக்கிய விளிகளாற் காதற்சிறப்பு விளங்கும். நின் ஐயத்தை.

(பி - ம்.) 3. திருந்தமுன் போலணிந்தேன்; அமுதே யென் கண்ணின். 4. மணியேயெனவுண்; மாற்றிடுமே.

25. விடைக்குன்று - மலைபோன்ற இடபத்தை. தொடைக் குந் தளத்து - மாலையை யணிந்த கூந்தலில். குமுதமென்றது வாயிதழை. கமலமுகை - தாமரையரும்பு; என்றது நகில்களை. ஆவி - குளம், உயிர்; "குலவளிகாள், நடக்குங் கமலமு நோக்குங் குவளையு நாணிலவை, அடக்குங் குமுதமுங் கண்டதுண் டோவுங்க ளாவியிலே" (திரு வேங்கைக். 24.)

(பி - ம்.) 1. குன்றுகைத்தவர். 4. கமலத்தரும்பு.

26. பால் கூடு நீரை - பாலிற் கலந்த தண்ணீரை. என்கை - என்று சொல்லுதல். வார் - கச்சு. பிரிக்கு மென்கை உண்மை. ஏர்மதிக்கீற்று - அழகையுடைய பிறை; "அம்புலியின், கீற்றைப் புனைந்த பெருமான்" (கந்தரலங். 1.) தார் - மாலைகள். நீர் கூடும் பாலை -

தார்கூடுஞ் செஞ்சடை யாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
நீர்கூடும் பாலைப் பிரிப்பர் கொலோவிந் நிலத்தவரே. (ந)

27. தங்கப் பொடியை யுருக்கிமுன் சாய்த்துத் தகடுசமைத்
தங்கத் தகட்டின் மணிகூட்டி யாழி யமைப்பவர்போல்
கங்கைச் சடையவ ராரூரிற் றேவர கண்டர்வெற்பில்
கொங்கைப் பசுங்கொடி யேவிதி காணம்மைக் கூட்டியதே. (ச)

பிரியேனென்றல்

28. கனம்பிரிந் தாலுமின் வான்பிரிந் தாலுங் கதிர்புனலை
அனம்பிரிந் தாலும் புயல்போலு மேனிய னம்புயத்தாள்
தனம்பிரிந் தாலுந்தென் னூரூர்த் தியாகர் தமதடியார்
மனம்பிரிந் தாலு முனைப்பிரி யேனென்றும் வாணுதலே. (ரு

பிரிந்துவருகேன்றல்

29. எண்டிசைக் குஞ்செல்ல வோடிய வூச லிமைக்குமுன்னே
பண்டிசைக் குந்தன் னிலையடைந் தாலெனப் பாகுடனே
கண்டிசைக் குஞ்சொல்லி பங்கார் தியாகர் கமலைவெற்பில்
வண்டிசைக் குங்குழ லாய்பிரிந் தேகி வருகுவனே. (சு)

---

நீர் என்னோடு சேர்தற்குக் காரணமான ஊழ்வினையை; நீரிற் கூடிய பாலை யென்பது வேறு பொருள். நீர்: முன்னிலைப் பன்மைப்பெயர், புனல்; சிலேடை; "நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே" (அருணைக். 63.)

(பி - ம்.) 2. முலையாயுண்மை. 4. பிரிப்பரன்றோ.

27. முன்சாய்த்து - முன்னிடத்தே ஊற்றி; இது பொற்கொல்லர்க்கு இயல்பு. அங்கு அத்தகட்டின். மணி - இரத்தினங்களை. ஆழி - மோதிரத்தை. தேவரகண்டர்: ஸ்ரீ தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று.

(பி - ம்.) 3. சடையவர் வன்மீக நாதர் கமலை.

28. மின் கனம் பிரிந்தாலும்; கனம் - மேகம். கதிர்களை வான் பிரிந்தாலும்; கதிர் - சந்திரசூரியர். அன்னம் புனலைப் பிரிந்தாலும். புயல்போலும் மேனியன் - திருமால். அம்புயத்தாள் - திருமகளுடைய. அடியாரது மனத்தை.

(பி - ம்.) 3. தியாகர் தவமடியார்.

29. ஊசல் - ஊசற்பலகை. பண்டு இசைக்கும் - முன்னே மேல் விட்டத்தில் கட்டப்பட்ட. தன் நிலையை. பாகு - தேன்பாகு. கண்டு

### இடமணித்தேன்றல்

30\. காதாருங் கண்ணி யிடத்தார் தியாகர் கமலைவெற்பில்
வாதாடுங் கொங்கை யிடைத்தோன்று முத்த வடமணிபோல்
ஆதார மாய்நடு வெல்லைக்கற் றோன்று மஃதிலையேற்
பேதாயென் னூர்க்குமுன் னூருக்கு நித்தம் பெரும்பிணக்கே.

---

## ச. தெளிவு

31\. பூரியர் கண்ணினும் வாழ்த்தாத வஞ்சகர் புத்தியினும்
தூரிய ரானவ ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிசூழ்
நேரியர் தூய வகளங்க நாடர் நிறைபுனற்கா
வேரியர் பொய்ப்பரன் றேநெஞ்ச மேசொன்ன மெய்ம்மொழியே.

---

இசைக்கும் - கற்கண்டை ஒக்கும். சொல்லி: உமாதேவியார். வண்டு இசைக்கும் - வண்டுகள் முழங்கும்.

(பி - ம்.) 1. ஓடியு மூசல்.

30\. இடைத் தோன்றும் - நடுவிலே காணப்படுகின்ற. மணிபோல் - மாணிக்கம்போல. எல்லைக்கல் - இரண்டு இடங்களின் எல்லையைக் காட்டுதற்கு அவற்றின் நடுவே நாட்டப்படும் கல். பேதாய் - பேதையே. பெரும் பிணக்கு உண்டாகும் என ஒரு சொல் வருவிக்க; பிணக்கு - சண்டை.

(பி - ம்.) 1. காதார் கருங்கண்ணி பங்கார்; கமலை மின்னே. 2. வாதாருங்கொங்கை நெருங்காதிடையிட்ட மாமணி. 3. றோன்று மதுவில்லையேற்.

31\. **தலைவி கூற்று.**

பூரியர் - கீழ்மக்களுடைய. தூரியரானவர் - எட்டாதவர். நேரியர் - நேரிமலையிலுள்ளார். அகளங்கநாடர் - சோழநாட்டிலுள்ளார்; அகளங்கன்-களங்கமற்றவன்; சோழன். காவேரியர் - பொய்யாது வரும் காவேரி யாற்றை யுடையவர்; “வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி” (**பட்**. 5-6) எனக் காவேரி பொய்யாதென்பதைப் புலப்படுத்தியிருத்தல் காண்க. மெய்ம்மொழி பொய்ப்பவர் அல்லர். அன்று: ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாக வரும் (**நேமி**. வினைமரபு. 7, உரை.)

(பி - ம்.) 3. நேரிய தூய நெடுங்குன்ற நாடர்.

## ரு. பிரிவுழி மகிழ்ச்சி

செல்லுங்கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்

32. ஓதிச் செருக்குச் சிறிதே யவிழவண் டோலமிடப்
பாதித் திலகம் வியர்வா லழியப் பசும்பனிநீர்
வேதித்த கொன்றைய ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
நாதித்த பூணுட னேசெல்லு மானெஞ்ச நம்முயிரே. (க)

33. மாலோதி நாளுந் தமியேன் வருந்தி வருடப்பெற்ற
காலோ நடந்தன கண்ணோபின் சென்றன கற்றவர்க்குப்
பூலோ கமுந்தரு மாரூர்த் தியாகர் பொருப்பிடத்தே
மேலோ ரிரங்குவர் கீழோரெந் நாளும் விரோதிப்பரே. (உ)

பாகனோடு சொல்லல்

34. இசையும் பலமணி யானெடு நாண்முன மீர்த்தலினல்
அசையுங் கொடியிடை தோன்றுத லாலடி யார்மிடியும்
வசையுந் தவிர்ப்பவ ராரூர்த் தியாகர் வரைவலவா
விசையங்கொ டேரன வேசெல்லு மாலொரு மின்கொடியே.

---

32-46. தலைவன் கூற்று.

32. ஓதி - கூந்தல். வேதித்த - கலந்த. நாதித்த - முழங்கிய. உயிரென்றது தலைவியை. அருவமான உயிர் இங்ஙனம் செல்வது என்ன வியப்பு!

(பி - ம்.) 1. ஓதிச் செருகல். 2. பாதித் திலதம். 3. வேதித்த மாலையர்.

33. மால் ஓதி - காமமயக்கத்தைச் சொல்லி. வருட - தடவ. பூலோகமும்: உம்மை, பரலோகத்தையும் முத்தியையும் தழுவிநின்றது. மேலோரென்றது கண்களையும், கீழோரென்றது பாதங்களையும் குறிப்பித்து நின்றன.

34. இச்செய்யுள் தலைவிக்கும் தேருக்கும் சிலேடை. பல மணி - ஆபரணங்களிலுள்ள பல மாணிக்கங்கள், ஒலிக்கும் பல மணிகள். நாண் - நாணமென்னும் குணம், தேர்வடம். கொடியிடை தோன்றுதலால் - கொடி போன்ற இடை தோன்றுதலால், துவசம் நடுவே தோன்றுதலால். மிடி - வறுமை. வலவன் - தேர்ப்பாகன்; இவன் கேட்போன். விசயம் - வெற்றி.

(பி - ம்.) 1. நாணமுன். 2-3. வினையும் வசையும்.

## ௩. பிரிவுழிக் கலங்கல்

ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோவென்றல்

35. பாலாழி நஞ்சுண்ட வாரூர்த் தியாகர் பணிவரைமேல்
மாலாய வெள்ளத் தழுந்துநெஞ் சேயிவர் வானமதி
போலாய வெள்ளக் கடல்புகுந் தார்நம்மைப் புல்லியது
மேலாயும் போது கனவே நனவன்று மெய்யுமன்றே. (௧)

வாயில்பெற்றுய்தல்

36. காரணங் கோடு நடித்தார் தியாகர் கமலையன்னாள்
பாரணங் காமல்ல ளென்றுமுன் சொன்னவப் பார்வைகளே
ஆரணங் கான பலமா தரினுந்தன் னுருயிராம்
ஓரணங் காலுன் குறைமுடிப் பாயென் றுதவியவே. (௨)

---

35. பாலாழி - பாற்கடலிற்றோன்றிய. மால் ஆய வெள்ளத்து - மயக்கமாகிய நீர்ப்பெருக்கத்தில். ஆயவெள்ளக்கடல் - பாங்கியர் கூட்டமாகிய கடலில். நனவு - சாக்கிர நிலை.

தலைவிக்கு மதி உவமை; "மீது லாயவெண் டாரகை நாப்பணிற் சீத வொண்கதிர்த் திங்கள்கண் டாலென, மாதர் நோக்கின் மடந்தையர் நாப்பணிற், காதல் கூர்தம யந்தியைக் கண்டதே" (நைடதம், அன்னத்தைத் தூது. 41.) மதி கடலிற் புகுதல் இயல்பு.

(பி - ம்.) 1. வேலாயுதன்றந்தை யாரூரர் வீதி விடங்கர் வெற்பிற். 2. யிவர் வானவரை. 3. புகுந்தார் தம்மைப். 4. கனவே நினைவன்று.

36. காரணங்கு - பத்திரகாளி; "தாளொன்றாற் பாதாள மூடுருவத் தண்விசும்பிற், றாளொன்று லண்டங்க டந்துருவித்—தோளொன்றாற், றிக்கனைத்தும் போக்குந் திறற்காளி காளத்தி, நக்கனைத்தான் கண்ட நடம்" (கைலைபாதி. 88.) இறைவன் பத்திரகாளியோடு நடித்த தலம் திருவாலங்காடு. பாரணங்கு ஆம் என்று - பூமியிலுள்ள பெண்ணுவாளென்றும்; அல்லள் என்று - தான் பிறமகளிர் அல்லளென்றும்; என்று என்பதை முன்னும் கூட்டுக. முன் - கைக்கிளைப் பகுதியில். சொன்ன - இமைத்தலால் தெரிவித்த; "நீலவுண்கண், கையா லழைப்பன போலிமை யாநிற்கும் காரிகைக்கே" (தஞ்சை. 3.) ஆரணங்கான - அரிய தெய்வப் பெண்களைப்போன்ற. ஆருயிராம் ஓரணங்கால் - உயிர்த் தோழியால். தலைவி உயிர்த் தோழியையே அடிக்கடி நோக்குதலின் அவளால் தலைவியைப் பின்னும் பெறலாமென்று தலைவன் துணிந்தான். பார்வைகள் உதவியவென முடிக்க.

(பி - ம்.) 2. பாரணங்காமலை வென்றுது, பாரணங் காமல்ல ளென்றுது முன்சொன்ன 4. முடிப்பாயென் றுசாவியதே.

### பண்பு பாராட்டல்

37. கிளைகாட்டும் பொன்னன்ன செந்நெல்செவ் வாய்வரை கீறிவெள்ளி
முளைகாட்டுந் தண்வய லாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
வளைகாட்டுங் கண்டத்தை நூலிழை காட்டு மருங்குலைமா
தளைகாட்டும் வாயை மயில்காட்டு மாங்கவர் சாயலையே. (௩)

### பயந்தோர்ப் பழிச்சல்

38. சிந்தா மணியில் விளக்காக வானவர் தேனுவவர்
தந்தா மணியிற் செறிபசு வாகவெண் சங்கெறிந்து
பந்தாடுங் காவிரி யாரூர்த் தியாகர் பணிவரைமேல்
சந்தாப நீக்கி யெனையாளு மங்கையைத் தந்தவர்க்கே. (௪)

### கண்படை பெறாது கங்குல்நோதல்

39. உழுங்கொழு வாளுள் ளுளைந்திளஞ் சூன்முத் துகுத்தயலே
செழுங்கொழு வால்வளை சேர்கம லேசர் தியாகர்வெற்பில்
அழுங்கிய பாவி மனமே யிரவியை யள்ளியுள்ளே
விழுங்கிய கங்குலு மென்போது மென்று விடிவதுவே. (௫)

---

37. கிளை - கூட்டம். பொன்னன்ன செந்நெல்: "பொன்னிறச் செந்நெல்" (நாலடி. 269.) செவ்வாய் வரை - செவ்விய வாயின் எல்லையை. செந்நெல் காட்டு மென்க. முருகு - அழகு, மணம். வளை - சங்கு. மருங்குலை-இடையை. மாதளை-மாதுளம் பூ; "மாதளை யுந்தொழும்" (113); "மாதளைவீ வித்து" (திருவால. மாணிக்கம் விற்ற. 15.)

(பி - ம்.) 1-2. வெள்ளை முளை. 2. முருக வெற்பில்.

38. இல்விளக்கு - வீட்டிலுள்ள விளக்கு. வானவர் தேனு - காமதேனு. தாமணி - பல பசுக்களைக் கட்டுதற்குரிய பல தும்புகளையுடைய நீண்ட கயிறு. இச்சொல் உலக வழக்கிலும் உள்ளது. சந்தாபம் - மனத்துன்பம்.

(பி - ம்.) 1. தேனுவெலாம்.

39. உள் உளைந்து - மனம் வருந்தி. இளஞ்சூலாகிய முத்துக்களை. செழு கொழு வால்வளை - செழுமையையுடைய கொழுத்த வெண்ணிறமுள்ள சங்கங்கள். என் போதும் - என்னுடைய தீய காலமும். கங்குலும் போதும் விடிவது என்று? "என்று விடியுமெனக் கெங்கோவே" (தனிப்.)

(பி - ம்.) 1. உடைந்திளஞ் சூன்முத் துதிர்த்தவயல்.

# எ. இடந்தலைப்பாடு

### தந்த தெய்வம் தருமெனச் சேறல்

40. பாட்டிய வூரனை யாரூ ரிடத்திற் பரவையுடன்
கூட்டிய தெய்வ நதிசேர் பொருளைக் குளத்தில்வரக்
காட்டிய தெய்வமின் னாளைமுன் னாளந்தக் காவகத்தே
ஈட்டிய தெய்வந் தருநெஞ்ச மேசெலி னின்னமுமே. (க)

### முந்துறக் காண்டல்

41. பின்னித் திரைவிழும் பேராழிச் சங்கிளம் பிள்ளைவந்து
பொன்னித் திரையிற் றவழ்ந்திளஞ்சூன் முற்றிப் புன்னையின்கீழ்
நன்னித் திலஞ்சொரி யாரூர்த் தியாகர்நன் னாட்டிலொரு
கன்னிக் கரும்பிரு செவ்விள நீர்கொண்டென் கண்ணுற்றதே.

### முயங்கல்

42. கண்டமை யாதிங் குயிர்த்தமை யாது கலந்தமையா
துண்டமை யாதிசை கேட்டமை யாதொழி யாவிடத்தைக்
கொண்டமை வார்திரு வாரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்
வண்டமை வார்குழ லார்தந்த வானந்த வாரிதியே. (ங)

---

40. பாட்டு - திருப்பாட்டு. ஊரனை - சுந்தரமூர்த்தி நாயனாரை; "ஊரன் புறம்பயத்தப்பனைத்தமிழ்ச் சீரினால், நெஞ்சினாலே புறம்பயந் தொழு துய்துமென்று நினைத்தன" (தே. சுந்தர.) பரவையுடன் - பரவை நாச்சியாரோடு. நதி - மணிமுத்தா நதியில். குளம் - கமலாலயம். மின்னாளை - தலைவியை. ஈட்டிய - கூட்டுவித்த. கூட்டிய தெய்வம், காட்டிய தெய்வம், ஈட்டிய தெய்வமென்றது ஸ்ரீ தியாகேசரை. செல்லின், தெய்வம் இன்னமும் தரும்.

(பி - ம்.) 2 குளத்துவரக். 3. நம்மோடந்தக். 4. நெஞ்சஞ் சென்றிலை.

41. பேராழி - பெரிய கடலிலுள்ள. பொன்னித் திரையில் - காவிரியின் அலையின்கண். நித்திலம் - முத்துக்களை. கன்னிக் கரும்பு - இளங் கரும்பு; கன்னியென்பது இளமை குறித்துவரும்; கன்னி வாழை, கன்னிக் கமுகு (சீவக.) என்பன காண்க. இளநீரென்றது நகில்களை.

(பி - ம்.) 1. பேராழி யிற்சங்கின். 2. பொன்னித் துறையிற், பொன்னிக் கரையிற்.

42. அமைதல் - திருப்தியுறுதல். "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள், 1101) என்று

புகழ்தல்

43. அவ்வா னவர்க்குப் பொதுவான திங்க ளமுதமுங்கள்
செவ்வா யமுதுக் கிணையல்ல வேதிரு வீதிதொறும்
சைவா கமந்திக ழாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
மைவார் குழலின் மதுகரங் கோடி வளர்ப்பவரே. (ச)

44. ஆனே றுகைப்பவ ராரூர்த் தியாக ரணிவரைமேல்
தேனே யுனது துடைமே லழகைத் திருடியன்றோ
மீனே றெனுமிள வாளையும் வாழையும் வெங்களிறும்
தானே சிறையுணுங் கட்டுணுங் காலிற் றளையுணுமே. (ரு)

ஆயத்துய்த்தல்

45. திருமேனி காத்து மதவேள்பின் செல்லவென் சிந்தையென்ன
இருமேரு வுங்கொண் டொருநூ லசைய வினியகண்டம்
கருமேக மன்னவர் வன்மீக நாதர் கமலைவெற்பிற்
குருமே கலையணங் கேவண்ட லாயத்தைக் கூடுகவே. (சூ)

---

ரேனும், இவள்பாற் பெற்ற இன்பம் ஐம்புலன்களுக்கும் தெவிட்டாத இன்பமென்பது தலைவன் கருத்து.

(பி - ம்.) 2. உண்டமை யாதுசொற்.

43. அவ்வானவர்: அ, சேய்மையைச் சுட்டியது. திங்கள் அமுதம் - சந்திரனிடத்துள்ள அமுதம். தலைவியின் வாயமுதம் தனக்கே சிறப்பாக உள்ளதாதலின், திங்கள் அமுதத்தை வானவர்க்குப் பொதுவானதென்று இழித்துக் கூறினான். மைவார் குழலில் - மேகத்தைப்போன்ற நீண்ட கூந்தலில். மதுகரம் - வண்டு.

(பி - ம்.) 2. இணையதன்றே; வீதியெங்கும். 3. சைவாகமந் தொழும்.

44. வாளை சிறையுணும் - வாளைமீன் சிறையில் அடங்கிய நீரில் தங்கும். வாழை கட்டுணும்; கட்டுண்ணுதல் - பந்தற்காலில் கட்டப்படுதல். களிறு காலில் தளையுண்ணும்; தளை - விலங்கு; நிரனிறை.

(பி - ம்.) 4. தானே சிறைபுகும்.

45. மதவேள் - மன்மதன்; அவன் மேனி காத்துப் பின்செல்ல; "வான்கருப்பு, வில்லி கணைதெரிந்து மெய்காப்ப" (நள. சுயம்வர. 99.) இருமேரு: தனங்கள். நூல்: இடை. என் சிந்தை யென்ன அசைய. குரு - நிறம். வண்டல் ஆயத்தை - விளையாட்டையுடைய பாங்கியர் கூட்டத்தை.

(பி - ம்.) 4. குருமேனகை, குருமேதகை.

## அ. பாங்கற் கூட்டம்

### தலைவன் பாங்கனைச் சார்தல்

46. மாகாம வாரிக்குண் மின்னார்தங் கொங்கை வரைதடுக்கப்
போகா மரக்கலம் போலுநெஞ் சேபொழில் புக்குவண்டு
சீகா மரம்பயி லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மீகாம னென்ன வொருவனுண் டேதுணை வேதியனே. (க)

### பாங்கன் தலைவனை உற்றது வினாதல்

47. நாலா ரணன்மைந்தன் கையா லடங்கிய நாகமுமால்
காலா லடங்கிய நாகமும் போன்றனை காவியந்தேன்
பாலா வினம்பரு காரூர்த் தியாகர் பணிவரைமேல்
மாலார் களிற்றண்ண லேயுற்ற தேதுன் மனத்திடையே. (உ)

### தலைவன் உற்றது உரைத்தல்

48. ஒருநாரி வெய்ய சிலையிரண் டேந்திநெஞ் சூடுருவக்
கருநாண் மலரம்பி னெய்ததெல் லாங்கம லாலயத்துத்
திருநாரி போற்றிய வாரூர்த் தியாகர் செழுங்கிரிமேற்
பெருநாண முற்றிய நானன்ப னேயென்கொல் பேசுவதே. (ங)

---

46. காம வாரிக்குள் - காமமாகிய கடலில். மரக்கலம் - கப்பல். சீகாமரம் - ஒருபண். மீகாமன் - மாலுமி. வேதியன் - பார்ப்பனப் பாங்கன் ஒருவனாகிய வேதியன் துணையுண்டு.

(பி - ம்.) 1. பொற்கொங்கை. 2. போல நெஞ்சே.

47. **பாங்கன் கூற்று.**

நாலாரணன்மைந்தன் - அகத்திய முனிவர். கையால் அடங்கிய நாகம் - விந்தியமலை. மால் காலால் அடங்கிய நாகம் - காளியனென்னும் பாம்பு. காவி - கருங்குவளைமலரிலுள்ள. உற்றது எது - நேர்ந்த துன்பம் யாது.

(பி - ம்.) 1. நாலா ரணன்மகன் கையா லடக்கிய.

48. **தலைவன் கூற்று.**

ஒரு நாரி - ஒரு பெண். சிலை யிரண்டென்றது, இரண்டு புருவங்களை. நாரி இரண்டு சிலையையேந்தி யென்பது ஒரு நயம்; நாரி - நாண்; சிலை - வில். கருநாண்மலரம்பு : கண்கள். திருநாரி - திருமகளாகிய பெண். எய்ததெல்லாவற்றையும் நான் பேசுவது என்கொல்; நான் பேசிப் பயனில்லை; நீயே அறிந்துகொள்க வென்றான்.

(பி - ம்.) 3. ஆரூரர் செம்பொற் றியாகர்வெற்பில். 4. நாளன்பனே.

### கற்றறி பாங்கன் கழறல்

49. தண்ணார் கடுக்கைய ராரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
மண்ணுடர் கற்பக மன்னமன் னுமட மான்குருளை
விண்ணார் கலைமதிக் கேபுகு மாறன்றி மெல்லியலார்
கண்ணுன மானிற் புகுந்ததெவ் வாறுன் கலைமதியே. (௪)

### கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்

50. எண்போதென் போல மயல்கொண்ட போதி லியலுரைக்க
நண்போருன் போல வவர்க்கில்லை யோமொழி நாரணனார்
கண்போது வைத்த கழலார் தியாகர் கமலைவெற்பில்
வெண்போ தகத்தற்குஞ் செம்போ தகத்தற்கும் வேலற்குமே.

51. தங்கே ரிலாதவ ராரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
மின்னே ரிடையவர்க் காருரு காரென் மெலிவுகண்டும்
நன்னேய மின்றி யுரைக்குநண் பாவொரு நாரியென்றால்
அந்நேர மேயுட் குழையுமன் றேசிலை யானதுமே. (௬)

---

49. **பாங்கன் கூற்று.**

கடுக்கை - கொன்றை. மான்குருளை - மான்குட்டி. மான்குட்டி மதியிற் புகுதல் இயல்பாக இருப்ப, உன்னுடைய கலைமதியானது மானிற் புகுந்ததென்பது ஒரு நயம்; கலைமதி - கிரணங்களையுடைய சந்திரன், நூல்களை உணர்ந்த புத்தி; சிலேடை.

50 - 51. **தலைவன் கூற்று.**

50. எண்போது - எண்ணும்போது. கண்போது - தம கண்ணுகிய மலரை. வெண்போதகத்தன் - இந்திரன்; போதகம் - யானை. செம்போது அகத்தன் - பிரமன். வேலன் - முருகக் கடவுள். இம்மூவரும் பெண்களின் மயக்கத்தால் வருந்திய காலத்தில் அதைத் தீர்த்தற்கு உன்னைப்போல ஒருவரும் இல்லையோ என நகையாடிக் கூறினன்.

(பி - ம்.) 1. போரி னியலுரைக்கும். 3. கண்போது போல வணிந்தார்; கமலைவைப்பில்.

51. இடையவர்க்கு ஆர் உருகார், நாரி - பெண், நாணி; சிலேடை. சிலை - கல், வில்; "நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நசையால், வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால், காண லாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டால், பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ" (**கருணைப்பிரகாசர் பாடல்**) என்பதை இச்செய்யுள் நினைப்பிக்கின்றது.

(பி - ம்.) 4. சிலை யானதுவே.

### பாங்கன் கிழவோற் பழித்தல்

52. கங்காள வேடந் தரித்தார் தியாகர் கமலேயிலான்
மங்காமற் காத்த மனுவனே யாயுனே வங்தொருமான்
வெங்காதல் பற்றிய தேற்கதி ரோனை விழுங்குங்கங்குல்
அங்காரந் தன்னை நறுமல ராமென் றளிமொய்க்குமே. (எ)

### கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்

53. மறியாருஞ் செங்கைய ராரூர்த் தியாகர் வரையினண்பா
சிறியானை நீகண் டிரங்கா தொழியென்று தேற்றுமது
குறியா முரத்திற் புதைந்தசெவ் வேலைக் குறிப்பறிந்து
பறியாது நோவு மறியாது கூறும் பரிசொக்குமே. (அ)

### பாங்கன் தன்மனத்து அழுங்கல்

54. பாலான சொல்லி விழிச்சே விரண்டுநம் பார்த்திபன்றன்
நூலாழி யொன்றைக் குடிக்கரி தோபத நூபுரச்செவ்
வேலானைத் தந்தவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
சேலான தொன்று குடித்ததன் றேழெழு சிந்துவுமே. (கூ)

---

52. **பாங்கன் கூற்று.**

கங்காள வேடந்தரித்தார்: "கங்காள வேடரா யெங்குஞ் செல்வீர்" (**தே. திருநா.**) ஆன் - பசு. மனு - மனுநீதிச் சோழன். மான் காதல் - மான்போன்ற தலைவியின் மேலுள்ள விருப்பம். கங்குல் கதிரோனை விழுங்கும். அங்காரம் - நெருப்பு. அளி - வண்டு.

(**பி - ம்.**) 2. மங்காது காத்த மனுவழி யாய். 4. அங்கா ரகனே.

53. **தலைவன் கூற்று.**

குறி - இலக்கு. உரத்தில் - மார்பில். தேற்றுமது, கூறும் பரிசை ஒக்கும்.

(**பி - ம்.**) 2. தேற்றுவது. 3. குறியா துரத்திற் புதைத்த.

54 - 56. **பாங்கன் கூற்று.**

54. சொல்லி - சொல்லையுடைய தலைவியின். நூற்கடல் ஒன்றைக் குடிக்க அரிதோ. சேலானது ஒன்று - திருமாலாகிய சேல். எழு சிந்து - எழு கடல்; "உளையாழி யோரேழு மொருசெலுவி னெடுங்குதலான், விளையாட நீர்பெரு மீனுருவம் பரவுதுமே" (தொல். செய். 149, பேர். மேற்.) ஒரு சேல் எழு கடலையும் குடித்திருப்ப இரண்டு சேல்கள் ஒரு கடலைக் குடித்தல் அரிதோ.

(**பி - ம்.**) 1-2. பார்த்திபர்தந் நூலாழி.

### பாங்கன் தலைவனோடு அழுங்கல்

55. கூற்றும் பயங்கொண்ட தாளுடை யாரென் கொடியவினை
மாற்றுந் தியாகப் பெருமாள் கமலையின் மன்னவனே
ஆற்றுந் திரைப்பொலி யாகாய கங்கை யளறுபட்டால்
தேற்றுங் கதக முலகத்தி லேதுண்டு செப்புகவே. (கo)

### பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்

56. போதோ விடம்பெறு வாருல கோவும்பர் பொன்னுலகோ
ஏதோ விடம்வடி வெவ்வியல் போதமை யேத்துந்தொண்டர்
தீதோட வாழ்விக்கு மாரூரர் செம்பொற் றியாகர்வெற்பா
மாதோ டமர்தருங் காதோ டமர்செயும் வாள்விழிக்கே. (கக)

### தலைவன் அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல்

57. பெருத்தக லாது கிளர்ந்தெழு காமப் பிணிதவிர்க்க
மருத்துவ னாக வருந்துணை வாமதி வான்கதலிக்
குருத்தக லாதுல வாரூர்த் தியாகர் குவட்டினிலென்
கருத்தக லாதமின் கண்ணாகு மாவிடங் காவிடமே. (கஉ)

---

55. கூற்று - யமன். அளறு - சேறு. கதகம் - தேற்றாங் கொட்டை; கலங்கிய நீரைத் தேற்றாங்கொட்டையால் தெளியச் செய்தல் வழக்கம்.

(பி - ம்.) 1. பயங்கொண்ட தாளிணையால். 4. உலகத்திலோவுண்டு.

56. போதோ - தாமரைமலரோ. விடம்பெறுவாருலகோ - நாக லோகமோ. தீது ஓட. மா தோடு - பெரிய தோடென்னும் அணிகள். வாள் விழி - தலைவி; வாள் விழிக்கு இடம் ஏது? வடிவு எவ்வியல்போ?

(பி - ம்.) 2. வடிவெவ்வியலோ. 3. தியாகர் வெற்பில். 4. காதோ டமர்தரும்.

57. **தலைவன் கூற்று.**

மதி கதலிக்குருத்தை அகலாது உலவுகின்ற; "விரிந்த வாழையி னெட் டிலை மிசைநிறை மதியம், பொருந்து மாறுவிண் முழுதையு மளித்தருள் புத்தேள், அருந்த வாய்மடைத் தொழிற்றிற நிரம்பிய வடிசில், சொரிந்த தாமென மனங்களி கூர்தரத் தோன்றும்" (பிரபு. கதலிவன. 19) என்னும் செய்யுளில் இக்காட்சி மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. மின் - மின்னல் போல்வாளது. கண், மா இடம் - திருமகளின் இடமாகிய கடல்; **கோளு. மா** விடம் ஆகும். இடம் கா ஆகும்; கா - சோலை.

(பி - ம்.) 1 - 2. பிணிதனக்கு மருத்துவனாக. 3. குவட்டி லென்றன்.

### பாங்கன் இறைவனைத் தேற்றல்

58. செய்யலைக் கும்புன லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
நெய்யலைக் குங்கதிர் வேலண்ண லேயந்த நீள்பொழிற்கே
தையலைக் கண்டிங்கு மீள்வே னரைக்கணந் தாமதியேன்
மையலைக் கொண்டவ் வளவுநை யேலுன் மனத்திடையே. (கங)

### பாங்கன் குறிவழிச் சேறல்

59. பன்னங்கொள் காவின் மயிலாவ ரோமலர்ப் பைந்தடத்தில்
அன்னங்கள் போல்விளை யாடுவ ரோவடிக் காயிரம்பொன்
சின்னங்கள் கூற வளிப்பார் தியாகர் செழுஞ்சிலம்பில்
என்னங்க மன்னவன் றன்னங்கம் வாட்டிய வேந்திழையே. (கச)

### இறைவியைக் காண்டல்

60. துவரே றுமென்சடை யாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
எவரே திடமென் றிரங்குநெஞ் சேயிது வேயிடமும்
தவரே புருவமும் வேலே விழியுந் தடவரையின்
கவரே தனமு மிவரே யவன்சொன்ன கன்னியுமே. (கரு)

---

58 - 64. **பாங்கன் கூற்று.**

58. செய் - வயல். பொழிற்கு - சோலையின்கண். அவ்வளவும் - அதுவரையில். மனத்தினிடையே மையலைக்கொண்டு நையேல்.

(பி - ம்.) 2. இந்த நீள்பொழிற்கே. 4. அவ்வரையும்.

59. பன்னம் = பர்ணம் - இலை. தடம் - தடாகம். அடிக்காயிரம் பொன் அளிப்பார்: ஸ்ரீ தியாகேசர் திருத்தேரிலேறுகையில் அடிக்கு ஆயிரம் பொன் சொரிதல் வழக்கம் (**திருவாரூருலா, 173-4.**) சின்னங்கள் - திருச்சின்னங்கள். என் மன்னவன், அங்கங்களையுடைய மன்னவனென்க; அங்கம் - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு உறுப்புக்கள் (**குறள், 381.**)

(பி - ம்.) 3. சின்னங்குலாவ.

60. துவர் - சிவப்பு. எவர் - எவ்வியல்பையுடையார். ஏது இடம் என்று. தவர் - வில். வரையின் கவர் - மலையின் இரண்டு பிரிவுகள்.

(பி - ம்.) 1. துவரேறு செஞ்சடை. 4. இவரே யவர்சொன்ன.

## இகழ்ந்ததற்கு இரங்கல்

61. காவம் பரூதல ராரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
பூவம்பு சாத முதலாக வேமதன் பூட்டியெதிர்
ஏவம்பி னாலுமின் கண்ணம்பி னாலு மிளைத்தவனை
நாவம்பி னாலு மலைத்தேனென் போலில்லை நண்பினரே. (கக)

## தலைவனை வியத்தல்

62. கங்கைச் சடையவர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
அங்கைத் தலத்தி னமுதனை யார்கொங்கை யாகியமா
தங்கத் தெதிர்சென்று மீளலு மாகுந் தளருமிடைச்
சிங்கத்து முன்புநின் றண்ணலெவ் வாறு திரும்பியதே. (கஎ)

## தலைவியை வியத்தல்

63. அரும்பா முலைபங்க ராரூர்த் தியாக ரணிவரைமேல்
இரும்பானல் வண்டுறை தண்டுறை யூர னிதயமலர்ச்
சுரும்பாவர் தோளுக்கு முத்தார மாவர் துணைவிழிமேல்
கரும்பாவை யாகுவர் மார்பினுக் காவர் கவுத்துவமே. (கஅ)

---

61. கா - சோலை. வம்பு - நறுமணம். அம்புசாதம் - தாமரை; மன்மதன் பாணம் ஐந்தனுள் இது முதலாவது. ஏவு அம்பினாலும் - ஏவிய அம்பினாலும். நா வம்பினாலும் - நாவில் தோன்றும் வம்புச் சொற்களாலும்.

(பி - ம்.) 2. பூவம்பு சாதி. 3. இடைந்தவனை.

62. அங்கைத்தலத்தின் அமுது: "உள்ளங்கைத் தேனனேன்" (**தனிப்பாடல்**) என்றார் ஒரு புலவர். மாதங்கம் - யானை. மகளிரிடைக்குச் சிங்கத்தின் இடையை உவமை கூறுதல் மரபு. திரும்பியது எவ்வாறு?

(பி - ம்.) 1. ஆரூரிற்றேவர கண்டர். 3. தங்கத் திடைநின்று. 4. சிங்கத்தின் முன்பு; திருமியதே.

63. பானல் - நீலோற்பல மலரில். விழிமேற் கரும்பாவை - கண்மணிப்பாவை. மார்பினுக்குக் கவுத்துவமாவர். தலைவியென்னும் எழுவாய் எஞ்சிநின்றது.

(பி - ம்.) 2. இரும்பா னலந்துறை. 4. ஆகு மவர்மார் பிடைநற் கவுத்துவமே.

தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல்

64. தத்தி வருந்திரைக் காவிரி யாற்றிற் றவழுஞ்சங்கின்
முத்திவ ருந்திரு வாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
வித்தக னேயலர்க் காவிற்கண் டேனிணை வேலுமிரண்
டத்தியின் கோடுங் கமுகமுஞ் சேர்பெண் ணரசினையே. (சுகூ)

தலைவன் சேறல்

65. மேகா டவியை விரும்பிய சாதக மேதகவே
ஆகாயங் கண்ணுற்று நிற்பது போல வரியயனுர்
தேகார மார்திரு வாரூர்த் தியாகர் செழுங்கிரிமேற்
பூகா டவியிடை யேநின்ற தாலந்தப் பூங்கொடியே. (உ0)

தலைவன் தலைவியைக் காண்டல்

66. களமார் விடத்தின ராரூரிற் றேவர கண்டர்வெற்பில்
உளமா றவிர முயங்குது மோவளி யோசையெழ
வளமார் தளிரு மதுவார் கனியும் வடுவுங்கொண்டோர்
இளமா வெனநின்ற தான்முது மாவி னிரும்பொழிற்கே. (உக)

---

64. முத்து இவரும் - முத்துக்கள் பரத்தற்கு இடமாகிய. காவில் - சோலையில். இணைவேலும் - இரண்டு வேல்களையும்; என்றது கண்களை. இரண்டு அத்தியின் கோடு - யானையின் இரண்டு கொம்புகளை; என்றது நகில்களை. கமுகம் - பாக்குமரம்; என்றது கழுத்தை. பெண்ணரசினைக் காவிற் கண்டேன். வேல், அத்தி, கமுகம் சேர்ந்த அரசமரத்தை ஒரு காவிற்கண்டேனென்பது ஒரு நயம்.

(பி - ம்.) 1. திருக்காவிரி. 2. முருகனைப்போல். 3. இலைவேலும். 4. குமுதமுஞ் சூழ்.

65 - 70. தலைவன் கூற்று.

65. மேகாடவியை - மேகத்தின் கூட்டங்களை. சாதகம் - தாரையை விரும்பி மேகத்தையே நோக்கிக் கொண்டிருப்பதொரு பறவை. தேகம் ஆரமாம். பூகாடவி - கமுகந் தோட்டம். பூங்கொடியென்றது தலைவியை.

(பி - ம்.) 2. ஆகாயக் கண்ணுற்று; அரிமகவான். 3. ஆரூரர் செம் பொற்றியாகர் வெற்பில். 4. பூகாடவிமிசையோ; இந்தப் பூங்கொடியே.

66. களம் - கழுத்து. உளத்திலுள்ள மால் தவிர; மால் - மயக்கம். அளி - வண்டு; இது கூந்தலில் இருந்து முழங்குவது. தளிர்; மேனி

### கலவியின் மகிழ்தல்

67\. ஊனந்த மான மயமொரு நாலு மொழித்துநமக்
கானந்த மேமய மாக்கிய தாலம்பு சாதமலர்
மேனந்த மார்வய லாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மானந்த மாம்விழி யாயிது வேமுத்தி மற்றில்லையே. (உஉ)

### புகழ்தல்

68\. வரையோ தனமிரு தோள்கழை யோவிழி வாரிதியோ
கரையோ புருவங் கனங்குழ லோசிலைக் காமகலைக்
குரையோ வுரைதிரு வாரூர்த் தியாக ருயர்ந்தபொன்னித்
திரையோ லிடும்புன னாட்டெம்மை வாழ்வித்த தேமொழிக்கே.

### பாங்கியோடு வருகெனப் பகர்தல்

69\. பங்கே ருகமு மிரவியுந் திங்களும் பானலும்போல்
நங்கேண்மை யென்று நடந்திட வேரி நளினத்திலே
சங்கேறி முத்திடு மாரூர்த் தியாகர் சயிலமின்னே
இங்கே யுயிரன்ன பாங்கியு நீயு மெழுந்தருளே. (உச)

---

கனி : அதரம் ; (கோளு) வடு : கண்கள். நின்றது என் உயிரென ஒரு சொல் வருவிக்க. கடையடி முரண்.

(பி - ம்.) 1. ஆரூர்த்தியாகர் கமலை வெற்பில். 4. மா வெதிர் நின்றதால்.

67\. ஒருநாலு - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம். அம்புசாதம் - தாமரை நந்தம் ஆர் - சங்குகள் பொருந்திய. மான் அந்தம் ஆம் - மான் முடிவை அடைவதற்குக் காரணமாகிய ; அந்தம் - முடிவு ; அழகுமாம்.

68\. தனம் வரையோ. கழை - மூங்கில். புருவம் விழியாகிய வாரிதிக்கு உரிய கரைகளோ. கனம் - மேகம். சிலை : காமனுக்கு அடைமொழி. ஒலிடும் - முழங்கும். புனநாடு - சோழநாடு.

(பி - ம்.) 1. தோள் வரையோ. 4. ஒலிடும் பொன்னி நாட்டு ; தேமொழியே.

69\. பங்கேருகம் - தாமரை மலர். பானல் - நீலோற்பலமலர். வேரி - தேன். நடந்திட எழுந்தருள் என்க.

(பி - ம்.) 1. இரவியும் வாவியும் பானலும்போல். 2. வேண்டினளினத்திலே.

தலைவியைப் பாங்கிற் கூட்டல்

70. தண்சங்கங் கோடி யுடன்சூழச் செல்லுஞ் சலஞ்சலம்போற்
பெண்சங்கங் கூட நடந்துசெல் வாயன்னம் பின்புசெல்ல
வெண்சங்க மூர்வய லாரூரர் வீதி விடங்கர்வெற்றிக்
கண்சங் கரித்த மதவேளை நல்குங் கடைக்கண்ணியே. (உரு)

---

## ௬. பாங்கிமதியுடன்பாடு

பாங்கி ஐயமுற்றோர்தல்

71. பொற்பூவின் வாச மெனலாமெய் வாசம் புதியவழ
குற்பூத மாகிய நல்லோ ரொழுக்க முணர்விலுண்டி
வெற்பூ டமர்ந்தவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
கற்பூர நாறித மார்க்கென்கொ லோவந்த காரணமே. (க)

72. செய்யுஞ் செயலை மறைக்குஞ்செல் லாநிற்குஞ் சென்றுமலர்
கொய்யும் பொழிலிற் றனியே பயிலும்வெங் கூற்றின்கையும்
மெய்யுந் துவைத்தவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மையுந்து கூர்விழிக் கென்னோ துயரு மகிழ்ச்சியுமே. (உ)

---

70. தண் சங்கம் - தாழ்வான பணிலமென்னும் சங்குகள். சலஞ்சலம் - பணிலம் ஆயிரம் சூழப்பெற்றதான ஒருவகைச் சங்கு. பின்பு அன்னம் செல்ல. சங்கம் ஊர் - சங்குகள் ஊர்ந்து செல்லப்பெற்ற. நல்கும் - தண்ணளி செய்யும். கடைக்கண்ணியே நடந்து செல்வாய். தலைவிக்குச் சலஞ்சலம் உவமை (தஞ்சை. 62.)

(பி - ம்.) 4. மதவேளை யாளுங் கயற்கண்ணியே.

71-79. பாங்கி கூற்று.

71. வாசம் - வாசனை ; மெய்வாசம் - உடம்பின் வாசனை ; உற்பூதம் - திடீரென்று தோன்றல் (86.) நல்லோ ரொழுக்கம்: தனியே யிருத்தல். உணர்வில் உண்டி - உணவிற் கருத்தின்றி உண்ணுதல். வாசம் முதலியன வந்த காரணம் என்கொலென்க.

(பி - ம்.) 4. கற்பூரமாமிதழாட் கென்கொலோ.

72. மறைக்கும் - மறைப்பாள். கூர்விழி - தலைவி. என்னோ - என்ன காரணத்தால் வந்தனவோ ?

(பி - ம்.) 3. துவைத்தவர்.

பிறைதொழுகென்றல்

73. இட்டிய தொய்யி றிகழ்முலை யாய்மதன் செவ்விகுன்ற
வாட்டிய பார்வைய ராரூர்த் தியாகர் மணிமுடிமேற்
சூட்டிய வெண்பிறை கண்டாலிவ் வாறு தொழுகவென்று
காட்டிய போல முகைக்கின்ற வாசுனைக் கஞ்சங்களே. (௩)

74. திருவார் தவம்புரி யாரூரர் செம்பொற் றியாகர் வெற்பிற்
குருவாய கொங்கைச்செவ் வாயணங் கேநின் குளிர்நுதலைப்
பொருவா ரெனினுங் கலையோ டமுதம் புலவருக்குத்
தருவாரைக் காணிற் றொழாதவ ராரித் தரணியிலே. (௪)

சுனைவியந்துரைத்தல்

75. கலைக்கே சவன்கண் டறியாத பாதர் கமலைசுற்றும்
அலைக்கே குளித்தவர்க் கொன்றிரண் டேமுத்த மன்றியெய்தா
மலைக்கே சுனையிற் குளித்தா யுனது வதனத்திலே
முலைக்கே யநந்தம் பிறந்தவென் னேகுளிர் முத்தங்களே. (௫)

76. விண்ணிற் றிகழ்பொழி லாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
பண்ணிற் சிறந்த மொழியாயிப் போது படிந்தசுனை

---

73. தொய்யில் - சந்தனக்கோலம். முகைக்கின்றவா - குவிகின்றவாறு என்ன வியப்பு. இப்பிறை, நீயும் தொழத்தக்கது என்பது எச்சம்.

(பி - ம்.) 4. முகைக்கின்றன.

74. திருவார் - திருமகள். குரு - நிறம். பொருவார் எனினும் - ஒவ்வார் எனினும். கலை - கிரணம். புலவர் - தேவர். தருவார்: பிறை. தேவருக்குக் கிரணத்தையும் அமுதத்தையும் தருவாரென்றும், புலவர்களுக்கு அன்னவஸ்திரம் தருவாரென்றும் இரண்டுபொருள்கள் தோற்றின.

(பி - ம்.) 2. கொவ்வைச் செவ்வாய். 3. பொருவா தெனினும்.

75. கலை - பீதாம்பரவுடை. அலை - கடல்; ஆகு பெயர். கடலிற் குளித்தவர் ஒன்று அல்லது இரண்டு முத்துக்களையே பெறுவர். மலைக்கே - மலையின் கண் உள்ள; உருபு மயக்கம். வதனத்திலும் தனத்திலும் பிறந்த முத்தங்கள் என்றது வேர்வைத்துளிகளை.

(பி - ம்.) 3. குளித்தா ளிவடன். 4. பிறந்தவன்றே வியர்முத்தங்களே.

76. கள் மலரில் - கள்ளையுடைய செங்கழுநீர்ப் பூவிலுள்ள. இதிற் பரிவருத்தனை என்னும் அணி வந்தது.

(பி - ம்.) 4. மலர்விழிக்கே.

கண்ணிற் கருமைக ளெல்லாங் கவர்ந்துதன் கண்மலரின்
வண்ணச் சிவப்பை யளித்தது வோநின் மதர்விழிக்கே. (௬)

சுனைநயப்புரைத்தல்

77. தொண்டை பழுத்த கனிவெளுப் பாய்வரத் துள்ளியசேற்
கெண்டை சிவப்பத் தருமோ வெமக்குங் கிளர்விடத்தைக்
கண்ட மிருத்திய வன்மீக நாதர் கமலையிலுன்
கொண்டை குலைத்துக் குறுவேர்வு தந்த குளிர்சுனையே. (எ)

தகையணங்குறுத்தல்

78. பாருேயு நீற்றின ராரூர்த் தியாகர் படைத்தபொன்னி
ஆருேடு கங்கை குமரியின் மூழ்கின ராயிழையாய்
வேருேர் பிறப்பிலன் ருேவணங் காவரிவ் வெற்பிலென்ன
பேருே சுனையிற் குளித்தணங் காமுருப் பெற்றனையே. (அ)

நடுங்க நாட்டம்

79. தோட்டா னிறைந்த மணிக்குழை நாரதன் றும்புருவின்
பாட்டா னிறைந்தவ ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
தீட்டாத மாரன் பரிமுகம் போலச் சிவந்தவிரு
கோட்டானை யின்றுகண் டேன்குயி லேயிந்தக் குன்றிடத்தே.

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்

80. வானை யடுத்த கழையேணி கொண்டு மலைத்தலையிற்
றேனை யெடுத்து நுகர்பவர் போலொரு செங்கையிலே

---

77. தொண்டை பழுத்த கனி - கொவ்வைக் கொடியிற் பழுத்த பழம்; என்றது கீழுதட்டை. கெண்டை: கண்கள். சுனை தருமோவென்க.

(பி - ம்.) 1. துள்ளியஞ்சேற். 4. கொண்டலவிழ்த்துக்.

78. தோயும்: உவம வாசகம். சோணாட்டின் சிறப்பைப் புலப்படுத்தக் காவிரியை முற்கூறினர். தலைவனோடு கூடிவந்த வேறுபாட்டால் தலைவியைத் தெய்வப்பெண்ணாக நினைத்தாள்.

79. தோடும் குழையும் காதணிகள். தீட்டாத - தீட்டிக் கூர்மை செய்யப்படாத, எழுத வியலாத. மாரன் பரிமுகம் - கிளியின் அலகு. இரத்தத்தாற் சிவந்த யானையின் கொம்புக்குக் கிளியின் அலகு உவமை.

(பி - ம்.) 3. கிளிமுகம்போல. 4. மயிலே யிந்தக்.

80-89. **தலைவன் கூற்று.**

80. கழை ஏணி - ஒற்றை மூங்கிலாகிய ஏணி; இது கண்ணேணி என்று வழங்கப்படும் (மலைபடு. 361, ந.) மலையிலே வளர்ந்த மூங்கிலைக்

மானை யெடுத்தவ ராரூர்த் தியாகர் வரையணங்கை
மீனை யடுத்த விழிப்பாங்கி யைக்கொண்டு மேவுதுமே. (௮௦)

ஊர் வினுதல்

81. ஊரேது தாமரை யோவுரை யாமை யுறுதியுண்டோ
பேரேது மேனகை யோவல்ல வோபெரு நீர்முகந்த
காரேது வாங்கண்டர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
வாரே துவள வளர்தன பார மடமயிலே. (௮௧

பெயர் வினுதல்

82. ஒருகான் மலர்முலைப் பாரம் பொறுதென் றுயர்புனத்தில்
இருகா லிதணி லிருப்பவ ரேபெய ரேதுசொல்லீர்
கருகால முண்டவர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
சருகான பாதவ முந்தமி யேனுந் தழைப்பதற்கே. (௮௨)

நெறி வினுதல்

83. வாளா சுகமுங்கண் ணேறு படாமல் வரிக்குயிலும்
கேளாமற் பாலின் சுவைதிரி யாமற் கிரியணங்கைத்

---

கொண்டே அங்கே கிடைக்கும் தேனை எடுப்பதுபோலத் தலைவியின் தோழியைக்கொண்டே அவளைப் பெறலாம் என்றான்.

(பி - ம்.) 2. நுகர்வதுபோல். 3. ஆரூர் வரையின் மயிலையிந்த.

81. உரையாமை - மௌனம்; மௌன விரதமுண்டோ? காரேது; ஏது - பிரமாணம்; என்றது இங்கே உவமை; உவமையும் பிரமாணங்களுள் ஒன்று. துவள வளர் - துவளும்படி வளர்ந்த.

(பி - ம்.) 3. கமலைவைப்பில்.

82. ஒருகால் மலர் - ஒரு தண்டின் மேலிருக்கும் தாமரை மலர். இதண் - பரண். கருகு ஆலம். பாதவம் - மரம். தழைப்பதற்குச் சொல்லீர். சொல் இசைமயமாக இருத்தலின் பாதவமும் தளிர்க்கும் என்றான்.

(பி - ம்.) 2. இருகாலி லென்று மிருப்பவரே. 3. கமலை வைப்பில்.

83. சுகம் - கிளி. கண் ஏறு - திருஷ்டி தோஷம். குயிலும் - குயிலையும். நீர் பேசினல் இப்பொழுது தம் பேச்சினிமையாற் கண்ணேறுபடும் கிளிகளின் பெருமை குறையும்; குயிற்குரலை இனிமை யென்று கேளார் என்றபடி. தலைவியின் சொல், கிளியின்மொழி, குயிலின் இசை, பாலின் சுவை

தோளா லணைப்பவ ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
வேளா சுகவிழி யீர்மொழி யீர்வழி வெற்பினுக்கே. (௧௩)

## கேடுதி வினுதல்

84. முளைக்கும் பிறையணி யாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
வளைக்குஞ் சிலைகொண் டியானெய்த வாளி மருங்கிற்றைத்துக்
களைக்குங் களிறென்று வந்ததுண் டோசொலுங் காதுடன்போர்
விளைக்குங் கருவிழி யீர்சிறை யோடெழும் வெற்பெனவே. (௧௪)

## ஒழிந்தது வினுதல்

85. செருகாலம் போற்கண் பலகாலுஞ் செல்லுஞ் செவியிலென்சொ[ல்]
ஒருகாலுஞ் சென்று புகுந்தில தாற்கட லூர்வதென்ன
வருகா விரிசுற்று மாரூர்த் தியாகர் வரையணங்கே
பெருகார் மணிக்குழை யோதடை யானது பேசுகவே. (௧௫)

## வளம்பட உரைத்தல்

86. பொற்பூ தரவில்ல ராரூர்த் தியாகர் புணர்ந்தகொல்லி
வெற்பூ டுமைப்புனங் காவல்வைத் தாரினி மேலுமிங்கே
உற்பூத மான வுவராழி யுப்பினுக் கொன்றிரட்டிக்
கற்பூர நல்குவ ரேவிலை யாயுங்கள் கானவரே. (௧௬)

---

என்னுமிவற்றைக் காட்டிலும் இனியதென்றபடி. வேள் ஆசுகம் - மன்மதனுடைய பாணம் போன்ற. வெற்பினுக்கு வழியை மொழியீர்.

84. வாளி - அம்பு. களைக்கும் - இளைத்த. களிறென்று வெற்பென வந்ததுண்டோ?

(பி - ம்.) 4. கயல் விழியீர்.

85. ஆலம்போல் - விஷம்போன்ற. என்சொல் சென்று புகுவதற்கு மணிக்குழையோ தடையானது. ஆலம்போன்ற கண் செல்லும் செவியில் மிக இனிய என்மொழி செல்லாதது தக்கதன்றேயென்பது தலைவன் கருத்து.

(பி - ம்.) 4. பெருகார்வ வெண்ணகையோ தடை.

86. பொற்பூதரம் - மேருமலை. வெற்பூடு - வெற்பினிடத்தே. உம்மைக் காவல்வைத்தார். உப்பின் ஒரு பங்கிற்குக் கற்பூரம் இரண்டு பங்கு நல்குவர்;

## முகம்புகு கிளவி

87. ஈமத்தி லாடிய வாரூர்த் தியாக ரிமயவெற்பில்
வாமத் தடங்கொங்கை மங்கைநல் லீருலை வைத்தமைத்த
தூமக் கனலிற் குழையாது வெண்மணற் சோறெமது
காமக் கனலல்ல வேவரை தானுங் கரைப்பதற்கே. (௧௭)

88. சிகையங்கி வண்ணத்த ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
தகையம் புயமலர்த் தையனல் லீரிடை சாயமுலை
முகைநின் றசைய முகத்தே யிளவியர் முத்துதிர
நகையின் பகையென்ன வோகுறு வீரிந்த நன்முத்தமே. (௧௮)

89. காரண வற்புத ராரூரன் னீரிந்தக் கந்துகம்போல்
தாரணி யிற்றவ மார்புரிந் தாருங்க டாழளக
பார மவிழ்க்கு முலைமேற் றொடும்பதம் பற்றுங்கன்ன
பூர நெகிழ்க்குந் தொடர்ந்தோடிக் கையிற் புடைபடுமே. (௧௯)

---

என்றது, கானவர் அருமை தெரியாதவரென்பதுபட நின்றது. இனிமேலுங் காவல் வைத்தார்; இஃது என்ன பேதைமை!

(பி - ம்.) 1. வில்லி ; புனைந்த கொல்லி. 3. உப்பினுக் கொட்டிரட்டி.

87. ஈமம் - மயானம். வாமம் - அழகு. வெண்மணற் சோறு குழையாது. வரையையுங் குழைப்பதற்குத் தூமக்கனல் எமது காமக்கனல் அல்ல.

தலைவி சிறுசோறடுகையில் தலைவன் தன் காமத்தின் மிகுதியை ஒருவாறு புலப்படுத்திக் கூறியது இது.

(பி - ம்.) 2. மாமைத் தடங்.

88. சிகை - சுவாலை. அம்புயமலர் - தாமரை மலரிலுள்ள. வியர் முத்து - வேர்வைத்துளிகளாகிய முத்து. நகை - பல். நன்முத்தங்களைக் குத்துவீர், அவை உம்முடைய நகையின் பகையென்று எண்ணியோ? "அவைப்பதம் பல்லுக் கழகொவ்வா முத்தம்" (பழம்பாடல்.)

89. கந்துகம் - பந்து. கன்னபூரம் - செவிப்பூ. பந்து தலைவியின் உறுப்புக்களைத் தீண்டப்பெற்ற பேற்றைத் தான் அடையவில்லையே என்று தலைவன் வருந்தினன். "கொந்தார் குழல்சரியக் கோல முகம்வியர்ப்பச், சந்தார் திதலைத் தனமசையப்-பந்தே!, சிற்றிடையா ளார்வமொடு தீண்டிவிளை யாடுதற்கு, நற்றவமென் செய்தாய் நவில்."

## யாரே இவர்மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்

90. *கடாநாக நின்றது வந்ததுண் டோவென்பர் கையின்முறி*
*உடனுகச் செல்வர் பிணைவந்த தோவென்ப ரோங்கலிலே*
*விடநாகம் பூட்டிய வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்*
*தடநா டுவரிவ ரரெண்ண மேதென்று சாற்றுவதே.* (௨௦)

## எண்ணந் தெளிதல்

91. *கானத் தெயினர் வலையோடு கண்ணியுங் கைப்பிடித்திவ்*
*வேனற் பிணையைக் கவர்வது போல விருதலையும்*
*கூனற் பிறையணி யாரூர்த் தியாகர் குவட்டிலெங்கள்*
*மானைப் பிடிக்கவந் தார்கண்ணி யோடு வலைபிடித்தே.* (௨௧)

## கையுறை யேந்தி வருதல்

92. *ஒருகோட்டி னிற்கு மிருகனி போல வுயர்ந்தகொங்கை*
*இருகோட் டிருவரு மிங்கிருந் தார்முத் தெடுத்துமள்ளர்*
*குருகோட்டுந் தண்வய லாரூர்த் தியாகர் குளிர்சிலம்பிற்*
*சருகோட்டுங் காதலெல் லாமிவர் பாற்சென்று சாற்றுதுமே.* ()

---

90-91. **பாங்கி கூற்று.**

90. *கடநாகம் - மதத்தையுடைய யானை. முறி - தளிர், கடன் சீட்டு. பிணை - மான், அடகு* **(அருணைக்கலம். 83.)** *தடம் நாடுவர் - வழியைத் தேடுவார்.*

**(பி - ம்.)** 2. *வந்ததே யென்ப ரோங்கலின்மேல்.* 4. *ஏதெனச் சாற்றிரிதே.*

91. *எயினர் - வேடர்கள். கண்ணி - ஒருவகைச் சிறுவலை. ஏனற் பிணை - தினைப்புனத்தில் மேயும் மான். கண்ணியோடு உவலை பிடித்து; உவலை - தழை; கண்ணியோடு வலையைப் பிடித்தென்று ஒரு பொருள் தோற்றியது. எயினர் பிணையைக் கவர்வதுபோல இவர் எங்கள் மானைப் பிடிக்க வந்தார்.* **(பி - ம்.)** 2. *இருகவடும்.*

92-4. **தலைவன் கூற்று.**

92. *ஒரு கோட்டில் - ஒரு கிளையில். இருவர் - தலைவியும் பாங்கியும். குருகு - நாரையை. சருகோட்டும் சாதல் - சருகாகச் செய்யும் ஆசையை.*

தலைவன் அவ்வகை வினுதல்

93. பொய்போ லுவகன்றென் கைவாளி தன்னுடல் புக்குநிறைந்
தெய்போல வேவார்கலை வந்ததுண் டோகஞ்ச மேந்திழையார்
கைபோ லலருங்கென் ஞரூரிற் றேவா கண்டர்வெற்பில்
மைபோ லிருண்டு மழைபோல நீள்குழல் வல்லியரே. (௨௩)

94. செல்வாய் திருத்திய வன்மீக நாதர் செழுங்கிரிமேல்
அல்வா யெழுந்த மதிமுகத் தீர்தன தாகமெல்லாம் [ல்
வில்வாய் விடுமென் கணையான் மெலிந்துதெவ் வேந்தரைப்போ
புல்வா யுடன்வந்த தோவுமை யீரொரு பொற்கலையே. (௨௪)

பாங்கி எதிர்மொழி கொடுத்தல்

95. அலையினஞ் சுண்டவ ராரூர்த் தியாக ரணிவரைமேல்
இலையினம் பேந்திக் கெடுதி வினவு மிறையவரே
மலையிறங் கும்பொழு தாராய்ந்து புள்ளி வடிவறிந்து
கலையிறங் கும்பெயர் யாமல்ல காணுங் கலைகளுக்கே. (௨௫)

---

93. போலுவது: ஒப்பில் போலி உடம்பெல்லாம் அம்பு தைத்த மானுக்கு முள்ளம்பன்றி உவமை; எய் - முள்ளம்பன்றி. வல்லியரே, வந்ததுண்டோ?

94. செல் வாய் - தேவர்களாகிய கறையான்களின் வாயால். அல் வாய் - இரவில். புல்வாயுடன் - புல்லைப்பற்றிய வாயோடு; தெவ் - பகை; பகை வேந்தர்கள் தாம் தோற்றதற்கு அறிகுறியாகப் புல்லைக் கவ்வுவர்; "பகைவர் புல்லார்க" (ஐங். ௪: 2.) கலை ஒரு மானோடு வந்ததோ வென்பது வேறொரு பொருள்; புல்வாய் - மான்.

(பி - ம்.) 1. நாதர் தியாகர்வெற்பில். 4. போர்க்கலையே.

95-9. பாங்கி கூற்று.

95. அலையின் நஞ்சு - கடலில் தோன்றிய விடத்தை. இலையின் அம்பு - இலையாகிய அம்பு. மலை இறங்கும்பொழுது ஆராய்ந்து - மலையினின்றும் இறங்கும்பொழுதில் ஆராய்ந்து. புள்ளி வடிவறிந்து - புள்ளியின் உருவத்தைத் தெரிந்து. கலை - மான். நீவிர் சொல்லும் மான்களின் திறத்தில் ஆராய, மான் மலையிலிருந்து இறங்கும்பொழுது அதன் உடலைப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் வன்மையுடையேமல்லேமென்க. சூரியன் மலைவாயில் விழுங்காலத்தில் எழுத்திலுள்ள புள்ளி முதலியவற்றை அறிந்து சாத்திர ஆராய்ச்சியிற் புகுவோர் யாமல் லேமென வேறொரு பொருள் தோற்றியது

(பி - ம்.) 3. புள்ளி வடிவழிந்து.

## பாங்கி இறைவனை நகுதல்

96. காவிலை தேன்சொரி யாரூரிற் றேவர கண்டர்வெற்பில்
பூவிலை மேவிய பொற்கொடி யேயிவர் போர்புரிதற்
கேவிலை வில்லிலை வின்னா ணிலையிவர்க் கித்தனையும்
மாவிலை யாதலி னாலிவர் தாமெய்த மாவிலையே. (௨௬)

97. செம்மை கொளுஞ்சடை யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பின்
இம்மையி லேயணங் கேகண்ட தோவிவ ரேவுகொண்டு
வெம்மையி னாலெய்த வில்லுங்கொண் டேகிய வேழமிவர்
தம்மையுங் கொண்டு பெயர்ந்தா லெவர்க டடுப்பவரே. (௨௭)

98. கைம்மத மாவுரி யாரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
செம்மதி மானு முகத்தா யிவர்பச் சிலையினெய்த
இம்மத னாகமும் பூங்கணை யானுல கேழும்வென்ற
அம்மத னாகமு மொன்றே யெவர்க்கு மறிவரிதே. (௨௮)

## பாங்கி மதியினின் அவரவர் மனக்கருத்துணர்தல்

99. பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பாற்
றூதன்று போனவ ராரூர்ப் புனத்திவர் தோளிணைக்கே

---

96. கா இலை - சோலையிலுள்ள இலைகள். பூ இலை - பூவாகிய வீட்டினை; இலை - இல்லை. பொற்கொடியே - திருமகளே. ஏவு இல்லை - அம்பு இல்லை. இவர்க்கு ஏவு முதலியவைகள், தாம் கையில் கொண்டிருக்கும் மாமரத்தின் இலையே ஆதலால் இவரால் எய்யப்பட்ட யானை முதலிய மிருகம் யாதும் இல்லை ; இவர் கூறுவது பொய்யென்றபடி.

(பி - ம்.) 2. பூவினு மெல்லிய பொற்கொடியே.

97. இம்மையிலே - இப்பிறப்பிலே. இம்மையிலே இவர் கூறும் வேழம் காணப்பட்டதோ? (பி - ம்.) 3. எய்திய வேழமவர்.

98. இம்மதன் நாகமும் - இந்த மதத்தையுடைய யானையும். மதன் ஆகமும் - காமன் உடலும். காமன் உடம்பின்றி யிருப்பதுபோல இவர் கூறும் யானையும் உடம்பில்லாதது ; பொய்யென்றபடி.

(பி - ம்.) 1. வெம்மத மாவுரி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில். 2. இவர் கைச்சிலையி. 4. ஒன்றும்.

99. பாதம்......போனவர் : **நால்வர் நான்மணி.** 3. ஆதொண்டை - ஒரு வகைக்கொடி ; இங்கே கூறியது அதன் கனியை. வாய்ச்சியின் விழிகள்

ஆதொண்டை வாய்ச்சி விழிநீல மாலைக ளானவிந்த
மாதின் குவிமுலைக் கண்ணு கியதிந்த மன்னர்கண்ணே. (௨௯)

---

## ௰. பாங்கியிற் கூட்டம்

### தலைவன் உட்கோள் சாற்றல்

100. புனத்தே புகாமற் கிளிகடி கோவுங்கள் பூங்குழலாம்
வனத்தே புகாம லளிகடி கோதம்மை வாழ்த்துமன்பர்
இனத்தே புகாநிற்கு மாரூர்த் தியாக ரிமயவெற்பில்
கனத்தே ரறுத கருங்குழ லீரொன்று கற்பியுமே. (௧)

### பாங்கி குலமுறை கிளத்தல்

101. கழைகோடு வில்லியைச் செற்றூர் தியாகர் கமலைவெற்பின்
உழைகோடி சுற்றுங் கிரியெம தூருமெ தூர்மருதம்
தழைகோடி கொண்டு சமைத்ததெம் மாடை தனித்தனியோர்
இழைகோடி பொன்பெறு மேயுமெ தாடை யிறையவரே. (௨)

---

தோளிணைக்கு நீலமாலைகளாயின. தலைவன் தோள்களையே தலைவி பார்த்துக் கொண்டிருந்தாளென்பதும் தலைவியின் நகில்களையே தலைவன் பார்த்துக் கொண்டிருந்தானென்பதும் இங்கே அறியற்பாலன (கம்ப. மிதிலைக். 36.)

இதன் முதலிரண்டடிகள், "பாதஞ் சிவக்கப் பசுந்தரை வேண்டியப் பஞ்சவர்க்காத், தூதன்று சென்றவன்" (கப்பற் கோவை) என்பதை அடியொற்றி வந்தன.

100. **தலைவன் கூற்று.**

கடிகோ - கடிவேனோ. கனத்து ஏர் - மேகத்தின் அழகு. கற்பியும் - சொல்லும். புனத்திற் புகுந்து கதிர் கவர்தலினாற் கிளியும், குழலிற் புகுந்து இடைக்குப் பாரமாதலினால் வண்டும் தலைவிக்குத் துன்பந் தருதலின் அவற்றைக் கடிவேனோ வென்று வினவினான்.

(பி - ம்.) 1. புனத்தேசெல் லாமற் கிளியகற்றோ. 2. தினம் வாழ்த்தும். 4. கனத்தே பொருத சிலைநுதலீர்.

101. **பாங்கி கூற்று.**

கழை - கரும்பு. வில்லி - மன்மதன். எமது ஊர் கிரி. எமது குலம் தாழ்ந்ததென்றாள் தோழி. (பி - ம்.) 1. கமலைவைப்பில்.

தலைவன் தலைவிதன்னை உயர்த்தல்

102. தீட்டிற் பொலிமழு வாரூர்த் தியாகர் சிலம்பிற்கஞ்ச
வீட்டிற் சிறந்த திருவனை யீரென்ன மேன்மைகருங்
காட்டிற் பிறந்ததன் றேகருப் பூரங் கரியவத்திக்
கோட்டிற் பிறந்ததன் றேயிரண் டாலுங் குளிர்முத்தமே. (௩)

பாங்கி அறியாள்போன்று வினுதல்

103. மருவாத வூரன் றிருவா சகத்தமிழ் மாலைகொள்ளக்
குருவா னவர்திரு வாரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்
ஒருவா துறையும் பலமட வார்களி லுன்மனத்திற்
றிருவா னவளெவண் மாலான தெந்தச் செழுங்கொடிக்கே. (௪)

இறையோன் இறைவிதன்மை இயம்பல்

104. வித்தார மேனகை யேமுகை யேமுலை மேருவுமாம்
முத்தார மேநகை முல்லையு மாம்புர மூன்றெரியக்
கைத்தா மரையிற் சிலைவாங்கு மத்தர் கமலைவெற்பில்
மைத்தாரை யேகுழல் கங்குலு மாமந்த வல்லியர்க்கே. (௫)

பாங்கி தலைவியருமை சாற்றல்

105. விண்ணிற் கலைமதி யுள்வாழு மானை விரும்பியிந்த
மண்ணிற் கலையெழுஞ் செய்கையன் றேமலை மாதினிரு

---

102. **தலைவன் கூற்று.**

தீட்டில் - தீட்டுதற்றெழிலால்; சாதியடை. கஞ்சவீடு - தாமரை மலராகிய வீடு. கருப்பூரம் - ஒரு மரம். அத்திக்கோடு - யானைக் கொம்பு. இரண்டாலும் குளிர் முத்தம் - தீண்டுதலாலும் பார்வையாலும் குளிர்ச்சியைத் தரும் முத்து.

103. **பாங்கி கூற்று.**

மரு......ஆனவர் : **நால்வர் நான்மணி** 12. கொள்ள - கொள்ளும் பொருட்டு. ஒருவாது · நீங்காமல், மாலானது - மயக்கமடைந்தது ; திருமாலானதென்பது வேறு பொருள்.

(பி - ம்.) 2. குளிர்வரைமேல். 3. பலமட மாதரி லுன்னிதயத்.

104. **தலைவன் கூற்று.**

மேனகையே - மேனகை போல்வாய். முலை முகையே; முகை - அரும்பு. மேருவும் ஆம் முத்துமாலையே நகையாகும். அத்தர் - தலைவர். மைத்தாரை - மையின் ஒழுங்கு. (பி - ம்.) 3. கமலைவைப்பில். 4. ஆமிந்த.

105. **பாங்கி கூற்று.**

கலை எழும் செய்கை - ஆண்மான் எழும் செயல். வேண்டல் செய்கை

கண்ணிற் கருமணி யன்னார் தியாகர் கமலைவெற்பிற்
பெண்ணிற் கருங்கல மன்னாளை வேண்டல் பெருந்தகையே. (௬)

### தலைவன் தலைவி இன்றியமையாமை இயம்பல்

106. செருவேற்ற சூலக்க ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மருவேற்ற தாமரை மானனை யீர்வரை யேற்றகொங்கை
அருவேற்ற சிற்றிடை யார்திரு நாமத்தை யற்பகலா
உருவேற்ற வென்ற னுருவேற்று நின்ற துயிர்தனையே. (எ)

### பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்

107. தூமக் கனல்கண் டுருகும்பொன் போலெங்க டுயபொன்னின்
காமக் கனல்கண் டலாதுரு காள்கன கோபுரங்கள்
ஏமக் கிரிநிக ராரூர்த் தியாக ரிமயவெற்பா
தாமக் குழலிக்கு நீயேநின் காதலைச் சாற்றுகவே. (அ)

### பாங்கியைத் தலைவன் பழித்தல்

108. விளையாப் பயிருக் கெருப்போட்டு நீர்விட்டு வேலிகட்டித்
தளையாக்கி நொந்தவர் தன்மையன் றோசெழுந் தாமரையைக்

---

அன்றோ வென்க.

(பி - ம்.) 2 கலையெழுந்தாலொக்குமே மலை. 3. கமலைவைப்பில். 4. பெருங்கலம்.

106. **தலைவன் கூற்று.**

மரு - நறுமணம். தாமரைமான் - திருமகளை. அரு - உருவமின்மை. அற்பகலா - இரவும் பகலுமாக. உரு ஏற்றல் - பெயரைப் பலமுறை சொல்லுதல்; "ஞானசம்பந்தனல்ல, ஒண்சொல்லி னிவைமாலை யுருவெண்ணத் தவமாமே" (தே.) என்றன் உரு - என் உடல். உயிர்தனை உரு ஏற்று நின்றது. இங்ஙனம் செய்யாவிடின் உயிர்தரியேனென்றபடி.

107. **பாங்கி கூற்று.**

தூமம் - புகை. எங்கள் பொன்னென்றது தலைவியை. நின் காமக்கனல். ஏமக்கிரி - ஏமகூடமென்னுமலை; இது பொன்மயமானது; மேருமலை யெனினும் ஆம். தாமம் - மாலை.

(பி - ம்.) 1. கனல்கொண்டு; பொன்னுன். 3. வெற்பில்.

108-9. **தலைவன் கூற்று.**

108. தளை - வயல். களையா - களையாக எண்ணி.

(பி - ம்.) 4. வளையாற் செறிந்தகை.

களையாக் களைவய லாரூரிற் றேவர கண்டர்வெற்பின்
வளையாற் சிறந்தகை யாயுனை யானம்பி வந்ததுவே. (௯)

109. அஞ்சுக நீர்புக்கு மீரமு ருச்சிலை யாயினையான்
கிஞ்சுகங் காத்த கிளியாயி னேன்மலர்க் கேசரங்கள்
கஞ்சுக மாம்பொழி லாரூரிற் றேவர கண்டர்வெற்பில்
நஞ்சுகொள் வேல்விழி யாயினி யாவரை நம்புவதே. (௧௦)

பாங்கி பேதைமை யூட்டல்

110. நந்தனஞ் சூழ்வய லாரூ ரிறையவர் நல்கியவேற்
கந்தனு மாலு நிகருமன் னுநின் கருத்தறியாள்
சந்தன மான தருவையெல் லாஞ்செந் தழல்பரப்பும்
இந்தனமாக வெறிந்துகொள் வார்பெற்ற வேந்திழையே. (௧௧)

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

111. தண்காட் டியநண்பு தான்காட்டி யென்னுயிர் தாங்கவருட்
கண்காட்டி யுன்னையுங் காட்டிய மாதைச்செங் காட்டிலந்த
வெண்காட்டி லாடிய வாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
பண்காட் டியமொழி யாய்சிறி யாளென்கை பண்பதன்றே. (௧௨)

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

112. கழிகாட்டுந் தண்டுறை வாதம தூர்க்குப்பல் காலுஞ்சென்றோர்
வழிகாட்டு மென்று வினவுவ ரோகயன் மங்கைநல்லார்

---

109. அஞ்சு உகம் - ஐந்து யுகங்கள். கிஞ்சுகம் - முள் முருங்கை. இலவு காத்த கிளி யென்பது ஒரு பழமொழி. கஞ்சுகம் - மேற்சட்டை.

110. **பாங்கி கூற்று.**

தரு - மரம். இந்தனம் - விறகு. எறிந்து - வெட்டி. பொருள்களின் அருமையை அறியாத வேடர்மகளாதலின் உன் அருமையை அறியாளென்றனள் பாங்கி. (பி - ம்.) 3. பரப்பி.

111. **தலைவன் கூற்று.**

வெண்காடு - திருவெண்காடென்னும் சிவஸ்தலம்; இங்கே சிவபெருமான் ஆடிய நடனத்தை ஹஸ்திநடனமென்பர்.

(பி - ம்.) 1. தாங்கியருட். 4. பண்பலவே.

112. **பாங்கி கூற்று.**

மறைமலை அடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

விழிகாட்டுங் காவிரி யாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
சுழிகாட்டு முந்தியை முன்போல வின்னமுந் தோய்ந்தருளே.

தன்னிலை தலைவன் சாற்றல்

113. தூதளை யுந்துகி ரும்மரக் காம்பலுந் தொண்டையுந்தே
மாதளை யுந்தொழுஞ் செவ்வித மூய்வண்டு மல்லிகைப்பூந்
தாதளை யும்பொழி லாரூர்த் தியாகர் சயிலத்துள்ள
மீதளை யுந்துயர் நின்பொருட் டாலன்றி மீள்வதன்றே. (கச)

பாங்கி உலகியல் உரைத்தல்

114. சேமத் தனம்வழுங் காரூரர் செம்பொற் றியாகர்வெற்பிற்
ருமக் குழலியர்க் காசைகொண் டோர்க டமரறிய
ஓமக் கனலைக் கரியாகப் பண்ணி யுறவரைந்து
காமக் கனலைக் கரியாகப் பண்ணுவர் காவலனே. (கரு)

---

கயல் விழியைக் காட்டும். சுழிகாட்டும் உந்தியை - சுழியைப் போன்ற தோற்றத்தைக் காட்டும் கொப்பூழையுடைய தலைவியை; நீர்ச்சுழியைக் காட்டும் நதியையென்பது வேறுபொருள்.

(பி - ம்.) 1. செல்வோர். 3. தண்வய லாரூரர்.

113. **தலைவன் கூற்று.**

தூதளை - தூதுளங்கனி; இது தூதுவளையென்றும் வழங்கும். துகிரும் - பவழமும். அரக்காம்பல் - செவ்வாம்பற் பூ. தொண்டை - கொவ்வைக்கனி. மாதளை - மாதுளம்பூ. உள்ளமீது அளையும் - உள்ளத்திற் கலந்த. நின்பொருட்டால் - நின்னால். (பி - ம்.) 4. மீள்கலதே.

114-5. **பாங்கி கூற்று.**

114. சேமத்தனம் - பாதுகாப்பாகிய செல்வத்தை; பாதுகாத்தற் குரிய தனமுமாம். கரியாகப் பண்ணி - சாட்சியாக அமைத்து. காமக் கனலைக் கரியாக - காமமாகிய நெருப்பை வெம்மையற்றதாக; "கையி ஞலெரி யைக்கரி யாக்கினன்" (கம்ப. மீட்சிப். 240.) கரியென்னும் சொல் இங்கே உள்ளவாறே இருபொருளில், "சீரேடு - தானும், கரியாய் மொழி யுங் கரியாய் விடாமல், எரியா ரழல்வீழ்ந் தெழுந்து" (**நால்வர் நான் மணி. 25**) என்பதில் அமைக்கப்பட்டுள்ளது,

### நீ வரைகென்றல்

115. கறைமரு வுங்கண்டர் வன்மீக நாதர் கமலைவெற்பா
அறநெறி யந்தணர் சான்றோரை முன்னிட் டருங்கலமீந்
துறவினர் சூழப் பயந்தோர் களிப்ப வுலகுவப்ப
மறைநெறி யால்வரை வாய்தவிர் வாயிம் மறைநெறியே. (௧௬)

### தலைமகன் மறுத்தல்

116. கடும்பசி யால்வந் திரந்தோர்க் கமுதங் கடைந்துதவ
நெடுங்கிரி யொன்று தருகென்ற வாறொக்கு நேரிழையார்
இடும்பலி தேர்பவ ராரூர்த் தியாக ரிமயமின்னே
கொடுங்குழை யாளை வரைந்துகொள் வாயென்று கூறியதே.

### பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

117. கானவ ரால மெனவே கொடியர்நங் கார்ப்புனமும்
வானவ ராலும் புகவரி தாம்வய றேறும்வெடி
போன வராலுக ளாரூர்த் தியாகர் பொதியவெற்பில்
மீனவ ராலுந் தெரியா வியல்வல வித்தகனே. (௧௮)

### தலைமகன் கையுறை புகழ்தல்

118. உறையிட்ட கொண்டலுஞ் சங்கமும் வேயு முவாமருப்பும்
திறையிட்ட முத்தமன் றோவிவை தாம்பல தேவருய்யக்

---

115. **பாங்கி கூற்று.**

கறை - விடத்தாலுண்டான கருமை. கலம் - ஆபரணம்; அருங் கலம் - மாங்கலியமும் ஆம். மறைநெறி - வேதவழக்கு, களவொழுக்கம்.

(பி - ம்.) 1. வெற்பில்.

116. **தலைவன் கூற்று.**

கூறியது ஒக்குமென்க.

(பி - ம்.) 1. வந்தடைந்தார்க்கு. 2. தருகின்றவாறு. 3. பலிகொள் பவர்; இமயவெற்பில்.

117. **பாங்கி கூற்று.**

ஆலம் - விஷம். கார்ப்புனம் - கரிய புனம். வெடிபோன - துள்ளிச் சென்ற. மீனவராலும் - பாண்டியராலும். இயல் - இயற்றமிழ்.

118. **தலைவன் கூற்று.**

உறை - மழைத்துளி. உவாமருப்பு - யானைக்கொம்பு. கொண்டல் முதலியன முத்துப் பிறக்கும் இடங்கள்.

கறையிட்ட கண்டத்தர் வன்மீக நாதர் கமலைவண்டுக்
கறையிட்ட பூங்குழ லீரணி யீர்நும் மலையகத்தே. (கக)

பாங்கி கையுறை மறுத்தல்

119. மடைகாட்டும் பொன்னி வலம்புரி யீன்ற மணிதொடுத்த
தொடைகாட்டி னாலுந் தொடேமிறை வாமுன் சுரநதிக்காச்
சடைகாட்டி னார்திரு வாரூர்த் தியாகர் சயிலமின்னாட்
கிடைகாட்டி னலது வேமணி யீந்ததி னெண்மடங்கே. (உ0)

ஆற்ரு நெஞ்சினேடு அவன் புலத்தல்

120. கொய்கின்ற மாந்தழை கைக்கே புலர்ந்துமிக் கோதைக்கன்பு
செய்கின்ற சிந்தை மலர்சரு காயுஞ்செந் தேனருவி
பெய்கின்ற பூம்பொழி லாரூர்த் தியாகர் பிறங்கலில்வேள்
எய்கின்ற பூவைந்து மேபுல ராம விடர்செயுமே. (உக)

பாங்கி ஆற்றுவித்து அகற்றல்

121. தலைமேன் மதிவைத்த வாரூர்த் தியாகர் தடங்கிரிமேற்
கலைமேன் மதிவைத்த காவல னேசிறு காலையில்வா

---

கொண்டல் கூந்தலுக்கும், சங்கு கழுத்திற்கும், வேய் தோளுக்கும், யானைக்கொம்பு நகிலுக்கும் தோல்வியுற்றமையின் திறையிட்டவென்முன். அறை - வரையறுத்த இடம்; வீட்டின் ஒருறுப்பு.

(பி - ம்.) 2. முத்த மிவையல்ல வோபல. 3. கமலையில் வண்டு.

**119. பாங்கி கூற்று.**

தொடை-மாலை. தொடேம் - கைக்கொள்ளோம். சுரநதிக்கா - ஆகாய கங்கைக்காக. இடை காட்டற்கு அரிதென்றபடி. (பி - ம்.) 3. மின்னார்க்கு.

**120. தலைவன் கூற்று.**

சிந்தையென்றது தனது மனத்தை. பிறங்கல் - மலை.

(பி - ம்.) 2. தேன்றிவலை.

**121. பாங்கி கூற்று.**

கலை - நூல்கள், கலைமான். மதியின்மேற் கலையை வைப்பதற்கு மாருகக் கலையின்மேன் மதியை (சந்திரன்) வைத்தானென ஒரு முரண்பாட்டு நயம் தோற்றுகின்றது. தினமணி - சூரியன். "பார்வி யப்புற நீர்தரு மாமணி...

மலைமே லிருக்குந் தினமணி போலவென் வஞ்சிநல்லாள்
முலைமே லிருக்குஞ் செழுமணி யாமிம் முழுமணியே. (௨௨)

தலைவன் மடலே பொருளென மதித்தல்

122. ஆரூ ரிறைவர் சடைமீதிற் சாத்து மலங்கலும்பொற்
றேரூருஞ் சேரன் றிருமார் பலங்கலுந் தேயத்துள்ள
ஊரூ ரனைத்தினு முண்டாகை யால்வண் டுலாவுகின்ற
ஏரூர் மலர்க்குழ லார்தமைத் தோய்த லெளிதெமக்கே. (௨௩)

123. கையிற் கணிச்சியர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
நெய்யிற் பெருக வுருகுநெஞ் சேயிந்த நீணிலத்தோர்
மெய்யிற் பிணிக்கு மருந்தொரு கோடியின் மேலுமுண்டு
மையற் பிணிக்கு மடற்பனை யேயன்றி மற்றிலையே. (௨௪)

பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல்

124. கஞ்சனு மாயனுங் காணு விறைவர் கமலைவெற்பில்
நஞ்சமு மானு நிகர்விழி யாயிந்த நானிலத்தில்
உஞ்சலை நேர்குழை வஞ்சியர் மாலை யுடையவர்கள்
வஞ்சியர் மாலை யுடையவ ராயதை மாற்றுவரே. (௨௫)

---

முலை, சேர்த லுற்ற பொழுதிரு குன்றிலுஞ் சென்று லாவுந் தினமணி யானதே" (அருணைக்கலம். 100.)

(பி - ம்.) 3. திருமணி போல.

122-5. தலைவன் கூற்று.

122. அலங்கல் - எருக்கமாலை; "பூவெனப், புல்லித ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப" (குறுந். 17.) சேரனலங்கல் - பனங்குருத்து; இங்கே பனைமடல். மடலேறுவேனென்றபடி.

123. கணிச்சி - மழுப்படை. நெய்யிற் பெருக - நெய்யைக் காட்டிலும் மிக. மையற்பிணி - காமநோய். (பி - ம்.) 3. கோடி மிகவுமுண்டு.

124. கஞ்சன் - பிரமதேவர். உஞ்சல் - ஊசல். குழைக்கு ஊசல் உமை; "அணிமகரகுண்டலநல் விசயமகளுஞ்சலென" (அழகர்கலம். 10 : 4.) "உஞ்சனிகர் - காதிற்கும்" (வேங்கையுலா, 78.) வஞ்சியர் மாலை யுடையவர்கள் - பெண்கள்பால் காம மயக்கத்தையுடையவர்கள். வஞ்சியர் மாலையுடையவராய் - சேரர்களது மாலையாகிய பனையின் மடலை உடையவராகி; வஞ்சியர் - வஞ்சிநகரத்தையுடைய சேரர். அதை - அம்மயக்கத்தை.

அதனைத் தன்மேல் வைத்துச் சாற்றல்

125. தெரியப் படுமதன் றேயுல கோர்செயல் சென்னியின்மேல்
வரியப் பணியணி யாரூர்த் தியாகர் மதுரையிலே
நரியைப் பரிசெய்து காட்டிய வாறென நானிலத்தோர்
கரியைப் பரிசெய்து காட்டுவ ளைக் கருங்குயிலே. (உசு)

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்

126. விடையிய லார்கொடி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
படையிய லானசெவ் வேளனை யாய்மின் பதவியலாம்
நடையிய லானதுஞ் சொல்லிய லானது நன்னுதலாள்
இடையிய லானது மெவ்வாறு நீகண் டெழுதுவதே. (உஎ)

127. இழைகிழிக் குஞ்சிறு பாதியிற் பாதி யிடையும்வள்ளைக்
குழைகிழிக் குங்கண்ணுந் தீட்டுவை யோகொடிக் கோபுரங்கள்
மழைகிழிக் குந்திரு வாரூர்த் தியாகர் வரையிறைவா
பிழைகிழிக் கொள்வதுந் தூரிகை நீகைப் பிடிப்பதுமே. (உஅ)

தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்

128. வழுதி செழுந்தமி ழாரூர்த் தியாகர் வரையணங்கைப்
பழுதக லும்படி கேசாதி பாதம் படத்தமைத்தே

---

125. செயல் தெரியப்படுமதன்று. வரி அ பணி அணி - பத்திக் கீற்றுக்களையுடைய அழகிய பாம்புகளை அணிந்த. கரி - கரிய நிறமுள்ள பனங்கருக்கு; "கண்டோர் விரும்புங் கரும்பனையார்" (தஞ்சை. 107.)

126-7. பாங்கி கூற்று.

126. விடையியலார் கொடி - இடபக்கொடி. படை இயல் ஆன - படையின் இயல்புகள் பொருந்திய; ஆன - அமைந்த; செவ்வேள் தேவ சேனாபதியாதலின் இங்ஙனம் கூறினார். பத இயல் ஆம் நடை - அடியின் தொழிற்பண்பாகிய நடை. இதில், பதவியல், சொல்லியல், இடையிய லென்னும் இலக்கண நூற்பகுதிப் பெயர்கள் தோற்றுகின்றன.

127. இழை - நூலிழை. வள்ளையென்றது வள்ளைக்கொடிபோன்ற காதை. மழை - மேகத்தை. கிழி - உருவமெழுதுவதற்குரிய துணி. தூரிகை - எழுதுகோல். கொள்வதும் பிடிப்பதும் பிழை.

128-9. தலைமகன் கூற்று.

128. வழுதி செழுந்தமிழ் - பாண்டியர்களால் வளர்க்கப்பட்ட செழுந்தமிழ். கேசாதிபாதம் - கூந்தல்முதல் அடிவரையில். மருங்கு - இடை. இது தொழிற்குறை விசேடவணி.

அழகு துளும்புந் தனபாரந் தீட்டு மதிசயத்தால்
எழுத மறந்த விடமருங் காக விசைந்ததுவே. (உகூ)

129. சூலா யுதத்தின ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
பாலாழி யில்வந்த பைங்கொடி யீருங்கள் பாவைநல்லாள்
சேலான பார்வையு நூலா மருங்குலுந் தீட்டிவந்தால்
மாலாகு மென்னை யயனாகு மென்று மகிழ்ந்திடுமே. (௩௦)

பாங்கி அருளியல் கிளத்தல்

130. தென்கலை மாயும் வடகலை போம்பல தேயத்துள்ளோர்
தன்கலை போம்பனை நீதறித் தாற்சது ரானனத்தோன்
பொன்கலை யான்றொழு மாரூர்த் தியாகர் பொருப்பிறைவா
நன்கலை யாவு மறைபோல யாரு நவிலுவரே. (௩க)

பாங்கி கொண்டுநிலை கூறல்

131. சினையேறு சங்குல வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
நனையேறு பூங்குழற் குன்குறை கூற நயந்திலளேல்
முனையேறு வேலண்ண லேமட லேற முயன்றருள்வாய்
பனையேறு வாரை யெவரே முழுதும் பரிப்பவரே. (௩உ)

---

(பி - ம்.) 2. படைத்தமைத்தே. 3. புழுகு துளும்பும்... தீட்டும் புதுமைதனை.

129. மால் - மயக்கம்; திருமாலென்பது வேறுபொருள். அயன் = ஐயன் - தலைவன்; பிரமனென்றும் ஒரு பொருள் தோற்றியது (கோளு.)
(பி - ம்.) 2. பைங்கொடியாய். 4. மாலான வென்னை.

130-32. பாங்கி கூற்று.

130. நீ பனைமரத்தை வெட்டினால் பனையோலை இன்றாகும்; அதனால் நூல்கள் எழுத வகையின்றித் தென்கலை முதலியன மறையுமென்றாள். தென்கலை - தமிழ். வடகலை - ஸம்ஸ்கிருதம். தன்கலை: தம்கலையென்பது எதுகை நோக்கி இங்ஙனம் மயங்கியது; "கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்கள், **தன்னின்மா** நிதிக்கோ னன்னான்" (**திருவிளை.** மாமனாக. 1) என்புழிப் போல. தறித்தால் - வெட்டினால். பொன்கலையான் - பீதாம்பரதாரியாகிய திருமால். மறை எழுதாக்கிளவியாதலைப் போல எல்லாக் கலைகளும் எழுதுவாரின்றி வாய்மொழியாகச் சொல்லப் பட்டு எழுதாக் கிளவிகளாகும்.
(பி - ம்.) 3. பொன்கலை மாறொழும்.

131. சினை - கருப்பம். நனை - அரும்பு. கூற - யான் சொல்ல. முனை - கூர்மை. பரிப்பவர் - தாங்குபவர். இதன் ஈற்றடியில் ஒரு பழமொழி அமைந்துள்ளது.

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல்

132. மன்மதன் றோற்ற திலைவிழி யான்முழு வானமதி
தன்மதன் தோற்ற திலைமுகத் தாற்செஞ் சடாடவிமேல்
மென்மதி தோற்றிய வாரூரர் வீதி விடங்கர்வெற்பா
உன்மதி தோற்றதென் னேயெங்கள் பேதை யொருகொடிக்கே.

தலைவன் தலைவி வருத்தியவண்ணம் உரைத்தல்

133. களிறிற் பொறிதான் சிறிதாயி னுஞ்சுடு கின்றதுபோல்
தளரித் துயர மெனக்களித் தாள்செழுந் தண்டலைபோல்
வளரிக் கெழுந்திரு வாரூர்த் தியாகர் மணிவரைமேல்
முளரிப் பொறியல்ல ளோவணங் கேயுங்கள் மொய்குழலே. ()

பாங்கி தலைவியின் செவ்வியருமை செப்பல்

134. மொழியாள் கிளிக்கிதழ் முத்தங் கொடாள்பரு முத்தமள்ளிக்
கொழியாண் மணற்சிறு சோறு மடாள்கற்ப கோடியினும்
அழியா நிலைபெற்ற வாரூர்த் தியாகர்த மங்கையின்மான்
விழியா ளுடனண்ண லேயென்ன வாறு விளம்புவதே. (௩௫)

---

132. மதிதன் மதன் - சந்திரனது வன்மை. மென்மதி என்றது பிறையை. தலைவி இன்னும் அழகு நிரம்பப்பெற்றாள் இலளென்பது கருத்து (சிற். 97.) (பி - ம்.) 2. தன்மதி.

133. தலைவன் கூற்று.

களிறின் - மூண்டால். பொறி - நெருப்புப் பொறி. தண்டலை - சோலை. வளர் இக்கு எழும்: இக்கு - கரும்பு. கரும்பு சோலைபோல வளர்தல்: "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனி" (சீவக. 2902.) முளரிப் பொறி - தாமரையிலுள்ள திருமகள், நெருப்புப் பொறி; சிலேடை. "மரம்படு சிறுதீப் போல, அணங்கா யினடான் பிறந்த வூர்க்கே" (புறநா. 349.)

(பி - ம்.) 1. பொறிகள். 4. அல்லவோ.

134. பாங்கி கூற்று.

கிளிக்கு மொழியாள், முத்தங் கொடாள் என்று கூட்டுக; கிளிக்கு: இடை நிலைத்தீவகம். சோறும் அடாள். கற்பம் - பிரமன் வாழ்நாள்.

(பி - ம்.) 2-3. சோறுமடாள் கொடுங் கூற்றுதைத்த, பழியாளனூர் திருவாரூர்த் தியாகர்கைப் பற்றியமான்.

தலைவன் தலைவி செவ்வியெளிமை செப்பல்

135. தூர விருக்குஞ் சகோரங்க ளேகதிர் துய்க்குமதி
சேர விருக்கின்ற மானறி யாத செயலென்னவே
ஆர விருக்கொலி யாரூர்த் தியாக ரணிவரைமேற்
சார விருக்கினு நீயறி யாய்மங்கை தண்ணளியே. (௩௫)

136. கறைப்பொலி சூலத்தர் வன்மீக நாதர் கமலைமின்னே
நிறைப்பது மத்திக்கென் பேருரைத் தாற்கண்க ணீர்பொழியும்
நறைப்படு கொங்கை மலைபோ லெழுமெனை நாடுதற்குப்
புறப்படு கின்ற தெனரோம ராசி புளகிக்குமே. (௩௭)

பாங்கி என்னை மறைத்தபின் எளிதென நகுதல்

137. ஏரியல் வண்ணங் கிழியிருந் தாலு மெழுதுநர்க்குத்
தூரிய மின்றி முடியும தோவிளஞ் சோலையுங்கா
வேரியுஞ் சூழ்திரு வாரூரர் வீதி விடங்கர்வெற்பா
காரிய மல்ல வெனைமறைத் தாலுங்கள் காரியமே. (௩௮)

அந்நகை பொறுது அவன் புலம்பல்

138. வீழுஞ் சுனையிற் சிறிதேகைப் பற்றிய வேரைஞெகிழ்த்
தாழும் படிசெய்த தாகுமன் றேயடி யார்பிறவி

---

135-6. **தலைவன் கூற்று.**

135. கதிர் - நிலவு. ஆர - நிரம்ப. இருக்கு ஒலி - வேத முழக்கம். இதன் முதல் இரண்டடியோடு, “தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே னுகரா மண்டூகம், வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண் ணும்” என்பதை ஒப்பு நோக்குக.

(பி - ம்.) 4. மங்கை சங்கத்தையே.

136- கறை - இரத்தம். பதுமத்தி - திருமகள் போன்ற தலைவி. நறை- நறுமணம். ரோம ராசி - மயிர்க் கூட்டம். கண்ணீர் பொழிதல் முதலியன அன்பை வெளிப்படுத்தும் குறிப்புக்கள்.

(பி - ம்.) 2. நிறைப்ப மதித்தென் பெயருரைத்தால்.

137. **பாங்கி கூற்று.**

ஏர் - அழகு. வண்ணமும் கிழியும் இருந்தாலும். தூரியம் - தூரிகை; எழுதுகோல். காரியம் - பயன்படும் செயல்.

(பி - ம்.) 2. தூரிகை யன்றி முடியுமன்றே.

138. **தலைவன் கூற்று.**

எழுந் துடைப்பவ ராரூர்த் தியாக ரிமயவெற்பில்
தாழுஞ் சுரிகுழ லாய்நகை யாடித் தளர்விப்பதே. (௩௯)

பாங்கி தலைவனைத் தேற்றல்

139. தேறிய பாங்கியர் வெள்ள முண் டாயினுந் தேமொழிநான்
கீறிய கீற்றினை யுங்கட வாள்வண்டு கிண்டிமது
ஊறிய கொன்றைய ராரூர்த் தியாக ருயர்சிலம்பா
கூறிய வாறு மருண்முடிப் பேனின் குறையினையே. (சo)

பாங்கி கையுறை ஏற்றல்

140. மறுத்தாள் சிலசொல் சிலவெறுத் தாள்சில மாற்றஞ்சொல்லப்
பொறுத்தாள் சிலசொல்ல நாணிநின் றுள்புர மூன்றெரியக்
கறுத்தார் சிவந்த சடையார் தியாகர் கமலைவெற்பில்
நிறுத்தா தினிமன்ன வாதரு வாயுன்கை நீடழையே. (சக)

கிழவோன் ஆற்றல்

141. மாநாரி வேளெய்த புண்ணாற் றுதற்கபி மந்திரிக்கத்
தேனார் தழைகொண்ட செய்கையன் றேமலர்த் தேனருவி
ஆறா வயற்றிரு வாரூர்த் தியாக ரணிவரைமேல்
மீனார் கருங்கண்ணி யென்றழை வாங்க விரும்பியதே. (சஉ)

---

ஆழும்படி - நீரில் அமிழும்வண்ணம். பிறவியேழுந் துடைப்பவர்; "என்றால் பிறவி, எழு மெழுதா வகைசிதைத்தோன்" (சிற்.79.) தளர்விப்பது செய்தது ஆகும்.

**139-40. பாங்கி கூற்று.**

139. பாங்கியர் வெள்ளம் - மிகுதியான பாங்கியர் கூட்டம். கீறிய கீற்று : 10 - ஆம் செய்யுளைப் பார்க்க. குறை - காரியம்.

(பி - ம்.) 3. உயர்சிலம்பில்.

140. கறுத்தார் - சினந்தார்.

**141. தலைவன் கூற்று.**

மா நாரி - வண்டை வில் நாணாகக் கொண்ட. சில நோய்களைத் தழை யாற் பாடம்போட்டுப் பரிகரித்தல் வழக்கம். கருங்கண்ணி : தோழி.

(பி - ம்.) 1-2. வேளெனை யெய்தபுண் ணாற்ற மலர்க்கரத்தே, தேனார் தழைபிடித் தாலொக்குமே. 4. மீனென கண்ணியென் கைத்தழை வாங்க, மீனார்மைக் கண்ணியென்.

பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல்

142. பூசிலை யிட்டு மதவேள் வருத்திய புன்மைசொல்லப்
பாசிலை பற்றி வருபவர் போலப் பரவைமனை
வாசலை யுற்றவ ராரூர்த் தியாகர் வரையணங்கே
ஊசலை யொத்துத் தழையோ டொருவ ருலாவுவரே. (சங)

இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்

143. சாற்றும் பொழுதோர் கொடிசூழ்ந்த வேயின் றலையினற
வூற்றுங் கருவியந் தேன்கூ டிருப்ப துலகமெல்லாம்
போற்றுஞ் சரணத்த ராரூரர் செம்பொன் பொழிந்திடவென்
றேற்றுந் தியாகக் கொடிபோல் விளங்கு மிளங்கொடியே. (சச)

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்

144. கொங்கைக் களிறுமுன் கண்ணுனை மானுங் குறிப்பில்வைத்து
வெங்கைக் களிறுங் கலைமானு மன்று வினவிவந்தோர்
செங்கைத் தமருக ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மங்கைப் பருவத் தணங்கேயிப் போதிங்கு வந்தனரே. (சரு)

பாங்கியைத் தலைவி மறைத்தல்

145. பாலான செஞ்சொற் கிளியே நமது பரம்பரைக்கின்
றேலாத தொன்றை யிசைத்தனை யேயன் றிருபத்தெட்டு

---

142. பாங்கி கூற்று.

பூவைச் சிலையில் இட்டு ; தொகுத்தல். பாசிலை - பசுமையான இலை.

(பி - ம்.) 1. பூசலை யிட்டுச் சிலைவேள் வருத்திய.

143. தலைவி கூற்று.

வேயின் தலை - மூங்கிலின் உச்சியில். கருவி - தொகுதி. தியாகக்கொடி: திருவாரூருலா, 29. பிறிதோர் ஏணியின் உதவியின்றியே எளிதில் ஏறிப் பெறும்படி மூங்கிலின் உச்சியில் தேன் இருப்பதுபோல, பிறிதொரு முயற்சியின்றி நாம் எளிதிற் காணும்வகை தலைவன் ஈண்டுற்றான் என்பது குறிப்பு.

144. பாங்கி கூற்று.

குறிப்பு - கருத்து. வெவ்விய கையையுடைய களிற்றையும்.

(பி - ம்.) 2. கலைமாவும்.

145. தலைவி கூற்று.

மூலாக மஞ்சொன்ன வாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
மாலார் புனத்து வழியே யொருவர் வருதல்கண்டே. (௪௬)

பாங்கி என்னை மறைப்ப தென்னெனத் தழாஅல்

146. நீரை மறைக்குங் கமலமுண் டோவது நிற்கதங்கள்
வேரை மறைக்குந் தருவுள வோமணி மேடையினன்
தேரை மறைக்குந்தென் னாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
வாரை மறைக்குந் தனத்தாயின் றென்னை மறைத்தனையே. (௪௭)

பாங்கி கையுறை புகழ்தல்

147. கையா றிரண்டுடை யான்சிலைக் காமன் கடும்பரிபோல்
எய்யா வழகு முரையும்பெற் றுயிமை யோரிறைஞ்சும்
ஐயா னனத்தர் கமலா லயத்தி லணங்கனையாய்
மெய்யானு மொப்பென லாந்தரித் தாலிந்த மென்றழையே. (௪௮)

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்

148. நகங்கொண்ட வில்லின ராரூரர் காவிரி நாட்டில்விம்மி
முகங்கொண்ட கொங்கை முகையணங் கேநம் முதிர்புனத்தே
அகங்கொண்ட பேட்டுக் கிளியைமெய் யார வணைத்துறங்கும்
சுகங்கண் டனர்பின்பு துன்பமுற் றாரந்தத் தூயவரே. (௪௯)

---

மால் - மேகம்.

(பி - ம்.) 1. கோலா கலப்பைங் கிளியே நமது குடிக்குலத்துக்கு. 4. வழியா வொருவர்.

146-52. **பாங்கி கூற்று.**

146. இனன் தேரை - சூரியனது தேரை. வார் - கச்சு.

(பி - ம்.) 2. ஊரை மறைக்குங் கதிருள தோவுயர் மேடை.

147. கையாறிரண்டுடையான் - முருகக்கடவுள். முருகக் கடவுளது வாகனமாகிய மயிலைப்போன்ற அழகும், காமனது வாகனமாகிய கிளியைப் போன்ற உரையும் பெற்றுயென முறையே கூட்டுக ; நிரனிறை. எய்யா - தளராத. மெய்யானும் - உடம்பின் தன்மையினாலும். பசுந்தழையைத் தலைவி அணிந்தால் மயிலையும் கிளியையும் போலப் பச்சை நிறம் உடையளாவள்.

(பி - ம்.) 2. இமையோர் பரவும்.

148. நகம் - மலை. வில்லினர் எனவும் இல்லினர் எனவும் பிரித்துப் பொருள் கொள்க. சுகம் - ஆண் கிளி. ஈற்றடியில் முரண் வந்தது ; “ சுகஞ் சொன்னாற் றுன்பஞ் சொலுமோ ” (தென்றல்விடு தூது, 115.)

(பி - ம்.) 4. உற்றாரின்று தூயவரே.

149. தண்டோட்டு மென்றழை யாற்பிடி யானைத் தழைசெவிக்குள்
வண்டோட்டி நிற்குங் களிறுகண் டார்வண்டு மல்லிகைப்பூ
வெண்டோட் டுறங்குந்தென் னாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கண்டோட் டியமொழி யாய்புலர்ந் தாரந்தக் காவலரே. (௫௦)

தோழி தலைவனை மறுத்தற்கருமை மாட்டல்

150. மேவுந் தலைவர்தங் கையுறை யாகமேன் மேலளித்த
பூவுந் தழையுந் தொலைந்தமட் டோவந்தப் பூந்தழைசேர்
மாவுந் தொலைந்தது மாவுமல் லாதந்த மாநிறைந்த
காவுந் தொலைந்தது மின்னே தியாகர் கமலையிலே. (௫௧)

தலைமகன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்

151. அன்றிற்றம் பேடு முனிந்தான் மடலை யளிக்குமென்றே
மன்றிற் பனைதொறும் வாழ்வதென் றூர்நறு மல்லிகைத்தேன்
முன்றிற் பெருகுந்தென் னாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
குன்றிற் கிளர்முலை யாய்தெரி யாது குறித்ததுவே. (௫௨)

பாங்கி தலைவியை முனிதல்

152. செற்றந் தவிருன் குறிப்பறி யாமற் சிறிதுசொன்ன
குற்றம் பொறுத்திநின் றாள்பணிந் தேனெங்கள் குற்றமெல்லாம்

---

149. தோடு - மலரிதழோடு கூடிய. கண்டு - கற்கண்டு. புலர்ந்தார் - வாடினார்.

(பி - ம்.) 4. மொழியாய் தெரியாது கருதியதே; புலர்ந்தார் மனங் கன்றினரே.

150 மாவும் - மாமரமும். "நந்தா வொளியர் திருவெங்கை நாட்டி னமக்களிப்பச், சந்தா டவியு ளிறைவர்கொய் யாப்பைந் தழையுமில்லை, முந்தா வவர்க்கெதிர் நானுரை யாப்பொய்ம் மொழியுமில்லை, வந்தா லினியெனக் கில்லைபொன் னேயொரு வார்த்தையுமே" (**வெங்கைக்கோவை, 127.**)

(பி - ம்.) 2. தழையும் புலர்ந்தன சேரவப் பூவனத்து. 3. மாவுஞ் சுரும்புங் குயிலுமல் லாதந்த.

151. அன்றில்: எழுவாய் மன்று - பொதுவிடம். அன்றில் பனையில் வாழ்வதற்கு வேறொரு காரணம் கற்பித்தமையின் இது தற்குறிப்பேற்றவணி.

152. செற்றம் - கோபம்.

(பி - ம்.) 3. நிற்றம் பொறுப்பவ ராரூ ரிறையவர் நேரிமின்னே.

முற்றும் பொறுப்பவ ராரூர்த் தியாகர் முருகுவெற்பிற்
சுற்றங்க ளாமுன் னுயிர்ப்பாங் கியர்க்குண்மை சொல்லுகவே.

தலைவி பாங்கிதன்னை முனிதல்

153. மருத்தும்பி தேனுண்ண வந்தா லதற்கு மலரினுக்கும்
பொருத்தஞ் செயுமவர் வேறுள ரோகொன்றைப் போதுந்திங்கட்
குருத்தும் புனைபவ ராரூர்த் தியாகர் குவட்டின்மின்னே
கருத்தின் செயலை யறியா துரைப்பது கற்பலவே. (௫௪)

தலைவி கையுறை யேற்றல்

154. யானென்று நீயென் றிருவகை யோநம் மிருவருக்கும்
ஊனொன் றுயிரொன் றுளமுமொன் றூன துவையளவோ
தேனொன்று கொன்றைய ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மானொன்று கூர்விழி யாய்தரு வாயவர் மாந்தழையே. (௫௫)

இறைவி கையுறை யேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்

155. ஒற்றினள் கண்ணின் முலைமீ தழுத்தின ளோதியின்மேற்
சுற்றின டூய கனிவாயில் வைத்தன டோளிணையாற்
பற்றின ளீசர் கமலா லயத்திலுன் பைந்தழையை
மற்றிகழ் தோளண்ண லேநலங் காமன்முன் வைத்தனளே. ()

156. சிறைப்பட்ட தண்புன லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
கறைப்பட்ட வேலன்ப நீதந்த மாந்தழை கண்டளவே

---

153-4. தலைவி கூற்று.

153. மருத்தும்பி - நறுமணத்தின்கண் செல்லும் தும்பியென்னும் வண்டு. திங்கட்குருத்து - பிறை; குருத்தென்பது இளமையைச் சுட்டியது. கற்பு - கல்வி.

154. ஊன் - உடல். "உயிரொன் றுளமுமொன் றொன்றே சிறப்பிவட் கென்னொடென்னப், பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்" (சிற். 18.)

155-9. பாங்கி கூற்று.

155. ஓதி-கூந்தல். நலங்காமல் - கெடாமல் (வேங்கடமாலை, 59.) (பி - ம்.) 2. சுற்றினள் வாயி னமுதா னனைத்தனள்.

156. சிறை - அணை; "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்" (சிற். 20.) கறை - இரத்தக்கறை. உறைப்பட்டு - உறையினிடத்திலே அடங்கி. அதுங்கிய - நசுங்கிய.

உறைப்பட் டதுங்கிய காமா யுதங்க ளூடலினின்றும்
புறப்பட்ட வென்ன மடந்தைக் குரோமம் புளகித்ததே. (ருஎ)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்

157. கிளிக்கறை யான பனிமலர்க் காவுண்டு கேகயமுண்
டளிக்கறை யான நறுமல ரோடையுண் டாலமுண்டு
துளிக்கறை யாமிடற் றூரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
பளிக்கறை யுண்டுமன் னுபகல் யாங்கள் பயிலிடமே. (ருஅ,

பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்

158. வடியேற்ற சூலத்த ராரூர்த் தியாகர் மணிவரைமேல்
துடியேற்ற சிற்றிடை மாமயி லேயிளஞ் சோலையிற்பூங்
கொடியேற் றமுமதன் றேரோ டுவதுங் குறித்துமலர்
பொடியேற்ற சுண்ண மிறைப்பதும் பார்த்திடப் போதுகவே. ()

தலைவியைக் குறியிடத்துய்த்து நீங்கல்

159. வண்டார வாரிக்கும் வண்டா மரையுன் வதனங்கைகால்
கண்டா லொளிக்கும் வெளிக்குநில் லாதன்று காளவிடம்
உண்டார் புகழ்த்திரு வாரூர்த் தியாக ருயர்சிலம்பில்
தண்டா மரைத்திரு வேநிற்க வேண்டுமித் தண்டலைக்கே. (சூo)

இறையோன் இறைவியைக் குறியிடத் தெதிர்ப்படுதல்

160. போரூருஞ் சங்கம் வரையூருந் திங்கள் பொருவுதிரு
வாரூ ரிறைவர் வரையணங் கேயென தாவல்கண்டோ

---

(பி - ம்.) 2. நறைப்பட்ட பூந்தழை கண்டள வேயந்த நன்மருந்தால். 3. ஒதுங்கிய.

157. அறை - தங்குமிடம் (118.) கேகயம் - மயில். அளிக்கு - வண்டுக்கு. ஆலத்தை உண்டு. துளி கறையாம் - சிறிதளவு கறுப்பாகிய. பளிக்கறை - பளிங்குப்பாறை. (பி - ம்.) 2. ஓடையுண்டாலிருண்ட.

158. வடி - கூர்மை. கொடியேற்றம் - பூங்கொடி ஏறுதல், துவசாரோஹணம். மதன் தேர் - தென்றல். திருவிழாவில் சுண்ணம் இறைத்தல் வழக்கம். (பி - ம்.) 2. சோலையிற்பைங்.

159. தண்டலை - சோலை.

160 - 63. **தலைவன் கூற்று.**

160. போர் - நெற்போர். சங்கம் - சங்கு. கூந்தலாகிய நடைக்காவணம்.

(பி - ம்.) 2. ஆர்வங்கண்டோ.

காரூருங் கூந்த னடைக்கா வணத்திடை சாயமணி
வாரூருங் கொங்கை யிளநீர் சுமந்து வருகின்றதே. (௯௧)

புணர்ச்சியின் மகிழ்தல்

161. சீரூ தருள்புரி யாரூர்த் தியாகர் சிலம்பிலிந்தப்
பேறூர் படைத்தனர் பெண்ணமு தேபெரும் போதுமயல்
ஆறுமன் மோகத் திரைவீசு மாநந்த வாழியைவிட்
டேறும வின்பச் சுழிகாணு நம்மை யிழுக்கின்றதே. (௯௨)

புகழ்தல்

162. கடைக்கண் சிவந்து மதனைவென் றூர்தென் கமலைவெற்பில்
இடைக்கொம் பனுங்க வெழுமுலை யாய்கட லேழுந்தம்மில்
அடைக்குஞ் சுழிகளுந் னுபிக்கொவ் வாவென் றழித்தழித்துப்
படைக்கும் படைத்த வுடனே யழித்திடும் பங்கமுற்றே. (௯௩)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்

163. மானே நடவு மயிலே செலுமலர் மாளிகைக்குள்
தேனே யெழுந்தரு ளும்வருந் தாமற் றிருமடந்தை
தானே தவம்புரி யாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
ஊனே யுயிர்க்குயி ரேயும தாய முவந்திடவே. (௯௪)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்

164. ஆவிக் கமலத் தலரிவை யாம்ப லரும்பிவைபூங்
காவிக் குலமிவை கைப்பிடிப் பாயன்னங் காவிரிக்கே
மேவிப் பொழில்புகு மாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
சேவிக்க வந்தன காண்டவிர் வாய்பண்டைச் சிற்றத்தையே. ()

---

161. பேறு ஆர் படைத்தனர். பெரும்போது - நெடுநேரம். காணும் : அசைநிலை.

162. இடைக்கொம்பு - இடையாகிய பூங்கொம்பு. அனுங்க - வருந்த. சுழிகளைக் கடலேழும் படைக்கும், உடனே அழித்திடும் என்க.

(பி - ம்.) 4. உடனே துடைத்திடும்.

163. நடவும் : முன்னிலைப் பன்மை. நடவும், செலும், எழுந்தருளும் எனப் பன்முறை கூறியது ஆதரவைப் புலப்படுத்தி நின்றது.

164-6. **பாங்கி கூற்று.**

பாங்கி தலைவற்கு ஓம்படை சாற்றல்

165. கானூர் கதலியுந் தேமாவுந் தத்தங் கனியுதிர்த்த
தேனூல் வளர்வய லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பா
ஊனுறு மங்கை யுயிராதி நீயவ் வுடலுயிருக்
கியானுவ னல்லுணர் வெப்போது மிப்படி யெண்ணுகவே. (௬௬)

விருந்து விலக்கல்

166. மருந்தாழி யிற்கொண்ட மாயோனு மாயர் மனையகத்தே
இருந்தா னவற்கிழி பெய்திய தோதொண்ட ரேத்தவன்று
விருந்தாக வந்தவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
பருந்தாடு வேலண்ண லேதங்கு வாயெங்கள் பாடியிலே. (௬௭)

விருந்து இறை விரும்பல்

167. கனமூருந் தண்டலை யாரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
புனமூ ரெனப்பயில் செம்மரைப் பாலும்பொன் போற்சிவந்த
தினைமூர லுந்தசை யுங்கிடைத் தாலது செவ்விதழ்த்தேன்
நனைமூரன் முத்தனை யீர்தமி யேனுக்கு நல்லமிழ்தே. (௬௮)

---

## கக. பகற்குறி

கிழத்தி மாலையம்பொழுதுகண்டு இரங்கல்

168. புன்மாலைப் போது நடித்தார் தியாகர் பொருப்பிறைவன்
தன்மாலைப் பூண்டவ ருய்கின்ற வாறென்கொ றையனல்லாய்

---

165. கதலி - வாழை. ஊன் - உடல். உயிர் ஆதி - உயிர் ஆகின்றாய். உணர்வு - அறிவு. ஊன் உயிர் உணர்வு : "ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப" (கம்ப. அயோத்தி. கட.)

(பி - ம்.) 1. கானூர் பனசமுந் தேமாவும்; கதலியுஞ் சாலியுந் தக்க கனியுதிர்ந்த ; நித்தங் கனியுதிர்ந்த. 2. வளருந்தென் றாரூரர்.

166. மருந்து - அமுதம். ஆயர் - இடையர். தொண்டர் - சிறுத்தொண்டர் ; இளையான் குடிமாற நாயனூர் முதலியோரெனலுமாம்.

167. தலைவன் கூற்று.

கனம் - மேகம். புனம் - தினைப்புனம். மரை - ஒருவகை விலங்கு. பொன்போற் சிவந்த தினை : "பொன்போற் சிறுதினை" (குறுந். ௧௩ : 1.) மூரல் - சோறு. அது - அவ்வுணவு. தேனூல் நனைந்த மூரல் ; மூரல் - பல்.

(பி - ம்.) 4. முத்தனையாய்.

மன்மாலைப் போது செறியோதி யிந்து மதிக்குவந்த
மென்மாலைப் போதென விம்மாலைப் போது வெளிப்பட்டதே. ()

பாங்கி புலம்பல்

169. ஆற்கே சவனுக் கரியார் தியாக ரணிவரைமேல்
மாற்கே யழுந்தி மதன்பூவி னூலும் வருந்துமிரு
சேற்கே நிகர்விழி யாளுய்யு மாறென்கொல் செவ்வலரி
மேற்கே விழுந்தது செவ்வந்திப் போதும் வெளிப்பட்டதே. ()

---

168. தலைவி கூற்று.

புன்மாலைப் போது - பிரதோஷகாலம். மாலைப் பூண்டவர் - காம மயக்கத்தைக் கொண்டவர். மாலைப்போது செறி ஓதி - மாலையிலுள்ள மலர்கள் செறிந்த கூந்தலையுடைய. மென்மாலைப் போது - மெல்லிய மாலையாகிய மலர். அஜமகாராஜனுடைய மனைவியாகிய இந்துமதி நாரதமுனிவர் வீணையிற் புனைந்திருந்த பூமாலை தன்மேல் விழ இறந்த வரலாறு இங்கே குறிப்பிக்கப்பட்டது. இதனை வடமொழி இரகுவம்சம் எட்டாம் சருக்கத்திற் காண்க; "நன்ஞண் மதியக் குடையோன் குலோத்துங்க ஞைகைவெற்பிற், பொன்ஞளயோத்தியி லுண்டாய பாவம் புனத்துமுண்டோ, அந்நாளும் பெண்பழி கொண்டது மாலையென் ருருஞ்சொல்வர், இந்நாளும் பெண்பழி கொள்ள விம் மாலை யெதிர்ப்பட்டதே" (துலோத். கோவை. 173); "மரணம்வந்த காற்றுரும்பும் வச்சிரம்ம தாய்விடும், கருதியிங்க தெங்ஙனென்று காணின் முன்ன மன்னுமென், பெரியதந்தை யசனெனுந்தொல் பெருமைமிக்க காவலன், உரிமைகொண்ட வடிவமங்கை யுயிர்கவர்ந்த வாறுகேள்", "வடிவமிஞ்சு கவினினிந்து மதியைஞாலம் வெருவமென், கொடியிலங்கு பூவின்மாலை வீழவாவி கொண்டனன்" (திருவால. பழியஞ்சின. 19-20.)

(பி - ம்.) 3. வன்மாலைப் போது.

169. பாங்கி கூற்று.

ஆல் கேசவன் - ஆலிலையிற் பள்ளிகொண்ட திருமால். மாற்கு - மயக்கத்தில்; உருபுமயக்கம். செவ்வலரி - சிவந்த சூரியன். செவ்வந்திப்போது - சிவந்த மாலைக்காலம். செவ்வலரி யென்னும் மலர் விழச் செவ்வந்தியென்னும் மலர் வெளிப்பட்டதென்பது வேறொரு பொருள்; "ஆனத செவ்வந்தி தான்வரப் போனவ ராழ்கடல்வாய், வானு ரலரிவந் தும்வந் திலாரென்ன வன்னெஞ்சரே" (துலோத். கோவை, 175.)

(பி - ம்.) 4. மேற்கே படிந்தது.

### தலைவன் நீடத் தலைவி வருந்தல்

170. காலையி லேகை தொழுவார்க்கு நற்கதி காட்டுவதே
வேலைய தாந்திரு வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
சோலையி லேகி மலர்பறிப் பார்வந்து சூழுமுன்னம்
மாலையி லேகினர் வாரார்கொ ளுழு மணம்பெறவே. (௩)

### தலைவியைப் பாங்கி கழறல்

171. கொண்கனைக் கூடிப் பிரிந்தாற் பொறுத்துயிர் கொண்டிருத்தல்
பெண்பிறப் பானவர்க் குள்ளதன் றேபிறைக் கோடுபட்டுச்
சண்பகப் பூவுதி ராரூர்த் தியாகர் சயிலமின்னே
கண்புனல் பாய வுருகிமெய் வாடுதல் கற்பல்லவே. (௪)

### தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்

172. பொன்னேவி னொந்த மடமான் குருளை பொருபுலிக்கு
மென்னோ வுரைக்குந் தகவொக்கு மேதிரு வீற்றிருக்கும்
முன்னே யிடங்கொண்ட வாரூர்த் தியாகர் முருகுவெற்பில்
தன்னோ வுணர்ந்தும் கழறுமின் னுருடன் சாற்றுமதே. (௫)

### தலைவி பாங்கியோடு பகர்தல்

173. நீடும் புணர்வி னெருங்கிய வாக நெகிழ்ந்துதென்றல்
ஓடும் பொழுது முருகுமென் னுருயி ரோதிமத்தோன்

---

170. **தலைவி கூற்று.**

வேலை - தொழில். மலர்பறிப்பாரென்றது தோழியரை. "சொன்னலந் தாங்கிய சொன்னத் தியாகர் துறைசையன்னுர், மன்னலங் கையுறை காணு முன் காண வருகிலரால், என்னலந் தாமைம் புலன்களு மார வினிதருந்தி, நென்னலம் போதந்தி வெய்யோ னுடன்சென்ற நெஞ்சினரே" (**திருவாவடு துறைக். 162.**)

171. **பாங்கி கூற்று.**

கற்பு - கல்வி; இங்கே அறிவு. (பி - ம்.) சண்பகப் போதுகும்.

172-3. **தலைவி கூற்று.**

172. பொன் ஏவின் - இரும்பினுற் செய்த அம்பினுல்; பொன் - இரும்பு. கழறும் - இடித்துரைக்கும்.

(பி - ம்.) 1. பொன்னுவி னொந்த. 2. மெய்நோய். 4. மின்னுட் கென்ன சாற்றுமதே.

173. "வீழு மிருவர்க் கினிதே வளியிடைப், போழப் படாஅ முயக்கு" (**குறள், 1108.**)

(பி - ம்.) 1-2. ஆகமுன் னெக்கிழந்தென், றேடும் பொழுது.

தேடுந் திருமுடி யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பர்
வாடும் படிபிரிந் தாலுய்யு மாறென்கொல் வாணுதலே. (சு)

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்

174. பாவாய் விடுங்குழல் போற்சுழல் வாயுன் பதமிதண்மேற்
பாவா யவரை மறவாய்முன் சங்கப் பலகையினிற்
பாவாய் பெருந்தகை யாரூர்த் தியாகர் பணிவரைமேற்
பாவாய்கம் மன்னை யறிந்தாலிக் காவற் பணியற்றதே. (எ)

நீங்கற்கருமை தலைவி நினைந்து இரங்கல்

175. முத்தேவர் மாதரை மேலாக வேத மொழிவதெல்லாம்
அத்தேவர் மெய்யிற் கலந்தக லாத வருமைக்கன்றோ
மெய்த்தே வரகண்ட ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கொத்தேறு பூங்குழன் முத்தேறு வாணகைக் கோமளமே. (அ)

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்

176. எதிரேசெல் வேளுக்குத் தென்றன்முன் னேகில் விறைத்தபனிக்
கதிரே கினுமஞ்சல் கேட்டரு ணீகம்பிக் காதழகர்
அதிரேக வண்ணத்த ராரூர்த் தியாக ரணிந்தவிள
மதிரேகை யாநுத லாயன்பர் தேரின் மணிக்குரலே. (கூ)

---

174. பாங்கி கூற்று.

பாவாய் விடுங் குழல் - நூற்பாவிற் செலுத்துகின்ற கைக்குழல்; "பாவிடு குழலி னுயிடைத் திரிதர" (பெருங். ௪. 4: 39) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க. இதண்மேற் பாவாய்-பரணின்மேற் காலைப் பதிய வையாய். பாவினை ஆய்ந்த பெருந்தகை. துணிவு குறித்து அற்றதென இறந்த காலத்தாற் கூறினாள்.

(பி - ம்.) 2. முச்சங்கப்.

175. தலைவி கூற்று.

முத்தேவர் - அயன், அரி, அரன்.

(பி - ம்.) 2. பிரிந்தக லாத வருமைகண்டோ.

176-81. பாங்கி கூற்று.

176. வேளுக்கு எதிரே செல்; இனி மன்மதனால் உனக்குத் துன்பம் உண்டாகாதென்றபடி. பனியை இறைத்த கதிரெனக் கூட்டுக. கம்பிக்காதழகர்: தியாகராச. நகரப். 25. அதிரேக வண்ணத்தர் - தொலையாத இயல்பை யுடையவர்; "யாருன் னதிரேக மாயை யறிவார்" (கம்ப. நாகபாசப். 250.) இள மதி ரேகை - பிறையா

தோழி தலைவற்குச் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

177. புகமேவு மும்மை விடாத்தினைக் காவலும் போனதுங்கள்
அகமேவி நித்தந் தழையுங்கொய் யாரன்ப ராதலினால்
மகமேரு வில்லின ராரூர்த் தியாகர் வரையிலிருஞ்
சுகமே யிருஞ்சுக மேயிரண் டாலுந் துயரொழிந்தே. (க0)

முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்

178. மனைவாயி னிற்குங் கணியார் மலர்ச்செய்ய வாய்திறக்கத்
தினையார் தமது குரலிழந் தார்பசுந் தேனனைந்த
நனையார் கடுக்கைய ராரூரர் காவிரி நாடரெம்மை
நினையா ரினிக்கிள்ளை காண்மற வாம னினைந்திருமே. (கக)

பாங்கி தலைமகன் முன்னின்று இற்செறிப்பு அறிவுறுத்தல்

179. ஒப்போ துதலற்ற சீதையைக் கேள்வ ருடன்பிரிக்க
அப்போது தோன்றிய மானென்ன வேயழ லாடரவம்
கைப்போதி லேற்றவர் வன்மீக நாதர் கமலைவெற்பா
இப்போது தோற்றிய வேங்கையென் மானுக் கிடர்செய்ததே. ()

180. சேரேம் புனத்தை யகற்றேங் கிளியைநின் செம்முகத்தைப்
பாரேஞ் சுனையினு மூழ்கப் பெறேமிப் பளிக்கறைக்கு

---

கிய கீற்று; மூன்றும் பிறையாதலின் ரேகை யென்றார். குரல் கேட்டருள்.

(பி - ம்.) 3. அணிவரைமேல். 4. வாணுதலாய்.

177. உங்கள் அகமென்றது மாமரத்தை. இரும் சுகமே, சுகமே இரும்; "சுகமே சுகமே யிரும்வந் துபுனஞ் சூழ்கின் றவுமைத் தினமித் தினையுட், புகமே யவிடா துகடிந் திடுமெம் பொல்லா மையுமின்று பொறுத் திடுமின்" (அருணைக் கலம். 18.) இரண்டாலும் - தலைவி தினையை யுண்ணு மற் கடிதலும் தலைவன் மாமரத்தில் தங்காமல் தழைகொய்து கடிதலும் ஆகிய இரண்டு செயல்களாலும்.

(பி - ம்.) 1. புகமேய வும்மை.

178. கணியார் - வேங்கைமரம், சோதிடர். மலர்ச்செய்ய வாய் திறக்க - மலரினிடத்திலுள்ள சிவந்த இதழைத் திறந்தமையால், மலரைப் போன்ற சிவந்த வாயைத் திறந்து கூறினமையால். குரல் - கதிர், கழுத்து. நனை - அரும்பு.

179. அழலையும் அரவத்தையும். இப்போது தோற்றிய வேங்கை - இம்மலர்களைத் தோன்றச் செய்த வேங்கை மரம்; இப்பொழுது தோன்றிய புலி யென்பது வேறு பொருள்.

180. பளிக்கறை - பளிங்குப் பாறை. ஏரேம் - ஏலேம்; லகரத்திற்கு

வாரேம் புகழ்த்திரு வாரூர்த் தியாகர் வரையின்மன்னு
ஏரேநின் கையுறை நாளைக்கு நாங்க ளிருவருமே. (கங)

பாங்கி தலைவன் முன்னின்றுணர்த்தி ஓம்படை சாற்றல்

181. கனத்தினைக் காணு மிடற்றூர் தியாகர் கமலைவெற்பில்
புனத்தினைக் காவ லுடன்றடு மாறிப் புகுதுங்கிள்ளை
இனத்தினைக் காவல்செய் யாதொழிந் தேமெம் மிறையவரே
மனத்தினைக் காவல்செய் யாதெங்க ளூர்க்கு வரவிடுமே. (கச)

தலைவன் தஞ்சம் பெறாது நெஞ்சோடு கிளத்தல்

182. குன்றாய வில்லின ராரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்
ஒன்றாய்ப் புனத்துற்ற நாள்களெல் லாந்தம தாரின்வைகி
வன்றாரை வேல்விழி யார்புனங் காக்க வருகின்றநாள்
இன்றாக வைத்தில னேமன மேயுல கீன்றவனே. (கரு)

---

## கஉ. பகற்குறி யிடையீடு

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்

183. பால்போய் முதிர்ந்து பசந்தேறு தண்டும் பழுத்தணிலின்
வால்போல் விளைந்தன வேனலெல் லாமலர் தோறுமறு
கால்போய் விருந்தயி லாரூர்த் தியாகர் கனகவெற்பா
ஆல்போ லுதரமின் பாற்பல கால்வரு மன்னையுமே. (க)

---

ரகரம் போலியாக வந்தது, சாம்பரென்பது போல.

(பி - ம்.) 2. மூழ்கச் செல்லேமிப்.

181. கனம் - மேகம். புனத் தினைக் காவல் - புனத்திலுள்ள தினையைக் காத்தல். ஒழிந்தேம் - நீங்கினோம். மனத்தினை வரவிடு மென்றது எங்களை நினைத்திருமென்றபடி. (பி - ம்.) 2. கொடுதடு மாறி.

182. தலைவன் கூற்று.

வில்லினரெனவும் இல்லினரெனவும் இருவகையாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். தாரை - ஒழுங்கு. இன்று - இந்நாள்.

183 - 5. பாங்கி கூற்று.

183. ஏனல் - தினை. தினைக்கு அணில்வால் உவமை; "அணில்வாற் குறுந்தினை" (கல் 4 : 23); "அணில்வாற் கதிர்போ மருந்தினையே" (**அழகர்கலம்.** 95.) அறுகால் - வண்டு. ஆல்போல் உதரம் - ஆலிலையைப் போன்ற வயிறு.

(பி - ம்.) 2. வால்போன் முதிர்ந்தன. 3. கால்போ லனம்பயி லாரூரிற் றேவர கண்டர்வெற்பா.

184. சூல்பற்றித் தொண்டைக் கதிராய வைவெளி தோன்றியெங்கும்
பால்பற்றி முற்றின வேனலெல் லாமுமை பங்கயப்பூங்
கால்பற்றி யம்மியில் வைத்தார் தியாகர் கமலைவெற்பில்
வேல்பற் றியகண்ணிக் கென்னேபின் வந்து விளைவதுவே. (உ)

இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்

185. செப்போது பூண்முலை மின்னேநஞ் செம்பொற் றியாகர்மழுக்
கைப்போது வைத்தவ ரொன்னார் புரங்களைக் கட்டழித்த
அப்போதி னேக்கமு மூரலும் போற்கொடி தன்னையென்னை
முப்போ திலும்வந்து பார்க்கின்ற பார்வையு மூரலுமே. (ந)

இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்

186. கண்டுறை சொல்லி யிடத்தார் தியாகர் கமலைவெற்பில்
தண்டுறை யூரன் பகல்சேர் குறியுந் தளிர்ப்புனமும்
வண்டுறை காவு மருவியுங் கூடவிம் மால்வரையைக்
கொண்டுசெல் லாமற் சிறகரிந் தான்கொல் குலிசத்தனே. (ச)

பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண் டகறல்

187. புனையுங் கடுக்கைய ராரூர்த் தியாகர் பொருப்பர்க்கிந்த
வினையின் பயனை விளம்புங் கொலோவெம் விழிப்புனலால்

---

184. தொண்டைக் கதிர் - வெளிப்படாமல் பூட்டையில் அடங்கி யிருக்கும் கதிர். (பி - ம்.) 4. விளைந்ததுவே.

185. மழுவைக் கைப் போதில் வைத்தவர்; சிவபெருமான். தம் நோக்கத்தாலும் நகையினாலும் புரங்களை எரித்தன ரென்பது கற்பபேத நிகழ்ச்சி. அன்னை பார்க்கின்ற பார்வையும் மூரலும் கொடிது; கொடிதென்பதைப் பார்வைக்கும் மூரலுக்கும் தனித்தனியே கூட்டுக. மூரல் - புன்சிரிப்பு.

(பி - ம்.) 2. கைப் போதின் வைத்தவர். 3. என்னையுன்னை. 4. முப் போதும் வந்தவள் பார்க்கின்ற.

186. தலைவி கூற்று.

கண்டு - கற்கண்டின் தன்மை. பகல்சேர் குறி - பகலில் அடைகின்ற இடம். குலிசத்தன் - இந்திரன். (பி - ம்.) 4. சிறகறுத்தான்.

187-8. பாங்கி கூற்று.

187. கடுக்கை - கொன்றை. நாகம் - புன்னை மரம். நாடுமிடமாகிய மனையும். வண்டல் - விளையாட்டிடம். சுனை முதலியன விளம்புங்கொலோ.

நனையுஞ் சுனையு மசோகமு நாகமு நாடிடமா
மனையு மருவியு மேனலுஞ் சாரலும் வண்டலுமே. (௫)

188. மடையார மொய்த்திடு மாரூர்த் தியாகர் வரையில்வஞ்சி
இடையார் நடந்த வழியே தெனினெம் மிருவிழியின்
கடையா லொழுகும் புனலா னனைந்த கருநெறியென்
றடையாளஞ் சொல்லிக் கிளிகாள் வரவிடு மன்பரையே. (௬)

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல்

189. வண்டஞ்சி நிற்கு மலர்க்கா விடத்தெம்மை மாரனெய்யும்
தண்டந் தவிர்க்க நடந்தில ரேகருந் தாமரைபோற்
கண்டங் கறுத்த பெருமா டியாகர் கமலைவெற்பில்
துண்டஞ் சிவந்த கிளியினங் காளந்தத் தோகையரே. (எ)

தலைவன் வறுங்களம் நாடி மறுகல்

190. பொரும்பாண மாகவென் மேன்மத வேளெய்த புண்டரிகம்
அரும்பாகி யின்று மலர்ந்தது வோவிம யாசலத்தால்
விரும்பாரை வென்றவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கரும்பா மெனத்தினை காத்தமின் னார்தமைக் கண்டிலமே. (அ)

---

(பி - ம்.) 2. என் விழிப்புனலால். 3. நனையுஞ் சினையும்; நீடிய நாகமுமாம்.

188. மடையில். ஆரம் - முத்து. வஞ்சிக்கொடியைப் போன்ற இடையுள்ளவர்.

(பி - ம்.) 1. தொடையார் கடுக்கைய ராரூர்த் தியாகர் சுரும்பில் வஞ்சி. 3. புனலா லகழ்ந்த.

189-92. **தலைவன் கூற்று.**

189. வண்டு அஞ்சி நிற்கும் மலர் என்றது சண்பக மலரை. தண்டம் - ஒறுத்தல். கருந்தாமரைபோற் கண்டம் : இல்பொருளுவமை; கருந்தாமரை-நீலோற்பலமுமாம். துண்டம் - அலகு.

190. புண்டரிகம் மலர்ந்ததுவோ வென்றது தலைவியாகிய திருமகள் தன்னிருப்பிடமாகிய தாமரை புகுந்தனளோ வென்னும் நினைவுபற்றி. இமயாசலத்தால் - இமய மலையாகிய வில்லினால்; "இமையவில் வாங்கிய வீர்ஞ் சடை யந்தணன்" (கலி. ௩அ : 1.) விரும்பார் - பகைவர். தினைக்குக் கரும்பு உவமை: "கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை" (குறுந். ௧௯௮ : 2.) (பி - ம்.) 2. அரும்பாகி நின்று.

தலைமகன் தலைமகள் வாழுமூர் நோக்கி மதிமயங்கல்

191. தீயாரின் மிக்க குறவாண ரில்லஞ் செறித்திருக்கும்
தூயா டனத்தை விரும்பிய வாறுதந் தொண்டருக்குத்
தாயா மெனவரு ளாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
ஈயார் தனத்தை வறியோர் விரும்பு மியல்பொக்குமே. (கூ)

---

## கரு. இரவுக்குறி

இறையோன் இருட்குறி வேண்டல்

192. ஏன மருத புனத்தேமுன் ஞளிரண் டேவுங்கொண்டு
போன வராகந் தனைத்தேடி வந்தனம் பூங்குழலார்
கான வினேதஞ்செய் யாரூரிற் றேவர கண்டர்வெற்பின்
மானனை யீரிவ் விருளுக்கு வேறில்லை வைகிடமே. (க)

பாங்கி நெறியினது அருமை கூறல்

193. எண்கிரை தேடி விரைந்தோடிப் புற்றி விருந்துகையால்
மண்கிளைக் குங்கருங் கங்குலின் வாய்மணி யாடரவக்
கிண்கிணிப் பாதத்த ராரூர்த் தியாகர் கிரியிறைவா
தண்கிளைச் சூழலி னீவரு மாறு தகுதியன்றே. (உ)

---

191. தீயாரின் மிக்க - தீயவர்களுக்குள்ளே மிக்க தீயவர்களாகிய. விரும்பியவாறு - விரும்பிய முறை; எழுவாய். விரும்பிய வாறு, ஒக்கும்.

(பி - ம்.) 2. தூயார் தனத்தை; நற்றொண்டருக்கு. 3. தாயாமென வளர்.

192. ஏனம் - பன்றி. இரண்டு ஏவும் கொண்டு போனவர் ஆகந் தனை - கண்களிரண்டாகிய அம்புகளைக் கொண்டுபோன தலைவியின் மேனியை; யான் எய்த இரண்டு அம்புகளைக் கொண்டு சென்ற பன்றியை யென வேறொரு பொருள் தோற்றியது. கான வினோதம் - இசை விளையாட்டு.

193 - 4. **பாங்கி கூற்று.**

193. எண்கு - கரடி. கிளை - மூங்கில். வருமாறு - வரும் வகை.

(பி - ம்.) 1. தேடி யிரைத்தோடி. 4. நீவரு மாறென்கொல் சாற்றுகவே.

194. கங்கா நதிச்சடை வன்மீக நாதர் கமலைவெற்பில்
பொங்காழி வந்த திருவனை யார்தம் பொருட்டினிலும்
செங்கான கத்தின்கண் ணேவழி தேடித் திகைக்கவிருள்
வெங்கான கத்தின்கண் ணேவரு மாறென்கொல் வேலவனே. (௩)

தலைவன் நெறியினது எளிமை கூறல்

195. தந்த விலங்கு முதலாவிக் கானத்திற் சஞ்சரிக்கும்
எந்த விலங்கும் விலங்குமுன் னேபுர மெய்யவென்றே
அந்த விலங்கல் வளைத்தார் கமலை யமலர்வெற்பில்
முந்த விலங்குமென் கைவேலைக் காணின் முகங்கவிழ்ந்தே. (௪)

பாங்கி அவன் நாட்டு அணியியல் வினாதல்

196. ஆடும் புனலு மணியுமுத் தாரமு மாடையுஞ்சீர்
பாடுந் திறமும் விளையாடு நீழலும் பாங்கருடன்
கோடும் பிறையணி யாரூர்த் தியாகர் குவட்டினிற்றேன்
ஓடுந் தொடைப்புபத் தாயுரை யாயுங்க ளூரவர்க்கே. (௫)

தலைவன் அவள்நாட்டு அணியியல் வினாதல்

197. நீகா தலித்தெங்க ளூட்டணி கேட்டது நீணிலத்தோர்
போகாத வூர்க்கு வழிதே டுவதொக்கும் பூகமுடன்

---

194. திருவனையார்: தலைவி.

(பி - ம்.) 2. திருவனை யாய்நம் பொருட்டிறைவர். 3. திகைக்க விருள். 4. வருமாறு விலக்குகவே.

(குறிப்பு.) இச்செய்யுள் சில பிரதிகளில் வரைதல் வேட்கையில் நெறி விலக்குவித்தலுக்கு உதாரணமாகக் காணப்படுகின்றது.

195. **தலைவன் கூற்று.**

தந்த விலங்கு - கொம்பையுடைய யானை. விலங்கும் - தடையுறும். விலங்கல் - மேருமலையை. முந்த இலங்கும். எந்த விலங்கும் என் வேலைக் காணின் முகங் கவிழ்ந்து விலங்கும்.

(பி - ம்.) 1. கானகஞ் சஞ்சரிக்கும். 2. விலங்கு மெதிர்க்கின்மின் னேபுறம். 3. வளைத்தார் தியாக ரணிவரைமேல். 4. காண.

196. **பாங்கி கூற்று.**

கோடும் - வளைந்த. உங்கள் ஊரவர்க்குரிய புனல் முதலியவற்றை உரையாய்.

(பி - ம்.) 3. குளிர்வரைத்தேன். 4. ஊர்வளமே.

197. **தலைவன் கூற்று.**

நாகா டவிசுற்று மாரூர்த் தியாகர்நன் ஞட்டிலிளந்
தோகாயுன் ஞட்டணி யெல்லாம் பயன்படச் சொல்லுகவே. (௬)

அவற்குத் தன்ஞட்டு அணியியல் பாங்கி சாற்றல்

198. சூடுவர் நீல மணிகுவர் நீலந் தொகுத்துவிளை
யாடுவ ராரமெய் பூசுவ ரார மருச்சுனற்கா
வேடுவ ரானவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பா
பாடுவ ராம்பண் குறிஞ்சியெம் மூருறை பாவையரே. (எ)

பாங்கி இறைவிக்கு இறையோன் குறிப்பறிவுறுத்தல்

199. புத்தாம்ப லூறும் பசுந்தேனை வண்டுணும் போதுவந்துன்
முத்தாம்ப லூறுஞ் செழுந்தே னருந்த முயலுகின்றார்
கைத்தாங்கு சூலத்தர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
மைத்தாங்கு கூர்விழி யென்சொல்லு வேனந்த மன்னருக்கே. ()

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல்

200. தூற்றுக்குத் தூறு பதினு யிரம்புலி சூழ்ந்திடுங்காட்
டாற்றுக்கு மப்படி யன்றோ முதலையு மம்புலியின்
கீற்றுப் புனைபவ ராரூர்த் தியாகர் கிரியினெஞ்சே
கூற்றுக்கு நேர்விழி யாள்சொன்ன வாய்மையுட் கொள்வதன்றே.

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்

201. கனமுந் தியபொழி லாரூரிற் றேவர கண்டர்வெற்பில்
இனமுந் தமரு மனையகங் கேள்வ ரிராவருதற்

---

போகாத வூர்க்கு வழிதேடுதல்: **அருணைக்கலம். 37.** பூகம் - கமுகு. நாகாடவி - சுர புன்னைக்காடு.

**198-9. பாங்கி கூற்று.**

198. நீலம் - நீலமணி, நீலோற்பலம். ஆரம் - முத்து, சந்தனம். குறிஞ்சிப் பண்ணைப் பாடுவர். (பி - ம்.) 4. பாங்கியரே.

199. புத்தாம்பல் - புதிதாக அலர்ந்த ஆம்பல். வண்டுணும் போது - இரவுக்காலம். முத்து ஆம் பல். மையைத் தாங்கும்.

**200-201. தலைவி கூற்று.**

200. தூறு - புதர். சூழ்ந்திடும்: முற்று. முதலைகள் காட்டாற்றில் பதினாயிரக் கணக்காக உள்ளன. கீற்று - பிளவு.

(பி - ம்.) 1. சூழ்ந்திருக்கும்.

201. கனம் - மேகம். இனம் - சுற்றத்தார். தமர் - நண்பர்.

கனமுந் தொழுநடை யாயிசைந் தாயது வன்றியுமென்
மனமும் பொருந்திய தாலென்ன கூறி மறுப்பதுவே. (௧0)

நேர்ந்தமை பாங்கி நேடுந்தகைக்கு உரைத்தல்

202. அரும்பான் மொழியை யிருட்குறி வேண்டி யடிவணங்கி
இரும்பா மனத்தை நெகிழ்த்தனெ தல்லாமள்ள ரோரடிக்கும்
கரும்பான் மணிசொரி யாரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
சுரும்பா னிறைதொடை யாய்கொடை யாயினிச் சொல்வதன்றே.

குறியிடை நிறீஇத் தாய்துயில் அறிதல்

203. கொழுந்தரு வைப்பற்றி நாண்மா தவியைக் குலைத்துச்செந்தேன்
பொழிந்திடு தண்டலை யூசலை வீசித்தண் புண்டரிகச்
செழுந்திரு வாழ்திரு வாரூர்த் தியாகர் சிலம்பின்மின்னே
எழுந்திரு கோட்டுப் புதுமத வேழமொன் றெய்தியதே. (௧௨)

இறைவிக்கு இறைவன் வரவறிவுறுத்தல்

204. சோலையம் போதுக ளெல்லா நெரியச் சுமந்துதென்றல்
மாலையம் போதுசெ லாரூர்த் தியாகர் மணிமிடறும்
வேலையம் போதியு நேராமிக் கங்குலில் வெற்பர்வந்தார்
காலையம் போருக மாலய மான கருங்குயிலே. (௧௩)

---

இசைந்தாய் - உடம்பட்டாய்.

(பி - ம்.) 3. அன்றியுநம். 4. என்னவாறு.

202-6. பாங்கி கூற்று.

202. பால்போன்ற மொழியையுடைய தலைவியை. கரும்பால் : ஆல், அசை.

203. தருவை - மரத்தை. நாள் மாதவியை - அன்றலர்ந்த மலரை யுடைய குருக்கத்தியை. புண்டரிகமென்பது செந்தாமரை யென்னும் பொருளில் வந்தது (தக்க. 22, 27, உரை.) எழுந்து இருகோட்டு வேழ மென்றும், கோட்டுவேழம் எய்தியது ஆதலின் எழுந்திரு வென்றும் இரு பொருள் தோன்றின. தலைவன் வந்தானென்பதைக் குறிப்பித்தபடி.

204. போதுகளென்றது அவற்றின் மணத்தை. நெரிய - நெருங்க. மாலையம்போது - மாலைக்காலத்தில். மிடறு - கழுத்து ; இது நிறத்திற்கு உவமை. வேலை - கரை. அம்போதி - கடல் ; "கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே" (குறுந். 387.) காலை அம்போருகம் - காலையில் மலர்ந்த செந்தாமரை. தலைமகளைத் திருமகளாக உபசரித்துக் கூறியபடி.

பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சேறல்

205. பாடுஞ் சுரும்பிசை கேட்கவு மாதவிப் பந்தரெல்லாம்
தேடுந் தலைவற் கினியன கூறவுந் தென்றல்விளை
யாடும் பொழிற்றிரு வாரூர்த் தியாக ரணிவரைமேற்
கோடும் பிறைநுத லாய்வரு வாய்மலர் கொய்யவுமே. (கச)

பாங்கி குறியுய்த்து நீங்கல்

206. வேலோ டரசு புடைசூழுஞ் சோலைக்குண் மேவியறு
காலோடு மல்லிகைப் போதுகொய் வேன்றிரைக் காவிரியிற்
சூலோடு சங்குல வாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேற்
பாலோ டினிய வமுதோ டியைந்த பனிமொழியே. (கரு)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல்

207. கைத்தி கிரிப்புயல் காணுத பாதர் கமலையுறை
மெய்த்திரு வேயிருட் போதுவந் தாயந்த வெங்கதிரோன்
அத்திரி மேனின் றிதழா யிரமு மடைத்துவண்டாம்
முத்திரை யிட்டதன் றேவென்று நீவைகு முண்டகமே. (கசு)

208. செய்ப்புண்ட ரீகத்தென் னூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மைப்புண்ட ரீக மதர்விழி யீருங்கண் மாளிகையாம்

---

205. கோடும் பிறை - வளைந்த பிறை.

206. வேற்படையோடு அரசனுகிய தலைவன் பக்கத்தில் தேடிச் சுற்றி வருகின்ற; வேலமரத்தோடு அரசமரம் சூழுமென்பது வேறொரு பொருள். அறுகால் ஓடும் - வண்டுகள் தேனை நுகர்வதற்குச் செல்லும்.

(பி - ம்.) 3. சூலோ டனம்பயி லாரூர்த். 4. பாலோ டிகன்மொழி யாய் சிவப் பேற்றுன் பதாம்புயமே.

207-8. **தலைவன் கூற்று.**

207. கைத்திகிரிப் புயல் - திருமால்; திகிரி - சக்கரம்; புயல் - மேகம். அத்திரி - மலை; இங்கே அத்தகிரி. வண்டாம் முத்திரை - வண்டாகிய கரிய அரக்குமுத்திரை. இட்டது - இடப்பட்டது. இரவில் நின் மனையாகிய தாமரைமலர் மூடியிருப்ப நீ எங்ஙனம் வந்தாயென்பது கருத்து (சீற். 194.)

(பி - ம்.) 1. கமலைவெற்பின். 2. வந்தீரந்த. 3. பத்திரமாக விதழா யிரமும் படைத்துவண்டால். 4. அன்றேவென்று நீவைகும்.

208. செய் - வயல். மைப்புண்டரீகம் - கரிய தாமரைமலர். கைப் புண்டரீகம் - மன்மதன் கையிலுள்ள முதலம்பாகிய தாமரைமலர்.

மெய்ப்புண்ட ரீக மிருட்போதிங் கும்மை விடுத்துமதன்
கைப்புண்ட ரீக மெனைச்செய்த தீமையைக் காத்ததுவே. (௬எ)

தலைவி ஆற்றினது அருமை நினைந்து இரங்கல்

209. கைவேலி ஞாலெமர் செய்வேலி தள்ளிக் கலுழியென்னும்
மைவே லைகளுங் கடந்திருள் வாய்க்குளம் வாவிமதில்
ஐவேலி யாந்திரு வாரூர்த் தியாக ரணிவரைமேல்
மெய்வேன் முருகனை யாய்வந்த வாறென் விளம்புவதே. (௬அ)

தலைவன் தேற்றல்

210. காரா கியகண்டர் வன்மீக நாதர் கமலைமின்னே
வேராய கங்குல் வரவுக்கஞ் சேனிரு வேலொடுங்கள்
ஊராய மட்டுங் துணையாய் வருவ ரொருவரவர்
வாராத போதைங் கணையோ டொருவர் வருகுவரே. (௬௯)

புணர்தல்

211. ஆகங் குழைய வுளமெழு காக வறிவழிய
மோகம் பெருக மொழியாத பேரின்ப மூடியதால்

---

(பி - ம்.) 4. எனையெய்த தீமையைக்.

209. தலைவி கூற்று.

வேலி - வீட்டைச்சுற்றிச் செய்த வேலி; வேலினால் தள்ளி; வேலினாற் செய்த வேலியெனலும் பொருந்தும். "வேலியிட்ட தவர்க ளிட்ட வில்லும் வாளும் வேலுமே" (திருவரங்கக். 53) கலுழி - காட்டாறு. மை வேலை - கரியகடல். குளம் - கமலாலயம். வாவி - செங்கழு நீரோடை. மதில் - திருக்கோயில் மதில். திருவாரூரிலுள்ள குளம், ஓடை, கோயிலென்பவை தனித்தனியே ஐவைந்துவேலிப் பரப்புடையன; "அஞ்சணை வேலி யாரூர்" (தே. திருநா.) முருகு அனையாய் - முருகனைப் போல்வாய்.

(பி - ம்.) 2. குளிர்வாவி. 4. விளம்புகவே.

210-12. தலைவன் கூற்று.

210. வேர்ஆய - அச்சம் உண்டாதற்குக் காரணமாகிய; வேர்: ஆகுபெயர். இருவேல்: கண்கள். ஒருவர் - தலைவி. தலைவியினது உருவெளித் தோற்றத்தைக் கண்டு வருவேனென்பது கருத்து. ஐங்கணையோடு ஒருவரென்றது மன்மதனை.

(பி - ம்.) 1. கமலைமின்னாள்.

211. ஆகம் - உடம்பு.

(பி - ம்.) 2. மோகந் தவிர மொழியாத பேரின்ப மூட்டியதால்.

நாகம் புனைபவ ராரூரர் காவிரி நாட்டணங்கே
யோகம் புரிபவர்க் குங்கிடை யாகல முற்றனமே. (உ0)

புகழ்தல்

212. மாமதன் றேவியும் வேறொரு சாயன் மலர்த்திருவும்
நாமறி யாதவர் தாமல்ல வேயந்த நாரணனும்
பூமக னுந்தொழு மாரூர்த் தியாகர் பொருப்பிலிந்தக்
கோமள வல்லி தனக்கிணை யாரென்று கூறுவதே. (உக)

இறைமகள் இறைவனைக் குறிவரல் விலக்கல்

213. அரவெளி தோசெல்ல லாமோ வனத்திடை யாறுபுக்கால்
கரவெளி தோபற்றி னல்விடு மோமழைக் காலிருண்ட
இரவெளி தோதிரு வாரூர்த் தியாக ரிமயவெற்பா
வரவெளி தோபழி யன்றோ விருவர் மரபுக்குமே. (உஉ)

தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தல்

214. கடற்கொத்துச் சேற்கொத்து வேற்கொத்து வாட்கொத்துக் கஞ்ச
மடற்கொத்து நேரொத்த கூர்விழி யாய்மதவாரணத்தின் [மென்பூ
குடற்கொத்துச் செற்றவ ராரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்
உடற்கொத் துயிர்க்கொத்த வன்னையர் கூட வுறைந்தருளே. ()

---

3. நாகம் புரிபவர். 4. எகர் தவிர்ந்தொன்று நாமிரு வோரு மெதிர் கொள்வதே.

212. மதன் தேவி - இரதி. கோமளவல்லியென்றது தலைவியை; கோமளம் - மனத்திற்கு இன்பஞ் செய்வது. இணை - ஒப்பு.

(பி - ம்.) 2. அறியாத திருவல்லவே.

213. **தலைவி கூற்று.**

எளிதோ; ஓ, எதிர்மறை; எளிதன்றென்றபடி. வனம் - காடு. ஆறு - நதி. கரவு - முதலை. வரவு - வருதல்.

214. **தலைவன் கூற்று.**

கடற்கு ஒத்து. சேல் கொத்து - இணைக்கயல்; பின்வரும் கொத்துக்களுக்கும் இப்படியே பொருள் கொள்க; சேற்கு ஒத்தெனலுமாம். மடல் - இதழ். மதவாரணம் - தாருகாவனத்து முனிவரனுப்பிய யானை. உடற்கு ஒத்து. விழியாய், உறைந்தருள்.

(பி - ம்.) 1. சேலொத்து வேலொத்து வாளொத்து. 3. குடற் கொற்றஞ் செற்றவர். 4. உயிரொத்த.

இறைவியை யெய்திப் பாங்கி கையுறை காட்டல்

215. எண்ணார் புரஞ்செற்ற வாரூர்த் தியாக ரிமயவெற்பில்
விண்ணா ரமுதன்ன மெல்லிய லாயுன்றன் மெல்லடியால்
பண்ணா கியவித ழானகை யாற்கர பங்கயத்தாற்
கண்ணாற் பகைத்தன தந்தன காணிந்தக் காணிக்கையே. (உச)

பாங்கி தலைமகளை இற்கொண்டு அகறல்

216. அறந்தான் மிகவும் புரிந்தார் பெறும்பய னத்தனையும்
பிறந்தார் பெறுந்திரு வாரூர்த் தியாகர் பிறங்கன்மின்னே
மறந்தாயஞ் செய்வதெல் லாமறந் தாயன்னை வாள்விழிகள்
திறந்தாலு நம்மி லடைத்தாலும் வேறு செயலில்லையே. (உரு)

பின்சென்று இறைவனை வரவுவிலக்கல்

217. குருகசைந் தாலு மலயா நிலத்தின் கொழுந்துபட்டுச்
சருகசைந் தாலு மனையுறங் காள்வண்டு தாமரைப்போ
தருகசைந் தாலுந்தென் னாரூர்த் தியாக ரசலமன்னா
வருகைசந் தாபமன் றோகள வாயெம் மனைப்புறமே. (உ.சு)

---

215-7. பாங்கி கூற்று.

215. அமுதன்ன இயல் - அமுதம் போன்ற மென்மை; "அமுதன்ன சாயல்" (சீவக. 8.) பகைத்தன - பகைக்கப்பட்டவை. பகைவர் தோல்வியுறின் வெற்றிபெற்றோருக்குக் காணிக்கை தருதல் வழக்கம். அடியாற் பகைக்கப்பட்டது மாந்தளிர். இதழாற் பகைக்கப்பட்டது செங்குமுதம். நகையால் முல்லையரும்பும், கரத்தால் தாமரையும், கண்ணாற் கருங்குவளையும் பகைக்கப்பட்டன.

(பி - ம்.) 4. கண்ணாற் பிழைத்தன தந்தனன் காணிந்தக் கையுறையே.

216. திருவாரூரிற் பிறந்தார் முத்திபெறுவரென்பது நூல்வழக்கு; இதுபற்றியே சுந்தரமூர்த்தி நாயனாரும், "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்" (திருத்தொண்டத்தொகை) என்றார். ஆயத்தை மறந்து செய்வதெல்லாம் மறந்தாய். இல் அடைத்தாலும் - வீடு மூடப்பட்டாலும். (பி - ம்.) 3. மறந்தாயர்.

217. குருகு - பறவை. மலயாநிலம் - தென்றல், கொழுந்தென்றது இளமையைக் குறித்தது. சருகு - உலர்ந்த இலை. வண்டு தாமரைப் போதின் அருகில் அசைந்து ஆலும்; ஆலும் - ஒலிக்கும். தென் - அழகு. சந்தாபம் - கவலை. எம் மனைப்புறம் வருகை சந்தாபமன்றோ?

### தலைவன் மயங்கல்

218\. அரிகார் முகத்திடை யம்பாக வேந்தி யடையலரூர்
எரிகால வென்றவ ராரூர்த் தியாக ரிமயமன்னாள்
பரிகாரம் பேசித் தடுத்ததெல் லாமெய்ப் பசும்புண்ணிலே
எரிகாரம் பூசி வடிவே லெறிந்த வியல்பொக்குமே. (உஎ)

219\. பகரப் பகர வரிக்கீற் றயலைப் படித்ததல்லால்
வகரத் தயலை மறந்தன ளோமக மேருவெனும்
சிகரச் சிலையவ ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
தகரப் புரிகுழ லாட்கில்லை யோநெஞ்சிற் றண்ணளியே. (உ அ)

### தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்

220\. இரவும் பகலுந் திருமாலும் வேதனு மிந்திரனும்
பரவுஞ் சரணத்த ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
குரவஞ் செறியுந் தொடையாயுன் னூரிற் குறித்தகொம்பின்
அரவம் பெறினல்ல வோதமி யேன்மயி லாலிப்பதே. (உகூ)

---

218-9. **தலைவன் கூற்று.**

218\. அரியைக் கார்முகத்தினிடை அம்பாக; அரி - திருமால்; கார்முகம் - வில். அடையலர் - பகைவர். இமயமன்னாளென்றது தலைவியை. எரிகாரம் - எரியும் காரம்; புண்ணிற் காரமிட்டாற்போல வென்பது ஒரு பழமொழி.

(பி - ம்.) 2 இமயமின்னாள். 4. வேல்விடுத்த.

219\. பகரவரிக்கு ஈற்றயலைப் பகரப் படித்ததல்லால்; பகரவரிக்கு ஈற்றயல் - பகரவருக்கத்தின் ஈற்றயலாகிய போவென்பது. வகரத்து அயல் - வாவென்பது. போவென்று சொல்வதையன்றி வாவென்று சொன்னாளல்லளென்பது கருத்து. சிகரம் - மலை. தகரம் - மயிர்ச்சாந்து. புரிகுழலாள் - தோழி.

(பி - ம்.) 1. பகர்வதல்லால். 3. சிலையினர். 4. குழலார்க் கில்லை.

220\. **பாங்கி கூற்று.**

குரவம் - குராமலர்; மணமுமாம். கொம்பு - ஊதுகொம்பு. அரவம் - ஒலி, பாம்பு. மயிலென்றது தலைவியை. ஆலிப்பது - முழங்குவது. பாம்பைப் பெற்றாலன்றோ மயில் மகிழ்ந்து கூவுமென்பது வேறொரு பொருள். நீ ஊர் சென்றதற்கு அறிகுறியாகக் கொம்பை முழக்குகவென்றாள்.

(பி - ம்.) 3. குரவஞ் செறிதொடையாயுன்றனூரிற். 4. பெறினன்று கொல்.

திருமகட் புணர்ந்தவன் சேறல்

221. எங்கே ரமுமின் மருங்குற்கொவ் வாம விருக்கவுநேர்
சொன்னே னெனுமந்த நன்றியி லனென்பர் துன்பமுற்ற
அங்கோர மேவரு மாரூர்த் தியாக ரணிவரைமேல்
மின்னேயெம் மூருக்கு முன்னே நடந்து வெளிசெயுமே. (௩௦)

---

## கச. இரவுக்குறி இடையீடு

இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தல்

222. மன்றற் கொழுந்து மடமாத ரோதி மணமுங்கொண்டு
தென்றற் கொழுந்தெழு மாரூரர் செம்பொற் றியாகர்வெற்பின்
முன்றிற் கிளர்ந்த பனையினுங் காவினு மொய்குழலாய்
அன்றிற் பெடையுங் குருகுமென் னேநின் றழுங்குவவே. (க)

தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தல்

223. மழைதவ ழும்பொழி லாரூர்த் தியாகர் மணிவரைத்தேன்
உழுத மலர்த்தொடை யார்குறி யாமென் றுயர்பொழிற்கே

---

221. தலைவன் கூற்று.

மின் - மின்னல். நேர்சொன்னேன் - தலைவியின் இடைக்கு ஒப்பாகச் சொன்னேன். மின், முன்னே நடந்து வெளிசெய்யும். நடத்தலாவது இங்கே ஆகாயத்திற்றோற்றுதல்.

(பி - ம்.) 1. என்னே மடந்தை.

222. பாங்கி கூற்று.

மன்றற் கொழுந்தும் - அன்றலர்ந்த மலரின் மணமும்; கொழுந்து, மலர்ந்த செவ்வியைக் குறித்தது. ஓதி - கூந்தல். உத்தமமகளிர் கூந்தல் இயற்கை மணமுள்ளதென்பது, "கொங்குதேர்" (குறுந். உ) என்னும் செய்யுள் முதலியவற்றால் விளங்கும். தென்றற் கொழுந்தானது மன்றற் கொழுந்தையும் ஓதிமணத்தையும் கொண்டு எழுமென்க. தென்றற் கொழுந்து - இளந்தென்றல். அழுங்குவ - முழங்குகின்றன.

223. தலைவி கூற்று.

தேன் - வண்டு. தொடையார்குறி - தலைவர் செய்த அடையாள ஒலி. பொழிற்கு - பொழிலின்கண். பரம் - பின்; "சிறிது தேடுதே

பொழுது விழுந்த பரமேசென் றேனதிற் புட்கண்மின்னே
எழுதிய புள்ளென வேயசை யாம மிருந்தனவே. (உ)

பாங்கி தலைவன் தீங்கெடுத்து இயம்பல்

224. மாலுந் துதிசெயு மாரூர்த் தியாகர் வரையிலெவ
ராலுந் தெரிய வரிதா கியகுறி யாருயிரே
போலுந் தலைவர்செய் தாரணங் கேநெடும் போதுசென்றால்
பாலுஞ் சுவைகெடு மேயறி யாய்கொல் பழமொழியே. (ங)

புலந்தவன் போதல்

225. கால்கொண்டு காலனைச் செற்றோர் தியாகர் கமலைவெற்பில்
மால்கொண் டுழந்து வருந்துநெஞ் சேமலர் மேலிருக்கும்
சேல்கொண்ட கண்ணி திருமா ளிகையைத் திறக்கவொரு
கோல்கொண்டு வந்தில மெவ்வாறு மாதரைக் கூடுவதே. (ச)

புலர்ந்தபின் வறுங்களம் தலைவி கண்டிரங்கல்

226. தூமாலை யம்புயச் சுந்தர ரூருக்குத் தூதுசென்று
பாமாலை கொண்டவ ராரூரி லேமெய்ப் பசலைபெற்றுக்
காமா யுதம்பெற்றுத் தண்பனி நீரிற் கருகியிந்த
மாமா லையுமென்னி னெஞ்சேகண் ணீர்சிந்தி வாடியதே. (ரு)

---

னினைத்த பரமே" (அருணைக்கலம். 6.)

(பி - ம்.) 3. விடிந்தபரமே. 4. புட்கள் வதிந்து.

224. பாங்கி கூற்று.

மாலும்: உம், சிறப்பு. குறியைத் தலைவர் செய்தார். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பது ஒரு பழமொழி. (பி - ம்.) 4. பணிமொழியே.

225. தலைவன் கூற்று.

கண்ணியின் திருமாளிகை, தாமரைமலர்; தலைவியைத் திருமகளாகப் பாவித்து இங்ஙனம் கூறினன். கோல் - திறவுகோல்.

226-7. தலைவி கூற்று.

226 தலைவன் மாமரத்தில் மாட்டிச்சென்ற மாலையைக் கண்ட தலைவி கூறியது இது. அம்புயம் - அழகிய தோள். பசலை - பொன்னிறம். காமாயுதமென்றது பூவை. பனிநீரிற் கருகுதல் மாம்பூவிற்கு இயல்பு. இந்த மா: எழுவாய் மாலை - தலைவன் வைத்துச் சென்ற மாலை; மயக்கத்தையென்பது வேறு பொருள். கண்ணீர் - கள்ளாகிய நீர், விழிநீர். இந்த மா மரமும் என்னைப்போன்று பசலையும் காமாயுதமும் மாலும்பெற்றுக் கண்ணீர் சிந்தி வாடியதெனச் சிலேடை நயமமையக் கூறினள்.

## தலைவி தன்றுணைக் குரைத்தல்

227. மைவா னகந்தொடுஞ் சோலைக டோறு மதுரக்கிள்ளை
சைவா கமஞ்சொலு மாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
கைவால் வளையணங் கேதனி யாமெனைக் கண்டுமதன்
எய்வா னெனவெண்ணி யோவிருட் போதுமிங் கெய்திலரே. ()

## தலைமகளவலம் பாங்கி தணித்தல்

228. முன்னே முகைவிண்ட சண்பகத் தேவண்டு மூசுதல்கண்
டென்னே யதிசய மென்றடைந் தேன்கங்கை யேந்துசடை
மின்னே நிகருந்தென் னாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
பொன்னே யதிலொரு மல்லிகை மாலை பொருந்தியதே. (எ)

## இறைவன்மேல் பாங்கி குறிபிழைப் பேற்றல்

229. சேரார் புரஞ்செற்ற வாரூர்த் தியாகர் சிலம்பிலன்பு
கூராத மன்னவ னேயிருட் போதுன் குறிக்குவந்தோம்
நேரா திருந்தனை யப்பாலுன் னூர்க்கு நெறிவினவி
வாரா திருந்தன மங்குவந் தாலு மறுப்பையென்றே. (அ)

## இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல்

230. சிலையான வெற்பின ராரூர்த் தியாகர் சிலம்பின்மின்னே
தொலையாது நீசெய்த சூழ்ச்சியெண் ணாதிளஞ் சோலைபுக்கு
மலையா நிலமும் புகுதா விடத்து மருவியொவ்வோர்
இலையாகத் தேடிக் கறங்கா மெனச்சுழன் றேகினனே. (கூ)

---

227. மை வானகம் - கரிய ஆகாயம். கண்டும் - பார்த்தும்.

228-9. பாங்கி கூற்று.

228. வண்டு சண்பகப் பூவில் மொய்யாது. என் - யாது. சண்பக மரத்தில் மல்லிகைமாலை இருந்ததென்றது, தலைவன் தான் வந்ததற்கு அறிகுறியாக அதனை வைத்துச் சென்றானென்றதை அறிவுறுத்தியபடி.

(பி - ம்.) 2. மென்றிருந்தேன்.

229. நேர்தல் - சந்தித்தல். மறுப்பையென்று வாராதிருந்தனம்.

(பி - ம்.) 3. ஐயநின்னூர்க்கு.

230. தலைவன் கூற்று.

சிலை - வில். மலையாநிலம் - தென்றல். ஒவ்வோரிலையாகத் தேடுதலென்பது இலைப்புரைகிளைத்தலென வழங்கும். கறங்கு - காற்றாடி.

தலைவி குறிமருண்டமை பாங்கி தலைவற்கு இயம்பல்

231. பொன்வஞ்சி போற்றிய வாரூர்த் தியாகர் பொதியவெற்பில்
தென்வஞ்சி காவலன் போலுமன் னுவிருள் சேர்குறிக்கே
மன்வஞ்சி மீதி லகலா திருக்கின்ற மாங்கனிகள்
என்வஞ்சி யோடு பகையா யுதிர்ந்த விடர்செய்தவே. (கo)

அவன் மொழிக்கொடுமை பாங்கி அவட்கியம்பல்

232. தேம்போ தணிசடை யாரூர்த் தியாகர் செழுஞ்சிலம்பில்
நாம்போது முன்னர்க் குறிபிழைத் தேகிய நண்பர்வண்டு
காம்போதி பாடுங் கருங்குழ லாய்சிறு காலையிலோர்
மாம்போது கொண்டுவந் தாரெமக் கீந்து மறைந்தனரே. (கக)

என்பிழைப்பன்றென்று இறைவி நோதல்

233. வேற்றுப்புள் வந்தெழும் புள்ளோசை கேட்டு வெருண்டும்வெய்ய
காற்றுக் கசைந்து கனிசுனை வீழக் கலங்கியும்வா
னூற்றுச் சடையவ ராரூர்த் தியாக ரணிவரைமேல்
நேற்றுத் திரிந்ததெல் லாமுண ராரன்பர் நேரிழையே. (கஉ)

தாய் துஞ்சாமை

234. அனையீன் றெடுக்க வரியார் தியாக ரணிவரைமேல்
புனையீன்ற முத்துதிர் கானலஞ் சேர்ப்பரைப் புல்லவொட்டா

---

231-2. **பாங்கி கூற்று.**

231. பொன்வஞ்சி - திருமகள். வஞ்சிகாவலன் - சேரன். மன் வஞ்சி - நிலைபெற்ற வஞ்சிமரம். உதிர்ந்தனவாய். வஞ்சிமரத்தின் மேலிருந்து உதிர்ந்த மாங்கனிகளைத் தலைவன் செய்த குறியென்று தலைவி மருண்டனளென்பதை இதனால் உணர்த்தினாள்.

232. போது முன்னர் - வருமுன்பு. காம்போதி - ஓர் இராகம்.

233-42. **தலைவி கூற்று.**

233. வெருண்டும் கலங்கியும் திரிந்தது.

234. அனையீன்றெடுக்க வரியார் - பிறத்தலில்லாதவர்; "தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி" (**திருவா.** திருச்சாழல், 3.) புனை - புன்னை. முத்து, அதனரும்பு. வஞ்சி - திருமகள். வஞ்சிதனை யீன்ற தாய் - கடல்.

எனையீன்ற தாயு மலரா லயத்தி லிருக்கும்வஞ்சி
தனையீன்ற தாயு முறங்காம லோமுன் றவஞ்செய்ததே. (கங)

நாய் துஞ்சாமை

235. வேட்டம் பலத்து நடித்தார் தியாக விநோதர்மணித்
தோட்டம் பிசைபங்க ராரூரி லேமணித் தோடளந்த
நாட்டங் குவலயம் போலுமின் னேயிந்த ஞாளிகளின்
கூட்டங் குலைத்திருட் போதன்பர் கூட்டங் குலைத்தனவே. (கச)

ஊர் துஞ்சாமை

236. தமையா தரித்துத் தொழுவார் பழவினைச் சஞ்சிதத்தின்
சுமையாற வைத்தரு ளாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
அமையான தோளணங் கேயிம்பர் நாட்டவ ரற்பகலா
இமையார்க ளாய்விடி னென்போலு வாருய்வ தெவ்வண்ணமே.

237. புற்றி லமர்ந்தவ ராரூர்த் தியாகர் பொதியவெற்பில்
முற்றிய தென்றற் கொழுந்தான் மதித்தழன் மூண்டதுவோ
வெற்றி தயத்தென் னெடுமூச்சுக் காற்றின் விரகவங்கி
பற்றிய தோவிப் பதியே னுறங்கில பைந்தொடியே. (கரு)

காவலர் கடுகுதல்

238. எய்தற் கரியவ ராரூர்த் தியாக ரிமயவெற்பில்
உய்தற் கிடமினி யொன்றுகண் டோமில்லை யொண்ணுதலாய்
செய்தற் கரிய கொடுங்கா வலர்கைச் சிறியபறை
நெய்தற் பறையல்ல வோவுயிர்க் கேள்வரை நீத்தவர்க்கே. (கள)

---

235. வேட்டு - விரும்பி. மணித்தோடு அளந்த நாட்டம் - காதளவும் நீண்ட கண். குவலயம் - கருங்குவளை. ஞாளிகள் - நாய்கள். குலைத்து - குரைத்து. கூட்டம் குலைத்தன - கலவியைக் கெடுத்தன.

236. பழவினைச் சஞ்சிதம் - இருபெயரொட்டு. தொழுவார் சுமை யாற. அமை - மூங்கில். இம்பர் நாட்டவர் - இவ்வுலகினர். அற்பகலா - இரவு பகலாக. இமையார்களாய்விடின் - உறங்காவிடின்.

(பி - ம்.) 2. வந்தரு ளாரூர். 3. தோளன்னமே. 4. இமையோர்க ளா மதில்.

237. வெறு இதயம் - அறிவில்லாத மனம். விரகம் - பிரிவு. பதி - ஊர்; ஆகுபெயர்.

238. நெய்தற்பறை - சாப்பறை.

(பி - ம்.) 2. இனி வேறுகண் டோமில்லை. 3. செய்தற் கரிய.

### நிலவு வெளிப்படுதல்

239. வேலாழி நஞ்சுண்ட வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
பாலாழி யென்ன வொளிர்கின்ற தாலன்று பார்த்தனுக்கா
மாலாழி விட்டுக் கதிரோன் வெயிலை மறைத்தசெயல்
போலாழி யொன்றிலை யோநில வோனையும் போக்குதற்கே. ()

240. ஆரமு தாயுடல் பாலாழி யுட்பிறந் தைந்தருவும்
வாரண முந்திரு வுந்தம ராகமுன் வந்தமதி
காரண காரிய மல்லார் தியாகர் கமலைவெற்பர்
சேர வருஞ்செய னீக்கிய வாறுநந் தீவினையே. (கக)

### கூகை குழறுதல்

241. ஆகவ முற்ற மருவா ருடலை யருந்துவித்துக்
காக வினத்தை வளர்த்தாரென் றெண்ணிக் கருங்கமுகில்
மாக முகில்பட ராரூர்த் தியாகர் வரையணங்கே
கூகை குழறிப் பகைதீர்த்த வாநங் கொழுநரையே. (உ௦)

### கோழி குரல் காட்டுதல்

242. வாழி மலர்த்திரு வேநவ நீதம் வரும்பொழுது
தாழி யுடைந்த செயலென வேதண் டரளச்சங்கை

---

239. வேலாழி = வேலைஆழி - கரையையுடைய கடல் (தீணைமாலை.) பாலாழியென்ன ஒளிர்கின்றது நிலவு. மால் - கண்ணபிரான். மால் வெயிலை மறைத்தது, பாரதப் போரில்.

(பி - ம்.) 3. மாலாழி கொண்டு கதிரோன் சுடரை மறைத்த.

240. உடல் ஆரமுதாய் வாரணம் - ஐராவதம். சேர - என்னைத் தழுவுதற்கு ; மதி நீக்கியதற்குக் காரணம் நம் தீவினையே.

(பி - ம்.) 2. தமராயுடன் வந்த.

241. தலைவர் வளர்த்தார். மாகம் - ஆகாயத்திலுள்ள. கூகை - கோட்டான். காக்கைக்கும் கோட்டானுக்கும் பகையுண்மையைத் தெரிவித்தபடி. தலைவரைத் தன்பால் வரச்செய்யாமையால், கூகை பழி தீர்த்துக் கொண்டதென்றுள் தலைவி.

(பி - ம்.) 1. உற்று ; அரிந்துசிந்திக். 4. கூகை தடுத்து விலக்கிய வாநங்.

242. நவநீதம் - வெண்ணெய். மேழி - உழுதற்கருவிகளுள் ஒன்று. இரைந்து - கூவி. விலக்கியது என்ன வியப்பு! வியப்பிற்குக் காரணம் ஒரு தலைவரை ஒரு பறவை விலக்கினமை. 1-2. துலோத். கோவை, 250.

மேழி யுடைக்குங்தென் னூரூர் வீதி விடங்கர்வெற்பில்
கோழி யிரைந்து விலக்கிய வாநங் கொழுநரையே. (உக)

---

## கரு. வரைதல் வேட்கை

### தலைவியைப் பாங்கி பருவரல் வினுதல்

243. வெறிக்குங் தளத்தை யளியலைத் தோகையின் மெல்விரலால்
பறிக்கும் புதுமலர் பட்டது வோமதிப் பாதிநிலா
எறிக்குஞ் சடையவ ராரூர்த் தியாக ரிமயவெற்பில்
குறிக்குங் குமமுலை யாயென்கொ லோதுயர் கொண்டதுவே. (க)

### தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்

244. கழுகுந் தொழுகுன்றர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
ஒழுகும் வளையுங் கொழுந்தோ டுயிர்ப்பு முடலமெல்லாம்
முழுகும் பசலையுஞ் சந்தனச் சேற்றை முலையிலள்ளி
மெழுகுங்கண் ணீருங்கண் டென்கொலென் றுளன்னை மெல்லியலே.

### தலைமகள் தலைமகன் வருந்தோழிற்கு அருமை சாற்றல்

245. அஞ்சான சென்னியி லாறுன கங்கையு மம்புலியின்
பிஞ்சான தும்புனை யாரூர்த் தியாகர் பிறங்கன்மின்னே

---

(பி - ம்.) 1. வாழி யிளந்திரு. 2. தாழி விரிந்த பரிசொக்கு மேதண். 3. மேழி புடைதிரு வாரூரர், மேழி யுழுந்திரு. 4. கோழி தடுத்து.

**243. பாங்கி கூற்று.**

வெறிக் குந்தளத்தை - மணம் பொருந்திய கூந்தலை. மதிப்பாதி - அட்டமிசந்திரன். குறி: தொய்யில் முதலியன. துயர்கொண்டதற்குக் காரணம் அலைத்தலோ படுதலோ.

**244-6. தலைவி கூற்று.**

244. கழுகும் தொழு குன்று - திருக்கழுக்குன்றம். ஒழுகும் - நழுவி விழும். கொழுந்தோடுகின்ற உயிர்ப்பு. என்கொல் - இந்நிகழ்ச்சிக்குக் காரணம் யாது?

(பி - ம்.) 1. தொழுகின்ற வாரூர்த் தியாகர் கமலை. 2. ஒழுகுங் குவளைக் கொழுந்தோடு. 4. கண்டையமுற் றுளன்னை.

245. அஞ்சான சென்னி - ஐந்து திருமுகங்கள்; அவை சத்தியோ சாதமுதலியன. அஞ்சு ஆறு என்றது ஒருநயம். அம்புலியின் பிஞ்சு - பிறை; "மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சும்" (மதுரைக்கலம்.)

துஞ்சார்க ளன்னையு ஞாளியு மூருந் துடியவரும்
நஞ்சா நிலவெழுங் கூகையுஞ் சேவலு நாதிக்குமே. (௩)

தலைவி தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்

246. தென்பால் விளங்கிய வாரூர்த் தியாகர் சிலம்பின்மின்னே
அன்பா லிறையவ ரூர்க்குச்செல் வோமரக் காயுருகும்
என்பாவி நெஞ்ச மவர்நெஞ்சு போல விரக்கமின்றி
வன்பா லிருக்க மருந்தொன்று வாங்கி வருவதற்கே. (௪)

பாங்கி இறைவனைப் பழித்தல்

247. நின்மே லுருவப் படுமதன் வாளியுன் னெஞ்சத்துள்ளார்
தன்மே லுறுமற் றடைப்பட்ட தாற்கற்ப தாருவென்ன
மென்மேல் வளர்பொழி லாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
வன்மே லிடுந்தனத் தாயவர் போலிலை மாயத்தரே. (௫)

தலைவி தலைவனை நேர்ந்து இயற்பட மொழிதல்

248. என்பற்ற வைகள் வெயிலா லிறப்ப தெழுங்கதிரோன்
அன்பற்ற வாசியன் றேயணங் கேயர வொன்றிறைஞ்ச
மென்புற் றமர்ந்தவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பர்
வன்புற் றிருந்து மறந்தது நாஞ்செய்த வல்வினையே. (௬)

தலைமகள் கனவு நலிபுரைத்தல்

249. நீங்காமன் மேகலை போகாமற் சந்தன நித்திலத்தார்
வாங்காம லோதி மலர்சரி யாமல்விண் மாதர்கொய்யப்

---

துடியவர் - உடுக்கையையுடைய ஊர்காவலர். நாதிக்கும் - ஒலிக்கும்.

246. வன்பால் - வன்மையால்.

(பி - ம்.) 1. ஆரூரர் செம்பொற் றியாகர்வெற்பில். 2. இறைவர்த மூர்க்கு. 4. வன்பா யிருக்கும் வரமொன்று வாங்கி வருமதற்கே.

247. பாங்கி கூற்று.

247. உள்ளார் தன் : பன்மை யொருமை மயக்கம். கற்ப தாரு - கற்பகமரம். மென்மேல் : மேன்மேல் ; குறுக்கல். வல் மேலிடும் - சூதாடு கருவிக்கு மேலாகத் தோற்றும். அவர் - தலைவர்.

(பி - ம்.) 1. நெஞ்சிற் றுன்னுர். 4. வன்மே லிருதனத்.

248-52. தலைவி கூற்று.

248. இச்செய்யுளின் முதலிரண்டடிகள், "என்பி லதனை வெயில் போலக் காயுமே, அன்பி லதனை யறம்" (குறள், 77) என்பதை உட்கொண் டியற்றப் பெற்றவை. வாசி - இயல்பு. அரவு - பதஞ்சலி. வன்பு - வன்மை.

(பி - ம்.) 2. வாசியன்றே.

249. மேகலை நீங்காமல். சந்தனம் போகாமல். மேகலை நீங்குதல்

பூங்கா மலர்திரு வாரூர்த் தியாகர் பொருப்பரென்னைத்
தாங்கா மலரணை மேற்புணர் வாரம்ம தாழ்குழலே. (௭)

கவினழிபுரைத்தல்

250. சேணாடு காத்து முசுகுந்த னார்தவஞ் செய்தமையாற்
சோணாடு காப்பவ ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
கோணாகந் தீண்டின ராகத்தின் மாய்ந்த குருதியைப்போல்
வீணாகப் போன தவர்க்குமல் லாமலென் மெய்யழகே. (௮)

251. தட்டா மதுகரம் புக்குழு தாரன்பர் தங்கலப்பை
விட்டாரென் னேருங் குலைந்திட வேமதின் மேகபத
மட்டாக வோங்கிய வாரூர்த் தியாகர் வரையணங்கே
நட்டார்கள் வேறிலை யேயெனைத் தேற்றவு நல்கவுமே. (௯)

---

முதலியன கனவில் அளவளாவுதலால் நிகழ்வன. இங்கே, தலைவி தலைவனைக் கனவில் அளவளாவியதாகக் கண்டமையின் அவை நிகழ்ந்தில.

(பி - ம்.) 3. எம்மை. 4. புணர்வாரென்றும்.

250. சேணாடு காத்து - தேவலோகத்தைப் பாதுகாத்து. முசுகுந்த சக்கரவர்த்தி செய்த தவத்தால் தியாகராஜப் பெருமான் திருவாரூருக்கு எழுந்தருளி வீற்றிருந்து அரசாட்சி செய்தனரென்பது வரலாறு. இதனை, "அன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து, வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த, அருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடும், இந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி, அந்தமி றிருவொடு மரசவற் கருளி, ஒருகோலோச்சி யிருநிலம் புரப்பான், திசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற, முசுகுந் தனுக்கு முன்னின் றருங்குப், பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி, மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென, மேவர வழங்குமால்" (திருவாரூர் நான்மணி. ௪௰ : 25-35) என்பதனாலுணர்க. 1 - 2. "அயிராவண மேறா தானேறேறி யமரர்நா டாளாதே யாரூ ராண்ட, அயிராவணமே" (தே.) என்றருளிச்செய்தனர். கோள் - விடம். மாய்ந்த - மறைந்த; அழிந்து வீணான. நாகத்தாற் கடிபட்டாரது இரத்தம் கெட்டு நீலநிறமடையும். அதுபோல் என்மெய்யழகு எனக்கும் தலைவனுக்கும் பயன்படாமல் வேறுபட்டதென்றாள்; "எனக்கு மாகா தென்னைக்கு முதவாது, பசலை யுணீஇயர் வேண்டும், திதலை யல்குலென் மாமைக் கவினே" (குறுந். ௨௭ : 3-5.)

(பி - ம்.) 2. சுடர்க்கிரியாய்.

251. மதுகரம் - வண்டு. கலப்பை - கலத்தலை; நட்பை. என் ஏரும் குலைந்திடக் கலப்பை விட்டார்; ஏர் - அழகு. என் ஏர் (உழும் கருவி) குலைந்திடும்படிக் கலப்பையை விட்டனரென்பது வேறொரு பொருள். மேகபதம் - மேகமண்டலம். மதில் ஓங்கிய. நல்க - தண்ணளி செய்ய.

(பி - ம்.) 2. மேகபடம்.

தலைமகள் தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

252. வீரத் தனிமழு வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
ஆரத் தொடைநிக ராநகை யாய்நம தன்பருக்கென்
பாரத் தனமு நுதலுமிவ் வாறு பசந்தவென்று
பீரத் தலரொன்று காட்டிவந் தார்க்குப் பெரும்புகழே. (கo)

பாங்கி உரைத்தல்

253. அனத்திருப் பாருக் கரியார் தியாக ரணிவரைமேல்
இனத்திருப் பாரதி போலுமின் னேயவர்க் கேதுரைப்போம்
தனத்திருப் பார்கன வெல்லாங் கனவு தவறின்வந்து
மனத்திருப் பாரறி யாததுண் டோநம் வருத்தங்களே. (கக)

தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி

254. எடுக்குங் கணிச்சிய ராரூர்த் தியாக ரிமயவெற்பில்
அடுக்குந் தொகைமலர் சேர்குழ லாய்மத னாசுகமாத்
தொடுக்கும் புதுமலர்க் கோவய லார்வம்பு தூற்றலர்க்கோ
படுக்கும் பனிமலர்க் கோவறி யேன்மெய் பதைக்கின்றதே. (கஉ)

தலைமகள் ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

255. மண்ணிற் படிந்து செவிசாய்த்து வால்சுற்றி வாய்திறந்து
கண்ணிற் குறித்துப் புலிபாய்ந் திரைகொள்ளுங் கானமன்றே

---

252. ஆரத்தொடை - முத்துவடம். பீரத்து அலர் - பீர்க்கம்பூ; இது பசலைக்கு உவமை. பெரும்புகழ் உண்டாகுமென ஒரு சொல் வருவித்து முடிக்க. இச்செய்யுள், "இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த், துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே, நன்றுமன் வாழி தோழிநம் படப்பை, நீர்வார் பைம்புதற் கலித்த, மாரிப் பீரத் தலர்சில கொண்டே" (குறுந். கஅ) என்பதைத் தழுவி வந்தது.

(பி - ம்.) 2. ஆரத் தொடிநிகர், ஆரத் தொடையலர் மா.

253. பாங்கி கூற்று.

அனத்து இருப்பார் - பிரமதேவர். இருப்பு ஆர் ரதிபோலுமின்னே யென்றது தலைவியை. திருவும் பாரதியும் போலும் எனலும் ஆம். கனவுகாணும் பொழுதெல்லாம் தனத்தின்மேல் இருப்பார். (பி - ம்.) 4. வருத்தத்தையே.

254-64. தலைவி கூற்று.

254. ஆசுகமா - அம்பாக. வம்பு தூற்று அலர்க்கோ - வீண்மொழிகளாகப் பரப்புகின்ற பழிமொழிக்கோ. படுக்கும் - படுக்கையிற் பரப்புகின்ற.

(பி - ம்.) 4. புதுமலர்க் கோதமியேன்.

255. முதலிரண்டடி தொழிற்றன்மை யணி. நெறி கானமன்றோ

விண்ணிற் றிகழ்பொழி லாரூரர் வீதி விடங்கர்வெற்பர்
உண்ணிற்கு மால்கொண் டிருட்போழ் துலாவு முயர்நெறியே. ()

காமமிக்க கழிபடர் கிளவி

256. விரதத் தவர்தொழு மாரூரர் வீதி விடங்காஞ்சப்
பரதத் தவர்கண்டங் காராகச் செய்த பனிக்கடலே
சுரதத் துறைமறந் தேகினர் தேர்வழி தூர்ப்பதென்னோ
இரதத் தருமை தெரியாதன் றோவிட மீந்தவர்க்கே. (கச)

257. காற்றுங் கனலுங் கணையா மிறைவர் கமலைவெற்பில்
தேற்றும் படிக்கு வருமன்றில் காளுங்கள் சேவலழு
தூற்றுங் கவரல குக்கெதி ரேவைத்த வுள்ளலகை
மாற்றுந் திரும்புந் தனித்தபின் பாரும் வருத்தத்தையே. (கரு)

தலைமகள் தன்னுட் கையாறெய்திடு கிளவி

258. கைத்தாய் வெறுத்தனை கோடாய்க் கிளைத்தனை காயமுள்ளாய்ப்
பைத்தாயைம் பால்விரித் தாய்கள்ளி யேபதி னாலுலகின்

---

(பி - ம்.) 1. படர்ந்து. 2. கானகத்தில். 4. இருட்போழ்து சேர்வ தொழித்தருளே.

256. அஞ்சப் பரதத்தவர் - ஹம்ஸநடனஞ் செய்தவர்; இஃது அஜபாநடனமென்றும் கூறப்படும்; இது திருமால் திருமார்பிலிருந்து செய்தது. கண்டம் காராகச் செய்த பனிக்கடலென்றது, கடலில் உண்டான நஞ்சைச் சிவபிரான் அருந்திக் கண்டங்கறுத்த செய்தியை நினைந்து கூறியது. சுரதத்துறை - கரணவேறுபாடுகள். தலைவன் வந்த தேர்ச்சக்கரச் சுவட்டை அலைகள் அழித்தன. இரதம் - தேர், ரஸம். இதில் சிலேடையொடு பொருந்திய வேற்றுப்பொருள்வைப்பணி வந்தது.

(பி - ம்.) 1. விடங்கர்மெய்ம்மைப்.

257. இச்செய்யுள் அன்றில்களை நோக்கிக் கூறியது. சிவபெருமான் திரிபுரதகனம் செய்த காலத்தில் காற்றையும் கனலையும் திருமாலையும் அம்பாக அமைத்தனரென்பர். கவர் அலகு - கவர்த்த வாய். அன்றில்கள் அலகோடு அலகு கோத்துக்கொண்டு அளவளாவுதல் இயல்பு; "அன்றி லலகோ டலகிறு குங்கலவி, தனைப்பார்ப்பர்" (மதுரைக்கோவை, 150.) பிரிவினால் உண்டாகும் துன்பத்தை நீர் அறியீரென்றபடி.

(பி - ம்.) 3. கவருக் கெதிரேக வேவைத்த, ஊற்றுங்கள் வாய்ப்புக் கெதிராக வேவைத்த.

258. கள்ளியொடு கூறியது. முதல் இரண்டடி கள்ளிக்கும் தலைவிக்கும் பொது. கைத் தாய் வெறுத்தனை - பக்கத்திற் பரவி நெருங்கி யுள்ளாய், கைத்தாயை வெறுத்தாய்; கோடாய்க் கிளைத்தனை - கிளையாகக்

வித்தா னவர்திரு வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
ஒத்தாயென் போல நினக்குமுண் டோபிரி வுற்றவரே. (கசு)

தலைமகள் நெறி விலக்குவித்தல்

259. பறியார் கருங்கயல் காய்பறி யாத பசுங்கமுகை
முறியா வெழுவய லாரூர்த் தியாகர் முருகுவெற்பின்
வெறியார் கமல மலர்த்திரு வேசதுர் வேதஞ்சொன்ன
நெறியா னடப்பவர் தீநெறி யாற்செல்ல னீர்மையன்றே. (கஎ)

தலைமகள் குறி விலக்குவித்தல்

260. செங்கட் கிளிகண் மறுதாள் விளைந்த தினைக்கதிரை
மங்கப் புகாதினங் காமினென் றுள்வண்டு மல்லிகைப்பூஞ்
சங்கைக் குறிக்குந்தென் னாரூர்த் தியாகர் சயிலமின்னே
சங்கைக் குறிக்கன்பர் சேராத வண்ணந் தடுத்தருளே. (கஅ)

தலைமகள் வெறி விலக்குவித்தல்

261. இன்புற் றிடுமன்பர் போராசை தாங்கிய வென்னைவில்வேள்
துன்புற் றிடவெய்த வாளியெல் லாமலர்த் தோகைபணிந்

---

கிளைத்தாய், செவிலித்தாயால் வருந்தினாய்; காயமுள்ளாய்ப் பைத்தாய் - உடல்முழுதும் முள்ளாகப் பச்சைநிறம் பெற்றாய், உடம்புக்குள் பசலை பெற்றாய்; ஐம்பால் விரித்தாய் - அழகிய பாலைப் பரப்பினாய், கூந்தலைவிரித்தாய். இரண்டாவது பொருள் தலைவியின் இயல்பைக் கள்ளி கொண்டதாகப் பொருத்துதற்குரியது.

259. பறி ஆர் - வலைஞரது மீன்பறியிலுள்ள; பறி - இங்கே மீனைப் பெய்யுங் கருவி. காய் பறிக்கப்படாத. தீநெறி - தீங்குபயக்கும் வழி; வேத நெறிக்கு மாறான நெறியென்பது வேறு பொருள்.

260. மறுதாள் - ஒருமுறை அறுத்தபின் மீண்டும் தோற்றும் தாள். மங்க - மங்குவிக்க; என்றது இங்கே உண்டுகுறைத்தலைக் குறித்தது. காமின் - காவல்புரிவீராக. வண்டு மல்லிகைப்பூவாகிய சங்கைக் குறித்தல்: "மல்லிகையே வெண்சங்கா வண்டூத" (நள. சுயம்வர. 99.) குறிக்கும் - ஊதும். சங்கைக்குறி - நாம் செல்லும் உறுதியற்ற ஐயப்பாடான குறியிடம்; சங்கை - ஐயம்.

261. வாளி - அம்பு. மலர்த்தோகை - திருமகள். வெறி - ஆடு. தனது வேறுபாடு கண்டு தாய் வெறியாட்டெடுத்து ஆட்டைக் கொல்லத் துணிந்ததை இதனாற் புலப்படுத்தினாள். வாளியெல்லாம் வெறியின்

கண்புற் றிறைஞ்சுந்தென் னாரூர்த் தியாக ரணிவரைமேல்
மென்புற் கவரும் வெறியாவி விண்டது மெல்லியலே. (௧௯)

262. யாகத் தழற்கு மறையோ ரிடும்வெறி யென்னகத்தின்
மோகத் தழற்கு மிடநினைந் தாளன்னை மூவுலகத்
தியாகக் கொடிகட்டு மாரூர்த் தியாகர் சிலம்பிலென்றன்
ஆகத் துயிரனை யாயறிந் தாரில்லை யாடவரே. (௨௦)

பிறர் விலக்குவித்தல்

263. தேன்வாய்த் ததும்பிய நாண்மலர்க் கானிற் றிரண்டுவந்து
கான்வாய்த்த தும்பி நிறைபுன லாரன்பர் காண்கினென்னும்
ஊன்வாய்த்த சூலத்த ராரூர்த் தியாக ருயர்சிலம்பில்
மான்வாய்த்த மீன்கணம் போல்வரை வான்பிறர் வந்ததுவே. ()

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்

264. செஞ்சரத் தாரவ ராரூர்த் தியாகர் சிலம்பின்மின்னே
வெஞ்சரம் வீசுங் குறவாண ருக்கு விளம்புதியோ
மஞ்சர வஞ்செய் மலைமே லெழுந்த மதியமென்னக்
குஞ்சர மீதெம் மிறைவர வேயெதிர் கொள்ளுமென்றே. (௨௨)

---

ஆவியை விண்டது; விண்டது - போக்கியது. இதில் தாரகாரியவேது வணி வந்தது.

262. வெறி - ஆடு. அகம் - மனம். வெறியை இட. ஆடவர் - தலைவர். (பி - ம்.) 3. தியாகக் கொடியிட்ட வாரூ ரிறைவர்.

263. தேன்வாய்த் ததும்பிய - தேன் தம்மிடத்திலே பொங்கிய. கான்வாய்த்த தும்பி - காட்டிற்பொருந்திய வண்டு. வரைவான் - என்னை வரைந்துகொள்ளும்பொருட்டு.

(பி - ம்.) 1. மலர் காணிற் றிரண்டு.

264. சரத்தார் - சரக்கொன்றைமாலை. மஞ்சு அரவம் செய் - மேகம் முழக்கத்தை உண்டாக்கும். எம் இறை - எம் தலைவர்.

(பி - ம்.) 1. செஞ்சரம் பத்தரு வானூர். 4. இறையோன் வரவெதிர்.

## கசு. வரைவு கடாதல்

### வினவிய சேவிலிக்கு மறைத்தமை விளம்பல்

265. கங்கைச் சடையர் வன்மீக நாதர் கமலைவெற்பா
கொங்கைப் பசப்பும் பொழியுங்கண் ணீருங் குறிப்பிற்கண்டு
மங்கைக் கடுத்த செயலேதென் றுளன்னை வாசமலர்ப்
பொங்கர்ச் சிறுதுக ளால்வந்த தாகப் புகன்றனனே. (க)

### அலர் அறிவுறுத்தல்

266. பணியா றணிந்தவ ராரூர் மருங்கிற் பவளமுத்த
மணியா மெனப்புன்னை போதவி ழாநிற்கும் வண்டுறைவா
அணியா ரளிகட் கலரிட மாகுவ தன்றிமின்பால்
தணியா வலருக் கிடமா னதுநின்றன் றண்ணளியே. (உ)

### தாயறிவுணர்த்தல்

267. இயலோ டிசைமுழங் காரூர்த் தியாக ரிமயவெற்பா
அயலோடு நீவந்த சாரலி லேயுன் னடிச்சுவட்டிற்
கயலோடு சங்கமும் போதுங்கண் டாளன்னை கைகுலைத்தாள்
வயலோ விதுநம் மனையல்ல வோவென்று வாடினளே. (ங)

### வெறியச்சுறுத்தல்

268. கைம்மான் பிணிக்குக் கருமான் சிதைக்குங் கதையெனவே
எம்மான் பிணிக்கு வெறிசிதைத் தாரிள மான்றரித்த

---

265-86. பாங்கி கூற்று.

265. பசப்பு - பசலை. பொங்கர் - கிளை. இதில் இலேசலணி வந்தது.

266. பணியையும் ஆற்றையும் அணிந்தவர். அளிகட்கு - வண்டுகளுக்கு. அலர் - மலர். அளிக்கு அலர் இடமாவதன்றி அலருக்கு அளி இடமாயிற்றென முரண்பாட்டு நயம் தோற்றியது. அலர் - பழிமொழி. அளி - அன்பு.

(பி - ம்.) 1. ஆரூர்த் தியாகர். 4. இடமா வதன்றுநின்.

267. அயலோடு - அயலில்; உருபு மயக்கம். கயல் சங்கு தாமரை இக்குறிகள் சிறந்த அரசர்களுடைய பாதத்தில் இருப்பன. கை குலைத்தாள் - கையை அசைத்துச் சினந்தாள்.

(பி - ம்.) 4. மனையதன்றோ.

268. கைம்மான் - யானை. கருமான் - கரிய மானை. எம் மான் பிணிக்கு - எம்முடைய மான்போன்ற தலைவியின் காமநோய்க்கு. வெறி

யெம்மா னமரர் பெருமான் சடையிற் பிறைமுடித்த
அம்மான் மலைமங்கை கோமான் கமலையி லாண்டகையே. (௪)

## பிறர்வரைவுணர்த்தல்

269. பொழியுங் கருணை முகத்தா மரைதொறும் பொங்கிப்பொங்கி
வழியுங் கடைக்கண்ண ராரூர்த் தியாகர் வரையிறைவா
மொழியும் படிபெண்கொ லோமுடி வேந்தரெம் முன்றில்வழி
கழியும் படிநடக் கார்பட மான்மணங் கூடுதற்கே. (௫)

## வரைவெதிர்வுணர்த்தல்

270. செம்பது மத்திரு வன்னாளை நீமணஞ் செய்யவந்தால்
எம்பதி யிற்குற வாணரெல் லாமெதிர் கொள்ளுவரால்
கம்பலை யிற்றிக ழாரூர்த் தியாகரைக் கண்டுருகும்
அம்ப ரிடத்து மறையோனைப் போல வகமகிழ்ந்தே. (௬)

## வரையும் நாள் உணர்த்தல்

271. மின்னு ளிடத்தின ராரூர் வீதி விடங்கர்வெற்பா
பொன்னுண் மலர்கொண்ட வேங்கையெல் லாமதி பூத்துநின்ற
தின்னா ளெமர்க்கு வரைகின்ற கால மிதுதவிர்ந்தால்
நன்னாள் வருகின்ற காலத்தல் லாது நடுவில்லையே. (௭)

---

சிதைத்தார் - ஆட்டைக் கொன்றார். "கையடைந்த மழுமானும்" (திருவருணைக் கலம்பகம், 84) என்னும் செய்யுளில் மான் பல வந்திருத்தல் காண்க. (பி - ம்.) 1. வதைக்கும்.

269. கருணைவழியும் கடைக்கண்ணர்.

(பி - ம்.) 3. முன்றில் விழி.

270. கம்பு அலையில் திகழ்; கம்பு - சங்கு. அம்பரிடத்து மறையோன் - திருவம்பரிலிருந்த சோமாசிமாற நாயனார். இந்த நாயனார் செய்த யாகத்திற்கு இவர் வேண்டுகோளின்படி நேரே ஸ்ரீ தியாகராஜர் எழுந்தருளி அவிர்ப்பாகத்தை ஏற்றருளினரென்பது ஒரு வரலாறு. இது பக்தவிலாசத்திலும் திருவம்பர்ப்புராணத்திலும் கூறப்பெற்றுள்ளது.

271. வேங்கையெல்லாம் மலர்கொண்டன; கொண்ட : முற்று. மதி பூத்துநின்றது - சந்திரன் விளக்கமாக இருந்தது; என்றது பரிவேடங்கொண்டதைச் சுட்டியது. மலைவாணர் வேங்கைமரம் மலர்ந்தகாலத்திலும் சந்திரன் ஊர்கோள்கொண்ட காலத்திலும் மணம்செய்வது வழக்கம்; "வேங்கையு மொள்ளிணர் விரிந்தன, நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே" (அகநா. உ.) நடு நன்னாள் இல்லை - இடையே வேறொரு நன்னாள் இல்லை.

தலைமகள் அறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்

272. தேமா வனந்தொறுஞ் செங்கதி ரோன்மணித் தேருடனே
வாமா வினம்புகு மாரூர்த் தியாகர் வரையிறைவா
பூமான் கொடுத்தன னல்லெழி லாமென்றென் பூங்கொடிக்கு
நாமான் கொடுத்த திறைபோலத் தோன்றிற்று நல்லறிவே. (அ)

குறி பெயர்த்திடுதல்

273. பொற்றோடு தாவும் விழிமட வார்கள்பின் போந்நடை
கற்றோ திமம்பயி லாரூரிற் றேவர கண்டர்வெற்பில்
சற்றோ களவு வெளிப்பட லானதென் றையனுக்கு
மற்றோர் குறியிடு வாய்கலை நூன்மிக வல்லவனே. (கூ)

பகல் வருவானை இரவு வருகென்றல்

274. விண்ணூர் பரிதிக்கு மேல்பால் வரைக்கும் விழுப்வெளியைக்
கண்ணா லளந்து வரைதலுற் றாண்மங்கை கச்சிநகர்
அண்ணா மலையுறை யாரூர்த் தியாக ரணிவரைமேல்
நண்ணார் தொழுமண்ண லேயிருட் போது நடந்தருளே. (கம)

இரவு வருவானைப் பகல் வருகென்றல்

275. முகந்தா மரையங்கை பாதமுந் தாமரை மொய்குழலாள்
அகந்தா மரையொளி யாதவ னீயழி யாதகக்கன்

---

272. வாம் மாவினம் - தாவுகின்ற குதிரைத்திரள். பூமான் - திருமகள். நாமான் - கலைமகள். திறை - கப்பம்.

(பி - ம்.) 4. நாமான் றிறையிட் டதுவெனத் தோன்றின.

273. பொற்றோட்டினிடத்தே. ஓதிமம் - அன்னம்.

(பி - ம்.) 4. நூல்பல.

274. தலைவி சூரியன் அத்தமிப்பதற்கு எவ்வளவு நேரமாகுமென்று ஆராய்ந்தாளென்றபடி. இதனால் இரவில் வரவேண்டுமென்னுங் குறிப்புத் தோற்றியது. இது குறிப்பு நுட்பமென்னும் அணி (தண்டி. சூ. 62.) மேல்பால் வரை - அத்தகிரி. வரைதல் - வரையறுத்தல்.

(பி - ம்.) 2. விரைதலுற்றாள்.

275. மொய்குழலாளென்பதை முகமுதலியவற்றோடும் கூட்டுக; இஃது இடைநிலைத்தீவகம். ஒளி ஆதவன் - ஒளியையுடைய சூரியன். வெளியா - வெளிப்படையாக. தலைவியின் உறுப்புக்களைத் தாமரையாகவும் தலைவனைச் சூரியனாகவும் கூறியது, சூரியன் பகலில் வரும்போது தாமரை

மகந்தா னழிக்கவ ராரூர்த் தியாகர் மணிவரைமேல்
சகந்தா னளிக்குமன் றேவெளி யாமென்கொல் சாற்றுவதே. (௧௧)

### பகலினும் இரவினும் பயின்றுவரு கென்றல்

276. கல்லுங் கரையுங் கனிமொழி யாளைக் கடற்றுறைவா
புல்லும் புணர்ச்சிக் கிருபோதும் வாழப் புரத்தவரை
வெல்லுஞ் சிலையவ ராரூர் முளரிக்கும் வெண்மதிக்கும்
அல்லும் பகலுமன் றேவெங்க ளாயிழை யானனமே. (௧௨)

### பகலினும் இரவினும் அகலிவ ணென்றல்

277. இங்கே வரிற்பகற் போதல ராகு மிளங்கொடிவாழ்
பங்கே ருகமிருட் போதல ராது பதுமத்தினிற்
சங்கேறி முத்திடு மாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
கொங்கேறு தாரண்ண லேதவிர் வாயிந்தக் கூட்டத்தையே. (௧௩)

### உரவோன் நாடும் ஊரும் முதலிய கூறல்

278. முடிக்கும் பிறையவ ராரூர்த் தியாகர் முருகனைப்போற்
பிடிக்குஞ்செவ் வேலண்ண லேவரை யாமை பிழையதன்றோ
வடிக்குஞ் செழுந்தமிழ் நாட்டுக்கு மூர்க்கும் வருணத்துக்கும்
குடிக்கும் புகழ்க்குமுன் வாய்மைக்குந் தூய்மைக்குங் கொள்
[கைக்குமே. (௧௪)

---

மலர்வதுபோலத் தலைவன் பகலில் வந்தால் தலைவி மகிழ்வாளென்பதைப் புலப்படுத்தியபடி.

(பி - ம்.) 1. பாதமென் றுமறை. 4. அளித்தமன்று.

276. ஆரூர் - ஆரூரில். தலைவியின் முகம் முளரிக்கு அல்லும் மதிக்குப் பகலுமன்றோவென்க. முளரி இரவைக் கண்டும், சந்திரன் பகலைக் கண்டும் பொலிவழிவதுபோல அவ்விரண்டும் இவள் முகங்கண்டாற் பொலிவழியுமென்றாள். (பி - ம்.) 3. ஆரூரிரவிக்கு.

277. அலர் - பழிமொழி. இளங்கொடி வாழ் பங்கேருகம் : தலைவியைத் திருமகளாகப் பாவித்துக் கூறியபடி. அலராகும், அலராது என்பது ஒரு நயம். கொங்கு - நறுமணம்.

278. அண்ணலே, இவளை மணஞ்செய்து ஒழுகாமை உன்னுடைய நாடு முதலியவற்றிற்குப் பிழையன்றோ? ஆதலால் விரைவில் மணஞ்செய்துகொள்க.

(பி - ம்.) 1. பிறையணி. 2. பிழையல்லவோ. 3. வருணத்திற்கும்.

ஆறுபார்த்துற்ற அச்சங் கூறல்

279. கஞ்சா லயன்றொழும் வன்மீக நாதர் கமலைவெற்பில்
பஞ்சா யுதநெடு மாலனை யாயற் படர்நெறிக்கே
துஞ்சாதென் வஞ்சி மனமுன தூர்க்குத் துணைவரும்போ
தஞ்சாது கொண்டுசெல் வாயரி மாவுக்கு மானைக்குமே. (சரு)

ஆற்றாத்தன்மை ஆற்றக் கூறல்

280. தோற்றா நிறைமதிக் கீற்றா லுருகிச் சுடுங்களபச்
சேற்றால் வெதும்பி மனமழிந் தாளிளஞ் செங்நெல்கன்னற்
சாற்றால் வளர்திரு வாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
ஆற்றாத தன்மையெல் லாமண்ண லேவரைந் தாற்றுகவே. (கசு)

281. நெய்யா மெனமெய்ப் பனிநீர் கொதிக்கு நிலவுதொட்ட
கையா னதுவும் புகையுமென் பேதைக்குக் காவிரிநீர்
பொய்யா துலவுந்தென் னாரூர்த் தியாகர் பொதியவெற்பா
மெய்யா னதுகொல்லன் கம்பியச் சானது வேள்கணைக்கே. (கஎ)

காவல் மிகவுரைத்தல்

282. அனைகா வலுமுன் றின் ஞாளிகள் காவலு மையர்வெய்ய
மனைகா வலுநகர்க் காவலர் காவலும் வண்டுமஞ்சும்

---

279. கஞ்சாலயன் - பிரமன். பஞ்சாயுதம் - சக்கராயுதமுதலிய ஐந்து ஆயுதங்களையுடைய. அல் படர் நெறிக்கு - இரவிற் செல்லும் வழியினிடத்தில். வஞ்சியின் மனம் உனதூர்க்குத் துணைவரும்போது. அரிமாவுக்கும் ஆனைக்கும் அஞ்சாது தலைவியின் மனத்தைக்கொண்டு செல்வாயென இயையும். தலைவியின் மனம் நீ செல்லும் வழியில் அரிமாவும் ஆனையுமுளவென் றஞ்சுமென்பது கருத்து. (பி - ம்.) 2. நெறிக்குத்.

280. தோற்றாமதிக் கீற்றாலென இயைக்க. நிறை, மதிக்கு அடை. கன்னற்சாற்றாற் செந்நெல்வளர். வரைந்து - மணஞ்செய்துகொண்டு.

(பி - ம்.) 1. சுடர்களபச்.

281. பனிநீர் அனலிற் பெய்த நெய்யாமென மெய்யிற் கொதிக்கும். கம்பியச்சு - கம்பியை இழுத்து மெல்லிதாக்கும் ஒருவகைக் கருவி. அம்பால் துளைபட்ட தலைவியின் மெய்க்கு அச்சும் கணைக்குக் கம்பியும் உவமைகள்.

(பி - ம்.) 3. பொதியில் வெற்பில். 4. பெருங்கம்பி.

282. ஞாளிகள் - நாய்கள். ஐயர் - தமையன்மார். வண்டையும் மஞ்சையும் புனைந்த கா. வஞ்சி மேவுவது என்கொல்.

(பி - ம்.) 1. ஞாளியின்.

புனைகா வலருந்தென் னாரூர்த் தியாகர் பொருப்பின்முன்னை
வினைகா வலுங்கடந் தென்கொன்மன் னவஞ்சி மேவுவதே. (கஅ)

### காமமிகவுரைத்தல்

283. ஆகாய நன்புன லுண்பது வேண்டி யணிபொழிற்கண்
மேகா டவிபுகு மாரூரார் வீதி விடங்கர்வெற்பா
சோகா னலத்துக் கிளைப்பாறு நீழலுந் தோகைநல்லாள்
மாகாம நோய்க்கு மருந்துநின் றோளன்றி மற்றில்லையே. (க௯)

### கனவு நலிபுரைத்தல்

284. சேணும்பர் போற்றுந்தென் னாரூரர் செம்பொற் றியாகர்வெற்பா
நாணுங் கவினு மிழந்தவென் பூவையெந் நாளுமுன்னைக்
காணும் படிக்குக் கனவையுண் டாக்கிய கண்களுக்குப்
பூணும் புனைகலன் காணாள்கண் ணீர்முத்தம் பூட்டினளே. (௨௦)

### கவினழிபுரைத்தல்

285. நகையாரஞ் சூழ்வய லாரூரார் காவிரி நாட்டிறைவா
பகையான காமக் கனலின்வெண் ணீறு பரந்ததுபோல்
முகையான கொங்கையெல் லாம்விளர்ப் பானது மூண்டவந்தப்
புகையாற் கலுழ்ந்தது போல்விழி நீரும் பொழிகின்றதே. (௨க)

---

283. ஆகாய நன்புனல் - ஆகாயகங்கையின் நல்ல நீரை. மேகாடவி - மேகக்கூட்டம். மேகாடவி பொழிற்கண் புகுமென இயையும். சோலை ஆகாய கங்கையை உள்ளடக்கி மேலுயர்ந்து நின்றதென்றபடி; 287. சோகானலத்துக்கு - சோகமாகிய வெம்மையைத் தீர்த்தற்கு. காமநோய்க்கு மருந்து - காமநோயைத் தீர்த்தற்கு உரிய மருந்து. நீழலும் மருந்தும் நின்தோளே.

(பி - ம்.) 1. பொழில்கள்.

284. கனவில் நின்னைக்கண்டு பின் விழித்துக் காணாமல் அழுதாளென்பது கருத்து. (பி - ம்.) 2. கலனும்.

285. நகை - ஒளி. ஆரம் - முத்து. வெண்ணீறு - சாம்பல். விளர்ப்பானது - வெளுத்தது. கலுழ்ந்ததுபோல் - கலங்கி ஒழுகியதுபோல். புகைபடின் கண்ணில் நீர் உண்டாகும்.

(பி - ம்.) 3. வெளுப்பானது. 4. புகையா லடர்ந்ததுபோல், புகையா லடைந்ததுபோல்.

286. விம்பா தரத்தி யிடத்தார் கமலை விமலர்வெற்பில்
செம்பானல் வண்டுறை தண்டுறை வாவுன்றன் சிந்தையுள்ளே
எம்பாவை சேர்தற் கடங்காளென் றெண்ணி யிரங்கிமதன்
அம்பா மரங்களி னுற்சிறி தாக வராவினனே. (உஉ.)

---

## கஎ. ஒருவழித் தணத்தல்

### தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

287. காரள வும்பொழி லாகாய கங்கை கடந்துவெய்யோன்
தேரள வுங்கிள ராரூர்த் தியாகர் சிலம்பிலெங்கள்
ஊரள வுஞ்சிறு காலையிற் போய்ப்பக லூங்கிருந்து
வாரள வுந்தனத் தாய்வரு வேனந்தி மாலையிலே. (க)

### பாங்கி தலைவனைச் செலவு விலக்கல்

288. நடத்தேர் படைத்தவ ராரூரர் காவிரி நாட்டிலராப்
படத்தே யிருக்கும் படிபுரப் பீர்நும் பதிக்குச்செல்லும்

---

286. விம்ப அதரத்தி - கொவ்வைக்கனிபோன்ற உதட்டையுடைய உமாதேவியார். சிந்தையின் வடிவம் அணுவானமையின் அதனுள்ளே அடங்காளென்றாள். அரங்கள் - அராவுதற்குரிய கருவிகள். தலைவியை அராவினன்; மெலிந்தாளென்றபடி.

(பி - ம்.) 4. அரங்களினுன் மெலிதாக.

287. தலைவன் கூற்று.

பொழில் : எழுவாய். ஊங்கு - அவ்விடத்தே.

(பி - ம்.) 1. கங்கை கடக்கவெய்யோன், கங்கையைக்காண. 3. பகலூடிருந்து.

288. பாங்கி கூற்று.

நடத்து ஏர் - நடனத்தின் அழகை. அரா - பாம்பு; ஆதிசேஷன். படி - பூமியை. செல்லும் : முன்னிலைப் பன்மை ஏவல். விடத்தேர் - ஒரு முள் மரம்; "தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய" (தண்டி. 75, மேற்.) படர்ந்த - பரவிய. கடம் - காடு. இடத்தோள் துடித்தல் ஆடவர்களுக்குத் தீய நிமித்தம். உமக்கு இடத்தோள் துடிப்பின் யாங்கள் இறந்துவிட்டோமென்பதை நீர் அறிந்து கொள்ளும்.

(பி - ம்.) 2. படிபுரப் பீரும் பதிக்குச்செல. 3. தடத்தே.

விடத்தேர் படர்ந்த கடத்தே கடிதினின் மேவுமும
திடத்தோ டுடித்த விடத்தே மறந்திடு மெங்களையே. (உ)

தலைவன் நீங்கல் வேண்டல்

289. பூகம் புனைவய லாரூர்த் தியாகர் பொதியவெற்பில்
மாகந் தருமுகி லேர்குழ லாயுன் மடந்தையுடன்
ஏகந் தருநெஞ்சு மென்னு வியுமிங் கிருக்கையினால்
ஆகந் தனிச்செல்லு மோசெல்ல வேண்டிற் றரைக்கணமே. (ங)

தலைவனைப் பாங்கி விடுத்தல்

290. சேவேறு மத்தர் கமலா லயத்தர் சிலம்பின்மதன்
ஏவே யிறுதி தருகின்ற கால னிரங்குகுயில்
நாவே வடவைக் கொழுந்திவ ளாகமு நல்லனிச்சப்
பூவே யிதுசெய னீர்பதிக் கேகும் புரவலனே. (ச)

தலைவிக்கு அவன் சேலவுணர்த்தல்

291. ஏனாதி நாதரும் பூசலை யாரு மியற்பகையும்
ஆனாய ருந்தொழு மாரூர்த் தியாக ரணிவரைமேல்
தேனார் தொடையவர் தம்மூர் புகுந்து திரும்புதற்குப்
போனா ரிதனைப் பிரிவென்றெண் ணாதுகொள் பூங்கொடியே. (ரு)

தலைவி நெஞ்சோடு புலத்தல்

292. எனக்குந் துணையன்றி நங்கேள் வரைத்துணை யென்றிருந்த
உனக்குங் கரந்து பிரிந்தன ரேயுமை யாளுமஞ்சச்

---

289. **தலைவன் கூற்று.**

பூகம் - பாக்கு மரம். மாகம் - ஆகாயம். ஏகந்தரும் - ஒன்றுபட்டிருக்கின்ற. அரைக்கணம் செல்ல வேண்டிற்று ; கணம் - க்ஷணம்.

290-91. **பாங்கி கூற்று.**

290. சே - இடபம். மதன் பாணமே காலன், குயில் நாவே வடவைக் கொழுந்து, இவள் ஆகம் அனிச்சப்பூ. இது செயல் - இவளுடைய நிலைமை இங்ஙனமுள்ளது. உமது பிரிவை இவளாற்றாளென்றபடி.

291. ஏனாதிநாதர் முதலிய நால்வரும் நாயன்மார்கள்.

292-5. **தலைவி கூற்று.**

292. துணையன்றி - துணையாயிருத்தலையன்றி. உமை......வென்ற: "பருவெண் கோட்டுப் பைங்கண் மதவேழத்தி, னுருவங் காட்டி நின்றானுமையஞ்சவே" (தே.) (பி - ம்.) 2. பிரிந்தனரோவுமை.

சினக்குங் கரிவென்ற வாரூர்த் தியாகர் செழுஞ்சிலம்பில்
நினைக்கும் பொழுதினி யார்துணை யாகுவர் நெஞ்சகமே. (கூ)

காமமிக்க கழிபடர் கிளவி

293. அப்புறத் துள்ள கடலாறு மென்விழி யாறுமடுத்
துப்புறைக் குங்கட லாகச்செய் வேனுமை யாள்புளகச்
செப்புறைக் கும்புய வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
துப்புறைக் குங்கட லேயன்பர் தேர்வழி தூர்த்திடினே. (எ)

அளியோடு புலம்பல்

294. பொன்னேமி யான்றொழு மாரூர்த் தியாகர் பொருப்பளிகாள்
என்னே தலைவ ரவளென்செய் தாளெனின் யாங்கள்வரும்
அந்நேர மட்டு முயிரோ டிருந்தன ளந்திபட்ட
பின்னேது பட்டன ளோதெரி யாதென்று பேசுகவே. (அ)

குருகோடு புலம்பல்

295. வெம்புளி னக்குன் றின் மீதே யிருந்திள மீனருந்திக்
கம்பு ளினத்துடன் சேர்குரு கேயரி கண்டிரங்கச்
சிம்பு ளுருக்கொண்ட வாரூர்த் தியாகர் சிலம்பின்மதன்
அம்பு ளிருக்குமென் கண்ணீர் துடைக்க வருகிருமே. (கூ)

---

293. அப்புறத்துள்ள கடலாறும் - உப்புக் கடலல்லாதனவாகிய ஆறு கடல்களும். விழியாறு - கண்ணீர் ஆறு. கண்ணீர் உப்புச் சுவையுடைய தாதலால் அதுபாய ஏனை ஆறுகடல்களும் உப்பாகுமென்றாள். புளகச் செப்பு: நகில். துப்பு - பவழம். தூர்த்திடின் - தூர்த்துவிட்டால். தூர்த் திடிற் செய்வேன் என்க.

294. நேமியான் - திருமால். அந்திபட்ட பின் - அந்திக்காலம் உண் டாகிய பின். அளிகாள், பேசுக.

295. புளினக்குன்றின்மீது - மணற்குவியலாகிய மலையின்மேலே. கம் புள் - சம்பங்கோழி. குருகே - நாரையே. அரி - திருமாலாகிய சிங்கம். சிம்புள் - சரபம். மதனம்பு: இங்கே கருங்குவளை; என்றது கண்களை. கண்ணீரென்றது நீரென்னும் துணையாய் நின்றது. குருகே, அருகிரும்.

(பி - ம்.) 1. புளினத்திடர் மீதே யிருந்துசின் மீனருந்து.

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்

296. தந்தா சலவுரி யாரூர்த் தியாகர் சயிலமின்னே
மந்தா நிலமன்ப ரூர்வழி யாய்வந்து வாவிபுக்குச்
செந்தா மரைமண மெல்லாந் திளைத்திளஞ் செண்பகப்பூ
நந்தா வனத்தி லிருந்துநம் மூர்க்கு நடக்கின்றதே. (கo)

பாங்கி தலைவிக்குத் தலைவன் வந்தமை உணர்த்தல்

297. பங்கம் பிகைக்கரு ளாரூர்த் தியாகர் பனிவரைவாய்த்
துங்கம் பெருகுநங் கேள்வர்வந் தாருன் றுடியிடைபோல்
அங்கங் கிளைத்திடு மங்கங் கிளைத்திடுன் னங்கையில்வீழ்
சங்கங் களைவிரற் காழிக ளாகத் தரித்தருளே. (கக)

பாங்கி வந்தோன்தன்னொடு நொந்து வினாதல்

298. பொன்போ லவிழ்கொன்றை யாரூர்த் தியாகர் பொதியவெற்பா
வன்போ டுயிர்கொண் டிருந்திரு போதும் வருந்தவெங்கள்
மின்போ லுண் டோகண்ட தத்துயர் பார்க்க விழிபடைத்தார்
என்போ லுண் டோமொழி யுன்போ லுண் டோவன் பிலாதவரே.

---

296-9. **பாங்கி கூற்று.**

296. தந்தாசலம் - யானையினது. மந்தாநிலம் - தென்றற்காற்று; எழுவாய். நந்தாவனம் நந்தவனம் (வேங்கைக். 176.) மந்தாநிலம் அன்பர் ஊர்வழி வந்து புக்குத் திளைத்து இருந்து நம்மூருக்கு நடக்கின்றது; ஆதலால், என் கவலுகின்றாயென்றபடி. தலைவனது ஊரிலிருந்து வந்த தென்றலாதலின் நீ அது மெய்யுறலால் இன்புற்று ஆற்றியிருப்பாயாக வென்றாள்.

297. அம்பிகைக்குப் பங்கு அருள்; இடைபோல் அங்கு அங்கு இளைத்திடும் அங்கம் கிளைத்திடு - இடையைப்போல அங்கங்கே இளைத்திருக்கும் பல உறுப்புக்களும் பூரிப்பாயாக; கிளைத்தல் - பூரித்தல். இளைத்த கைகளிலுள்ள வளையல்களை மோதிரமாக விரலில் தரிப்பாய். தலைவன் பிரிவால் கைகள் இளைத்தன. அவன் வரவால் கைகள் பருக்கும்; விரல்களும் பருக்கும்; பழையவளைகள் மோதிர அளவே யமையும். சங்கங்கள் - வளையல்கள். ஆழிகள் - மோதிரங்கள்.

(பி - ம்.) 3. இளைத்திடு மங்கையில்.

298. வன்போடு - வன்மையோடு. மின் - தலைவி. அது கண்டு - அதைக் கண்டு. ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளன.

(பி - ம்.) 1. மென்போ தவிழ்கொன்றை யாரூரர் வீதி விடங்கர் வெற்பா. 2. உறைந்திரு போதும் 3. மின்போல வில்லை யதுபார்த்திருக்க. 4. என்போல வில்லை யுனைப்போல வில்லை யினியவரே.

299. மண்படைத் தோன்றுமு மாரூர்த் தியாகர் வரையின்மன்னு
விண்படைத் தோங்கும் விரகா னலத்தின் வெதும்பவொரு
பெண்படைத் தேனந்தப் பெண்ணோவு பார்த்திடர் பெற்றிருக்கக்
கண்படைத் தேனிது முன்னு ளெனக்கயன் கற்பித்ததே. (கங)

தலைவன் பாங்கியோடு நொந்து வினுதல்

300. மாமால் படைத்த வெனேப்பல காலெய்து வாய்மடிந்த
காமா யுதம்படி னுேவுள தோகுயிற் காகளங்கள்
தேமா வனம்புகு மாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
சோமா னலத்தி லெனேப்போ லுருகிய தூநகைக்கே. (கச)

பாங்கி ஆற்றுவித்திருந்த அருமை தலைமகற்குக் கூறல்

301. விழிகாட்டு நெற்றிய ராரூரர் வீதி விடங்கர்வெற்பா
பழிகாட்டு மென்றிவ ளைப்புரந் தேனின் பதிக்குச்செல்லும்
வழிகாட் டியுஞ்சுற்றும் வாரியைக் காட்டியும் வாரிசுற்றும்
கழிகாட் டியுங்கழி சுற்றிய கானலைக் காட்டியுமே. (கரு)

---

## கஅ. வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவு

என் பொருட்பிரிவுரை ஏந்திழைக் கேன்றல்

302. சங்கஞ் சுமக்குஞ்செய் யாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
வங்கஞ் சுமக்குங் கடற்றிரு வேயுங்கண் மாதினிடைச்

---

299. விரகானலம் - பிரிவுத் துன்பமாகிய தீ. பெண்நோவு - பெண்ணினது துன்பத்தை.

300. **தலைவன் கூற்று.**

குயிற்காகளங்கள் - குயிலாகிய சின்னங்கள்; காகளம் - ஊது கருவிகளுள் ஒன்று. சோமானலமென்றது நிலவினை; சோமன் - சந்திரன். தூநகைக்கு நோவுளதோ? என்மீது பட்டு வாய்மடிந்தமையால் காமாயுதத்தால் தலைவிக்கு நோவுண்டாகாதென்றான். தலைவிமேல் அம்பு படுமுன்னம் தன்மேலே அது பட்டு வருத்தியதை இதனால் உணர்த்தினான்.

301. **பாங்கி கூற்று.**

பழி - பெண்பழியை. வாரி - கடல். காட்டியும் இவளைப் புரந்தேனென்க.

302. **தலைவன் கூற்று.**

சிங்கஞ் சுமக்குந் தனம்பெற வேண்டிச் சிறுவிழிமா
தங்கஞ் சுமக்குந் தனங்கொண்டு மீள்குவன் சாற்றுகவே. (௧)

நின் பொருட்பிரிவுரை நீயவட்கென்றல்

303. செய்யுங் கனகச் சுருளோலை யின்மதன் சீரெழுதி
மையந் திருத்து மதர்விழி யாளுக்கு வாரிமதம்
பெய்யுங் களிற்றுரி யாரூர்த் தியாகர் பிறங்கன்மன்னா
பொய்யும் பொருந்த வுரைத்தகல் வாய்நின் பொருளினுக்கே.(௨)

304. தெண்ணீர் பிறையணி யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
எண்ணீர் புறப்பட வெண்ணுமுன் னேயெங்க ளேந்திழைக்குக்
கண்ணீர் புறப்படுங் கைவளை போய்விடுங் காமனெய்த
புண்ணீர் புறப்படு முள்ளிலு மாவி புறப்படுமே. (௩)

பிரிவுடன் படுத்தல்

305. மின்னாவி யொன்றையு நீபுரந் தாலது மெய்யகலா
தென்னா வியையும் புரப்பது காண்டம்மை யேத்துந்தொண்டர்
தன்னாவி போலுந்தென் னாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
மன்னாவி சேர்குழ லாய்பிரிந் தேகி வருகுவனே. (௪)

---

செய் - வயல். இடையாகிய சிங்கம்; சிங்கத்தினிடை மகளிரிடைக்கு உவமை கூறப்படும். மாதங்கம் - யானை.

303-4. **பாங்கி கூற்று.**

303. பனையோலையாற் செய்யப்படுதலின் மகளிர் காதணி ஓலையென்று வழங்கப்படும். ஓலைக்கேற்ப எழுத்தும் மையும் கூறப்பட்டன. எழுதுவது கண் பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லென்பது ஒரு பழமொழி. மதர்விழியாளுக்கு உரைத்துப் பொருளினுக்கு அகல்வாயென்க.

304. நீரையும் பிறையையும். எண்ணீர்; நீர்: முன்னிலைப்பன்மைப் பெயர்.

(பி - ம்.) 3. கைவளை சோர்ந்திடும்.

305. **தலைவன் கூற்று.**

மின் ஆவி - தலைவியின் உயிர். தொண்டர் தன்னாவி: பன்மை ஒருமை மயக்கம். நாவி சேர் - கஸ்தூரி சேர்ந்த.

(பி - ம்.) 2. புரந்தது காண்.

### சேலவு அழுங்குவித்தல்

306. கருந்தா மரைமல ரொப்பா மிடற்றர் கமலைவெற்பில்
பொருந்தார் திறையிடும் பொன்றேடச் செல்லும் புரவலரே
பெருந்தாரை வேல்விழி மாதுக்கு நீர்சென்ற பின்னுமுயிர்
இருந்தா லமையும் வருந்தாம லாற்றுவ தென்கடனே. (ரு)

### நீடேனென்று அவன் நீங்கல்

307. வளவன் புவிக்கணி யாரூர்த் தியாகர் மணிவரைமேல்
தளவுந் தரளமும் போனகை யாயொரு சந்திரனிற்
பிளவுஞ் சிலையுந் தொழுநுத லாட்கென் பிரிவுணர்த்தும்
அளவுந் தரிக்கினன் றோவவள் பாற்சென் றறிவிப்பதே. (சு)

### பாங்கி விடுத்தல்

308. காலையில் வாருஞ்சென் றுற்பகல் வாரும்பல் காதமுண்டேல்
மாலையில் வாரு நெடுந்தூர மாயின் வரந்தரலே
வேலைய தாந்திரு வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
ஆலைவில் வேளனை யீர்தனித் தாலிர வாற்றரிதே. (எ)

---

306. **பாங்கி கூற்று.**

பொருந்தார் - பகைவர். தாரை - நீட்சி; கூர்மையுமாம். அமையும்-நீர் செல்லுவது பொருந்தும்.

(பி - ம்.) 4. ஆற்றுத லென்கடனே.

307. **தலைவன் கூற்று.**

வளவன்புவிக்கு - சோழநாட்டிற்கு. நுதலாட்கு - தலைவிக்கு. தரிக்கின் அன்றோ - நான் சென்ற இடத்தே தாமதித்தாலல்லவோ.

(பி - ம்.) 2. தளவுந் தரளமு மாநகையாய்.

308-9. **பாங்கி கூற்று.**

308. வாரும்: முன்னிலைப்பன்மை. பகல் - உச்சிப்பொழுது. நெடுந்தூரமாயின் மாலையில் வாரும். வேலை - தொழில். ஆலை வில் - கரும்பாகிய வில்லையுடைய. ஆற்றரிது - தலைவி பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதல் அரிதாகும். எங்ஙனமேனும் இரவுக்குமுன் வரவேண்டு மென்பது கருத்து.

(பி - ம்.) 1. இன்றேற்பகல், அன்றேற்பகல். 4. தனித்தாற் பிரிவாற்றரிதே.

ஓடரிக்கண்ணிக்கு அவன் செலவுணர்த்தல்

309. வெஞ்சரம் போலும் விழியாய் திருவெனு மென்கிளிக்குப்
பஞ்சர மாந்திரு வாரூர்த் தியாகர் பணிவரைமேல்
குஞ்சர மீதின் முலைவிலைக் காம்பொருள் கொண்டுவர
மஞ்சரி சேர்கோதை யார்கடந் தாரின்று வன்சுரமே. (அ)

பூங்குழை இரங்கல்

310. சூலெழு மேக மிடற்றூர் தியாகர் சுடர்க்கிரிமேல்
மாலெழு மேயுட் புகையெழு மேதங்கம் வந்துவந்து
மேலெழு மேகண் புனலெழு மேயிம் மெலிவுகண்டால்
காலெழு மேதெய்வ மேபொரு டேடவுங் கற்றவர்க்கே. (கூ)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்

311. நரையுந் தியவிடை யாரூரர் காவிரி நாட்டளிகள்
இரையுஞ் சுரிகுழ லேந்திழை யாயிர வும்பகலும்
கரையும் படிநினைக் தோமொரு காலுங் கரைதலின்றி
வரையும் படிநினைக் தோபிரிந் தாருன்னை மன்னவரே. (க0)

தலைவி கொடுஞ்சொற் சொல்லல்

312. போதாய முல்லையு மாம்பலு நீலமும் பூத்தகஞ்சம்
வாதா யனந்தரு மாரூர்த் தியாகர் மணிவரைமேல்

---

309. திருவெனும் மென்கிளிக்கு - திருமகளுக்கு. பஞ்சரம் - கூடு. மஞ்சரி - பூங்கொத்து.

310. **தலைவி கூற்று.**

சூல் - கருப்பம். மால் - மயக்கம். உள் புகையெழும். தங்கம் - பசலை நிறம். இம்மெலிவுகண்டால் கற்றவர்க்குக் காலெழுமோ.

(பி - ம்.) 4. தேடவுங் காதலர்க்கே.

311. **பாங்கி கூற்று.**

நரை உந்திய - வெண்ணிறம் பொருந்திய. இரையும் - முழங்கும். 'தலைவர் பிரிந்தது, உன்னை வருத்துவதற்கா அல்லது மணஞ்செய்து கொள்வதற்கா என்பதை நீ அறிந்துகொள்' என்றாள் தோழி.

312. **தலைவன் கூற்று.**

போது - பேரரும்பு. முல்லை பல்லிற்கும், ஆம்பல் வாய்க்கும், நீலம் கண்ணிற்கும், இவைகள் பூத்த கஞ்சம் முகத்திற்கும் உவமைகள். கஞ்சம் - தாமரை மலரை. கஞ்சமென்றது மாளிகையிலிருந்து சாளரத்தின்

ஆதார மாமன்பர் சென்றிடுங் கானத் தருமைகண்டும்
பேதாய் தெளிவுரைத் தாயுனக் கேதகும் பெண்மதியே. (கக)

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்

313. தாளம் புதைத்த தனத்தாய் பிணைகள் சவரர்விட்ட
நீளம்பு தைத்துப் பதைக்கின்ற போது நிறைவிலண்ட
கோளம் புதைத்தவ ராரூர்த் தியாகர் குளிர்சிலம்பர்
வேளம்பு தைக்கு முனையது போலென்று மீள்குவரே. (கஉ)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்

314. எரிதோன் றியதெனத் தோன்றியுந் தோன்றின வீர்ந்துளியாற்
கரிதோன் றியதென வண்டதிற் றோன்றின காலமெண்ணார்
கிரிதோன் றியவில்லி யாரூர்த் தியாகர் கிரியினின்மஞ்
சரிதோன் றியகுழ லாய்பொரு டேடத் தணந்தவரே. (கங)

இகுளை வம்பென்றல்

315. சேற்று ளிறைவய லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
காற்று லசையுஞ் சுடரனை யாய்மழைக் காலமன்றே

---

வழியே வீதியைப் பார்க்கும் மகளிர் முகத்தை. வாதாயனம் - சாளரம்; காற்றிற்கு வழியாகவுள்ளதென்பது அவயவப் பொருள்; "வாதா யனந் திறந்து வைப்பையே" என்றார் தேய்வீகவுலாவுடையாரும்.

**313. பாங்கி கூற்று.**

தாளம் புதைத்த - தாளத்தை ஒத்த. பிணைகள் - மான்கள். சவரர் - வேடர். நீள் அம்பு தைத்தலால், பிணைகள் பதைக்கின்றபோது. நிறைவில் - தம்முடைய வியாபகத்தால். உன்னை வேள் அம்பு தைக்கும். பதைக்கின்றபோது அதைக்கண்டு இதுபோல் உன்னை வேளின் அம்பு தைக்குமென்று தலைவர் எண்ணி மீள்குவர்.

**314. தலைவி கூற்று.**

எரி - நெருப்பு. தோன்றி - செங்காந்தள். ஈர்ந்துளியால் தோன்றியுந் தோன்றின. கரி தோன்றியதென - அந் நெருப்பின்மேல் கரி தோன்றிற்போல அதில் வண்டு தோன்றின. கிரி - இங்கே மேருமலை. மஞ்சரி - பூங்கொத்து. பொருள் தேடத் தணந்தவர் காலமெண்ணார்.

**315. பாங்கி கூற்று.**

சுடர் - தீபத்தை. இடைக்குத் தோற்றது மின்னல். நுதலுக்குத் தோற்றது இந்திரவில். குழலுக்குத் தோற்றது கரியமேகம். தோற்றார்

ஆற்றா விடைக்கு நுதலுக்கு வார்குழற் கன்றுமின்றும்
தோற்றார்க டோற்றினர் காண்டனித் தாளென்று தூற்றுதற்கே.

## இறைமகள் மறுத்தல்

316. கேயூர மென்பணி யாரூர்த் தியாகர் கிரியிற்பச்சை
மாயூரஞ் சூழுமிக் காலத்தி லேமுல்லை வாணரெல்லாம்
வேயூது வாரல்ல ரோதுளைக் காச்சுட்டு வெந்தபழந்
தீயூது கின்றன ரோதனித் தாருயிர் தீவதற்கே. (கரு)

## வன்புறை

317. போரிலங் கும்விடை யாரூர்த் தியாகர் பொருப்பிலிந்தக்
காரிலங் குந்திசை யெல்லாம் பரந்து கலந்தனவால்
வாரிலங் குங்கொங்கை மங்கைநல் லாய்தனி வைத்தகன்றார்
ஊரிலும் பெய்யுமன் றோநமைப் போலுள் ளுருகுதற்கே. (கசு)

---

கள் - தோல்வியடைந்தவர்கள், தோன்றுதவர்கள். தூற்றுதற்கு - துளியைத் தூற்றுதற்கு, பலரறியச் சொல்லுதற்கு; இவ்விரண்டும் சிலேடைகள். தம்முடைய பகைவர் துணையின்றி மெலிந்தவிடத்து, முன்பு அவர்களுக்குத் தோற்றவர்கள் அவர்கள் முன்னே தோன்றித் தாம் களிப்பதோடு பிறருக்கும் அவர்கள் மெலிவைப் புலப்படுத்துவது இயல்பு.

இந்த மேகம் காலத்தில் பெய்யவந்ததன்று; உன் மெலிவைக்கண்டு பலரறியச் செய்தற்கு வந்ததென்பது கருத்து. இக்கருத்து 327-ஆம் செய்யுளிலும் அமைந்துள்ளது. இக்கவி, "ஓடாநின்ற களிமயிலே" (கம்ப. பம்பைப். 27) என்னும் அருமைச் செய்யுளின் கருத்தை ஒருவாறு தழுவி வந்துள்ளது.

(பி - ம்.) 2. அசையுமக் கோடனையாய், காலமல்ல. 4. தரித்தாளென்று.

316. தலைவி கூற்று.

கேயூரம் - தோள்வளை. என்பு அணி. மாயூரம் - மயில். முல்லை வாணர் - இடையர்கள். வேய் - வேய்ங்குழலை. துளைக்கா - துளைசெய்வதற்காக. பழந்தீ - பழைய தீயை. குழலொலி தீயைப்போல் வருத்துவதைக் குறிப்பித்தாள்.

(பி - ம்.) 3. யூதுவரல்லவோ. சுட்டவெய்ய. 4. தீர்வதற்கே.

317. பாங்கி கூற்று.

கார்: எழுவாய். உருகுதற்குப் பெய்யுமன்றோ?

### வன்புறை எதிரழிந் திரங்கல்

318. வெய்தான நஞ்சுண்ட வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
நொய்தான சிற்றிடை யீர்பிரி யேனென்று நூறுதரம்
பொய்தா னுரைத்தவ ரூரிற்பெய் யாது புயன்மழையைப்
பெய்தாலன் றோபிரிந் தார்க்குள தாகும் பெருந்துயரே. (௧௭)

### பாங்கி தேற்றல்

319. கான்முந்து கொன்றையர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
தேன்முந் தியதன்ன செஞ்சொன்மின் னேயன்பர் தேருடனே
வான்முந்து வேனென் றுரைத்தேகும் போதரை மாத்திரைக்குத்
தான்முந்தி வந்தது காணவர் தேருந் தலைப்படுமே. (௧௮)

### தலைமகள் மறுத்தல்

320. பூகாமி யன்றிச் சலகாமி யன்று புரவியது
பாகாளுந் தேரன்றி நாவாயு மன்றவன் பாகனல்லால்
மீகாம னன்றுதென் னாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
றோகாய்நங் கேள்வர் வருவதெவ் வாறிச் சொரிபுனற்கே. (௧௯)

---

318. **தலைவி கூற்று.**

வெய்து - வெம்மையையுடையது; சிற்றிடையீரென்றது பாங்கியையும் உளப்படுத்திக் கூறியது. புயல் மழையைப் பெய்யாது; புயல் - மேகம். நூறுதரம் பொய் சொன்ன தலைவர் ஊரில் மழை பெய்யாதாதலால் அவர் மழைக் காலமென்பதை யறியாரென்றாள்.

(பி - ம்.) 3. பொய்யாது புயல்.

319. **பாங்கி கூற்று.**

கான் - மணம். வான் - மேகம். ஏகும்போது - வரும் காலத்தில். வான் முந்தி வந்ததென இயையும். (பி - ம்.) 4. வந்தது கார்.

320. **தலைவி கூற்று.**

பூகாமி - பூமியிற் செல்வது. சலகாமி - நீரிற் செல்வது. புரவி - குதிரை. பாகு - பாகன். மீகாமன் அன்று - மாலுமியல்லன். சொரி புனற்குக் கேள்வர் தேர் வருவது எவ்வாறு? வெள்ளத்தால் வரத் தாழ்க்குமென்றபடி.

அவர் தூதாகி வந்தடைந்தது இப்போழுதேனத் துணைவி சாற்றல்

321. சேமேல் வருந்திரு வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
கோமே தகமணிக் கொங்கைநல் லாய்நின் கொழுநரிங்கு
மாமேகந் தூது விடுத்தார்மற் றாரை வரவிடுவார்
தாமே வருவர்கண் டாய்மறை யாவையுஞ் சாற்றுதற்கே. (உo)

அவன் அவட் புலம்பல்

322. கூட லிழைத்த விழியே வழியிற் குதித்தபுனல்
ஓட நகத்தி லுதிரமுஞ் சோர வொருவர்செம்பொன்
மாட முகப்பிலென் றேர்வழி பார்த்து மயங்குவரே
காடக முற்ற மறையார் தியாகர் கமலையிலே. (உக)

323. ஆலம் புனைகண்ட ராரூர்த் தியாக ரணிவரைமேல்
காலங் கருதி யிருக்குமென் பேதைக்குக் காமனெய்யும்
நாலம்பு மஞ்சம்பு மாறம்பு மேலிடு நாளில்விழி
மேலம்பு மேலிடு மேழம்பு ராசிக்கும் வெள்ளமென்றே. (உஉ)

---

321. பாங்கி கூற்று.

சே - இடபம். கோமேதகமணி - நவமணியில் ஒன்று. கொழுநர் - கணவர்; எழுவாய். மேகத்தை. ஆரை - யாரை. மறை - இரகசியம்.

(பி - ம்.) 3. மாமேகந் தூதுவிட் டாரினி யாரை.

322-7. தலைவன் கூற்று.

322. கூடல் - கூடற்சுழி; ஒருவகை நிமித்தம்; மணலிற் சுழியைச் சுழிக்கையில் அது முதலும் கடையும் கூடுமாயின் பிரிந்த தலைவர் வருவரென்றும், கூடாதாயின் வாராரென்றும் மகளிர் கொள்வர். (**சீராமலைக் கோவை, 290.**) உதிரம் - இரத்தம். ஒருவரென்றது தலைவியை. காடகம்: யஜுர்வேதத்தில் மூன்று பிரிவையுடைய ஒருபகுதி.

(பி - ம்.) 3. மலங்குவரே.

323. காலம் - கார்காலத்தை. நாலம்பும் - நீலமலரொழிந்த நான்கு அம்புகளையும். மஞ்சு அம்பும் - மேகத்தின் நீரும். ஆறு அம்பும் - ஆற்றின் நீரும். விழிமேல் அம்பு - கண்ணீர். ஏழ் அம்புராசிக்கும் - ஏழு கடலைக் காட்டிலும். வெள்ளமென்று சொல்லும்படியென ஒரு சொல் வருவிக்க.

இக்கவியில் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்னும் எண்கள் அணிபெற நிற்றல் காண்க. (பி - ம்.) 2. பேதையைக்.

## தலைவன் பாகனோடு சொல்லல்

324. பொழியுங் கருணைய ராரூர்க்கு நாம்பிந்திப் போயினொரு
பழியுஞ் சுமந்திடு மேவல வாவழி பார்த்துமங்கை
விழியுஞ் சிவந்திடு மேபல கால்வந்து மீண்டமுன்றில்
வழியுங் குழிந்திடு மேபொய்க்கு மேசொன்ன வாய்மையுமே.

## மேகந்தன்னோடு சொல்லல்

325. போர்காணுஞ் சூலத்த ராரூர்க்குச் செல்லும் புயலினங்காள்
நீர்காணும் போதுண்மை சொல்லுங்கண் டீர்விழி நீர்பொழிய
வார்காணுங் கொங்கை முகத்தே பசலை வழியவிந்தத்
தேர்காணு மட்டும் வெறுங்கூடு கொண்டு திரிபவர்க்கே. (உச)

326. கார்வந்த கண்டத்த ராரூர்க்குச் செல்லுங் கரும்புயல்காள்
நீர்வந் ததுகண் டெதிர்வரு வாளுக்கு நெஞ்சுருகி
ஆர்வந் தரும்படி வந்தது தேரென் றறையுமன்றித்
தேர்வந்த தென்னு மளவும் பொறுமௌன் றிருந்திழையே. (உரு)

327. அளியார் கடுக்கைய ராரூர்த் தியாக ரணிவரைமேல்
எளியா ளெனக்கொண்ட லேமங்கை பாற்செலி னேர்நுதலால்
வெளியா கியவிடை யாற்குழ லான்முனம் வென்றதுபோல்
துளியார் மழையையுங் கண்ணீரைக் காட்டித் தொலைத்திடுமே.

---

324. பழி - பெண்பழி. தேரை விரைவிற் செலுத்துக வென்றபடி.

(பி - ம்.) 3. ஆரூர்க்கு ஞம்பிந்திப் போகிலொரு. 3. விழியுங் குழிந் திடுமே, விழியுஞ் சுமந்திடுமே. 4. சொன்னமாற்றமுமே.

325. வெறுங்கூடு - உயிரில்லாத உடம்பை; "கோட்டெங்கு சூழ் கூடற் கோமானைக் கூடவென, வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறி யாள் - கூட்டேய், குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன் போல, வெறுங்கூடு காவல்கொண் டாள்" (முத். 81.) திரிபவர்க்கு நீர் உண்மை சொல்லும்.

326. கார்வந்த - மேகத்தை ஒத்த. வருவாளுக்கு - வரும் தலைவிக்கு. வந்தது தேரென்றது, "தீண்டு வந்து" (சீவக. 1509) என்பதையும் அதன் உரையையும் உட்கொண்டு கூறியது.

(பி - ம்.) 3. அறையும் வென்றித்.

327. 315-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க. கண்ணீரால் மழையையும் வெல்லுவளாதலின் முந்திச் செல்லற்கவென்றபடி.

### பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல்

328. உன்களங் கண்டு பயங்கொடி நீரி லொளிப்பதின்று
தன்களங் கற்றுன் னுடனுற வாகச் சயிலம்பெற்ற
மின்கலந் தார்திரு வாரூரர் வீதி விடங்கர்வெற்பர்
முன்கலந் தாலித் தவர்தேர் வரவை மொழிகின்றதே. (உஎ)

### தலைவி மகிழ்ச்சி

329. அடற்சங் கரர்திரு வாரூர்த் தியாக ரணிவரைமேல்
மடற்சங்க மார்செம் மலர்முகத் தாயன்பர் வையமுன்னே
கடற்சங்க மூதி வருகையி லுவிரு கைகழன்ற
சுடர்ச்சங்க நின்றன போயின வானந் துயர்ச்சங்கமே. (உஅ)

### வலம்புரி கிழத்தி வாழ்த்தல்

330. மஞ்சலம் பும்பொழி லாரூர்த் தியாகர் வளைகடல்வாய்
நஞ்சலம் புங்கண்டர் தேர்மீதில் வாழி நடுங்குமெனை
அஞ்சலஞ் சேலென் றவர்தேர் வரவை யறிவித்தெங்கள்
சஞ்சல மாற்றி விழிச்சல மாற்றுஞ் சலஞ்சலமே. (உகூ)

---

328. **பாங்கி கூற்று.**

களம் - கழுத்து. ஒளிப்பது - ஒளிப்பதாகிய சங்கம். களங்கு - களங்கம். உறவாக - உறவாகும்பொருட்டு. சயிலம்பெற்ற மின் - மலையரசன் பெற்ற உமாதேவியார். உன்னுடைய கழுத்தழகைக் கண்டு முன்பு நீரில் ஒளித்த சங்கம் இப்போது ஒலிப்பது, தலைவர் வரவைக்கூறி உன் உறவைப் பெறுவதற்கே.

(பி - ம்.) 2. தன்களங் கன்றி யுனக்குறவாக.

329-30. **தலைவி கூற்று.**

329. மடற்சங்கம் - இதழ்களின் கூட்டம். செம்மலர் - செந்தாமரை மலர்; "செம்மலர் நோன்றாள்" (**சிவஞானபோதம்**, 12.) வையம் - தேர். சுடர்ச்சங்கம் - ஒளியையுடைய வளையல்கள். துயர்ச்சங்கம் - துயரின் தொகுதி. இக்கவியில் சங்கமென்னும் சொல் பலமுறை வந்தது, சொற்பின் வருநிலையணி.

330. மஞ்சு அலம்பும் - மேகம் முழங்கும். தேர் - பூமி. நடுங்கும் - கார்காலத்தால் நடுங்குகின்ற. என்று அறிவித்து. எங்களென்றாள் தோழியையும் உளப்படுத்தி. சஞ்சலம் - மனத்துன்பம். விழிச்சலம் - கண்ணீரை. சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு. சலஞ்சலம் வாழியென இயைக்க.

தலைமகன் வந்துழிப் பாங்கி தம்மை நினைத்தமை வினுதல்

331. சூதழ கான முலைமேற் றரளஞ் சொரிவதென்ன
மாதழ வேசென்ற வன்கண்ண னேமுன் வடிந்தகம்பிக்
காதழ கானவ ராரூரிற் றேவர கண்டர்வெற்பில்
நீதழ லார்சுரத் தேமற வாம னினைந்தனையே. (௩௦)

நினைந்தமை செப்பல்

332. மழைகாட்டு மோதியை மாயூரங் காட்டும் வடிவைவிளங்
கழைகாட்டுந் தோளைக் கருங்குழ லாய்கழை யோடுகழை
இழைகாட்டி லாடிய வாரூர்த் தியாக ரிமயவெற்பில்
உழைகாட்டுங் கண்ணைமுன் னேபிரிந் தேகு முழைதொறுமே.

ஆற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறல்

333. தழற்காயும் வெண்ணில வாற்சுரு காய்மதன் சாயகத்தாற்
கழற்கா யுருவுகொண் டாடிய ராற்றினன் காமனங்கம்

---

331. **பாங்கி கூற்று.**

சூது - சூதாடு கருவியின். தரளம் - முத்து; கண்ணீர்த்துளிக்கு உவமை. வன்கண்ணனே - அஞ்சவேண்டியதற்கு அஞ்சாதவனே. நினைந்தனையே; ஏ, வினு.

(பி - ம்.) 1. சூதளவான. 2. பொன் வடிந்தகம்பிக்.

332. **தலைவன் கூற்று.**

காட்டும் : முற்று. தலைவியினது ஓதியின் தோற்றத்தை மழை காட்டும் ; ஓதி - கூந்தல். இங்ஙனமே பின்வருவனவற்றிற்கும் பொருள்கொள்க. வடிவை - சாயலை. கழை - மூங்கில். இழை காட்டில் - உரசும் மயானத்தில். உழை - மான். உழை தொறும் - இடங்கள் தோறும். இதனுல் தான் தலைவியை நினைந்திருந்தமையை வெளிப்படுத்தினன்.

(பி - ம்.) 4. கண்ணையு முன்பிரிந்.

333-4. **பாங்கி கூற்று.**

333. தழற்காயும்-நெருப்பைப்போல எறிக்கின்ற. சாயகத்தால் - எய்த அம்புகளின் நெருக்கத்தால். பாணங்களின் நெருக்கத்தால் தலைவியின் உடல் கழற்காய் போன்றது ; “ அப்பணைக் கிடந்தோன், கமழ்பூங் கழற்றீங் காய் போன் றனனே ” (**தகடூர்யாத்திரை.**) அங்கத்தை அழலாற் காயும் நெற்றியர். நிழற்காய் - தன்னிழலைக் கோபிக்கின்ற. நின் பெயரைச் சொல்லித் துயரை ஆற்றினன்.

(பி - ம்.) 1. மென்னிலவிற். 4. நின்புகழே.

அழற்காயு நெற்றிய ராரூர்த் தியாக ரணிவரைமேல்
நிழற்காய் களிற்றண்ண லேபல காற்சொல்லி நின்பெயரே. (௩௨)

---

## கக. வரைவு மலிவு

### காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல்

334. வெங்கட் செவியணி யாரூரர் வீதி விடங்கர்வெற்பர்
வங்கத் திரைக்கட றந்தமின் னேயுன் மணப்பொருட்டால்
அங்கைக் களிறு சுமக்கும்பொன் சேர வளித்தனர்காண்
கொங்கைக் களிறு சுமக்கும்பொன் னீயுங் கொடுத்தருளே. (க)

### காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்

335. அதிர்க்கு முரசமு மன்பர்கை மேல்விடு மம்புமென்கால்
மிதிக்குஞ் சிலையுங்கண் டின்புறு மேவிழி போற்கயல்கள்
குதிக்கும் வயற்றிரு வாரூர்த் தியாகர் குளிர்சிலம்பில்
எதிர்க்குங் கடவுள்வந் தாரென வேநம்மை யீன்றவளே. (௨)

### பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்கு உணர்த்தல்

336. கதிராழி வைத்தவர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
முதிரா மொழிநின் மணப்பொருட் டாவந்த முத்தும்பொன்னும்
எதிராக வேற்று மதமா வெருத்தத்தி லேற்றிமுர
சதிரா வலஞ்செய்து கொண்டார்நங் கானவ ரானவரே. (௩)

---

334. வெங்கட்செவி - வெவ்விய பாம்புகளை. உன் மணப்பொருட்டு யானை சுமக்கும் பொன்னை அளித்தார். கொங்கை: சுமக்கும் பொன் : பசலை.

335. **தலைவி கூற்று.**

அன்பருடைய கையின்மேல் விடும் தாரை நீர். கால்மிதிக்கும் சிலையும் - கால்மிதிக்கும் அம்மியும்; அம்மி மிதித்தலென்று இது கூறப்படும். இன்புறும் - இன்புறுவாள். ஈன்றவள் இன்புறும். அம்பு, சிலையென்பவை வேறு பொருள் பயத்தல் காண்க. (பி - ம்) 4. கடவுள் வரந்தரவே.

336-7. **பாங்கி கூற்று.**

336. கதிர் ஆழி வைத்தவர் - சந்திர சூரியரைத் தேருருளையாக வைத்தவர். யானையின்மேல் ஏற்றி. முரசை அதிர்ப்பித்து. ஊரை வலஞ் செய்து. பரிசப்பொருளை யானையின்மேலேற்றி முரசதிர ஊர்வலஞ்செய்து வீட்டிற்குக் கொண்டுவருதல் மரபு.

337. உடன்மீ துலாவு முயிரனை யாயன் றனைவரைந்து
மடன்மாவி லேறி வரையவந் தாரின்று வானவர்க்காக்
கடன்மா விடமுண்ட வன்மீக நாதர் கமலைவெற்பில்
அடன்மாவி லேறி வரையவந் தாரெம ராலிக்கவே. (ச)

தலைமகள் உவகையாற்றுது உளத்தோடு கிளத்தல்

338. பாளை திறக்கப் பசும்பூக நெற்றியிற் பாய்ந்துநெடு
வாளை குதிக்குஞ்செய் யாரூர்த் தியாகர் வரையினெஞ்சே
தோளை யடுத்த பசலையும் பார்வையிற் றாவுமுத்தும்
நாளை யகற்றுக வென்றுர வாரிக்கு நன்முரசே. (ரு)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

339. நாட்டிய நாகஞ் சிலையா வளைத்தொரு நாகந்தன்னைப்
பூட்டிய செங்கைய ராரூர்த் தியாகர் பொருப்பிறைவா
தீட்டிய வேல்விழி மின்னுள் கழுத்திற் றிருப்புனைந்து
பூட்டிய மாலை மனத்துக்குண் மாலையும் போக்கியதே. (சு)

---

337. உனை வரைந்து - உன்னைப் படத்தில் எழுதி. மடல்மா - பனை மடலாலாகிய குதிரை. வரைய - கலியாணம் செய்துகொள்ள. அடல் மாவில் - வன்மையையுடைய குதிரையில். ஆலிக்க - களிப்பினுல் முழங்க. அன்று மடன்மாவில் ஏறிவந்தவர் இன்று அடன்மாவில் ஏறி வந்தார்.

(பி - ம்.) 1. யுன்றுணைவரன்று. 3. கமலைவெற்பர்.

338. **தலைவி கூற்று.**

திறக்க - உடைந்து விரியும்படி. நெற்றி - உச்சி. பார்வை - கண். முத்து : கண்ணீர். முரசு ஆரவாரிக்கும்.

(பி - ம்.) 4. நாளை யகற்றுவமென்.

339-40. **பாங்கி கூற்று.**

339. நாகம் - மேருமலையை. சிலையா - வில்லாக. நாகம் - பாமபு, நாணுக்ப் பூட்டிய. தீட்டிய - மை தீட்டிய ; வேலுக்கு அடையாக்குதலும் ஆம். திரு - மாங்கலிய நாணை. பூட்டிய மாலை - மணமாலை. மனத்துக்குள் மாலை - மனத்தில் இருந்த காம மயக்கத்தை.

(பி - ம்.) 3. கூர்விழி மின்னுர் கழுத்தில், மின்னுள் கமுகின் றிருக்கழுத்திற். 4. சூட்டிய மாலை தமியேன் மதிக்கின்பந் தோற்றியதே.

தலைமகள் மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை தலைவற்குப் பாங்கி காட்டல்

340. சேவுய ருங்கொடி யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மாவுதி ரஞ்சொரி வேலண்ண லேயுன் மணம்பொருட்டாற்
றாவு மரும்பலி நல்கிச்செவ் வேள்வலத் தோளிலொரு
பூவுதி ரும்படி நிற்பது பாரெங்கள் பூங்கொடியே. (எ)

பராநிலை கண்ட தலைமகன் மகிழ்தல்

341. சைவந் தழைத்திடு மாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
மைவந் தனைய மலர்க்குழ லாடன் மணம்பொருட்டாற்
கைவந்த போதும் பலிகளுந் தூவியெக் காலுமொரு
தெய்வந் தொழாமற் பணிகின்ற வாவிந்தத் தெய்வத்தையே. ()

---

## உ௦. அறத்தொடு நிற்றல்

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

342. பிள்ளைப் பிறையணி யாரூர்த் தியாகர் பிறங்கன்மின்னே
அள்ளற் கடற்றிரை வண்டலம் பாவை யழித்தனவோ
வெள்ளக் கடலைக் கடைபோக விட்ட வியப்பெனவுன்
வள்ளைக் குழைசெறி கண்ணீ ரருவி வழிகின்றதே. (க)

---

340. உதிரம் - இரத்தத்தை. வலத்தோளினின்றும். ஏனையோர்களிற் பெரும்பாலார் துர்க்கையைப் பரவினதாகக் கூறுவர்; இவர் முருகக் கடவுளைக் கூறினர்; துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் இவ்வண்ணமே கூறினர் (வெங்கைக். 289.) (பி - ம்.) 1. சேவம ருங்கொடி.

341. தலைவன் கூற்று.

குழலாள் : எழுவாய். தொழாமல் - இனித் தொழாதபடி; கற்புடைய மகளிர் கணவனையன்றி வேறு தெய்வத்தைத் தொழாரென்பது அறியற்பாலது. குழலாள் பணிகின்றது என்ன வியப்பைத் தருகின்றது?

(பி - ம்.) 1. சைவம் புரந்தரு ளாரூர்த். 2. குழலாணன்மணம்.

342. பாங்கி கூற்று.

வண்டலம்பாவை - விளையாட்டுப்பாவையை. கடைபோக - முடிவு போக. வியப்பென வழிகின்றது; இதற்குக் காரணம் யாது என்பது எச்சம். (பி - ம்.) 3. கடலுட் கடைபோக.

கலுழ்தற் காரணங் கூறல்

343. நாகம் புனைபவ ராரூரர் காவிரி நாட்டினிலென்
சோகங் களைய வினவுமின் னேயொரு சோலையிலென்
ஆகங் குழைய வணைந்தா ரொருவ ரவருடனே
போகுந் துயிலையென் கண்ணீர்க டேடிப் புறப்பட்டவே. (உ)

தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறல்

344. வினையில ரேத்திய வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
முனையிலை வேல ரெனைத்தேற் றியவன் றுமொய்குழலாய்
புனையிலை யோசொன்ன வாயிலை யோவது போகவிந்தப்
பனையிலை யோநடுச் சொல்வதன் றோவிப் பனையிலையே. (ங)

இரவின் நீட்டம்

345. பூகம் புனைவய லாரூர்த் தியாகர் பொருப்பினிலென்
ஆகந் தனக்குயி ராகுமின் னேயிரு ளாதவனார்
ஏகும் படியென் கொலோபச்சை மாவு மினியகழைப்
பாகும் பருகி யிரதமுஞ் சேரப் பருகியதே. (ச)

---

343-5. **தலைவி கூற்று.**

344. முனை - கூர்மையையுடைய. புனை - புன்னைமரம். இந்தப் பனை - இந்தப் பனைமீன்; "பனையன் றேளி" (அருணைக். 44); "பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்" (மதுரைக். 375.) இது, "பூவுண்டவிடையாளர்" (அருணைக். 91) என்னும் செய்யுளின் பொருளை ஒருவாறு ஒத்துள்ளது.

(பி - ம்.) 3. சொல்ல வாயிலையோ. 4. நசை சொல்வதன்றோ.

345. ஆகம் - உடம்பு. இருள்: எழுவாய். ஆதவனார் ஏகும்படி என் - சூரியன் வரும்விதம் யாது. பச்சை மா - சூரியன் தேரிற் கட்டிய பச்சைக் குதிரைகள். கழைப்பாகு - மூங்கிற் கோலையுடைய அவன் பாகன். இரதம் - அவன் தேர். இவற்றை இருள் பருகியது; ஆதலால் சூரியன் வருவது எங்ஙனம்? பச்சைமா, தேன்பாகு, கரும்பின் இரதம் என்னும் உண்பொருள்களை இருள் பருகியதென்பது மற்றொரு பொருள்.

### பாங்கி இயற்பழித்தல்

346. வின்னாக மானவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பர்
துன்னாரை யென்செய்வ ரோவறி யேனவர் சூளுரைத்த
அந்நா டொடங்கி யணங்கே யுருகிநின் றாகமெலாம்
பொன்னா னதுநெஞ் சிரும்பான தந்தப் புரவலர்க்கே. (ரு)

### தலைமகள் இயற்பட மொழிதல்

347. செங்கே ழலரி நெடுவா னகத்திற் செறிந்திடினும்
பங்கே ருகத்தை யலர்த்துமன் றேதமைப் பாடுமன்பர்
வெங்கேத மாற்றிய வாரூரர் வீதி விடங்கர்வெற்பர்
எங்கே யிருக்கினு மானே யெனக்குள தின்பமதே. (சு)

### தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்

348. கீத மணக்குங் கிளிமொழி யாய்மலர் கேகயத்தோன்
பாத மணக்கும் படியணி வோமொரு பாளையெழு
காத மணக்குஞ்செய் யாரூரிற் றேவர கண்டர்வெற்பர்
போத மணக்கும் பிழைபுரிந் தாலும் பொறுக்கவென்றே. (எ)

---

346. **பாங்கி கூற்று.**

நாகத்தை வில்லாகக் கொண்டவர்; நாகம் - மலை. துன்னாரை - பகைவரை. அவர் - தலைவர். பொன் ஆனது - பசலை யுடையதாயிற்று.

(பி - ம்.) 2. அறியேன்பல.

347-50. **தலைவி கூற்று.**

347. செங்கேழ் - செந்நிறம். கேதம் - துன்பத்தை. தலைவர் எங்கே யிருப்பினும் அவரை நினைத்தலால் எனக்கு இன்பத்தையே செய்கின்றார்; "நெடுஞ்சே ணாட்டா ராயினும், நெஞ்சிற் கணியரோ தண்கட னாட்டே" (**குறுந்.** உஉஅ: 5 - 6.)

(பி - ம்.) 1. சிறந்திடினும். 2. யலர்த்துமன்றே. 4. உனதின்ப முமே.

348. கேகயத்தோன் - மயில்வாகனத்தையுடைய முருகக் கடவுளது. அவன்பாதம் மணக்கும்படி மலரையணிவோம். போதம் மணக்கும் பிழை - புத்திபூர்வமான குற்றத்தை. பொறுக்கவென்று அணிவோம்.

(பி - ம்.) 2. படி பணிவோம். 2-3. ஒரு பாளையிரு காத மணக் குந்தென் னாரூரில்.

இல்வயிற் செறித்தமை இயம்பல்

349. எல்லார மன்ன சிறுநகை யாய்முன மென்னையனே
பல்லா ருரைக்கு மலரினுக் காகப் பகற்பொழுதும்
அல்லார் பொழிற்றிரு வாரூர ரஞ்செழுத் தானவிளக்
கில்லா வகமன்ன பொல்லா வகத்தி லிருத்தினளே. (அ)

செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்

350. வண்டாள் கடுக்கைய ராரூர்த் தியாகர் மணிவரைமேல்
ஒண்டாள மன்ன வுயர்தனத் தாயிரு ளூற்றவன்பர்
தண்டாண் மிதித்த சுவடுகண் டாளதிற் றாமரைப்பூக்
கண்டாள் வரவறிந் தாளறிந் தாணங் களவையுமே. (கூ)

செவிலி எறிவளைவேற்றுமைக்கு ஏது வினாதல்

351. அன்றேனல் காத்துன் னுடனுறைந் தாள்விழி யாறுமலைக்
குன்றே றியது புதுமையன் றேறுகொடி யார்புரத்தை
வென்றே றுகைப்பவ ராரூரர் வீதி விடங்கர்செங்கைக்
கன்றே நிகர்விழி யாய்மொழி யாயதன் காரணமே. (க௦)

பாங்கி வெறிவிலக்கல்

352. கான்காலுங் கொன்றையர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
ஊன்காத லித்து வெறியாடு வீருள் ளுருகுமிந்த

---

349. எல் ஆரம் - ஒளியையுடைய முத்து. அலரினுக்காக - பழி மொழியின்பொருட்டு. அகம் - மனம், வீடு. அலரினுக்காக இருத்தினள்.

(பி - ம்) 4. இல்லா ரகமன்ன.

350. தாள் மிதித்த - அடிவைத்தலால் உண்டாகிய. உத்தம ஆடவர் அடியில் தாமரை ரேகை இருக்கு மென்பர். நம் களவையும் - நமது களவொழுக்கத்தையும்.

351. **செவிலி கூற்று.**

குன்றிலிருந்து ஆறு இறங்குவதன்றிக் குன்றிலேறுவது வியப்பு; இது தலைவி அழுதுகொண்டே யிருக்கின்றாளென்றபடி. கன்று - மான் கன்று.

352-3. **பாங்கி கூற்று.**

352. கான் - நறுமணம். இந்த மானென்றது தலைவியை. காதலுக்கு - காதலைத் தீர்த்தற்கு. அறுமீன் காதலர்க்கு - கார்த்திகை நட்சத்

மான்காத லுக்கு மருந்தறி யாமன் மயங்கியறு
மீன்காத லர்க்கு மறியூ னளிக்கை விருப்பமன்றே. (கக)

353. கொலையானைக் கெட்டிய தாட்டுக்கு மாமென்று கூறுஞ்சொல்லை
நிலையாகப் பண்ணுதற் கோதெய்வ மேயழ னேத்திரத்தாற்
சிலையானை வென்றவ ராரூர்த் தியாகர் சிலம்பின்முன்னே
மலையானை யாவிகொண் டாய்மறி யாவிக்கும் வந்தனையே. (க௨)

வெறிவிலக்கியவழிச் செவிலி பாங்கியை வினாதல்

354. பைந்தொடி யாய்முன் கழங்காடி நெற்குறி பார்த்தென்வஞ்சி
சிந்தனை தீர வெறியாடி னேமன்னன் றேரதனுல்
மைந்தனை யூர்மறு காரூ ரிறையவர் மைந்தனைநம்
கந்தனை வந்தனை செய்யாம லென்கொல் கலைத்தனையே. (கங)

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்

355. காமா யுதமுஞ் செழுங்கா ளமுங் கடும்பரியும்
தேமா வனந்தரு மாரூர்த் தியாகர் சிலம்பிலன்னுப்

---

திரத்தின் குமாரரான முருகக்கடவுளுக்கு. மீனை விரும்புபவர்க்கு ஆட்டுக் குட்டியின் ஊனைக்கொடுத்தல் விரும்பத் தக்கதன்றென்பது வேறு பொருள்.

(பி - ம்.) 2. காதலித்து விளையாடுவீர். 4. ஊனளிக்க.

353. சிலையானை - மன்மதனை. தெய்வமேயென்றது முருகக்கடவுளை. மலையானை - கிரவுஞ்ச மலையையும் யானைமுகத்தையுடைய தாரகாரசுனையும்; கிரவுஞ்சமலையையுடைய தாரகாசுரனையெனலுமாம். மறியாவிக்கும் - ஆட்டுக்குட்டியின் உயிரைக் கொல்லுதற்கும்.

இச் செய்யுளில், 'யானைக்கெட்டியது ஆட்டுக்குமாம்' என்னும் பழமொழிப் பொருளைப் பொருத்தியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

354. செவிலி கூற்று.

கழங்காடுதல் நெற்குறி பார்த்தலென்பன கழங்குபார்த்தல், கட்டுப்பார்த்தல் என வழங்கும்; "கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (தொல். களவு. 24) என்பதனுரையால் உணர்க. கட்டுப்பார்த்தல், திருமங்கை மன்னன் சிறிய திருமடல், 18-22-ஆம் கண்ணிகளாலும் அவற்றின் வியாக்கியானத்தாலும் விளங்கும். கழங்குபார்த்தல், "அகலு ளாங்க ணறியுநர் வினாய்" (குறிஞ்சிப். 4) என்பதன் உரையால் விளங்கும். சிந்தனை - கவலை. மன்னன் - மனுநீதிச் சோழர்.

பூமாலை யுங்கொடுத் தானது வேயன்றிப் பூங்கொடிக்கு
மாமாலை யுங்கொடுத் தான்புனத் தேயொரு மன்னவனே. (கச)

புனல்தரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்

356. கந்தனை நல்கிய வன்மீக நாதர் கமலைவெற்பில்
அந்த மிலாத சுனையிடத் தேயன் றமிழ்ந்திடுங்கால்
சிந்திய கங்கையிற் பாகீ ரதிப்பெண்ணைச் சென்றெடுத்த
சந்தனு வென்ன வெடுத்தா னொருவனுன் றையலையே. (கரு)

களிறுதரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்

357. அரிக்கோட்டிற் சேரு நிலமயில் போலுங்க ளன்னமுன்னம்
கரிக்கோட்டிற் சேரும் பொழுதெடுத் தான்முத்தங் கன்னலிற்கா
விரிக்கோட் டினிற்றிக ழாரூரர் வீதி விடங்கர்செம்பொற்
கிரிக்கோட்டிற் சேருமன் னேயொரு வேந்தன் கிளையுறவே. (கசு)

முரசறைதல் யார்க்கென்று இகுளை கூறல்

358. பயங்காணு கின்ற கயவா யிரண்டினும் பட்டுவல்லி
தியங்காம லன்றுயிர் தந்தவர்க் கோதிரு மார்பிலிட்ட
புயங்கா பரணத்த ராரூர்த் தியாகர் பொருப்பிடத்தே
உயங்கா வரும்பிறர்க் கோமுர சார்ப்ப துணர்ந்திலமே. (கஎ)

---

355-8. **தோழி கூற்று.**

355. காமாயுதம் - மன்மதன் ஆயுதங்களை ; அசோகம் முதலியவற்றை. காகளம் - காளம் ; என்றது குயிலை. அவன் பரி : கிளி. மாமாலையும் - பெரிய மயக்கத்தையும். அவன் மதிக்கத் தக்கவனென்பாள், மன்னவனென்றாள்.

(பி - ம்.) 1. செறிகா களமுங்.

356. தலைவி அமிழ்ந்திடுங்கால். துளிகளைச் சிந்திய. சந்தனு - குரு குலத்து மன்னர்களுள் ஒருவன். (பி - ம்.) 2. யன்றமிழ்கையிலே.

357. அரிக்கோட்டில் - திருமாலாகிய பன்றியின் கொம்பில். நில மயில் - பூமிதேவி. யானை தனது கொம்பால் குத்த வரும்பொழுது எடுத் தான். கரிக்கு ஆதிவராகமும், அதன் கோட்டைச் சேர்ந்த தலைவிக்குப் பூமிதேவியும் உவமைகள். கன்னலில் - கரும்பிலும். காவிரிக் கோட்டினில் - காவிரியிலுள்ள சங்கத்திலும். கிளையுற - உறவாகப் பொருந்தும்படி. கிளையுற எடுத்தான் என்க.

(பி - ம்.) 4. கிளைமுத்தமே.

358. பயம் - நீர், அச்சம். கயம் - குளம், யானை. உயங்கா - வருந்தி.

தலைமகள் வேற்றுமைகண்டு செவிலியை நற்றாய் வினாதல்

359. மாநாக மொன்று மணியிழந் தாலென்ன வாடியிந்த
மானாக மின்று வருந்துவ தேனலர் வாவியுடன்
மாநாகஞ் சூழ்திரு வாரூர்த் தியாகர் வரையணங்கே
மானாகந் தன்னிற் றினைப்புனங் காத்திங்கு வந்தபின்னே. (க௮)

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தோடு நிற்றல்

360. சேலோடை சுற்றிய வாரூரர் செம்பொற் றியாகர்தந்த
வேலோனை வள்ளி புணர்ந்தது போலவுன் மெல்லியலாள்
மாலோ டொருவனை யாதரித் தாணம் மரபினுக்குப்
பாலோ வெனுமொழி யாய்நெறி யாகப் பயின்றதுவே. (க௯)

நற்றாய் தமருக்கு அறத்தோடு நிற்றல்

361. பாந்தளைச் சூடுந்தென் னாரூர்த் தியாகர் பனிவரைமேல்
மாந்தரிற் றாய கிளையிலுள் ளீர்மயில் வாகனனை
வேந்தனைச் சேந்தனை வேலா யுதனைச்செவ் வேளைவள்ளி
காந்தனைப் போலு மிறையோற்கு நல்குநங் கன்னியையே. (உ௦)

---

## உக. உடன்போக்கு

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்

362. என்மாதின் கொங்கைக் கிணையாக நாணுற் றிறைஞ்சிநின்ற
பொன்மால் வரையும் விலையல்ல வேபுர மூன்றெரிக்க

---

359. **நற்றாய் கூற்று.**

நாகம் ஒன்று - பாம்பு ஒன்று. மணி - மாணிக்கத்தை. மணியை யிழந்த பாம்பு துயருறும் மான் ஆகம் - தலைவியின் உடம்பு. மாநாகம் - பெரிய சுரபுன்னை மரங்கள். மால் நாகந் தன்னில் - மேகங்கள் தவழ்கின்ற மலையில். வந்தபின் தலைவியின் உடல் வருந்துவது ஏன்?

360. **செவிலி கூற்று.**

மாலோடு - மயக்கத்தோடு. அவ்வாறு ஆதரித்தல் மரபினுக்கு நெறியாகப் பயின்றது.

361. **நற்றாய் கூற்று.**

பாந்தளை - பாம்பை. இறையோற்கு - தலைவனுக்கு. கிளையிலுள்ளீர், நம் கன்னியை நல்கும். (பி - ம்.) 4. நங்கண்ணினையே.

362. **பாங்கி கூற்று.**

வின்மா மலைகொண்ட வாரூரர் வீதி விடங்கர்வெற்பா
நின்மா நகருக் குடன்கொண்டு போத னெறியுனக்கே. (க)

## தலைமகன் மறுத்தல்

363. நிறக்குங் கனல்வண்ண ராரூ ரிறையவர் நேரிமின்னே
மறக்குஞ் சரமஞ்சும் பாலையி லேயடி வைத்திடுமோ
சிறக்கும் பெடையன்னம் போலே நடக்குஞ் செயல்படைத்தாள்
பறக்குஞ் சிறைபடைத் தாளிலை யேயுங்கள் பைங்கொடியே. (உ)

## அவள் உடன்படுத்தல்

364. செறிக்கும் பெரும்புனற் செய்யுற்ற வான்பயிர் செங்கதிரோன்
எறிக்கும் வெயில்கண்டு வாடுறு மோகஞ்ச மேந்திழையார்
பறிக்கும் வயற்றிரு வாரூர்த் தியாகர் பதத்திலன்பா
குறிக்குந் தழற்சுர முன்னுட னேகிற் குளிர்ந்திடுமே. (ஙா)

## அவன் போக்கு உடன்படுதல்

365. மையற் பெறுநெஞ் செழுங்காமத் தீயில் வளர்ந்தகொம்பு
வெய்யிற் கிளரின் வெதும்புறு மோவளை வெள்ளைநிலாச்
செய்யிற் றிகழுந்தென் னாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
தொய்யிற் பயோதர மின்னே யெளிது சுரத்தழலே. (ச)

---

நாணுற்று இறைஞ்சி - வில்லாகக் கொண்ட காலத்தில் இறைவனால் நாணை ஏற்றப்பெற்று வளைந்து ; நாணத்தை யடைந்து வணங்கி யென்பது வேறு பொருள். நீ இத்தலைவிக்குப் பரிசம் கொடுப்பதென்றால் பொன்மலையும் போதாது ; ஆதலால் உடன்கொண்டு செல்வாயாக.

(பி - ம்.) 2. வரையு மிணையல்லவே.

363. **தலைவன் கூற்று.**

குஞ்சரம் - யானை. வைத்திடுமோ - வைத்திடுவாளோ ; அஞ்சுவாளென்றே. (பி - ம்.) 4. பறக்குந் தொழில் ; பைங்கொடியே.

364. **பாங்கி கூற்று.**

கஞ்சம் - தாமரை மலரை. பதத்தில் அன்பையுடைய தலைவ. சுரம் குளிர்ந்திடும். (பி - ம்.) 2. வாடுமன்றே.

365. **தலைவன் கூற்று.**

காமத்தீயில் வளர்ந்த கொம்பு : தலைவி. தொய்யில் - சந்தனக் குழம்பால் எழுதப்படும் கொடி முதலியன. பயோதரம் - தனங்கள்.

(பி - ம்.) 2. வெய்யிற் கிளகி வெதும்புமன் றேசங்கின்.

## பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

366. திண்ணப் பொறைநிறை பாஞ்சாலி தன்னொடுஞ் சீதையொடும்
எண்ணப் படுவளுன் மங்கையென் றூர்முன்ன மெச்சிவிட்ட
கண்ணப்ப ருக்கருள் வன்மீக நாதர் கமலைமின்னே
சுண்ணப் பரல்விரி யுஞ்சுர மோவன்பர் சொல்லியதே. (ரு)

## தலைவி நாணழிபு இரங்கல்

367. பாணுற்ற வண்டு பயிலிளஞ் சோலையிற் பாளைமணம்
சேணிற் றிகழுந்தென் னாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
பூணிற் றிகழுங் குவிமுலை யாயிந்தப் பூதலத்தோர்
நாணற்ற மாதரை நாரிய ராமென நாணுவரே. (சு)

## கற்புமேம்பாடு பாங்கி புகறல்

368. தாரொன்று பூமுத லெல்லா மகன்றுந் தருக்களுக்கு
வேறொன்று மேநிற்கின் வாடுறு மோமுகை விண்டகழு
நீரொன்று தண்வய லாரூ ரிறையவர் நேரிமின்னே
ஏரொன்று கற்பினர்க் கேதகன் றூனு மிடரில்லையே. (எ)

---

366. **பாங்கி கூற்று.**

பாஞ்சாலி - திரௌபதி. பாஞ்சாலியும் சீதையும் பாலைநிலத்திற் கணவரோடு சென்றவர்களென்பதைத் தலைவன் தெரிவித்தபடி. சுண்ணப் பரல் - சுண்ணும்பு உண்டாகின்ற பருக்கைக் கற்கள். சுரமோ - பாலை நிலத்திற் செல்லுதலையோ.

(பி - ம்.) 1. பாஞ்சாலி தன்னுடன் சீதையுடன்.

367. **தலைவி கூற்று.**

பாண் - இசை. சேண் - நெடுந்தூரம். நாண் - நாணம். பூதலத்தோர் நாணுவர். நாணற்ற மாதரைப் பெண்களென்று சொல்லாரென்றபடி. வின்னாண் அற்ற மாதரை நாரியையுடையவரென்றொன்பது வேறொரு பொருள்; நாரி - வின்னாண்.

(பி - ம்.) 4. நாரிய ரென்றெண்ண.

368. **பாங்கி கூற்று.**

தார் ஒன்று - மாலையிற்சேர்தற்கு உரிய. முகை - அரும்பு. கழுநீர் - ஒருவகை நீர்ப்பூ. நாணினும் கற்புச் சிறந்ததென்றபடி; "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (**தொல்.** களவு. 22.)

தலைவி ஒருப்பட்டெழுதல்

369. ஊர்கொண்ட திங்களும் பானுவு மான வுருளையிட்ட
தேர்கொண் டவர்திரு வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
வார்கொண்ட கொங்கை மடந்தைநல் லாயின்று மன்னர்பின்னே
நார்கொண்டு செல்வ னலர்தொடுப் பாரெங்ங ஞூரியரே. (அ)

பாங்கி சுரத்தியல்புரைத்துழித் தலைமகள் சொல்லல்

370. பாயிலைச் சூலத்த ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
காயிலை வேலன்ன கண்மயி லேவம்பு கட்டுரைப்பார்
வாயிலை யாகிற் றுடியிலை யாகின் மறம்புரியும்
தாயிலை யாகி னளகையன் றோவத் தழற்சுரமே. (கூ)

பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடைகொடுத்தல்

371. நீற்கட லுண்ட புயல்போற் கருகி நிறைந்ததந்தப்
பாற்கட லுண்ட புயல்போலு நாளும் பரிந்தருள்வாய்

---

369-70. தலைவி கூற்று.

369. ஊர் - ஊர்கோள். திங்களும் பானுவுமான உருளையிட்டதேர் - சந்திர சூரியராகிய உருளையிட்ட பூமியாகிய தேர். நார் - அன்பு. அலர் - பழிமொழி. நான் நாரைக் கைக்கொண்டு செல்லும்போது ஊரிலுள்ள மகளிர் எங்ஙனம் பூவைத் தொடுப்பாரென்பது ஒரு நயம்.

(பி - ம்.) 3. யெம்மகிழ்நர்பின்னே. 4. செல்ல வலர்தொடுப் பாரெங்க ஞூரியரே, தொடுப்பாரென்கொ ஞூரியரே.

370. பாய் இலை - பரவிய இலைவடிவத்தையுடைய. இலைச் சூலத்தர்: "இலையினூர் சூல மேந்தி யேகம்ப மேவி னுரை" (தே. திருநா.) வம்பு - பழிமொழியை. துடி - ஊர் காப்பாருடைய உடுக்கை யென்னும் வாத்தியம். மறம் புரியும் - கொடுமையைச் செய்கின்ற. தழற்சுரம் அளகையன்றோ? பழிமொழி கூறுவார் முதலியோருடைய கொடுமையைக் கூறியபடி.

371-2. பாங்கி கூற்று.

371. நீற்கடல் - நீலநிறத்தையுடைய கடல். பாற்கடலுண்ட புயல் போலு நாளும் - நரைத்துப்போகும் காலத்திலும். கடாக மன்னு - மதத்தையுடைய யானையையுடைய மன்னு. மாதின்புரி குழல், கருகி நிறைந்தது; பாற்கடல் உண்ட புயல்போலும் நாளும் பரிந்தருள்வாய்; விற்பூட்டுப் பொருள்கோள்.

கரிய மேகத்தைப்போன்ற கூந்தல் பாற்கடலுண்ட மேகம்போல

சேற்கட னஞ்சுண்ட வாரூர்த் தியாகர் செழுங்கயிலை
போற்கட நாகமன் றுவெங்கண் மாதின் புரிகுழலே. (கo)

பாங்கி வைகிருள் விடுத்தல்

372. அன்று யிரங்க லெனவுண்மை கூறி யலருரைக்கும்
ஒன்று ரடங்க வெதிரே மொழிந்துவந் தோரடிக்குப்
பொன்று யிரஞ்சொரி யாரூர்த் தியாகர் பொருப்பிலுங்கள்
பின்றுக யான்வரு வேன்வருந் தாதுசெல் பெண்ணமுதே. (கக)

அவன் தலைவியைச் சுரத்துய்த்தல்

373. கருகாமற் சேயிதழ் கண்சிவ வாமனின் காற்கமலம்
சருகாய் விடாம னுதல்விய ராமற் றளர்ந்துமனம்
உருகா மனந்திரு வாரூர்த் தியாக ருயர்சிலம்பிற்
பருகா வமுதனை யாய்நடப் பாயிந்தப் பாலையிலே. (கஉ)

அவன் பொழில்கண்டு வியத்தல்

374. விடங்காட் டியகண்ட ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
குடங்காட்டு மல்லிகைப் பூந்தேன் றெளித்தலர்க் குப்பைசிந்தித்
தடங்காட் டியகொங்கை மங்கைநல் லாய்தன் றளிர்க்கரத்தால்
இடங்காட்டி நம்மை யழைப்பது போலு மிளம்பொழிலே. (கங)

தலைவன் தலைவி அசைவறிந்திருத்தல்

375. மெத்தும் பதங்கொப் புளமாகிச் செம்முகம் வேர்வரும்பி
முத்தந் தருங்கஞ்ச நேரொக்கு மேவிரி முண்டகத்தேன்

---

வெளுத்து நரைக்கும் காலத்தும் தலைவியைப் பாதுகாத்தருள்வாயென்பது கருத்து.

(பி:- ம்.) 1. நிறைந்ததினிப் 2. புயல்போன்ற.

372. உண்மை - தலைவி தலைவனுடன் சென்றதை. அலர் உரைக்கும் - பழிமொழியைக் கூறும். ஓரடிக்குப் பொன் ஆயிரம் சொரி யாரூர்த் தியாகர்: 3-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க.

373-6. **தலைவன் கூற்று.**

373. சேயிதழ் கருகாமல். மனம் உருகாமல். பருகாவமுது: விலக்குருவகமென்னும் அணி.

(பி - ம்.) 1. செவ்விதழ்கண். 4. பருகா ரமுதனையாய்.

374. குடங்காட்டு மல்லிகை - குடமல்லிகை; இது மல்லிகைச் சாதியுள் ஒருவகை. சிந்தி அழைப்பது போலும்.

தத்தும் வயற்றிரு வாரூர்த் தியாகர் சயிலமின்னே
இத்தண் டலையி லிளைப்பாறு மட்டு மிருந்தருளே. (கச)

உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்

376. கொங்கைத் தடத்தி னிறையெழில் வெள்ளமக் கொங்கையின்மேற்
பொங்கிப் பொடித்த தெனுங்குறு வேர்வுநின் பூங்குழலும்
வெங்கட் செவியணி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மங்கைப் பருவமின் னேகண்டு வாழுமென் வார்விழியே. (கரு)

கண்டோர் அயிர்த்தல்

377. தருவழ காம்பொழி லாரூர்த் தியாகர் தடங்கிரிமேல்
பெருவழ காமிவர் விஞ்சைய ரோவிவன் பேரெழிற்குப்
பருவழ காய்விடும் வில்வே ளழகிந்தப் பைந்தொடியாள்
திருவழ கானதற் கொவ்வாது கஞ்சத் திருவழகே. (கசு)

கண்டோர் காதலின் விலக்கல்

378. முள்ளியற் பன்றி யெனவீத் திலையின் முகடுசமைத்
துள்ளிலை யிட்ட குடிலடத் தேயிவ ளோடுவைகி
வெள்ளிலைச் சூலத்த ராரூரர் வீதி விடங்கர்வெற்பா
நள்ளிருட் போதொழித் துன்னூர்க்கு நாளை நடந்தருளே. (கஎ)

---

375. மெத்தும் - அழகு நிரம்பியிருக்கும். பாதத்திற்கும், முகத்திற்கும் தாமரைமலர் உவமை அவற்றிற் றோன்றிய கொப்புளத்திற்கும் வேர்வைக்கும் முத்து உவமை. தண்டலை - சோலை.

376. கண்டு வாழும் - கண்டு மகிழும்.

(பி - ம்.) 1. னிறை பேரெழில் வெள்ளங்.

377-9. **கண்டோர் கூற்று.**

377. தரு - மரம். பெருவழகாம் - பெரிய அழகை யுடையவர்களாகிய. பருவழகு - தூலமான அழகு; சிறப்பில்லாததென்றபடி. கஞ்சத்திரு அழகு - திருமகளின் அழகு.

(பி - ம்.) 3. பருவழ காமுந்தி பூத்தோனழகு.

378. முள்ளியற் பன்றி - முள்ளம் பன்றி. ஈத்திலை வேய்ந்த குடிசைக்கு முள்ளம்பன்றி உவமை; "ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை" (**பெரும்பாண்.** 88.) குடில் - குடிசை. ஒழித்து - கழித்து.

(பி - ம்.) 1. ஈத்தடையின் முகடு.

கண்டோர் தம் பதியணிமை சாற்றல்

379. திருந்திறைக் கோலத்த ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
பருந்தழைக் கின்றசெவ் வேலண்ண லேசத பாதஞ்சென்றால்
மருந்தழைக் கின்ற மொழியார் குழல்வண்டை வாவிவண்டு
விருந்தழைக் கும்புன லூடுமுன் னாரும்பொன் மேடையுமே. ()

தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல்

380. பின்னுஞ் சடையவ ராரூர்த் தியாகர் பிறங்கலின்மேல்
துன்னுங் குவிமுலைத் தோகைநல் லாயெதிர் தோன்றுமது
மின்னும் புயலன்று காணம தூரிற்பொன் மேடையின்மேல்
மன்னுந் தெரிவைய ரோதியிற் காட்டு மணப்புகையே. (க௯)

381. பணங்காட் டரவணி யாரூர்த் தியாகர் பனிவரைமேல்
நிணங்காட்டு வேலன்ன நீள்விழி யாயது நீர்முகந்த
கணங்காட்டு மேகந் தவழும்வெற் போவல்ல காரிகையார்
மணங்காட்டுந் தூவந் தவழுநம் மூர்சுற்று மாளிகையே. (உ0)

---

## உஉ. கற்பொடு புணர்ந்த கவ்வை

செவிலி பாங்கியை வினாதல்

382. என்கண் கலுழ்ந்து வலந்துடி யாநிற்ப தென்னையன்னே
நின்கண் கலுழ்ந்து சிவந்ததென் னேநினை யாதவர்க்குப்

---

379. இறைக்கோலத்தர் - அரசக் கோலத்தை யுடையவர்; ஸ்ரீ தியாகேசப் பெருமான் சோழவரசராக இருந்து ஆண்டனரென்பது இத்தல புராண வரலாறு. சதபாதம் - நூறடி; நூறடி செல்லுதலென்பது ஒரு மரபு; "நூற்றுலா மண்டபத்து" (சீவக. 2734.) மருந்து - அமிர்தம். மேடையும் உள்ளனவென ஒரு சொல் வருவிக்க.

380-81. **தலைவன் கூற்று.**

380. பின்னுஞ் சடையவர்: "பின்னியமா சடையாரும்" (அருணைக்கலம்.); பெரும்புலியூரிலுள்ள ஸ்ரீ நடராஜ மூர்த்திக்குப் பின்னு சடைப் பெருமானென்பது திருநாமம். கூந்தலுக்கு அகிற்புகை யூட்டுதல் மரபு.

381. தூவம் - தூபம். மாளிகைக்கு மலையும் அதன்மேற் சுற்றும் அகிற்புகைக்கு மேகமும் உவமைகள். (பி - ம்.) 4. கமழு மெம்மூர்.

382. **செவிலி கூற்று.**

மகளிர்க்கு வலப்பக்கம் துடித்தல் தீய நிமித்தம். வலம் - வலச்செவி,

புன்கண் கொடுப்பவ ராரூர்த் தியாகர் பொதியவெற்பில்
வன்கண் படைத்து மடந்தையெங் கேகினள் வாணுதலே. (க)

பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

383. தில்லையி லாடுந்தென் னாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
ஒல்லையி லேவந்தென் மங்கையெங் கேயென் றுரைக்குமன்னே
தொல்லையி லேயொரு பூமாலை நல்கிய தோன்றலுக்கா
முல்லையி லேநின்று பாலையி லேகினள் மொய்குழலே. (உ)

செவிலி இனையலேன்போர்க்கு எதிரழிந்து மொழிதல்

384. விழியின் பயன்றரு மாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மொழியும் படியென்கொ லோமட வீரென் முலைக்கண்ணினால்
வழியும் பயங்கொடுத் தேவளர்த் தேற்கு மலர்க்கண்ணினாற்
பொழியும் பயங்கொடுத் தேவளர்த் தாடுயர் பூங்கொடியே. (ங)

செவிலி தன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்

385. வெற்றிகொள் சூலத்த ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
சிற்றி லிழைத்துன் னுடன்விளை யாடிய சேயிழையாள்
புற்றி லராமணி கொண்டுதன் கால்கள் பொறுக்குமட்டும்
ஒன்றின ளொற்றிய தின்னதற் காமென் றுணர்ந்திலனே. (ச)

---

வலக்கண், வலத்தோள் முதலியன. வன்கண் - வன்கண்மையை.

(பி - ம்.) 1. என்கண் கலுழ.

383. **பாங்கி கூற்று.**

ஒல்லையில் உரைக்கும் அன்னே என இயையும். முல்லையிலே - கற்பிலே; பாலை - பாலை நிலம்; முல்லைநிலம் பாலைநிலமென்பது வேறு பொருள்.

(பி - ம்.) 2. ஒல்லையி லேசென்றென்.

384-7. **செவிலி கூற்று.**

384. வழியும் பயம் - வழிகின்ற பால். மலர்க்கண்ணினாற் பொழியும் பயம் - கண்ணீர்; பயத்தைக் கொடுத்துத் துயரை வளர்த்தாள்.

(பி - ம்.) 3. வளர்த் தேன்முன்.

385. முதல்நாளில் மாணிக்கத்தைக் கொண்டு தன் கால்களில் ஒற்றிக் கொண்டாள்; அது பாலைநிலத்திற் செல்லுதற்குப் பழக்கிக் கொள்ளுதலாமென்பதை அறிந்திலேனென்றாள்.

சேவிலி தெய்வம் வாழ்த்தல்

386. புள்ளி யிறைக்குஞ் சிறைத்தோகை விட்டுச்செம் போதுசிந்தி
வள்ளி யிறைக்கு வழிபடு வேன்றென் றன் மன்றலெல்லாம்
அள்ளி யிறைக்குந்தென் னூரூர்த் தியாக ரணிவரைமேற்
கள்ளி யிறைக்குங் கனற்சுர நீங்கியென் கண்வரினே. (ரு)

சேவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

387. கோலக் கொடியும் படர்ந்தே றியகொழு கொம்பும்விட்டு
மாலைக்குண் மேவு மதுமலர் போல வரங்கொடுக்கும்
வேலைக்கு ணிற்பவ ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
நீலக் குழலியு மேதிலற் காநம்மை நீங்கினளே. (சு)

நற்றாய் பாங்கிதன்னோடு புலம்பல்

388. காசி யுடன்புக ழாரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
பாசிழை யுற்ற விளமுலை யாளின்றென் பாவிநெஞ்சில்
பூசிய துன்பக் கனலவி யாமற் புழுங்குதற்கு
வீசிய நீரொக்கு மேமக ளேயுன் விழிப்புனலே. (எ)

நற்றாய் பாங்கியர்தம்மோடு புலம்பல்

389. நீலக் கடுவுண்ட வாரூ ரிறையவர் நேரிவெற்பில்
மாலைக் குழலி யுடன்விளை யாடிய மங்கைநல்லீர்

---

386. புள்ளியென்றது பீலிக்கண்களை. தோகை - மயில்களை. வள்ளி இறைக்கு - முருகக் கடவுளை. கள்ளி - கள்ளத்தையுடைய தலைவி. கனலை யிறைக்குஞ் சுரம். வரின் வழிபடுவேனென்க.

387. மலர் தான் தோன்றிய கொடியையும் அது படர்ந்த கொழு கொம்பையும் விட்டு மாலையிற் சேர்தல்போல நற்றாயையும் தன்னையும் நீங் கித் தலைவி தலைவன்பின் சென்றாளென்றாள் செவிலி. ஏதிலற்கா - அயலான் பொருட்டு.

388-99. **நற்றாய் கூற்று**

388. காசி தன்பால் இறந்தாருக்கு முத்தி தருவது; ஆரூர் தன்பாற் பிறந்தாருக்கு முத்தி தருவது; ஆதலால் அதனோடு சேர்த்துக் கூறப்பட்டது. பாசிழை - பசிய பொன்னாற்செய்த ஆபரணங்கள்.

389. முகையென்றது தனங்களை. என்னுடைய கற்பையுடைய கொடி போன்ற தலைவி. பாலைக்கு - பாலையின் துன்பத்தைப் போக்குதற்கு. அரும்பு தோன்றாத முல்லைக்கொடி படர்ந்த பாலைமரத்திற்கு வார்த்தற்குரிய நீரில் லையே யென்பது மற்றொரு பொருள்.

(பி - ம்.) 2. மாலைப்பொழுதுமுடன். 4. யென்றென்றனவி

கோலக் குவிமுகை தோன்றுமென் முல்லைக் கொடிபடர்ந்த
பாலைக்கு நீரில்லை யென்றேயென் னாவி பதைக்கின்றதே. (அ)

நற்றாய் அயலார்தம்மோடு புலம்பல்

390. விரும்பார் புரஞ்செற்ற வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
பெரும்பாவி யேனெதிர் தேற்றுகின் றீர்மென் பிறைநுதலாள்
அரும்பா முலையு முகத்தே யொழுகு மழகும்பச்சைக்
கரும்பான தோளுமென் கண்ணார நானென்று காண்பதுவே. ()

நற்றாய் தலைமகள் பயிலிடந்தன்னெடு புலம்பல்

391. பாடுஞ் சுருதிய ராரூரி னன்பெற்ற பாவைவிளை
யாடுந் தடஞ்சுனை காள்பொழில் காளன்னை யன்னையென்று
வாடுங் கிளிதன்னை யும்மணற் சோறிட வந்துதனைத்
தேடு மிவரையு மெத்தனை நாணின்று தேற்றுவனே. (க0)

நிமித்தம் போற்றல்

392. இருங்கொடி யேற்றவ ராரூர்த் தியாக ரிமயவெற்பில்
மருங்கொடி யேலென்று நீதடுத் தாயில்லை மன்மதவேள்
அருங்கொடி யேனத் தசையுடன் கூட்டி யளிப்பனினிக்
கருங்கொடி யேயென் பசுங்கொடி மீளக் கரைந்திடினே. (கக)

393. கயிலை வளத்தினர் வன்மீக நாதர் கமலைவெற்பில்
வெயிலை வளர்த்திடும் பாலையி லேயொரு மீளிபின்போம்

---

391. இவரென்றது தோழிமார்களை.

(பி - ம்.) 4. நாணின்று தேற்றுவதே.

392. மருங்கு ஒடியேல் - நடந்து சென்று இடையை ஒடித்துக்கொள்ளாதே. மன்மதவேள் அருங்கொடி என்றது மீனை. ஏனத்தசை - பன்றியின் இறைச்சி. கருங்கொடியே - கரிய காக்கையே. பசுங்கொடி - தலைவி. கரைந்திடின் அளிப்பன்.

393. மீளி - தலைவன். தன்னால் வளர்க்கப்பட்டுப் பருவம் வந்தவுடன் தன்னைவிட்டு நீங்கித் தலைவனுடன் சென்ற தலைவியை வளர்த்த நற்றாய், தன் கூட்டில் முட்டைகளை வைத்து வளர்த்து இறகு முளைத்தவுடன் தன்னை நீங்கிச் செல்லும் குயில்களை வளர்த்த காக்கையை நோக்கிக்

மயிலை வளர்த்த கொடியேன் கரையும் வருத்தமறக்
குயிலை வளர்த்த கொடியே கரைந்திங்ஙன் கூட்டுகவே. (கஉ)

நற்றாய் சுரந்தணிவித்தல்

394. அம்பார் சடிலத்த லாரூர்த் தியாக ரணிவரைமேல்
எம்பாவை செல்லு நெறிகளெல் லாமிளஞ் சோலைகளாய்க்
கொம்பா லயங்கொண் டிருந்துமென் கோகிலங் கூவவந்தச்
செம்பாலை யெங்குங் கரும்பாலை யாக்க தினமணியே. (கந)

நற்றாய் தலைமகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்

395. உவக்கின்ற வல்லி மலர்த்தாளெண் கண்களி லொற்றிற்கண்கள்
சிவக்கின்ற தற்குமுன் னேசிவந் தேறுஞ் செயலவன்றோ
பவக்குன் றிடிப்பவ ராரூர்த் தியாகர் பணிவரைமேல்
நிவக்கின்ற வெஞ்சுரத் தேசென்ற வாறென் னினைப்பதுவே. ()

396. வேயும் புகையெழு மட்டல்ல வேயதன் வெம்மைசொன்ன
வாயும் புகையெழு மேதெய்வ மேமக வான்மகுடம்
தேயுஞ் சரணத்த ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
சாயுங் கொடியிடை யாடணிப் போன தழற்சுரமே. (கரு)

397. படமுற்ற பாம்பணி யாரூர்த் தியாகர் பணிவரையாள்
விடலைக் குருகி நடந்திடும் பாலையின் வெம்மைக்கன்றோ
வடவைக் கனலுந் திரைக்கே முழுகி மறைந்ததந்தக்
கடலைக் குளிர்ந்த கலையா யுடுத்தனள் காசினியே. (கசு)

---

கூறியது மிகப் பொருத்தமாக உள்ளது.

394. கொம்பை ஆலயமாகக்கொண்டு. கோகிலம் - குயில்கள். செம்பாலை - செந்நிறத்தையுடைய பாலை நிலம் கரும்பு ஆலை ஆக்க. தினமணியே - சூரியனே. செம்பாலை, கரும்பாலை: சொன்முரண்.

395. இப்போது உவக்கின்ற. வல்லி - தலைவி. கண்கள் - நற்றாயின் கண்கள். செயலையுடையன தலைவியின் தாள்கள். வெம்மை நிவக்கின்ற சுரம்.

396. வழிபட்டவருள் இந்திரனும் ஒருவனாதலால் அவன் வணங்குந்தோறும் மகுடம் தேய்தலின் இங்ஙனம் கூறினார்.

397. பணிவரையாள் - தலைவி. விடலை - தலைவன். கலை - ஆடை.

(பி - ம்.) 2. வெம்மை கண்டோ, வெம்மை கண்டே.

நற்றாய் இளமைத்தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்

398. சீதை யுடன்கொண்டு பாலையிற்போன சிறுவனுக்காத்
தாதை யிறந்த கதைகேட் டிருந்துஞ் சயிலம்பெற்ற
மாதை யிடங்கொண்ட வாரூர்த் தியாகர் வரையிடத்தென்
பேதை யகன்று முயிர்சுமந் தேனிது பேதைமையே. (௧௭)

நற்றாய் தலைமகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்

399. புற்றா லயங்கொண்ட வாரூர ரெய்த புரமெனத்தீப்
பற்றா வெழுங்கொடும் பாலையி லேபுலிப் பார்வைகண்டாற்
கற்றா வெனவையு மேயிளந் தாமரைக் கைந்நெரித்துச்
சிற்றா லிலைவைக்கு மேதமி யேன்பெற்ற தேமொழியே. (௧௮)

கண்டோர் இரக்கம்

400. வெவ்வாயர் கொன்ற மரம்போல வன்னை விழுந்தெழுந்து
செவ்வாய் திறந்து திறந்தழை யாநிற்குஞ் சிந்தைகரைந்
திவ்வாய மாதரெல் லாமறு காநிற்ப ரென்னையென்னை
கைவாய் மழுவைத்த வன்மீக நாதர் கமலையிலே. (௧௯)

---

398. சிறுவனுக்கா - இராமன்பொருட்டு. தாதை இறந்த கதை - புத்திரசோகத்தால் தசரதர் இறந்த கதை.

(பி - ம்.) 2. தாதை யிறந்த வுரை. 3. வரையினிந்தப். 4. பெண் மதியே.

399. புலிப்பார்வை - புலியைப் பிடிப்பதற்காகப் புலியைப்போலவே செய்த உருக்கள்; வளர்த்துப் பழக்கிய புலியுமாம். கற்றாவென - கன்றை யுடைய பசுவைப்போல. சிற்றாலிலை - சிறிய ஆலிலை போன்ற வயிற்றில்.

(பி - ம்.) 2. பார்வை கண்ட.

400. **கண்டோர் கூற்று.**

ஆயர் கொன்ற மரம் - இடையர் ஆடுமாடுகள் உண்ணும் தழைக்காக வெட்டிய மரம்; இஃது ஒடியெறிதல் எனப்படும். இம்மரம் உயிருட னிருப்பதும் அன்று; இல்லாததும் அன்று; ஆதலால் உயிரோடிருப்ப வளும் அல்லளுமான தாய்க்கு இதனை உவமை கூறினர்; "இடைய னெறிந்த மரமே யொத்திராமே" (**பெரிய** திரு. ௧௧. 8 : 6) என்பதனையும் அதன் வியாக்கியானத்தையும், "இடைமகன் கொன்ற வின்ற மரத்தினேன்" (சீவக. 1914) என்பதையும் பார்க்க. அழையா நிற்கும்: முற்று.

(பி - ம்.) 3. அழுங் காநிற்பர்.

சேவிலி ஆற்றுத்தாயைத் தேற்றல்

401. வடிக்கே நிகர்விழி மின்னுளைத் தேடி வருந்துமன்னே
படிக்கே புகழ்பெற்ற வாரூர்த் தியாகர்கைப் பற்றியநாண்
முடிக்கே யடங்கிய மட்டுமல் லாதவர் மூரியம்பின்
அடிக்கே யடங்கி யிருப்பதன் றோவிந்த வம்புவியே. (உ௦)

ஆற்றிடை முக்கோற்பகவரை வினுதல்

402. முக்கோல் பிடித்து மதவேளைங் கோலை முறித்துமிகத்
தக்கோர் புகழ வருமந்த ணீர்வண்டு தண்டலையிற்

---

401-2. **செவிலி கூற்று.**

401. வடி - மாவடுவின் பிளவு. நாண் - வின்னாண்; அஃது ஆதிசேடன். அதன் முடியில் அடங்கியது இந்தப் பூமி. அவருடைய அம்பு திருமால். அடிக்கு - அவருடைய அடியில். திருமால் உலகளந்த காலத்தில் பூமி ஓரடியுள் அடங்கியதென்பது இங்கே அறிதற்பாலது.

நாணின் முடியிலும் அம்பின் அடியிலும் அடங்கிய பூமியில் தலைவியைத் தேடிக்கொண்டு வருதல் எளிதென்றாள் செவிலி.

"கமலக் கொடிதங்கு தேயங் *குறுகியவர், ஒருகா லினுக்கு மொரு கையி னீருக்கு முட்பட்டதே" (**அம்பிகா.** 399); "குலோத்துங்க சோழ னுறந்தைவெற்பிற், பன்றியின் கோட்டகப் பட்டதன் றோவிந்தப் பாரெங்குமே", "வல்லி மேவுமிடம், பழகிய வாலிலை யூடேகண் மூடிப் படுக்குமிளங், குழவியின் வாய்ப்பட்ட தன்றோசென் றேகிக் கொணர்வ னின்றே", "கழு நீரின்முனம், உண்டுண் டெனக்குறி காட்டியன் றைவர்க் குயிரளித்த, வண்டுண் டுமிழ்ந்ததன் றோவணங் கேயிந்த வையகமே" (**குலோத். கோவை,** 388-90) என்னும் செய்யுட் பகுதிகள் இதனோடு ஒப்பு நோக்கி இன்புறற்பாலன.

402. முக்கோல் - திரிதண்டம். ஐங்கோல் - பஞ்சபாணம். முக்கோல், ஐங்கோல்: "முக்கோலி னுலைந்து கோலைவென் றேசென்ற முன்னவரே" (**குலோத். கோவை,** 391); "ஐங்கோலு மொருகோலு நீர்க்கோ லம்போ லழியமுனிந் தறுசமய மகற்றி யெங்கள், செங்கோலே யுலகனைத்துஞ் செல்ல முக்கோ றிருக்கையிற்கொ ளெதிராசன்" (**சீரங்க நாயகருசல்,** 19.) ஒலிடும் - முழங்கும்; ஒல்லலம் - முழக்கம். வில்லியும் - வில்லையுடைய தலைவனும்.

(பி - ம்.) 1. மதனனைங் கோலை முனிந்துமறைத்.

---

* குறுகியவர் - வாமன வடிவங்கொண்ட திருமால், அகத்திய முனிவர்.

புக்கோ விடுந்திரு வாரூர்த் தியாகர் பொருப்பில்விழி
மைக்கோல வல்லியும் வில்லியுஞ் சேர்ந்திங்கு வந்தனரே. (உக)

மிக்கோர் ஏதுக் காட்டல்

403. விடவா ளரவணி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மடவா ளொருவ னுடனகன் றுளென்று வாடுகின்றாய்
முடிவாய சங்கத் திடையே விளங்கிய முத்தமிழை
உடனே புணர்ந்து மறிவில்லை யோமொழி யொண்ணுதலே. (உஉ)

செவிலி எயிற்றியோடு புலம்பல்

404. பீலிக் கருங்கலை வெண்குன்றி மாலைப் பெரும்புலிப்பற்
றாலிப் புனைய லெயினர்மின் னேதண் டாளமள்ளர்
கூலிக் கிடுந்திரு வாரூர்த் தியாகர் குவட்டிற்சொல்லாய்
ஆலிக்கு மண்ணலு மங்கையும் போன வருநெறியே. (உங)

குரவோடு புலம்பல்

405. வெண்மதி யாறணி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கண்மணி யாக வளர்த்தேனை விட்டொரு காளைபின்னே

---

403. **மூக்கோர்பகவர் கூற்று.**

சங்கில் விளங்கிய முத்தானது இழையுடனே இருத்தலை உணர்ந்தும்; தமிழ்ச் சங்கத்தினிடையே விளங்கிய மூன்று தமிழை உடனே உணர்ந்து மென்பது வேறு பொருள். தாம் பிறந்த வீட்டை விட்டுக் கணவர் வீட்டிற்குச் செல்லும் மகளிர்க்கு, தாம்பிறந்த சங்கத்தை விட்டு இழையோடு சேரும் முத்தை உவமை கூறுவது மரபு; “முற்றிழை மகளிர், தத்துநீர்ப் பெருங் கடற் சங்குபொறை யுயிர்த்த, நித்திலத் தன்னர்” (பெருங். க. 47 : 253-5.)

(பி - ம்.) 4. உடனே புனைந்து மறிவில்லையோ.

404-10. **செவிலி கூற்று.**

404. மயிற்பீலியாலான கரிய ஆடையையும், வெண்குன்றிமணியாலான மாலையையும், பெரிய புலிப்பல்லைக் கோத்த தாலியாகிய ஆபரணத்தையும் அணிந்த எயினர் மகளே. குன்றிமாலை: “குன்றியந் தாம நான்ற குவி முலைக் கொடிச்சி” (பிரமோத்தர. வேடன் சிவபூசை. 19.) புலிப்பற்றாலி: “புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி......கானவன் மகளே” (அகநா.) மள்ளர் கூலிக்குத் தண்டாளத்தை இடும்; மள்ளர் - உழவர். ஆலிக்கும் - களிக்கும். எயினர் மின்னே, அருநெறியைச் சொல்லாய்.

405. பெண்மதியால் இத்தீநெறியிற் சென்றாள். தண்மையினால் - அருளால். குரவீர் - குராமரங்களே; ஆசிரியர்களே யென்பது வேறு

பெண்மதி யாலிந்தத் தீநெறிக் கேயொரு பேதைசென்றால்
தண்மையி னாற்குர வீர்விலக் காமை தகுதியன்றே. (உச)

கழையோடு புலம்பல்

406. வன்பணி யாறணி யாரூர்த் தியாகர் மணிவரைமேல்
அன்புடை யாரற்ற கானத்து நீர்கிளை யானதற்கோ
இன்ப முறுமெனைப் பெண்பெற்ற பாவி யெனநினைந்தோ
மென்கழை காளுங்கள் கண்டோறு முத்தம் விழுகின்றதே. (உரு)

புறவொடு புலம்பல்

407. வன்புற வேளை யெரித்தார் தியாகர் மணிவரைமேல்
முன்புற வேது மிலானுட னேசென்ற மொய்குழலைப்
பின்புற வேகடந் தன்புற வேசில பேசியவள்
இன்புற வேதடுத் தாயிலை யேசுரத் தின்புறவே. (உசு)

வரையோடு புலம்பல்

408. தண்ணீர் முகக்கு வடவார் குடத்துற்ற சங்கமங்கு
வெண்ணீர் மணிசொரி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
உண்ணீ ரறுஞ்சுரத் தேகுமென் பேதைக் குருகியழும்
கண்ணீ ரலாம லருவியின் றேயிந்தக் கார்வரைக்கே. (உஎ)

---

பொருள். தீநெறியிற் செல்லாதபடி விலக்குவது குரவர் கடமை யென்பது தோற்றுகின்றது. "மாயிருங் கடற்றிடை வைகலாயிரம், பாவையை வளர்ப்போய் நீநனி பாவையை, விலக்காது பிழைத்தனை மாதோ............ கொங்கலர் கண்ணி யாயின குரவே" (திருவாரூர் மும்மணிக். 16.)

406. கிளை - மூங்கில், சுற்றம். கழைகாள் - மூங்கில்களே. கண்டோறும் - கணுக்கள் தோறும், விழிகள் தோறும்; முத்தம் - முத்து, கண்ணீர்த் துளி. நீர் கிளையானமையாலோ, என்னை நினைந்தோ உங்கள் கண்டோறும் முத்தம் விழுகின்றது. கழையொடு புலம்பல் என்பது, "மென்றோட் குடைந்து வெயினிலை நின்ற, குன்ற வேய்களுங் கூற்றடைந் தொழிக" (திருவாரூர் மும்மணிக். 16) என்பதிலும் காணப்படுகின்றது.

407. ஏதும் உறவில்லானுடன். இன்புறவே - இன்பம் அடையும்படி, இனிய புறாவே.

408. உண் நீர் - உண்ணுதற்குரிய நீர். மலையிலிருந்து விழுவது அருவியன்று; மலையின் கண்ணீரே; "கண்ணீ ரருவியாக, அழுமே தோழியவர் பழமுதிர் குன்றே" (நற். அஅ.)

சுவடு கண்டிரங்கல்

409. அஞ்சீ ரடிக ணெடிலடி யாமிவை யன்பரென்பார்
தஞ்சீ ரடியிவ் விருசீர்க் குறளடி தையனல்லாள்
மஞ்சீர மெல்லடி நாற்சீ ரளவடி மாவடியாம்
செஞ்சீ ரடியத்த ராரூர்த் தியாகர் செழுங்கிரிக்கே. (உஅ)

கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

410. மெய்வேளுந் தேவியும் போல்வரு வீர்பகல் வெம்மையினால்
மைவேழ முங்கரி யாய்விடும் பாலையில் வந்தனரோ
செவ்வேளை நல்கிய வாரூர்த் தியாகர் சிலம்பிலொரு
கைவே லனுமிரு செவ்வேன் முகத்துற்ற கன்னியுமே. (உகூ)

கலந்துடன் வருவோர் புலம்புதல் தேற்றல்

411. அன்று நடந்த திருமாலுஞ் சீதையு மாரணியத்
தின்று நடந்தன ரென்றயிர்த் தேமிளஞ் சோலையெங்கும்
தென்ற னடந்துல வாரூர்த் தியாகர் சிலம்பிலன்னாய்
வன்றிற லானையு மிம்மாதர் கண்ட மயிலையுமே. (ஙo)

---

409. அஞ்சீரடி=ஐஞ்சீரடி - ஐந்து சீரையுடைய அடி. ஐந்து சீரையுடைய அடி நெடிலடி யென்றும், இரு சீரையுடைய அடி குறளடி யென்றும், நாற்சீரையுடைய அடி அளவடி யென்றும் யாப்பிலக்கணத்திற் கூறப்படும். இவ்வடிகளின் பெயர்கள் இச்செய்யுளில் தோற்றின.

தலைவன் அடி பெரிதாயிருத்தல்பற்றி நெடிலடி யென்றும், தலைவியின் அடி சிறிதாயிருத்தல் பற்றிக் குறளடி யென்றும் கூறினர். மஞ்சீரம் - சிலம்பு. மாவடி - தலைவன் வேலால் எறிந்து வீழ்த்திய யானையின் அடி. பாத தரிசனம் இத்தலத்தில் சிறப்புடையததாதலால் தியாகேசருடைய பாதம் செஞ்சீரடி யென்னப்பட்டது.

(பி - ம்.) 4. செஞ்சீர் வடிவத்த ராரூர்த்.

410. தேவி - இரதி. கரியாய்விடும் - கரிந்துவிடும்; வேழம் கரியாய் விடுமென்றது ஒரு நயம். கைவேலனும் கன்னியும் வந்தனரோ. தலைவன் கையில் வேலுடையான், தலைவி முகத்தில் வேலுடையாளென்றதொரு நயம்.

411. கலந்துடன் வருவோர் கூற்று.

திருமால் - இராமன். அயிர்த்தேம் - சந்தேகித்தேம். இம்மாத ரென்றது சொல்லுவோன் தன் மனைவியைச் சுட்டியபடி. "மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே, பூண்டா ரிருவர்முன்

சேவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்

412. சேணேறு பூம்பொழி லாரூர்த் தியாகர் சிலம்பினிலென்
பூணே றியகொங்கை மீண்டன ளோவென்ற போதுளத்து
நாணே நவிய விறப்பதல் லாமலென் றுவெழுந்து
காணே னெனச்சொல்ல வோபெற்ற பாவியைக் கண்டுகொண்டே.

---

## உ௬. மீட்சி

தலைவி சேணகன்றமை சேவிலி தாய்க்கு உணர்த்தல்

413. வன்பா லெழுங்கதி ரவ்வாறு திங்கள் வடதிசையும்
தென்பாலுஞ் செல்ல வெரியெழும் பாலையிற் றேடிவந்தேன்
மின்பா லிடங்கொண்ட வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
அன்பா லொருவன்பின் னேசுரம் போன வணங்கினையே. (க)

414. வாடி யெழுங்கதி ரவ்வாறு திங்கள் வடக்குந்தெற்கும்
ஓடி விலங்க வெரியெழும் பாலையி லொண்ணுதலைத்
தேடி வருந்தியுங் காணேனன் னேயென்ன செய்வதசைந்
தாடி வருந்திரு வாரூர்த் தியாக ரணிவரைக்கே. (உ)

---

போயின ரேபுலி யூரெனைநின், றூண்டா னருவரை யாளியன் றனைக்கண் டேனயலே, தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே'' (சிற். 244.)

**412-4. சேவிலி கூற்று.**

412. பூணேறிய கொங்கையென்றது தலைவியை. பெற்ற பாவி யென்றது நற்றாயை. கண்டுகொண்டு காணேனெனச் சொல்லவோ.

413. கதிர் - சூரியன். அவ்வாறு திங்கள் - ஆறு ஆறு மாதங்கள்; உத்தராயணமும் தட்சிணாயனமும். பாலையின் வெம்மை தாங்காமல் சூரியன் வடக்கும் தெற்கும் செல்லுகின்றானென்றாள்.

414. அசைந்தாடியே எழுந்தருளுபவராதலால், தியாகேசருக்கு அசைந்தாடிய பெருமானென்பது ஒரு திருநாமம்.

### தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்

415. மொழிகண்டு கிள்ளை திரண்டதிங் கேநின் முகத்திரண்டு
விழிகண்டு வேலென்று மீண்டதங் கேயன்பர் மெய்ந்நெறிக்கே
வழிகண் டவர்திரு வாரூர்த் தியாகர் மணிவரைமேல்
பொழிகொண்ட னேர்குழ லாயிது நான்கண்ட பூம்பொழிலே.

### தலைவி முன்செல்வோர்தம்மோடு தான்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல்

416. தாருக்கு முன்செல்லு மன்றலைப் போலத் தமனியத்தின்
தேருக்கு முன்செல்லு மந்தண ரேதம்மைத் தேடுகின்ற
பேருக்கு முன்செல்லு மாரூர்த் தியாகர் பிறங்கலிலும்
ஊருக்கு முன்செல்லு மென்றுயிர்ப் பாங்கியர்க் கோதுகவே. (ச)

### முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

417. சையத் திழிதருங் காவேரி நாடர் சதுமுகனூர்க்
கையத்தி னூர்திரு வாரூ ரிளங்கொடி யாயத்துள்ளீர்
கொய்யத் தருமலர் வில்வேளுந் தேவியுங் கூடியிந்த
வையத்தில் வந்தன ரென்றோத வையத்தில் வந்தனரே. (ரு)

---

**415. தலைவன் கூற்று.**

நான் உன்னைக் கண்ட. முன்பு தலைவன் தலைவியைக் கண்ட இடங்கள் இதிற் கூறப்படுகின்றன. (பி - ம்.) 2. மேனெறிக்கே.

**416. தலைவி கூற்று.**

தாருக்கு - பூவிற்கு. மன்றல் - நறுமணம். தேர் - தலைவனும் தலைவியும் ஏறி மீண்டுவருகின்ற தேர். உம் ஊருக்கு. முன்செல்லுமென்று - முன்னே தலைவி வருவாளென்று. அந்தணரே, ஓதுக.

**417. முன்சென்றோர் கூற்று.**

சையம் - காவிரி தோன்றும் மலை. ஐயம் - சந்தேகம். மலர்வில் - மலராகிய வில்; கரும்புவில்லையன்றிப் பூவாகிய வில்லும் மன்மதனுக்கு உண்டென்பர்; இது காமகாண்டமென்று கூறப்படும்; “கயக்கணின்ற பூவின் மிக்க காமகாண்டங் கன்னல்வில், இயக்கமான பாரவில்” (கந்த. காமதகனப். 62.) வையம் - பூமி, தேர். தலைவியும் தலைவனுமென்னும் எழுவாயை வருவித்துரைக்க.

பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்

418. நின்னா ருயிரன்ன நேரிழை மாதரு நேரிழையாள்
தன்னா ருயிரன்ன மீளியு மாயிங்குச் சார்ந்தசெயல்
சொன்னார் சிலர்திரு வாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
இந்நாளன் றாயந்த மின்னாளை நீபெற் றெடுத்ததுவே. (சு)

நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்

419. வேதாவு மாயனு மாரூர்த் தியாகரும் வேட்டகத்தே
ஆதார மாகி யுறைவது போலென் னகத்தினிலென்
தாதார் குழலி யுடனிற்கு மோவன்றித் தன்னைப்பெற்ற
மாதா மனைவைகு மோவெறி யாடுதல் வல்லவரே. (எ)

---

## உச. தன்மனை வரைதல்

நற்றாய் மணஞ்செய் வேட்கையிற் செவிலியை வினாதல்

420. சீரறு காலனைச் செற்றார் தியாகர் சிலம்பனையாய்
நேரறு காளையை யீன்றாளுக் கீது நிகழ்த்துவமோ
ஓரறு கால்வண் டுறைகுழன் மானை யுயர்மணஞ்செய்
தீரறு காற்றெய்வ நன்னீர் தெளிக்கவெம் மில்லிலென்றே. (க)

---

418. **பாங்கியர் கூற்று.**

தலைவி மீண்டனள்; ஆதலால் தலைவியைப் பெற்றெடுத்த நாள் இந்நாள் தான்.

419-20. **நற்றாய் கூற்று.**

419. வேதா - பிரமன்; அவருடைய வேட்டகம் கலைமகளின் இருப்பிடமாகிய வெண்டாமரைப் பூ. மாயன் - திருமால்; திருமாலிருப்பது திருமகளவதரித்த இடமாகிய பாற்கடல். தியாகர் இருப்பது உமாதேவியார் பிறப்பிடமாகிய மலை. ஆதாரமாகக் கொண்டு. என் அகத்தினில் - என் வீட்டில். நிற்குமோ - தலைவன் தங்குவானோ. வல்லவரே, உரைமினென ஒரு சொல் வருவிக்க. தன் வீட்டில் தலைவன் இருக்கலாமென்பதை முதலிரண்டடியாலும் தலைவியின் நற்றாய் புலப்படுத்தினாள்.

(பி - ம்.) 4. மனைவைக்குமோ.

420. காளையை ஈன்றாள் - தலைவனுடைய நற்றாய். ஆறுகாலையுடைய வண்டு. ஈர் அறுகால் - குளிர்ந்த அறுகம் புல்லால். எம்மில்லில் மணஞ்செய்து அறுகால் நீர் தெளிக்கவென்று நிகழ்த்துவமோ.

சேவிலிக்கு இதுளை வரைந்தமை செப்பல்

421. முருந்தூர் நகைச்சி மணத்தையவ் வேலர் முடித்ததிங்கு
வருந்தா துவர்சொல்ல யானறிந் தேன்வண்டு மல்லிகைமேல்
இருந்தூது தண்டலை யாரூர்த் தியாக ரிமயவெற்பில்
அருந்தா துவளை யிதழாளை நல்கிய வன்னையரே. (உ)

வரைந்தமை சேவிலி நற்றாய்க்கு உணர்த்தல்

422. பணத்தர வம்புனை யாரூர்த் தியாகர் பனிவரைவாய்
நிணத்தலர் மாலை புனைவேலர் செய்கை நினைந்திலையோ
கணத்தலர் பூவை முடிப்பதன் றேயெங்குங் கண்டதவர்
மணத்தை முடித்தன ரென்றார்கள் பூவைக்கு மாலையிட்டே. (ரு)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றேன்றல்

423. பரையாளும் பாகத்த ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
திரையா கியநின் கிளைக்குரைப் பாய்செழுந் தேன்கலந்த
உரையாளை யூனி லுயிரனை யாளை யுயர்ந்தகொங்கை
வரையாளை யான்வரைந் தேனணங் கேயெங்கண் மாநகர்க்கே.

---

421. பாங்கி கூற்று.

முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. அவ்வேலர் - அவளை உடனழைத்துச் சென்ற தலைவர். மணத்தை முடித்ததைச் சொல்ல. இருந்து ஊது. தாதுவளை - தாதுளம்பழம்.

422. சேவிலி கூற்று.

நிணம் வேலுக்கு அடை. வேலர் - தலைவர். அவர் - தலைவர். பூவைக்கு - தலைவிக்கு. பூவை (மலரை) முடித்தல் உலகியல்பாக இருக்க, பூவைக்கும் மாலையைத் தனியே இட்டு வைத்து மணத்தை முடித்தன ரென்றது ஒரு நயம்.

423. தலைவன் கூற்று.

பரை - உமாதேவியார். திரையாகிய - கடல்போன்ற; திரை: ஆகுபெயர்; "கடல்புரை பெருங்கிளை நாப்பண்" (தொல். களவு. 23, ந. மேற்.) வரைந்தேன் - மணஞ்செய்து கொண்டேன். வரையாளை வரைந்தே னென்பது சொன்முரண். (பி - ம்.) 2. தேனலர்ந்த.

பாங்கி யான் அது முன்னே சாற்றினேனென்றல்

424. விடத்தேர் கிளர்கண்ட ராரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கடத்தேர் படைத்த களிற்றண்ண லேமுன்னங் கைப்பிடித்த
படத்தே வரைய வரியவெம் மங்கைகைப் பற்றியுன்னூர்
இடத்தே வரைந்ததெல் லாமுரைத் தேனென்னை யீன்றவட்கே.

---

## உரு. உடன்போக்கு இடையீடு

நீங்குங் கிழத்தி பாங்கியர்தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தல்

425. கற்றோர் பரவிய வன்மீக நாதர் கமலைவெற்பில்
பொற்றோள் வரையன்ன பாங்கிய ரோடு புகன்றருள்வீர்
சுற்றோ திமமன்ன தங்களை நீங்குந் துயரதல்லால்
மற்றோர் குறையின்றிச் செல்லுகின் றேனென்று மாதவரே. (க)

தலைமகள் தன்சேலவு ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தல்

426. நன்மார்க்க மேதரு மாரூரர் காவிரி நாட்டிலிந்த
வன்மார்க்க மீதண்ண றிண்டேர் மிசைச்செல்லும் வண்ணமெல்லாம்
என்மார்க்க நாடி யிரங்குமென் றாயர்க் கியம்புங்கண்டீர்
சன்மார்க்கம் வேண்டிச் சகமார்க்கம் வீட்டிய தாபதரே. (உ)

---

424. **பாங்கி கூற்று.**

விடத்து ஏர்; ஏர் - அழகு. கடத்து - மதத்தால். ஏர் - எழுச்சி. முன்ன மென்றது மடலேறுவேனென்ற காலம். வரைய - எழுதுதற்கு. வரைந்தது எல்லாம் - கலியாணம் செய்த சிறப்பு முழுவதையும். முன் வரைய வரிய மங்கையை வரைந்ததென்றது ஒரு நயம்.

(பி - ம்.) 1. விடத்தே சுளகண்டர். 2. கைபுனைந்த. 3. மங்கையைப்.

425-6. **தலைவி கூற்று.**

425. வரையன்ன - மூங்கிலை ஒத்த. ஓதிமம் - அன்னப்பறவை. மாதவரே, புகன்றருள்வீர்.

426. வன்மார்க்கமீது - வலிய பாலைநிலத்தின் வழியே. செல்லும் - யான் செல்லுகின்ற. கண்டீர்: அசை. சன்மார்க்கம்: சரியை முதலிய நாற்பாதங்களுள் நாலாவதாகிய ஞானமார்க்கம். சகமார்க்கம் - உலகியல்.

(பி - ம்.) 4. சகமார்க்கம் பற்றிய.

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்

427. நல்ல நிலாவின் மலயா நிலந்தொட நாண்மலர்மேற்
பல்லவ மீதி னடப்பவர் போலவெம் பாலையிலே
வல்லவ னோடுன் மகணடந் தாள்செம் மலருடனே
நெல்லரி யும்வய லாரூர்த் தியாகர் நெடுங்கிரிக்கே. (௩)

தமர் பின்சேறலைத் தலைவி தலைவற்குணர்த்தல்

428. தாரா தரங்க டாரா தர மீதுநற் சாபங்கொண்டு
காராழி யம்பு சொரிவது போலக் கமலமங்கை
ஆரா தனம்புரி யாரூர்த் தியாக ரசலத்தண்ணல்
போராழித் தேர்மிசை வில்வேட ரம்பு பொழிகுவரே. (௪)

அவன் விடுத்து அகறல்

429. ஊரன் புகழ்திரு வாரூ ரிடத்துன் னுறவினுக்கும்
மாரன் பகைக்கும் பயந்துசெல் வேன்வன வன்கொடிபோற்
சேரன் கொடிகொண்டு நும்மையர் தோன்றினர் தென்னவனும்
வீரன் கொடியிணை யாய்க்கணை யான விழிக்கொடியே. (௫)

தமருடன் செல்பவள் அவன் புறம் நோக்கிக் கவன்று அரற்றல்

430. விற்பிடித் தெய்த விறல்வே டுவரும் வெருவிக்கையில்
புற்பிடித் தோடப் பொருதநம் வேலர் புறங்கொடுத்தார்
நற்பிடிக் கொத்த நடைபாகர் த்யாகர்நன் னாட்டினெஞ்சே
அற்பிடித் தெய்துமென் றேமறைந் தேகுவ னாதித்தனே. (௬)

---

427. அந்தணர் கூற்று.

மலயாநிலம் - தென்றற்காற்று. மலர்மேலும் பல்லவமீதிலும் நடப்பவர்; பல்லவம் - தளிர். நெடுங்கிரிக்கே நடந்தாள்.

428. தலைவி கூற்று.

தாராதரங்கள் - மேகங்கள். தாராதரம் - மலை. சாபம் - இந்திரவில். அம்பு - நீரை. வில்லைக்கொண்டு அம்பைச் சொரிவதென்பது ஒரு நயம். ஆராதனம் - பூசை.

429. தலைவன் கூற்று.

ஊரன் - சுந்தரமூர்த்தி நாயனார். வளவன் கொடி - புலி. கொடிபோல் நும்மையர் தோன்றினர். சேரன் கொடி கொண்டு - வில்லைக்கொண்டு. தென்னவனும் வீரன் கொடி - மீன். இணையாய் - ஒப்பாகி.

430. தலைவி கூற்று.

வேடுவர் - உடன்போக்கில் தலைவனோடு எதிர்த்துப் போர் செய்த வேடர்; "மன்போரி னுண்மைக் கிடைந்தோடி னாடி" (தூலோத்.

## உசு. வரைதல்

சென்றோன் மீண்டுவந்து வரைந்துழிக் கண்டோர் மகிழ்தல்

431. குயிற்கா தலிக்குங் கனிமொழி யாண்மணக் கோலமுமான்
உயிர்க்காத லண்ணன் மகிழ்ச்சியுங் காணவெள் ளோதிமங்கள்
வெயிற்காயுந் தண்வய லாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மயிர்க்கால்க டோறும் விழிபடைத் தானில்லை மான்மகனே.

---

## உஎ. இல்வாழ்க்கை

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்

432. சினைக்கே கயங்களைக் காவில்வைத் தாயன்றிற் சேவலெல்லாம்
பனைக்கே துணையுடன் வாழவைத் தாய்தமைப் பாடுமன்பர்
வினைக்கேத மாற்றிய வாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
மனைக்கே யிவளுடன் வாழ்வைத் தாயென்னை வாணுதலே. (க)

---

கோவை, 395.) புறப்பிடித்தல் தோல்விக்குறி; "பகைவர் புல்லார்க" (ஐங். ச.) தலைவன் புறங்கொடுத்தது அச்சத்தாலன்று; தலைவியின் தமரென னும் அன்பினால். சூரியன் மறைந்தேகுவது இருள் தன்னைப் பிடித்துக் கொள்ளுமென்பதனால் அன்று.

(பி - ம்.) 2. புறப்பிடித் தெய்த. 4. ஏறுவன்.

431. கண்டோர் கூற்று.

மால்மகன் - திருமாலின் மகனாகிய பிரமன்; மயக்கத்தையுடையவ னென்பது வேறு பொருள். "வெச்சென்ற கொங்கையுங் காணக்கண் ணாயிரம் வேறிலையே" (455) என்பர் பின்.

432. தலைவன் கூற்று.

இரவுக்குறிக்கண் தான் வந்ததைத் தெரிவித்தற்கு மயில்களைக் கல்லா லெறிந்து துன்புறுத்தாதபடி செய்தமையால் கேகயங்களைக் காவில் வைத்தா யென்றும், தான் மடலேறாதபடி செய்தமையால் அன்றிற்சேவல் பனைக்கே துணையுடன் வாழவைத்தாயென்றும் தலைவன் கூறினான். மனைக்கே - மனை யின்கண்.

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

433. மருப்பீருங் கொங்கை மடவார் நடந்த வழியிற்சந்தும்
கருப்பூர முங்கம ழாரூரிற் றேவர கண்டர்வெள்ளிப்
பொருப்பீரென் மங்கையு நீவிரு மிங்கின்று போலவென்றும்
இருப்பீர் திருவுந் திருமாலு மும்மை யிணைசொல்லவே. (உ)

வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை பாங்கி தலைவியை வினுதல்

434. நின்னு கமுமன்பர் தம்மா கமுமுங்க ணெஞ்சமுநின்
தன்னு ருயிரு முயிருமொன் ருகத் தழுவ லுற்ருய்
மன்னுகம் பூண்டவ ராரூ ரிடத்து வரையவரும்
அந்நா ளளவு மிருந்ததெவ் வாறிந்த வன்புகொண்டே. (ங)

தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங் கூறல்

435. வேலா யுதன்றந்தை யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
கோலார் நறுந்தழை கைக்கொண்டெ ஞருயிர் கொண்டிருந்தேன்
பாலாழி தந்த மலர்ச்சீதை யஞ்சனை பாலன்றந்த
மாலாழி கைக்கொண்டு மாலாழி கைவிட்ட வாறென்னவே. (ச)

---

433-4. **பாங்கி கூற்று.**

433. யானையின் கொம்பை வெல்லும் கொங்கை.

(பி - ம்.) 1. மருப்பூருங் கொங்கை. 2. கருப்பூர முந்திகழ்.

434. உயிரும் - தலைவனுயிரும். மன் நாகம்; நாகம் - பாம்பு. இருந்தது - பொறுத்திருந்தது.

(பி - ம்.) 2. தழுவவைத்தாய். 3. மன்னுரம் பூண்ட.

435. **தலைவி கூற்று.**

கோல் - சிறுகொம்பு. தழை - தலைவன் பாங்கியிற் கூட்டத்தின் போது கொடுத்த தழை. அஞ்சனைபாலன் - அனுமான். மாலாழி - இராமனுடைய மோதிரத்தை. மால் ஆழி கை விட்ட வாறு என்ன - மயக்கமாகிய கடலை நீங்கிய விதத்தைப்போல. அனுமான் கொடுத்த இராமனுடைய மோதிரத்தைக் கைக்கொண்டே சீதை உயிர்விடாமலிருந்தது போல, நான் தலைவன் கொடுத்த தழையைக்கொண்டு என்னுயிரை விடாமலிருந்தேன்.

(பி - ம்.) 2. கைக்கொண்டிந் நாளுயிர். 3. சீதைக் கஞ்சனை பாலன்.

தலைவனைப் பாங்கி வரையு நாளளவும் நிலைபெறவாற்றிய
நிலைமை வினுதல்

436. வான்காத்த புள்ளு மலர்காத் துறைகின்ற வண்டுந்தங்கள்
ஊன்காத் திருக்கின்ற வாவியும் போலிவ ளோடமைந்தாய்
கான்காத்த கொன்றைய ராரூரிற் றேவர கண்டர்வெற்பில்
தேன்காத்த தாரண்ண லேவரை யாமுனென் செய்தனையே. (ரு)

பாங்கி மணமனைச் சென்ற செவிலிக்கு இருவர் அன்பும் உரைத்தல்

437. சுமைப்போ லிருந்த வினைமாற்றி யென்னையுந் துய்யவன்பர்
தமைப்போ லருள்செய்த வாரூர்த் தியாகர் சயிலத்தன்னே
அமைப்போலுந் தோளியு மன்பருங் கூடி யழுந்தியகை
இமைப்போது நீங்கினு நாறுகம் போன்மனத் தெண்ணுவரே.

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உணர்த்தல்

438. மூவர்க்கு முப்பத்து முக்கோடி யென்னு முறைமைபெற்ற
தேவர்க்கு முன்னெனு மாரூரர் செம்பொற் றியாகரைப்போல்
மாவர்க்க மேவு மலர்க்குழ லாளுமில் வாழ்க்கையினுல்
யாவர்க்கு முன்னெனு மேன்மைபெற் ருளென்னை யீன்றவளே.

மணமனைச் சென்றுவந்த செவிலி போற்றேடி கற்பியல்
நற்றுய்க்கு உணர்த்தல்

439. வெற்பிற் பிறந்தமை யாலிறை யோனுடன் மேவுதலாற்
கற்பிற் சிறந்தறந் தேடுத லாற்கம்பிக் காதழகர்

---

436-8. **பாங்கி கூற்று.**

436. புள் - வானம்பாடி. ஊன் - உடல். ஆவி - உயிர்.

437. சுமைப்போல்; சுமை - பாரம்; அமைப்போலும்; அமை - மூங்கில்; பகரவொற்றுக்கள் விரித்தல் விகாரம். கை நீங்கினும். நூறு உகம் - நூறு யுகம்.

438. மா வர்க்கம் - வண்டின் கூட்டம். தேவர்க்குள் ஸ்ரீ தியாகேசர் முதன்மை பெற்றது போல், கற்புடை மகளிர்க்குள் தலைவி முதன்மை பெற்ருள். (பி - ம்.) 1. முதுமைபெற்ற.

439. **செவிலி கூற்று.**

தலைவிக்கும் உமாதேவிக்கும் சிலேடை.

எற்பிற் செறிதொடை யாரூர்த் தியாக ரிமயவெற்பிற்
பொற்பிற் சிறந்திடு மன்னேயுன் மாதன்ன பூரணியே. (அ)

---

## உஅ. பரத்தையிற் பிரிவு

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது இதாம் அவ்விறைவிக்கேன்றல்

440. வேதாந்த மாய்ப்பர நாதமு மாய்ப்பர விந்துவுமாய்
நாதாந்த மானவ ராரூரர் காவிரி நாட்டிலண்ணல்
சூதார்ந்த கொங்கையர் சேரிபுக் கானென்ற சொல்லுவல்லி
காதார்ந்த போழ்தது தானே புலவியின் காரணமே. (க)

தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்

441. காரோடுந் தண்டலை யாரூரிற் றேவர கண்டர்வெற்பில்
ஆரோடு சொல்வ தவர்செய்த தீமையென் னாகமெல்லாம்
வேரோடு நின்றது பொன்னிற மாகி வெதும்புங்கண்ணில்
நீரோடு சென்றதெனவே யுறக்கமு நீங்கியதே. (உ)

---

வெற்பு - மலை. இறையோன் - தலைவன், சிவபெருமான். அறந்தேடுதல் - தருமத்தை வளர்த்தல். அன்னபூரணி: அம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று. இதனால், தலைவி வருபவர்க்கெல்லாம் தடையின்றி அன்னமளிக்கின்றாளென்றாள்.

(பி - ம்.) 4. பொற்பிற் செறிந்திடும்.

**440. கண்டோர் கூற்று.**

அண்ணல் - தலைவன். கொங்கையர் - பரத்தையருடைய. வல்லி - தலைவியின். புலவியின் - தலைவியின் ஊடலுக்கு.

(பி - ம்.) 4. புலவிக்குக் காரணமே.

**441. தலைவி கூற்று.**

ஆகம் எல்லாம் - உடம்பு முழுதும். பொன்னிறம் - பசலைநிறம். நீரோடு......நீங்கியதே: "போகுந் துயிலையென் கண்ணீர்க டேடிப் புறப்பட்டவே" (343) என்றார் முன்னும்.

(பி - ம்.) 3. வேரோடு நின்றது சோபமு மாவி வெதும்பும்.

ஈங்கிது வென்னெனப் பாங்கி வினுதல்

442. கங்கையிற் றோய்ந்தும் வினையுள தோநித்தங் காதலருண்
கொங்கையிற் றோய்ந்துந் துயரமென் னேவொரு கோடிதும்பி
பங்கயத் தேனுக ராரூர்த் தியாகர் பணிவரைமேற்
செங்கயல் போலக் குழைதா வியவிழிச் சேயிழையே. (௩)

இறைமகன்புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்

443. புன்னைப் புதிய பொடிதூவிப் பாடலம் போதுபொரித்
தென்னிற் சமைத்த மணற்சோறு வேண்டி யிரந்தவர்க்குக்
கன்னற் கனிமொழி பங்கார் தியாகர் கமலைமின்னே
செந்நெற் பதமுஞ் செழும்பாலு மின்று தெவிட்டியவே. (௪)

தலைவியைப் பாங்கி கழறல்

444. வெறுத்தார் கொழுநர் நமைப்பொது மாதரை வேண்டினரென்
றுறுத்தார்வ மற்ற வுரைபக ரேலய ணோர்சிரத்தை
அறுத்தார் தியாகர் கமலா லயத்தி லணங்கனையாய்
பொறுத்தாளன் றேதிரு மால்பொது மாதரைப் புல்லவுமே. (௫)

தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுத்துழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்

445. மருங்கோலஞ் சங்கெறி யாரூர்த் தியாகர் வரையில்வண்டு
நெருங்கோலஞ் சுற்றிய பூங்குழ லாடன் னிலையுரைக்கும்

---

442. பாங்கி கூற்று.

தோய்ந்தும் - ஆடியும். சேயிழையே, துயரம் என்னே என்க.

(பி - ம்.) 1. குறையுள தோ.

443. தலைவி கூற்று.

பாடலம்போது - பாதிரிப்பூ. என் இல் - என்னுடைய சிற்றிலில். பதம் - சோறு. இரந்தவர்க்குத் தெவிட்டிய.

444. பாங்கி கூற்று.

நமைக் கொழுநர் வெறுத்தார். பொது மாதரை - பரத்தையரை. ஒறுத்து ஆர்வம் அற்ற. அணங்கு - அருந்ததி. திரு - திருமகள். பொது மாதர் - ஆய்ச்சியர்; பரத்தையரென்பது மற்றொரு பொருள்.

(பி - ம்.) 2. ஒறுத்தார்வ மாற.

445-6. உழையர் கூற்று.

அருங்கோல வஞ்சிதன் செங்கோலங் காணு மளவில்வெய்ய
கருங்கோலங் கண்ட ஞமலியன் றேபொய்க் கணிகையரே. (சு)

446. தீபெற்ற பெண்ணெனச் செங்கோலஞ் செய்துதன் சேடிதனை
வேய்பெற்ற தோளி செலவிடுத் தாள்வடி வேலெடுத்த
சேய்பெற் றவர்திரு வாரூர்த் தியாகர் சிலம்பில்வெறு
வாய்பெற்று மெல்பவ ரன்றோ விலைப்பொது மங்கையரே. (எ)

பரத்தையர் கண்டு பழித்தல்

447. தென்பூ வணத்துறை யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
என்பூவை நீரன்றி யாரறி வார்கற்பி லேற்றம்பெற்ற
மன்பூவை யன்னசொன் மென்பூவை நேரடி வஞ்சிநல்லாள்
தன்பூவை யூரின் மடவா ரறிவர் தனித்தனியே. (அ)

பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தல்

448. போதிற் செறிகொன்றை யாரூர்த் தியாகரைப் போற்றுங்கஞ்ச
மாதிற் செறிந்த வளவய லூரநின் வாழ்மனைக்கே

---

445. ஓலம் - அலை. ஓலம் சுற்றிய - முழக்கம் சூழ்ந்த. செங்கோலம் - செந்நிறக் கோலம். கருங்கோலம் - கரிய பன்றியை. ஞமலி - நாய். (பி - ம்.) 1. வருங்கோலம்.

446. தோளி - தலைவி. வேய்பெற்ற தோளி சேடிதனைச் செல்ல விடுத்தாள். சேய் - முருகக் கடவுளை. வெறுவாய் பெற்று மெல்பவர்: வெறுவாயை மெல்பவர்க்கு அவல் கிடைத்தாற்போல என்னும் பழமொழியை உட்கொண்டது; "வெறுவாய்மெல் வார்கட் கவல்கிடைத் தாங்குமுன் வீணிலிகழ், உறுவார் தமக்கிவ் வரத்தமெங் கேவர் துதவியதே" (வெங்கைக். 383.)

447-8. **பரத்தையர் கூற்று.**

447. இது தலைவனை நோக்கிப் பரத்தை கூறியது. பூவணம் - பாண்டி நாட்டிலுள்ள ஒரு திருப்பதி. என் பூவை - எனது பூப்பை. ஏற்றம் பெற்ற வஞ்சி, சொல்வஞ்சி, நேரடிவஞ்சி யெனக் கூட்டுக. பூவை அன்ன - நாகணவாய்ப் பறவையை யொத்த. பூவை நேர் - பூவினை ஒத்த. தன் பூவை - தன் பூப்பை. ஊரறியச் செவ்வணியணிந்து சேடியை விடுத்தலின் ஊரின் மடவாரறிவரென்றாள். நேரடி வஞ்சியென்பது ஒரு நயம்; நேரடி - நாற்சீரடி; வஞ்சிப்பாவிற்கு இருசீரும் முச்சீருமே உரியன.

(பி - ம்.) 3. மெல்லடி மங்கைநல்லாள்.

448. கஞ்சமாது இல் - திருமகளின் இருப்பிடமாகிய தாமரைப் பூக்கள். சாதிக்கொடி ஒன்று - தலைவி. வெண்பூவைப் பூப்பதாகிய

சாதிக் கொடியொன்று செம்போது பூத்தது தக்கதன்றே
வீதிக் கணிகையர் காணு வகையங்கு மேவுகவே. (கூ)

தலைமகன் வரவுகண்டு வாயில்கள் மொழிதல்

449. விரும்பார் புரஞ்செற்ற வாரூரர் வீதி விடங்கர்வெற்பிற்
கரும்பார முந்திய தண்புன லூரிற்செங் கஞ்சமன்ன
அரும்பாத முல்லை யிளங்கொடி பூத்த வதிசயத்தின்
பெரும்பான்மை சொன்னள வேநடந் தார்நம் பெருந்தகையே.

தலைமகன் வரவு பாங்கி தலைவிக்கு உரைத்தல்

450. தனத்திற் சிவப்புங் குழைமேற் சிவப்புநின் றாதிகுழற்
கனத்திற் சிவப்புங்கண் டன்பர்வந் தார்நுதற் கண்டிறந்து
சினத்திற் சிவந்தவ ராரூர்த் தியாகர் சிலம்பின்மின்னே
மனத்திற் சிவப்பையுங் கண்மேற் சிவப்பையு மாற்றுகவே. (கக)

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்

451. இலவுக் கிசைந்த துவரித ழாய்நம் மிறைவர்வந்தார்
புலவிக் கிடாம லெதிர்கொள்ளு வேன்மழை போனறவம்

---

சாதிக்கொடி செம்போது பூத்ததென்பது ஒரு நயம். ஊர, பூத்தது; அங்கு மேவுக.

449. **வாயில்களின் கூற்று.**

கரும்புகளின் ஆரத்தை உந்திய; ஆரம் - முத்து. பாதத்தையுடைய. முல்லையிளங்கொடி - கற்புடைய இளங்கொடி; தலைவி. சொற்கிடக்கையின் படி அரும்பாத முல்லைக்கொடி பூத்ததென்று தோற்றுவது ஒரு நயம். சொன்னளவே - சொன்ன அளவே; தொகுத்தல். பெருந்தகை வந்தனர்.

(பி - ம்.) 1-2. விடங்கர் செங்நெற், கரும்பு. 4. சொல்லளவே.

450. **பாங்கி கூற்று.**

தனத்திற் சிவப்பு - செஞ்சாந்து. குழைமேற் சிவப்பு - குழையிலுள்ள மணிகளின் சிவப்பு. தாதி - சேடி. குழற்கனத்திற் சிவப்பு - கூந்தலாகிய மேகத்தின்மேற் சூடிய பூவின் சிவப்பு. மனத்திற் சிவப்பை - மனத்திலுள்ள கோபத்தை. இனிச் சினவாதே யென்றபடி.

451. **தலைவி கூற்று.**

இலவுக்கு இசைந்த - இலவம்பூவை ஒத்த. புலவிக்கு இடாமல் - புலவிக்குத் தலைவரை இலக்காகக் கொள்ளாமல். பலவில் - பலா மரத்தின்கண். இந்து காந்த நெடுஞ்சிலை - சந்திரகாந்தக்கல்.

(பி - ம்.) 3. பலவிற் சொரியும்.

பலவிற் பெருகுந்தென் ஞரூர்த் தியாகர் பணிவரைமேல்
நிலவிற் குருகுமன் றேவிந்து காந்த நெடுஞ்சிலையே. (கஉ)

புணர்ச்சியின் மகிழ்தல்

452. நீடிய வேற்கண் சிவப்பே றினநுத னித்திலவேர்
கூடின வாடின மேனியெல் லாமுமை கூடவசைந்
தாடி வருந்திரு வாரூர்த் தியாக ரகளங்கநாட்
டூடிய போழ்தினுங் கூடிய போழ்தினு மொத்தனவே. (கங)

வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி மாலை வேலண்ணல்
வாயில் வேண்டல்

453. காக்கு மருந்தவர் போற்றுந் தியாகர் கமலைவெற்பில்
வாக்கு மருந்தன மின்னு ளிடத்தென் மயற்பிணியைப்
போக்கு மருந்துண் டதுபோ லவடன் புலவியையும்
நீக்கு மருந்துன் னிடத்திலல் லாலில்லை நேரிழையே. (கச)

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்

454. ஊனு ருடலைப் பிறர்பால்விற் றந்த வுடல்வளர்க்கும்
மானூர் பொதுமனை காப்பவ ரேவரி வண்டுகிண்டும்
தேனூர் கடுக்கைய ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
ஆனாத மங்கை புதல்வனை யீன்றுநெய் யாடினளே. (கரு)

தலைவன் தன்மனத்து உவகை கூர்தல்

455. மைச்சென்ற கூந்தலு நெய்புங்கைப் பாலனு மாந்தளிரிற்
பச்சென்ற தண்டு நிகரான மெய்யிற் பசுநரம்பும்

---

452-3. **தலைவன் கூற்று.**

452. நித்தில வேர் - முத்தைப்போன்ற வேர்வைத்துளிகள். அகளங்க நாட்டு - சோழ நாட்டில். ஒத்தன - இரண்டு காலத்திலும் தலைவியின் வேறுபாடுகள் ஒத்தன. (பி - ம்.) 2. கூடியசைந்து. 4. ஒத்தனரே.

453. காக்கும் - இந்திரியங்கள் தீநெறியிற் செல்லாதபடி காக்கும். மருந்து அன்ன - அமுதத்தை ஒத்த. நேரிழையேயென்று விளித்தது பாங்கியை.

454. **பாங்கி கூற்று.**

மானூர் - பரத்தையர். பொதுமனை காப்பவரென்று தலைவனைக் கூறினள். ஆனாத - புகழ்தற்கு அடங்காத.

455. **தலைவன் கூற்று.**

தண்டு - தளிரின் நரம்பு; தலைவியின் மேனிநரம்புக்கு உவமை: வெச்சென்ற - வெம்மையுற்ற; “தண்ணெனவும் வெச்செனவுந் தந்து”

கச்சென் றராவணி வன்மீக நாதர் கமலையன்னூர்
வெச்சென்ற கொங்கையுங் காணக்கண் ணாயிரம் வேறிலையே.

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்

456. எள்ளப் படாதநின் காலைக்கை யார வெடுக்கவுநின்
பிள்ளைப் பிறையிற் குறுவேர் துடைக்கவும் பின்னலவிழ்த்
தள்ளிப் புதுமல ரோதியிற் சூட்டவு மன்பர்வந்தார்
கள்ளக் கயல்விழி மானே தியாகர் கமலையிலே. (கஎ)

தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்

457. வேளிடும் பூசலுங் கூர்வா ளியுமவன் மெய்யுங்கையும்
தூளிடும் பார்வைய ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேல்
வாளிடும் வேலர் பொதுச்சேரி மாதர் மனைமிதித்த
தாளிடு முன்னந் தலைவாயி லெங்கணுந் தாளிடுமே. (கஅ)

458. முலைப்பா லொழுக்குங் கசிந்தூ றியமெய்ம் முடையுமிந்தக்
கலைப்பா லழுக்குநின் மேற்படு மாயிற் கருணைசிந்து
மலைப்பாவை பங்கின ராரூர்த் தியாகரை வாழ்த்துமன்னா
விலைப்பாவை யர்க்கு வெறுப்பாந் தொடாதியென் மேனியையே.

---

(சேதுபுராணம். கடவுள். மலைவளர்காதலி.) கண்ணாயிரம் வேறிலை: "மயிர்க்கால்க டோறும் விழியாய்ப் படைத்திலன் மான்மகனே" (431) என்றார் முன்னும். (பி - ம்.) 1. கூந்தலி னெய்யும்.

456. **பாங்கி கூற்று.**

எள்ளப்படாத - இகழப் படாத. பிள்ளைப் பிறையென்றது நெற்றியை. அவிழ்த்துச் சூட்டவும்.

(பி - ம்.) 2. பின்ன விழித்து. 4. விழி மாதே.

457-8. **தலைவி கூற்று.**

457. தாள் - பாதம், தாழக்கோல்; "முட்டாத வின்பப் புதாத்திறக் குந் தாளுடைய மூர்த்தி" (சீவக. 1549); இது தாழெனவும் வழங்கும்.

(பி - ம்.) 3. மனையிருந்து.

458. முடை - கெட்ட நாற்றம். கலைப்பால் - ஆடையினிடத்தே யுள்ள. நின்மேற்படுமாயின் பாவையர்க்கு வெறுப்பாம். மேனியைத் தொடாதி.

(பி - ம்.) 3. தியாகர் வரையின்மன்னா. 4. வெறுப்பான தோகொள் ளென் மேனியையே, தொடாதுகொண் மேனியையே.

பாணன் வாயில் பகர்தல்

459. உண்ணீர்மை யற்ற பரத்தையர் பாலன்ப ருற்றதனைக்
கண்ணீர் பொழிய வுரைப்பதென் னேதெய்வ கங்கையெனும்
விண்ணீர் புனைந்த சடைமுடிக் கேயொரு வேடனெச்சிற்
றெண்ணீ ருகந்தில ரோகம லேசத் தியாகருமே. (உ०)

பாணன் வாயில் மறுத்தல்

460. வேய்வீணை யாகிய கைவீணை கற்பது விட்டுப்பொய்யும்
வாய்வீணை யுங்கற்ற பாணர்வந் தார்மறை யேழிசையும்
தோய்வீணை வாசிக்கு மாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேற்
காய்வீணை போன்மொழி யீர்பொழி யீர்பெருங் கன்மழையே.

வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்

461. சுரையோட்டை மெல்ல விழையிடு வேன்சுரி யிட்டென்சென்னிப்
புரையோட்டை முன்ன மிழையிடு வீர்பொறுத் தாலமையும்
விரையோட்டு கொன்றைய ராரூரர் காவிரி வேலைமட்டாக்
கரையோட்ட லாமண்ண லேமட வாரெறி கற்குவையே. (உஉ)

---

459. **பாணன் கூற்று.**

உண்ணீர்மை - அன்பு. வேடன் : கண்ணப்பநாயனார்.

(பி - ம்.) 1. உற்றதுணைக்.

460. **தலைவி கூற்று.**

வேய்வீணையாகிய - மூங்கிலாற் செய்யப்பட்ட வீணையாகிய. வாய் வீணையும் - வாயிற் கூறப்படும் வீண் பேச்சுக்களையும் ; வீண் - வீண் பேச்சு. ஏழிசையும் தோய்ந்த. வீணை வாசிக்கும் ஆரூர்த்தியாகர் : "எம்மிறை நல் வீணை வாசிக்குமே" (தே. திருநா.); "தில்லை யிறையமைத்த, திறலியல் யாழ்" (சிற். 375); தட்சிணாமூர்த்தியின்கையில் வீணை யுண்டென்றும் அந்த மூர்த்திக்கு யோகவீணாதட்சிணாமூர்த்தி யென்பது திருநாமமென்றும் கூறுவர். காய்வீணை - சுரைக்காய்ப் பத்தரை யுடைய வீணையின் இசையை. மொழியீரென்றது பாங்கியரை. கல் மழையைப் பாணன்மீது பொழியீர். கண்மழையென்றும் பாடம் (கோளு.)

461. **பாணன் கூற்று.**

சுரைஓட்டை - சுரைப்பழத்தின் ஓட்டை. இழை யிடுவேன் - நூலிழையால் தைப்பேன். சுரியிட்டு - துளையிட்டு. சுரியிட்டு இழையிடு வேன். சென்னிப்புரையோட்டை - மண்டை யோட்டில் ; புரை - துளை. இழையிடுவீர் - இழையால் தைப்பீர். பொறுத்தால் அமையும் - தலைவி

விறலி வாயில் பகர்தல்

462. தொல்லைப் பழம்பொரு ளாரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேற்
கொல்லைக் கொடியிற் புதுப்பூ மணம்வண்டு கொண்டுவந்தால்
வல்லைக் கணிகை விடுமது வேயன்றி மன்றல்பெற்ற
முல்லைக் கொடிகை விடுவதுண் டோசொல்லு மொய்குழலே.

விறலிவாயில் கண்ட தலைவி கூறல்

463. ஆயுந் தமிழ்த்திரு வாரூர்த் தியாக ரணிவரைமேற்
பாயுங் கலைவிழிப் பாடினி யேசென்று பாடினியே
வேயுங் கரும்பும் விடமுஞ்செந் தேனும்வெள் வேலுஞ்சந்தும்
நாயுஞ் சுரபியு மொன்றாக வெண்ணிய நாயகர்க்கே. (உச)

---

பொறுத்திருப்பின் யான் சென்ற காரியம் கைகூடும். வேலை மட்டா - கடலின் அளவாக. மடவாரெறி கற்குவையை வேலைமட்டாக் காவிரிக்குக் கரையோட்டலாம்; "வாழா திபனம் முறந்தைக் குலோத்துங்க மன்குலத்தோன், சூழாழி யொன்றை யணைகட்டி ழனந்தச் சூழணைபோற், றூழாதுன் பேரையெம் மன்னை தமிய னெடுத்தளவே, ஏழாழி யுங்கட்ட லாமெம் பிராட்டி யெறிந்தகல்லே" (குலோத். கோவை. 454) என்பதை அடியொற்றி வந்தது இச்செய்யுள்.

(பி - ம்.) 1. இழையிடுவீர்.

462. **விறலி கூற்று.**

கணி - வேங்கை; வேங்கையின்பூவில் வண்டு வீழாது. புதுப்பூ மணத்தை வண்டு கொண்டுவந்தால் வேங்கைமரம் கைவிடும், முல்லைக் கொடி கைவிடாதென்பது பொருள். கணிகை யென்பதற்குப் பரத்தை யென்றும், முல்லைக்கொடி யென்பதற்குக் கற்புடைய மங்கையென்றும் குறிப்புப் பொருள் கொள்க.

(பி - ம்.) 3. வல்லிக் கனியை விடுமதுவே.

463. **தலைவி கூற்று.**

கலை - மான். பாடினியே - விறலியே. சென்று பாடு இனியே; "பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடினியே" (அம்பிகாபதி கோவை, 487.) வேய் - மூங்கில். வெள்வேல் - வெள்ளிய வேலமரம். சந்து - சந்தனமரம். தலைவன் தன்னையும் பரத்தையரையும் ஒரு படியின ராக எண்ணுவதை இதனுல் தலைவி குறிப்பித்தாள். நாயகர்க்குச் சென்று இனிப்பாடு. "முருகார் முளரியு முள்ளியு முண்டக மூரியரம், பொருகா ரிரும்புங் கனகமும் பொன்பொங்கு தாரகையும், குருகார் குறுங்கழிக் கெண்டையு மீனங் குரிசிலுக்கு, வருகாத னல்கிய வெங்கையும் யானு

விருந்தோடு வந்துழிப் பொறுத்ததுகண்டு இறையோன் மகிழ்தல்

464. புற்றி லராவணி யாரூர்த் தியாகர் பொதியவெற்பிற்
சுற்றிய நல்விருந் தென்றளவே நகை தோற்றியது
நெற்றியி லோடும் புருவமுன் போல நிமிர்ந்தனமேற்
பற்றிய செம்மையுங் கண்ணீரும் போயின பைந்தொடிக்கே.

தலைவன் சீறேலென்றவள் சீறடி தொழுதல்

465. மாறடி யாக மதுரையி லாடிய வள்ளலின்பம்
வீறடி யார்க்கரு ளாரூர்த் தியாகரை மேவலர்போல்
நூறடி யேன்பிழை செய்ததுண் டாயினு நூபுரச்செஞ்
சீறடி மேல்விழுந் தேன்றவிர் வாயிந்தச் சீற்றத்தையே. (உகூ)

இஃது எங்கையர் காணின் நன்றன்றென்றல்

466. சங்காழி விட்டு நதிக்கே தவழ்ந்து தடத்தில்வைகி
மங்கா வயலிற் பயில்புன லூர மதியுடனே
கங்கா நதியணி வன்மீக நாதர் கமலையிலே
எங்கால் பிடிக்கின்ற தெங்கையர் காணி னியல்பலவே. (உஎ)

---

மடந்தையரே" (அம்பிகா. 421) என்னும் செய்யுளின் பொருளை இதன் பின்னிரண்டடிகளின் பொருள் ஒத்துள்ளது.

(பி - ம்.) 2. கயல்விழிப்.

464-5. **தலைவன் கூற்று.**

464. புற்று இல் அரா - வேள்வித்தீயிற் பிறந்தமையின் புற்றில் வாழ்தல் இல்லாத பாம்பு (சிற். 97, பேர்.) விருந்தொடு வந்தார் தலைவர் என்று சொல்ல எண்ணிய பாங்கி விருந்து என்ற மாத்திரத்தில் தலைவியின் கோபம் நீங்கிற்றென்று அறிந்தான் தலைவன்.

465. மாறு அடியாக - அடி மாறுக. இன்பத்தை அருள். அடியேன் நூறு பிழை செய்த துண்டாயினும்.

(பி - ம்.) 1. ஆடிய மன்னவரை. 2. ஆரூரர் வீதி விடங்கர்வெற்பில். 3. நூபுரஞ்சேர்.

466-7. **தலைவி கூற்று.**

466. சங்கு பயில் புனலூர. எம்முடைய காலை நீ பிடிக்கின்றதை. சங்காழி..........ஊர: பெரிய இடத்தில் தோன்றிய சங்கு அதனைவிட்டு வயலில் தங்கியதுபோல், குலமகளிரோடு அளவளாவுதற்குரிய நீ இழிந்த பரத்தையரோடு கூடியிருந்தாயென்பது குறிப்பு. எங்கால் எங்கையென்பன முரண்.

467. என்னைப் புதிது பணியலுற் றீரெம தெங்கையென்பாள்
தன்னைப் பணிந்து பழகிய தோபொற் சயிலம்பெற்ற
மின்னைப் புணர்பவ ராரூரர் வீதி விடங்கரன்றி
முன்னைக் கொருவரை யும்வணங் காத முடிவளைத்தே. (உஅ)

நின்னலது யாரையும் அறியேனென்றல்

468. கணத்துட ளுடிய வன்மீக நாதர் கமலையிலே
நிணத்தலை வேலை நிகர்விழி யாரென்று நின்பதமே
மணத்தலர் மாலை யெனப்புனை வேன்சிலை வாங்கிடினும்
குணத்தையு நாரியென் னேனதி லேவருங் குற்றமென்றே.

469. விண்ணோர் துளிக்கு விரும்பிய சாதகம் வேறுமொன்றைக்
கண்ணா லெதிர்கொண்டு காணுறு மோகயி லாயமலை
அண்ணா மலையுறை யாரூர்த் தியாக ரணிவரைமேல்
பெண்ணா ரமுதனை யாய்நினை யேனொரு பேரையுமே. (௩0)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்

470. தடுத்தாளுன் பாலனை நின்சாயல் கண்டொரு தையனல்லாள்
அடுத்தாடன் கொங்கை யுறவணைத் தாளழி யாதவரம்
கொடுத்தா ளிறையவ ராரூர்த் தியாகர் குவட்டிலவன்
எடுத்தார்கைப் பாலனென் றேன்விடுத் தாள்விரைந் தேகினளே.

---

467. எங்கையென்றது பரத்தையை. எமதெங்கை யென்றது இயைபு மிகுதி கூறி நகை யாடியபடி (சிற். 373, பேர்.) முன்னைக்கு - முன்பு. வீதி .........முடி: "ஈச னிடத்துமன்றி, வளையாத பொன்முடி சற்றே வளையும்" (**தனிப்.**) என்னும் செய்யுட்பகுதியை இது நினைப்பிக்கின்றது.

468-9. **தலைவன் கூற்று.**

468. பூதகணத்துடன். நின்பதங்களையே புனைவேன். குணம் - நாணி. நான் வில்லைவளைக்கும் காலத்தும் வில்லிலுள்ள நாணியையும் நாரியென் னேன். நாரி - வில்லின் நாண், பெண் ; சிலேடை.

469. சாதகம் - சாதகப்பறவை ; இது மேகத்தினின்று வீழும் நீர்த் துளியையே உண்ணும் இயல்புடையது ; " தண்டா மரைச்சுனையிற் சாதக மும் வேடுவரும், விண்டாரை நாடுகின்ற வேங்கடமே " (**திருவேங்கடமாலை, 97.**) (பி - ம்.) 2. காணுமன்றே.

470-71. **தலைவி கூற்று.**

470. நின் சாயல்கண்டு உன் பாலனைத் தையனல்லாள் தடுத்தாள் ;

471. விளையாடும் பாலனை யுன்சாயல் கண்டொரு மெல்லியலாள்
வளையாடு செங்கையி னலெடுத் தாண்மக மேருவன்ன
கிளையா டகமதி லாரூர்த் தியாகர் கிரியிலெமக்
கிளையா ளெனவறிந் தேனவள் பேரென் னியம்புகவே. (௩௨)

தாமக்குழலியைப் பாங்கி புலவி தணித்தல்

472. உடையாது செம்பொற் குடமுடைந் தாலு முருகியொன்றாய்க்
கிடையா வழகு பெறுமல்ல வோமதிக் கீற்றணிந்த
சடையார் புகழ்த்திரு வாரூர்த் தியாகர் சயிலத்தன்ன
நடையாய் புலவி பெருங்குல மாதர்க்கு நன்றல்லவே. (௩௩)

தலைமகள் புலவி தணியாளாகத் தலைவன் ஊடல்

473. புன்னாகஞ் சூழ்பொழி லாரூர்த் தியாகர் பொதியவெற்பில்
இன்னா ளெனநின் றிரங்குநெஞ் சேயிரு ளூடுவந்த
மின்னாளன் றேயிவள் கைந்நாகங் கண்டுநம் மேல்விழுந்த
அந்நாளன் றேயிது நீவருந் தாய்கொ ளடிபணிந்தே. (௩௪)

---

தையல் - இளமை. வரத்தைக் கொடுத்து ஆளும் இறையவர். காமக் கிழத்தி பாலனை விடுத்தாளாய் எகினள். “எடுத்தார் கைப்பிள்ளை” என்பது ஒரு பழமொழி.

471. ஆடகமதில் - பொன்மதில். பேர் என் - பெயர் யாது ?

472. பாங்கி கூற்று.

செம்பொற் குடம் உடையாது. உடைந்தாலும் அக்குடம் ஒன்றாகிக் கிடையா அழகுபெறும்; அதுபோல நீயும் தலைவனோடு சேர்ந்து ஒன்றாய் வாழவேண்டுமென்பது குறிப்பு.

473. தலைவன் கூற்று.

புன்னாகம் - புன்னைமரம். இன்னாள் - இத்தன்மையையுடையவள்; துன்பஞ்செய்தலை யுடையாள். இருளூடு வந்ததென்றது இரவுக்குறிக்கண் வந்ததை. கைந்நாகம் - யானை. அடிபணிந்து வருந்தாய்கொள்; வருந்தாய் கொள் - வருந்தாதே; கொள் - அசைநிலை.

(பி - ம்.) 1. புன்னாகஞ் சூழ்திரு வாரூர்.

பாங்கி அன்பிலை கொடியை என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல்

474. பூணாக மானவ ராரூர்த் தியாகர் பொருப்பிறைவா
வீணான மங்கையர் தஞ்சேரி யில்வைகி மீண்டுவந்து
நாணாது நின்றெங் களையிகழ்ந் தாயிது நன்றுநன்று
காணாதன் றேகண்ணின் மைக்குற்ற மானது கண்களுக்கே. ()

ஆயிழை மைந்தனும் ஆற்றாமையும் வாயிலாக வரவெதிர் புணர்த்தல்

475. ஏரேறு செம்பொ னடிக்கா யிரநல்கி யெப்பொழுதும்
தேரேறு கின்றவ ராரூர்த் தியாகர் சிலம்பினிலுன்
போரேறு தன்னைப் புயமீ தெடுத்துமென் பூவுடனே
நாரே றியதென்ன வன்பர்வந் தாரிங்கு நன்னுதலே. (௩௬)

வரவெதிர் கோடல்

476. மாலிட்ட மங்கையர் பன்னகம் பூண்டு வளைத்தழும்பு
மேலிட்ட மேனி யிறைவர்வந் தார்மலர் வேரியளி
ஓலிட்ட தண்டலை யாரூர்த் தியாக ருயர்ந்தசிலை
போலிட்ட பூண்முலை மின்னே யெதிர்கொண்டு போற்றுதுமே.

---

474-6. **பாங்கி கூற்று.**

474. பூண் நாகம் ஆனவர்; நாகம் - பாம்பு. பரத்தையர் சேரியில். நன்று நன்று: இகழ்ச்சிக் குறிப்பு. கண்கள் ஏனைய பொருள்களின் குற்றத்தைக் காணுமேயன்றித் தம்பாலுள்ள மையின் குற்றத்தைக் காணாவென்றபடி. குற்றம் காணாது; காணாது - காணப்படாது.

(பி - ம்.) 4. காணாதன் றேதம் மிமைக்குற்றம்.

475. உன் போரேறுதன்னை - உன் புதல்வனை. புதல்வனுக்குப் பூ உவமை; "போதவிழ் தாமரை யன்னநின், காதலம் புதல்வன்" (ஐங். ௪௨௪); நார் தலைவனுக்கு உவமை.

476. மங்கையர் - பரத்தையர். பல் நகம் பூண்டு. இறைவர் - தலைவர். பன்னகம் பூண்டு வளைத்தழும்பு மேலிட்டமேனி இறைவரென்பதற்குச் சிவபெருமானென்றும் ஒரு பொருள் தோற்றியது; பன்னகம் - பாம்பு. சிலை - வில்லாகிய மேருமலை. இறைவரென்றதற்கேற்ப எதிர்கொண்டு போற்றுதுமென்றாள் பாங்கி.

(பி - ம்.) 3. உயர்சிலம்பு.

புணர்ச்சியின் மகிழ்தல்

477. சொற்கடங் காதிரு கைக்கடங் காது துலங்குவிழி
யிற்கடங் காதுணர் விற்கடங் காதிளஞ் சோலைபுக்கு
மற்கடங் கார்தொடு மாரூர்த் தியாகர் வரையனையார்
பொற்கடங் காதல் செயுமுலை மீதிற் புணர்ந்ததுவே. (ருஅ)

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கிய மைந்தனை
இனிதிற் புகழ்தல்

478. பாவகத் தேயுறை யாரூர்த் தியாகர் பதயுகநேர்
பூவகத் தேயுறை பொற்கொடி யேபுண ராதவன்பர்
மாவகத் தேசெறி திண்டேருங் கொண்டிங்கு வந்தமையால்
தீவகத் தேரென்ப ரென்பா லகன்சிறு தேரினையே. (ருகூ)

தலைவி தலைவனைப் புகழ்தல்

479. ஈராறு திங்க ளினுமிள வேனிற்க ணெய்துந்தென்றல்
ஆராமந் தன்னை யளிப்பது போற்றொல்லை யாரணத்தின்
வேரா மவர்திரு வாரூர்த் தியாகர் வியன்சிலம்பிற்
றாராருந் தோளண்ண லென்றுவந் தாலுந் தகவெமக்கே. (சo)

---

477. **தலைவன் கூற்று.**

மற்கடம் - குரங்கு. பொற்கடம் - பொற்குடம். புணர்ந்ததென்பதை அடங்காது என்பவற்றோடு தனித்தனியே கூட்டுக.

478-9. **தலைவி கூற்று.**

478. பா அகத்தே - பாவினிடத்தே. பதயுகம் நேர்பூ - தாமரைப்பூ. அதிலுறைகின்ற பொற்கொடியே - திருமகள் போல்வாய்; "அம்பலவன் குரைகழல் போற்கமலத் தவளே" (சிற். 33.) மாக்கள் (குதிரைகள்) தன்னகத்தே செறிந்த; தீவகமென்பது ஒரு மிருகத்தைப் பிடிக்கும் பொருட்டு அதைப்போலச் செய்யப்பட்ட உருவம் அல்லது வளர்க்கப்பட்ட மிருகம்; "பூரண வடிவம், ஆக்கி ஞொரு தீபகம் போல்வரு மண்ணல்" (திருவிளை. வாதவூரடிகளுக்கு. 46.)

புதல்வன் சிறுதேருருட்டி விளையாட அதனைக்கண்ட தலைவன் தன் தேரை நிறுத்தி அவனை எடுத்துத் தன் தோளில் அணைத்துக் கொண்டு தேருடன் வந்தமையால் சிறுதேரைத் தீவகத்தேரென்றாள்.

(பி - ம்.) 2. கொடி யேநிற் புணர்ந்தவன்பர். 3. சிறுதிண்டேரும்.

479. பன்னிரண்டு மாதத்திலும். ஆராமம் - சோலை. இளவேனிற்கண் எய்தும் தென்றல் ஈராறு திங்களினும் ஆராமந்தன்னையளிப்

பாங்கி தலைவியைப் புகழ்தல்

480. நன்றுகற் பித்தவ ராரூரர் காவிரி நாட்டிலிரு
குன்றுகற் பித்தன்ன பூண்முலை யாயிக் குவலயத்தே
துன்றுகற் பித்தனை யும்படைத் தாயந்தத் தூயகற்பை
அன்றுகற் பித்தனை யோதுணை வேண்டி யருந்ததிக்கே. (சக)

## உகூ. கல்விப் பிரிவு

தலைமகன் பாங்கிக்கு உணர்த்தல்

481. வேதா கமஞ்சொன்ன வாரூர் வீதி விடங்கருக்குப்
பாதாதி கேசமெல் லாம்புகழ் பூட்டிய பாவலர்போல்
ஓதா துணரு முணர்வுதந் தானில்லை யோடரிக்கட்
பேதாய் நறுமலர்க் கோதாய் மலரிற் பிறந்தவனே. (க)

தோழி மறுத்தல்

482. சுந்தரர் தூதுவ ராரூர்த் தியாகர் சுடர்க்கிரிமேற்
சிந்துர வத்தவ னேரண்ண லேகல்வி தேடச்சென்றால்

---

பதுபோல்; "குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல், வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய், ஊடி யிருப்பினு மூர னறுமேனி, கூட லினிதா மெனக்கு" (ஐந்திணையைம்பது, 30.)

(பி - ம்.) 2. போற்கலை யாரணத்தின். 3. தியாகர் விடங்கர்வெற்பில்.

480. பாங்கி கூற்று.

துன்று கற்பு இத்தனையும். அன்று-பண்டைக் காலத்தில். அருந்ததிக்குக் கற்பை அன்று கற்பித்தனையோ?

(பி - ம்.) 4. துணை நாடி யருந்ததிக்கே.

481. தலைவன் கூற்று.

வீதி விடங்கரென்று கூறினும் சிவபெருமானென்று பொதுவகையாற் கொள்க. பாதாதிகேச மெல்லாம் புகழ் பூட்டிய பாவலர் - திருஞானசம்பந்தர். மலரிற் பிறந்தவன் தந்தானில்லை.

482-3. பாங்கி கூற்று.

482. சிந்துரவத்தவன் - யானையை அடக்கிய வத்தநாட்டு அரசனான உதயணனை; இவன் கல்விச்சிறப்பு முதலியன பெருங்கதை

கந்தர மேல்வரும் வில்வலன் போலக் கவியிடத்து
மந்திர பாடமுங் கற்றுமின் ஞானுய்ய வந்தருளே. (உ)

## தலைவிக்கு உணர்த்தல்

483. தீது கடந்தவர் செந்தமி ழாஞ்செல்வங் தேடுதற்கிப்
போது நடந்தனர் பாலையி லேயுழை போற்குழையின்
மீது நடந்த விழிமயி லேதமிழ் மேன்மையன்றே
தூது நடந்தன ராரூர்த் தியாகருஞ் சுந்தரர்க்கே. (ங)

## தலைவி புலத்தல்

484. சீதள வார்பொழி லாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
காதள வான விழியணங் கேகலி காலமன்றே
ஆதர வாயவர் முன்னு ளுறவென் றறிந்திருந்தும்
ஓதுதல் காரண மாப்பிரிந் தாரென் றுரைசெய்வதே. (ச)

---

யால் விளங்கும். கந்தரம் - மலைக்குகை; வாதாவியும் வில்வலனும் மலைக் குகையில் திரிபவராதலின் கந்தரம் கூறப்பட்டது. வில்வலன் போல - இறந்த தம்பியான வாதாவியைப் பிழைப்பிக்கும் வில்வலனைப் போல. மந்திரபாடமும் - பிழைப்பித்தற்குரிய மந்திரத்தின் மூலங்களையும். நீர் பிரியின் தலைவி இறப்பாள்; ஆதலின் அவளை உயிர்ப்பித்தற்குரிய மந்திரங் களையும் கற்று வாருமென்றாள்; "விண்ணுக்கு மாமதி காயவெங் காம வெரி கொளுந்தப், பண்ணுக்கு மாமொழி மாதங்க மாம்பஞ்ச பூதியம்போம், கண்ணுக்கு மூக்குச் செவியாக்கை யற்ற கடத்திலங்கம், பெண்ணுக்கு வார் தமைப் போலோதி வாரும் பிரிபவரே" (**தனிப்பாடல்**) என்னும் செய்யுளில் இக்கருத்து விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

(பி - ம்.) 3. வரு மீனவன் போல, வரு மில்வலன் போல.

**483.** தீது கடந்தவர் - தலைவர். தியாகரும்: உம்மை, உயர்வு சிறப்பு.

**484-7. தலைவி கூற்று.**

**484.** நீ அறிந்திருந்தும் உரைசெய்வது கலிகாலத்தின் இயல்பன்றோ. நீ தடுத்தல் வேண்டுமென்றோவென்பது குறிப்பு.

(பி - ம்.) 2. காதள வான கயல்விழியாய். 3. அறிந்தவன்பர், அறிந்துமன்பர்.

### தலைவி கார்ப்பருவங் கண்டு வருந்தல்

485. சடையூ டரவணி யாரூர்த் தியாகர் சயிலத்தன்னப்
பெடையே மகிழ்ந ரறிந்தில ரேபிரிந் தாரைமதன்
இடையீ டிலாமல் வருமா றெழுதிமை யிட்டுவிட்ட
கடையீடு போல்வண்டு கைதையி லேறுமிக் காலத்தையே. (ரு)

486. கடனீர் பருகி யுடனே கருகிமென் காந்தளம்பூ
மடனீர் பெருக வருமழைக் காலத்து மல்லிகைத்தேன்
குடநீ ரெனச்சொரி யாரூர்த் தியாகர் குளிர்வரைமேல்
விடநீர் பருகினர் போலென தாவி மெலிகின்றதே. (சு)

487. பொருசிலை வேளுக்குச் செம்பீருங் கேதகைப் போதுமம்பொற்
பரிசையும் வாளுந் தரிக்கின்ற மாரிப் பருவத்திலே
விரிசடை யார்திரு வாரூரார் வீதி விடங்கர்வெற்பில்
வரிசிலை போனுத லாய்மற வார்கல்வி வல்லவரே. (எ)

### பாங்கி வன்புறை

488. தெற்கும் வடக்குந் திரண்டெழு மேகந்தஞ் செங்கைவண்மை
கற்கும் படிவந்த தென்றெய்து வாரும்பர் காவுடனே
நிற்கும் பொழிற்றிரு வாரூ ரிறையவர் நேரிமின்னே
சொற்கும் பொருட்கு முடிவிடங் காணத் துணிந்தவரே. (அ)

---

485. இடையீடிலாமல் - இடை விடாமல். மதன் எழுதிய. கடையீடு - ஓலையின் கடையில் இடப்படும் கையெழுத்து; விளங்குவதற்கு அதன் மேல் மை தடவப்படும்; "கடையெழுத் தோலைக் கணக்குவரி காட்டி" (பெருங். க. 32: 70.) தாழையின் மேலுள்ள வண்டுக்குப் பிரிந்தாரை மீண்டு வரும்படி மன்மதன் எழுதிவிட்ட ஓலையில் உள்ள மை தடவப்பெற்ற கையெழுத்து உவமை. காலத்தை அறிந்திலர்.

486. மடலில் நீர் பெருகும்படி. "குடங்காட்டு மல்லிகை" (374) என்றார் முன்னும்.

487. பீரும் - பீர்க்கம்பூவும். இம்மலர் வட்டவடிவமாக இருத்தலின் பரிசையைக் கூறினர். கேதகை - தாழம்பூ.

(பி - ம்.) 1. சினவேளுக்குச்.

488-9. **பாங்கி கூற்று.**

488. மேகம் வண்மை கற்கும்படி வந்ததென்று நினைந்து, துணிந்தவர் எய்துவார்.

### தோழி ஆற்றுவித்தல்

489. செற்றார் புரஞ்செற்ற வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பிற்
பொற்று மரைமுகை போன்முலை யாய்புயற் காலங்கண்டு
கற்றார்முன் னோதி முடித்தநங் காவலர் கட்டவிழ்த்து
நற்றார்கொண் டோதி முடிக்கநின் பாலிங்கு நண்ணினரே. (௬)

---

## ௯௦. காவற் பிரிவு

### தலைமகன் பாங்கிக்கு உணர்த்தல்

490. நையா வகைசொல்லு நாடொறு மன்னவ ளுடிமுறை
செய்யாத நாடு சிதையுமன் றேதிருப் பூந்துருத்தி
ஐயா றமர்ந்தவ ராரூர்த் தியாக ரரும்புயச்செங்
கையாற மான்றன காலாறச் சேர்ந்தன்ன கண்ணியர்க்கே. (௧)

### தோழி மறுத்தல்

491. சேவா கனத்தின ராரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
மேவா வுலகம் புரத்தனன் றேயிவண் மெய்யுங்கொன்றைப்
பூவாகித் திங்களுங் காயாகி நிற்கின்ற போழ்திவளைக்
காவா தொழியினுன் காவலென் னுஞ்சொல்லு காவலனே. (௨)

---

489. ஓதி முடித்த - கற்று முடித்த. ஓதி முடிக்க - கூந்தலை முடித்தற்கு. ஓதி முடித்த காவலர் ஓதி முடிக்க வந்தாரென்பது ஒரு நயம்.

(பி - ம்.) 3. ஓதிப் படித்தநங் காதலர் கட்டழித்து.

490. தலைவன் கூற்று.

முறை - செங்கோலின்முறை. நாடொறு..................சிதையும்: "நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன், நாடொறு நாடு கெடும்" (குறள். 553.) கை ஆற - கை இளைப்பாற. கால் ஆற - இரண்டு கால் நிற்கும் இளைப்பு ஆற; இரண்டு காலால் மட்டும் நிற்றலின் இளைப்பு உண்டாயிற்று. கண்ணியர்க்கு நையா வகை சொல்லு; விற்பூட்டுப் பொருள்கோள்.

(பி - ம்.) 3. அமர்ந்தரு ளாரூர். 4. கையாற மானுந்தன் காலாற.

491-2. பாங்கி கூற்று.

491. மேவா=மேவி - விரும்பி. புரத்தல் நன்று; நன்று: குறிப்பு மொழி. கொன்றைப்பூவாகி - கொன்றைப் பூவைப்போலப் பசந்து. காயாகி - காய்தலையுடையதாகி; சுடுதலையுடையதாகி.

(பி - ம்.) 2. உலகமும் பூத்ததன்றே.

தோழி தலைமகட்கு உணர்த்தல்

492. பொன்னு டளிக்கு மிறைபோ லறப்புறங் காத்துமன்னர்
நன்னாடு காக்க நடந்தனர் காண்புலி நாகமுனி
முன்னாடு மற்புத ராரூர்த் தியாகர் முருகுவெற்பில்
பன்னாடை யற்ற விளநீ ரெனுமுலைப் பைங்தொடியே. (௩)

தலைவி கூதிர்ப்பருவங் கண்டு வருந்தல்

493. விண்ணீர்த் திவலைக்கு மென்குளிர் வாடைக்கும் வெவ்வினையேன்
கண்ணீர்த் துளியு முயிர்ப்புநண் பாஞ்சாரற் காலத்திலே
தெண்ணீர்ச் சடைமுடி யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
புண்ணீர்ச்செவ் வேல்விழி யாய்மறந் தார்நம் புரவலரே. (௪)

பாங்கி வற்புறுத்தல்

494. வானிற் கருமுகில் வெண்முகி லாக வருதல்கண்டு
கானிற் கருமுகை வெண்முகை யாஞ்சாரற் காலத்திலே
தேனிற் கமழ்கொன்றை யாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
ஊனிற் சிறந்தமின் னேமற வார்பிரி வுற்றவரே. (௫)

தோழி ஆற்றுவித்தல்

495. தீமைக ளைந்துங் களைந்துமண் காத்துச் சிலீமுகங்கள்
ஆமல ரைந்துங் களைந்துமின் னாக மளிக்கவந்தார்

---

492. பொன்னாடு அளிக்கும் இறை - முசுகுந்த சக்கரவர்த்தி; தியாக ராஜமூர்த்தியைக் கொணர்ந்து இத்தலத்தில் வழிபட்டவராதலின் இங்கே கூறப்பெற்றார். அறப்புறம் - தருமத்திற்காக விடப்பட்ட இறையிலி நிலங்கள் (சீவக. 76, ந.) மன்னர் - தலைவர். புலி - வியாக்கிரபாதர். நாகமுனி - பதஞ்சலி முனிவர். முன் ஆடும். பைங்தொடியே, மன்னர் நடந்தனர்.

(பி - ம்.) 4. பைங்கொடியே.

493. **தலைவி கூற்று.**

தெண்ணீரையணிந்த சடைமுடியையுடைய. புண்ணீர் - இரத்தம். விழியாய், நம் புரவலர் மறந்தார். (பி - ம்.) 1. வெவ்வியவென்.

494-5. **பாங்கி கூற்று.**

494. கருமுகை - இருவாட்சி (இருள்வாசி); நள்ளிருணாறி யென்று வழங்கும். ஊன் - உடம்பு.

495. தீமைகள் ஐந்து - ஐந்து பயங்கள்; "மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத், தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்

மாமரு வுந்திரு வாரூர்த் தியாகர் மணிவரைமேல்
தாமரை மென்கொடி யேசரற் காலந் தணந்தவரே. (௬)

---

## ௩௧. தூதிற் பிரிவு

### தலைவன் பாங்கிக்கு உணர்த்தல்

496. இடைக்குப் பகையென்னு மாகாய மெங்கு மிடங்களின்றி
அடைக்கப் படரு முலையணங் கேமள்ள ராரங்கொண்டு
மடைக்குச் சொரிவய லாரூர்த் தியாகர் வரையிலன்னப்
பெடைக்குப் புகன்றருள் வாயின்று தூதிற் பிரிகின்றதே. (௧)

### பாங்கி மறுத்தல்

497. தங்காமற் றூதுக்கு நீர்நடந் தாலெங்க டையன்முன்னே
வெங்கால தூதர் வருவர்கண் டீர்வெயில் வீசுமணிச்
சிங்கா தனத்தின ராரூர்த் தியாகர் சிலம்பிலிவள்
மங்கா வகைக்கொரு மாற்றமுண் டேற்சொல்லு மன்னவரே. ()

### தோழி தலைமகட்கு உணர்த்தல்

498. அன்போ ரிருவர் பொரும்போர் விலக்கி யநங்கனெய்யும்
வன்போர் விலக்க வருவலென் ருர்திரு மாலயனூர்

---

தால், ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால், ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ" (பெரிய. திருவாரூர்ச். 36); "அஞ்சு பயந்தீர்த் தரசாளு முறைமையு நன்றால்" (திருவிளை. பழியஞ்சின. 20.) சிலீமுகங்களாம் மலர் ஐந்தும்-மன்மதனுடைய பாணங்களாகிய மலர்கள் ஐந்தையும். தீமைகள் ஐந்தையும் களைந்து மண்காக்கச் சென்றவர் மலர் ஐந்தையும் களைந்து அளிக்கவந்தாரென்பது ஒரு நயம். மா - திருமகள்.

(பி - ம்.) 3. மாமகிழும்.

496. **தலைவன் கூற்று.**

அருவாகிய ஆகாயத்தை இடைக்கு உவமை கூறுவது மரபு. மடைக்கு - மடையை அடைத்தற்கு. அன்னப் பெடைக்கு - தலைவிக்கு. யான் பிரிகின்றதைப் புகன்றருள்வாய்.

497-8. **பாங்கி கூற்று.**

497. மணிச் சிங்காதனத்தினர் : இரத்தின சிம்மாசனாதிபதியென்பது ஸ்ரீ தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று.

(பி - ம்.) 2. வெயின் மேவுமணிச். 4. மாற்றமுண்டோ.

498. அன்பு ஓர் - தலைவரது அன்பை நினைத்துக் காண்பாயாக.

என்போர் புறத்தணி யாரூர்த் தியாக ரிமயவெற்பில்
பொன்போர்வை கொண்ட முலேத்திரு வேநம் புரவலரே. (ங)

தலைவி முன்பனிப்பருவங் கண்டு வருந்தல்

499. முகைபோன கஞ்சங்கண் முன்பனி யால்வெந்து மூளுகின்ற
புகைபோல வண்டினஞ் சுற்றிய காலத்துப் போதனடுச்
சிகைபோக வைத்தவ ராரூர்த் தியாகர் செழுங்கிரிமேல்
நகைபோலும் வாய்மறந் தாரன்று தூது நடந்தவரே. (ச)

பாங்கி வன்புறை

500. நல்லார் தொழுந்திரு வாரூரர் காவிரி நாட்டிற்கஞ்சம்
எல்லாஞ் சருகெழு முன்பனிக் காலத் திணையடியும்
வல்லாமுன் கொங்கையுஞ் செங்கையும் பார்வையும் வாண்முகமும்
புல்லா ரரவிந்த மென்றஞ்சி மீளுவர் பூங்கொடியே. (ரு)

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்

501. ஒருதலைச் சேவற் சிறைக்கே யடங்கிய வோதிமப்பே
டிருதலைப் புள்ளென லாம்பனிக் காலத் திருகரையும்
பொருதலைக் கும்பொன்னி யாரூர்த் தியாகர் பொருப்பிலன்பர்
வருதலைக் கண்டுமுன் னேயோகை கூறும் வலம்புரியே. (சு)

---

இருவர் - இரண்டு அரசர். வருவல் - வருவேன். என்பை ஓர் புறத்து அணிந்த. புரவலர் வருவலென்றார்.

499. **தலைவி கூற்று.**

முகைபோன - அரும்பில்லாத. பனிக்காலத்தில் தாமரைப் பூக்கள் கருகும். வண்டினத்திற்குப் புகை உவமை; "பூம்புகைபோல் வண்டிரியும்" (நள. சுயம்வர. 144.) வாய் - உண்மை. நடந்தவர் வாய் மறந்தார்; நகைபோலும்.

500-501. **பாங்கி கூற்று.**

500. கஞ்சம் - தாமரைப்பூ. இணையடியும் - இரண்டு பாதங்களும். பார்வையும் - கண்களும். புல் ஆர் அரவிந்தம் - புறவிதழ் பொருந்திய தாமரைப்பூ. அடிமுதலியன தாமரைப்பூவாதலால் பனியாற் கருகுமென்று அஞ்சித் தலைவர் மீள்வர்

(பி - ம்.) 2. முன்பனிக் காலத்தின் மேனியடி; காலத்தி னெத் தனையும். 4. அஞ்சி யேகுவர்.

501. ஒருதலை - ஒரு பக்கம். சேவல் - ஆணன்னம். சிறைக்கு - சிறையில்; உருபுமயக்கம். ஓதிமப்பேடு - பெண்ணன்னம். இரண்டு புட்

## ௩௨. துணைவயிற் பிரிவு

### உதவிக்கேகல் தலைவன் பாங்கிக்கு உணர்த்தல்

502. தேங்கா விரிசுற்று மாரூரர் கண்ணினுஞ் செங்கையினும்
நீங்காத மானை நிகர்விழி யாய்பனி நீர்முகந்து
கோங்கா யரும்பி யிளநீர் புகுந்த குவிமுலையாள்
ஏங்கா வகைசொல்லு நண்பருக் குற்றுழி யெய்துவதே. (௧)

### தோழி மறுத்தல்

503. நண்பார்க் குதவி புரிவதல் லாலுமை நம்புமிந்தப்
பெண்பாற் குதவிற் புகழில்லை யோபிறப் பேழுமறக்
கண்பார்க்கு மற்புதர் வன்மீக நாதர் கமலைசுற்றும்
விண்பாற் கிளர்ந்து கொழுந்தோ டியபுகழ் வித்தகரே. (௨)

### தலைவி பின்பனிப்பருவங் கண்டு வருந்தல்

504 கொம்மை படைத்தமின் னார்முலை தோறுங் குளிர்க்குடைந்து
வெம்மை யொளித்திடும் பின்பனிக் கேமத வேளுடலைச்
செம்மை படுத்திய வாரூரர் செம்பொற் றியாகர்வெற்பில்
எம்மை நினைத்திலர் நண்பாளர்க் குற்றுழி யெய்தினரே. (௩)

---

களும் ஒன்றியிருக்கும் தோற்றம் இருதலைப்புள்ளென்று நினைக்கும்படி யுள்ளது. வலம்புரி - ஒருவகைச் சங்கு; இது தலைவன் மீண்டு வருகையில் முழக்கப்படுவது. வலம்புரி ஓகை கூறும்.

502. **தலைவன் கூற்று.**

தேம் - இனிமை. கண்ணினும் நீங்காத மான்: இறைவனுடைய இடக்கண் சந்திரனாதலால் அதிலுள்ள மானென்று கொள்க. யான் எய்துவதைச் சொல்வாயாக.

(பி - ம்.) 2. இள நீர்முகந்த. 4. நண்பாளர்க் குற்றுழி.

503. **பாங்கி கூற்று.**

பெண்பாற்கு - பெண்ணுக்கு. அற்புதர் - ஞானவடிவமானவர். வித்தகரே, உதவிற் புகழில்லையோ.

504. **தலைவி கூற்று.**

கொம்மை - வட்டம்; நகிலுக்கு அடை. வெம்மை முலைதோறும் ஒளித்திடும்: "கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇ" (நெடுநல். 69.) செம்மை படுத்திய - தீக்கு இரையாக்கிய. எய்தின தலைவர் எம்மை நினைத்திலர். (பி - ம்.) 2. வெம்மை யழற்றின.

வன்புறை

505. அன்பணிக் காலத் தகன்றுனென் றெண்ணி யழுங்கிக்கண்கள்
வன்பணிக் கால மயங்குமின் னேமலர்த் தேன்றிவலை
மென்பணிக் காலஞ்செய் யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
பின்பணிக் கால மிலையோ வுனையும் பிரிந்தவற்கே. (சு)

தோழி ஆற்றுவித்தல்

506. இரும்பணி நல்கு மலையொடு சிறி யினன் வடக்கே
திரும்பிய போலுமிக் காலத்தி லேமதிச் செஞ்சடைமேற்
கரும்பணி யும்புனை வன்மீக நாதர் கமலைமின்னே
விரும்பிய நண்பினர் பாற்றுணை போனவர் மீண்டனரே. (ரு)

---

## ருரு. பொருள்வயிற் பிரிவு

போருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு உணர்த்தல்

507. தாரணி காத்துப் படைக்கின்ற மாயன் சதுமுகனுர்க்
காரணி யுந்திரு வாரூரர் காரண மானதுபோல்
ஏரணி நல்லற மின்பங்க ளான விரண்டினுக்கும்
காரண மேபொரு ளென்றுநன் னூல்சொல்லுங் காரிகையே. (க)

---

505-6. **பாங்கி கூற்று.**

505. அன்பன் இக்காலத்து. பனி கால - நீர்த்துளியைச் சொரிய; எதுகைபற்றி ஒற்று மிக்கது. பனிக்காலத்தைச் செய்கின்ற. பிரிந்தவற்கு இலையோ. (பி - ம்.) 4. இலையோ நமையும்.

506. மலையொடு - இமயமலையை. இனன் - சூரியன். திரும்பிய - திரும்பியது; தொகுத்தல் விகாரம். காலம் - உத்தராயணம். கரும் பணியும் - கரிய பாம்பையும்; உம்மை, இழிவு சிறப்பு.

(பி - ம்.) 1. சிறியின் னும்வடக்கே. 2. விரைச் செஞ்சடை.

507. **தலைவன் கூற்று.**

தாரணி - பூமியை. காப்பவன் மாயன்; படைக்கின்றவன் சதுமுகன்; நிரனிறை. ஆர் அணியும் - ஆத்தியை அணிகின்ற. அறம் முதலிய மூன்றனுள் பொருளே அறத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாகும்; “வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு

தோழி மறுத்தல்

508. *நீருடு மேனிய ராரூ ரிறையவர் நேரிவெற்பா*
*மாறுது நீபொருண் மேல்விரைந் தேகி வருவதெல்லாம்*
*கூறு தொழியது கூறுவை யாயினென் கோதைகண்ணீர்*
*ஆருய் வளர்ந்திடை யூறுகு நீசெல்லு மாற்றினுக்கே.* (உ)

தலைமகன்பிரிவு தோழி தலைமகட்கு உணர்த்தல்

509. *உடுநா யகமணி யாரூர்த் தியாக ருயர்சிலம்பிற்*
*கடுநா யகமன்ன கண்மயி லேயறங் காமம்பக்கத்*
*திடுநா யகமந்த நாயக மான விரண்டினுக்கும்*
*நடுநா யகமெனு நன்பொருட் கேகினர் நாயகரே.* (ந)

தலைவி இளவேனிற்பருவங் கண்டு வருந்தல்

510. *கொடுக்கும் வரத்தின ராரூர்த் தியாகர் குளிர்வரைமேல்*
*வடுக்கின்ற மாந்தளிர் மேலாய போதினை வாயிற்கவ்வி*
*அடுக்கின்ற கோகிலம் வில்வேள் கணையை யழலினின்றும்*
*எடுக்குங் குறடென்ன லாமிள வேனிற்க ணெய்திலரே.* (ச)

---

*மெய்தும்"* (நாலடி. 114.) *பொருளே காரணமென்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. நன்னூல், காரிகையென்னும் இலக்கண நூற்பெயர்கள் இதில் தோற்றுகின்றன.*

(பி - ம்.) 4. *காரண மெய்ப்பொருள்.*

508-9. **பாங்கி கூற்று.**

508. *கோதை - தலைவி. ஆற்றினுக்கு - வழியின்கண். ஆற்றினுக்கு ஆருய் வளர்ந்திடுமென்பது ஒரு நயம்; "நீர்விலங் கழுத லானு, தேர்விலங் கினவாற் றெரிவை கண்ணே"* (குறுந். உடுசு.)

509. *உடுநாயகம் - சந்திரனை. கடுநாயகம் - ஆலகாலவிடம்.*

(பி - ம்.) 1. *தியாக ரொளிமிடற்றில்.*

510. **தலைவி கூற்று.**

*வடுக்கின்ற - வடுவைத் தருகின்ற. மாந்தளிருக்கு நெருப்பும், மாம் போதுக்குக் கணையும், குயிலலகுக்குக் குறடும் உவமைகள்; "காவலைப் பல்லவக் கனலு வசைப்பக், குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப், பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்துள், இசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து, மதவீர னுக்கு வசந்தக் கருமான், பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன்"* (அருணைக்கலம். 53); *"உலைக்கனலிற் கருங் கொல்லன் சிறுகுறட்டாற் றகடுபுரிந் தொதுக்கி மாரன், கொலைக்கணை*

பாங்கி வன்புறை

511. மேதக்க சண்பக முங்கன்னி காரமும் வேளிரத
வாதத்தி னுலலர் பொன்னுரு வான வயந்தனிலே
பூதப் படையின ராரூர்த் தியாகர் பொருப்பிற்செம்பொன்
காதற் பிரிந்தவர் கண்டாற் றிரும்புவர் காரிகையே. (ரு)

தலைமகள் உருவுவெளிப்பாடு கண்டு தலைவன் சொல்லல்

512. அதிர முழங்கிய சங்கமும் வேழமு மம்பும்வில்லும்
பொதிதரு கொம்புங் கொடியுமுன் றோன்றின பூம்பொழின்மேல்
கதிருல வுந்திரு வாரூரிற் றேவர கண்டர்வெற்பிற்
பதிபடை தோன்றின தோவல வாரம் பதியினுமே. (சு)

தலைவன் மனையின்கண் வந்து தலைவியைப் புணர்ந்து
கார்ப்பருவங் கண்டு மகிழ்தல்

513. சேலேய் வயற்றிரு வாரூரர் செம்பொற் றியாகர்தண்டைக்
காலே யெனப்பொற் சிலம்பிடை யார்த்துக் கரியகண்டம்
போலே விளங்கிச் சடைபோல மின்னியப் பொற்சடையின்
மேலே யிருக்கு நதிபோல வாழியிம் மேகங்களே. (எ)

## திருவாரூர்க் கோவை முற்றும்.

---

கள் சமைப்பதுபோற் குயிலலகாற் பல்லவங்கள் கோது மாலோ" (வி. பா. வசந்தகாலச். 2.)

511. பாங்கி கூற்று.

கன்னிகாரம் - கோங்கு. வேள் - மன்மதன். இரத வாதம் - தேராகிய தென்றற்காற்று, இழிந்த உலோகங்களைப் பொன்னுக்கும் இரச வாதம். தென்றலினுற் சண்பகமும் கோங்கும் மலரும். வயந்தனில் - வேனிற் காலத்தில். காதலால் பிரிந்தவர்.

512-3. தலைவன் கூற்று.

512. சங்கம் முதலியன தலைவியின் உருவெளித் தோற்றத்தின் உறுப்புக்கள். சங்கம் : கழுத்து ; வேழம் : துடை ; அம்பு : கண்கள் ; வில் : புருவங்கள் ; கொம்பு : நகில்கள் ; கொடி : இடை ; "இதழியந் தொடையர்" (அருணைக்கலம். 41) என்னும் செய்யுளைப் பார்க்க.

(பி - ம்.) 2. கொடியுமொன் றுனது.

513. சிலம்பு - மலை. மேகங்கள் வாழி.

(பி - ம்.) 4. வாழ்கவிம் மேகங்களே.

ஒரு பிரதியில்மட்டும் அதிகமாகக் காணப்பட்ட பாடல்

தோழி தலைமகன் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல்

வெள்ளை யெருக்கணி யாரூரர் வீதி விடங்கர்வெற்பில்
வள்ளை யிருக்குங் குழையாயிங் நாட்குயில் வாழ்மனையும்
கிள்ளை யிருப்பு மழிக்கின்ற வேலர் கிளருமன்றிற்
பிள்ளை யிருப்புஞ் சிதையாநிற் பேனென்று பேசினரே.

[குயில் வாழ்மனை - மாமரம். கிள்ளை யிருப்பு - மருதமரம்; கிள்ளை - கிளி. இரண்டையும் அழிக்கின்றதென்றது, தலைவன் மாந்தழையையும் மருதந்தழையையும் தலைவிக்குக் கையுறையாகத் தரும் பொருட்டுக் கொய்ததை. அன்றிற் பிள்ளை யிருப்பு - பனைமரம். அதைச் சிதைப்பேனென்றது அம்மரத்தின் மடலை வெட்டிக் குதிரையாகப் பண்ணி மடலேறுவேனென்ற குறிப்பினது.]

---

# சிறப்புப்பாயிரம்

(கட்டளைக்கலித்துறை)

1. மற்றிடங் கொண்ட புயபூ தரனெல்லன் மாநிலத்திற்
கற்றிடங் கொண்ட புலவோர்கள் யாருங் களிக்கவுமை
உற்றிடங் கொண்டதென் ஞரூர்த் தியாகருக் கும்பர்தொழும்
புற்றிடங் கொண்டவ ருக்கருட் கோவை புகன்றனனே.

(பி:- ம்.) 3. தியாகேசர் பாதத்துக் கும்பர்.

*திருவாரூர்த் திருக்கோவை புகன்ருர் எல்லப்ப நயினரேன்றியம்பியது

2. திணையாதி யாறிரண் டும்வழு வாமற் றெளிந்துசிவத்
திணையான தொன்றிகம் மாரூர்த் தியாக ரிணையடியே
துணையாக முத்தமிழ்க் கோவைசெய் தான்வட சொற்களுக்கும்
புணையான வன்றிரு வுண்ணு முலையெல்ல பூபதியே.

---

*இத்தலைப்பு ஒரு பிரதியில் மட்டும் காணப்பட்டது.

# கொளுக்கள்

[பின்னே உள்ளவை, திருக்கோவையாரில் செய்யுட்களின் கருத்தைக் குறிக்கும் கொளுக்கள் இருப்பதையறிந்த ஒருவர் திருவாரூர்க் கோவைக்கும் அங்ஙனம் அமைக்க வேண்டுமென்னும் ஆர்வத்தால் இயற்றியவையென்று தோற்றுகின்றன. இவற்றை இயற்றியவர் இன்னாரென்பது தெரியவில்லை. நூற்செய்யுட்களுக்கும் இவற்றிற்குமுள்ள சொற்பொருள் வேறுபாடுகளை நோக்குவாருக்கு இவற்றைக் கோவையாசிரியர் இயற்றியிராரென்பது தோற்றும். இக்கொளுக்கள் நூற்செய்யுளின் கருத்தைக் குறிக்க வந்தனவாயினும், பலவிடங்களில் மயங்கச் செய்கின்றன. சில பாடல்களுக்குப் பாடத்தை நிச்சயம் செய்யவும் பொருளைத் தெரிந்துகொள்ளவும் சில கொளுக்கள் உதவின. இவற்றின் நடை சிறந்ததன்று. சில செய்யுட்களுக்குக் கொளுக்கள் கிடைக்கவில்லை. இக்காரணங்களாலும், மிக்க இன்சுவையையுடைய திருவாரூர்க் கோவைச் செய்யுட்களுக்கு முன் இவற்றை அமைப்பதற்கு மனம் ஒவ்வாமையாலும் இவை இங்கே பதிப்பிக்கப்படுகின்றன. இவை எனக்குக் கிடைத்த பிரதிகளுள் இரண்டில் மாத்திரம் உள்ளன.]

*1. வாகை மாரன் வரிசைகொ ளங்கத்
தோகையைக் காவிற் றோன்றல் கண்டது.

2. மூவ ருலகோ புவியோ முன்னிவர்
மேவு மிடமென வேந்தனை யுற்றது.

3. வல்லி யணியிழை வியரான் மன்னன்
மெல்லியல் பூமக ளெனவுளந் தெளிந்தது.

4. நஞ்சு மமுது நல்கும் வகையால்
உஞ்சிடும் வகைக்குறிப் புவந்தவ னுரைத்தது.

5. இரந்தோர் மாதரை யெய்தினர் நாமும்
இரந்தெய்த லாமென் றிறையியம் பியது.

6. உம்மா லுறுநோய்க் குடனேக் காவிடின்
எம்மா லரூதென் றிறையியம் பியது.

---

* இவை அவ்வக் கொளுவுக்குரிய செய்யுட்களின் எண்கள்.

7. எற்கு மளிக்கு மின்பந் தரவிவண்
நிற்கு மெனவிறை நேர்ந்து ரைத்தது.

8. மின்னாள் கண்*வளை யும்மின மன்றெனப்
பன்னிவண் டோச்சிப் பரிந்தவ னணைந்தது.

9. இறுமிடை யென்றுரைத் தறிந்து மளிக்கே
அறிவிலை யெனமெய் தொட்டிறை யணைந்தது.

10. அழகைக் கரவுகொண் மதியைவேள் வளைத்த
நிழலூர் கோளென நேர்ந்தவ னுரைத்தது.

12. திரிந்துன் னழகுறத் தேடு மதியெனப்
பரிந்து குரிசில்பொய் பாராட் டியது.

13. காலமுங் † கற்பும் புளகமுங் கலத்தலால்
ஏலிட நிமித்த மிறையியம் பியது.

14. பொற்புறு மடந்தை நாணு லடைந்தேன்
கற்புப் பெயராற் காப்பா யென்றது.

15. நடைபெறு நாணென நாட்டம் புதைக்க
இடையூ றிதுவென் றிறையியம் பியது.

16. விழியைப் புதைத்தலா லுய்ந்தேன் மேலுயிர்ப்
பழிகொளு முலையெனப் பரிந்தவ னுரைத்தது.

17. நாணில னுணு நாரியைக் கண்டு
வேணவா வுற்று வேந்தன் மெலிந்தது.

18. வேணவா வல்ல வேந்த னுசைமுன்
நாணில் லாதென நாயகி துணிந்தது

19. எய்த்த வேந்தற் கின்பந் தோன்ற
முத்த முறுவன் முகிழ்த்தன் மொழிந்தது.

20. அனல மவிக்கு மமுத நகையென
வனிதை குறிப்பு மன்ன னுணர்ந்தது.

21. வனிதை மதனுண் வலியொழிந் ததனால்
இனிமுயங் குவமென் றேந்தன் மொழிந்தது.

22. புணர்ந்த வின்பம் புலவர்கோன் பெறுத
துணர்ந்து மன்ன னுள்ள முவந்தது.

23. கொவ்வை குமுதச் சிவப்பு மிவடன்
செவ்வாய்க் கிணையன் றென்றுசெப் பியது.

24. படலை கலைகலன் பழம்படி யணிந்த
விடலை நாணன் மெலியே லென்றது.

---

* வளை - வளைகின்ற. † கற்பு - முல்லைக்கொடி.

25. இதழ்த்தனத் தமுதமும் பெருமையு நோக்கி
மதனெனு மன்னன் மகிழ்ந்துரை செய்தது.

27. மணியணி சேர்க்கும் வகைபோல் விதிநமை
அணுகச் செய்ததென் றண்ண லுரைத்தது.

28. அங்க மங்கியைப் பிரிவுற் றாலும்
இங்குனைப் பிரியேனென் றிறையியம் பியது.

29. ஊசலின் மீள்வ னுருகே லென்று
நேசத் திறைவ னேரிழைக் குரைத்தது

30. கொங்கை நெருக்கங் கொள்ளா திடைமணி
தங்குதல் போலிடந் தானணித் தென்றது.

31. புண்ணிய நாடு நதியு முடையார்
நண்ணல்பொய் யன்றென நாயகி தெளிந்தது.

32. கலவியிற் சோர்ந்த வணிநலக் காரிகை
செலவு நோக்கி மனனொடு மொழிந்தது.

34. தேரணி யெனச்செலுஞ் செலவைப் பாகுடன்
வாரணி முலைநல மன்னியம் பியது.

35. பண்ணைச் செல்வம் பயின்ற விவளைநாம்
நண்ணியது கனவென நாயக னினைந்தது.

36. அரிவை விழிவழி காட்டலாற் பாங்கி
உரிய ளிவட்கென் றுவந்திறை யுய்ந்தது.

37. கண்ட கவினெலாங் காதலி யாகும்
பண்பு மன்னவன் பாராட் டியது.

38. எம்மா நீர வீன்றோர்க் காசில்
கைம்மா றிதுவெனக் காவல னுரைத்தது.

39. இரவியை விழுங்கிர வேகா தோவெனப்
பரிவுட னைந்திறை பையு ளெய்தியது.

40. முன்னுந் தெய்வ முயலாது தருதலால்
இன்னுந் தருமென விறைவன் றெளிந்தது.

41. இனிய பருவத் தெதிர்ப்படு தலினால்
இனியள் கூடற்கென் றிறைவ னினைந்தது.

42. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறிந் தவன்வாய்
விண்டறி யாத வின்பை வியந்தது.

43. இந்துவி னமுது மிணையன் றிவடரும்
இந்தவமு திற்கென் றிறைவன் புகழ்ந்தது.

45. என்மன மருங்கு லெனக்கொண் டெய்மதன்
பின்னிட வேகெனப் பெருந்தகை விடுத்தது.

46. காம வாரி கடக்க நீகான்
ஆமெனப் பாங்கனை யண்ண னினைந்தது.

47. மருவுறு தேகம் வாட மனத்திற்
பருவர லென்னெனப் பாங்கன் வினாயது.

48. ஒருமா னோக்கத் தொழிந்தநா ணுடையேன்
இருமா லுற்றே னென்றியம் பியது.

49. கல்வி யுளமுங் கவலுமோ வென்னச்
செல்வனைப் பாங்கன் றிறமன் றென்றது.

50. மறுத்துரை பாங்கனை யுன்போ லிலையென
வெறுத்துத் தலைவ னுவமை மொழிந்தது.

51. அரிவையர்க் குருகா ருளரோ வசலமும்
கரையுமென் றிறைவன் கழற்றெதிர் மறுத்தது.

52. தலைமையாந் தகவுநீ நீங்கி னுலகம்
பலமாறு படுமெனப் பாங்கன் பழித்தது.

53. தாங்கா வேட்கை கண்டு மறுக்கும்
பாங்கன் றன்னைப் பழித்தெதிர் மொழிந்தது.

54. மீன்கடல் குடித்த தரிதோ வென்னப்
பாங்க னுவமை பகுத்து மொழிந்தது.

55. கலக்க முறுதனுங் கலங்கினென் செயவென்
றலக்கணுற் பாங்க னழுங்கி யுரைத்தது.

56. மடமா னோக்கி வடிவுங் கண்ட
இடமும் பாங்க னோந்தலை வினாயது.

57. அலைவிழி நிலைகா வென்று தேறும்
தலைவன் பாங்கற் கிடமியல் புரைத்தது.

58. சொல்வழி கண்டு வருவேன் றேறி
நில்லெனப் பாங்க னெடுந்தகைக் குரைத்தது.

59. காவிற் றடத்திற் காணி னவையவன்
தேவிக் கெவனெனப் பாங்கன் சென்றது.

60. இடமிஃ தணங்குநோக் கிவளே தலைவன்
திடமெனப் பாங்கன் சென்று கண்டது.

61. வேளா வினை * மனை நாவாற் பாங்கன்
வாளா வலைத்தே னென்றிரங் கியது.

* மனை - மன்னை; தலைவனை.

62. கண்டாற் றிரும்பலாங் காம வின்பம்
உண்டா லரிதெனத் தலைவனை யுவந்தது.

63. கரும்பிவண் மன்னற் கங்க மாமென
விரும்பித் தலைவியைப் பாங்கன் வியந்தது.

64. பெண்களுக் கரசையுன் பேரின் பத்தைக்
கண்களாற் பாங்கன் கண்டே னென்றது.

65. இன்பய னோக்குஞ் சாதகப் புட்போல்
அன்பன் றலைவியை யன்பிற் றேறியது.

66. மேனி யதரம் விழிகொண் டோர்தருத்
தானுறக் கண்டெனத் தலைவனின் புற்றது.

67. அன்ன பிராண மனவிஞ் ஞானமேல்
என்னுமா னந்தவின் பிதுவென மகிழ்ந்தது.

68. எனக்குவாழ் வாகுமுன் னவயவத் திணைகள்
எனக்குவ லயத்தி விலையெனப் புகழ்ந்தது.

69. நண்பிக வாமைக் குயிர்போற் பாங்கிப்
பெண்புடை வருகெனத் தோன்றல்பே சியது.

70. பண்ணைக் குழுச்சூ ழப்படர் வாயெனப்
பெண்ணைத் தலைவன் பிரிவுணர்த் தியது.

71. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியும்
ஏற்ற தோழிகண் டைய மேற்றது.

72. மறைத்தல் செல்ல றனித்தன் மலரைப்
பறித்தறுன் பின்பம் பாங்கி பகர்ந்தது.

73. பிறையைத் தொழுகென நாண நாட்டி
இறைவிக் கிகுளை யெடுத்தியம் பியது.

74. இன்ப மளிப்போர்க் காணி னெவரே
அன்பிற் றெழாரென் றிகுளை யறைந்தது.

75. கடற்குளி முத்தஞ் சுனைக்குளு மநேகமாய்ப்
படைத்த லென்னெனப் பாங்கி மொழிந்தது.

76. சுனைமலர் நிறத்தை மாற்றுமோ வென்று
வினவிப் பாங்கி மிகநகை செய்தது.

77. வெளுப்புஞ் சிவப்பும் வேறுற வெமக்கும்
அளிக்குமோ சுனையென் றவைசகி யுரைத்தது.

78. தெய்வ வுருவெவ் வகைபெற் றனையென
இவ்வகை யுறுத்திப் பாங்கி யுரைத்தது.

79. தலைவி நடுக்கந் தன்னு லுரிமை
நிலைதெளி பாங்கி நேர்ந்து ரைத்தது.

80. இன்புக் கிறைவ னேந்திழை தன்னை
அன்பிற் றேழியா லணைய நினைந்தது.

81. தலைவியைக் கண்டு தலைவன் மனத்தின்
நிலைதெரி வகையூர் நின்று வினயது.

82 என்மனந் தழையப் பெயருரை மின்னென
மென்மொழி தலைவன் மிகவு முரைத்தது.

83. இன்ப வார்த்தையொன் றியம்பீர் வழிக்கென
அன்பிற் றலைவ னவருக் குரைத்தது.

84. மாறுறு மொழியாற் றலைவன் கெடுதி
ஏறுறு களிற்றில்லைத் திவர்க்கெடுத் துரைத்தது.

85. என்பல சொலுஞ்செவி யெய்தத் தடைசெயல்
உன்பணித் தோடென் றிறைவ னுரைத்தது.

86. வளந்தோன் றுதுமை வைத்த கானவர்
உளந்தே ருமென வுறுதி யுரைத்தது.

87. காமங் கனலிற் பெரிதெனக் காதலன்
ஏமத் தலைவிக் கின்முக முரைத்தது.

88. அங்கம் வருந்திட வாரங் குறுவீர்
பங்க நகைக்கென முகம்புகப் பகர்ந்தது.

89. பந்தின் பெருமை பகர்ந்து தலைவன்
முந்தும் பரிவுடன் முகம்புக வுரைத்தது.

90. மொழிதடு மாறு மிவரா ரெண்ணம்
முழுது மென்னெனப் பாங்கி முன்னியது.

91. தழையுந் தளர்வுங் கொண்டவ ரிவடன்
விழைவின ரென்னத் தோழிவிளம் பியது.

92. ஒத்த மனத்திவ ருறைதலாற் காவில்
வைத்த காதற் றலைவன் வந்தது.

93. ஏவா லெய்போற் கலைகண் டீரென
நாவாற் றலைவ னவின்று வினயது.

95. உமைப்போற் கற்றோர் யாங்க ளலோமென்
றிமைப்பிற் பாங்கி யெடுத்தெடுத் துரைத்தது.

96. என்றுந் தளிரால் வெல்லு மிவர்திறம்
நன்றெனப் பாங்கி நகைத்துரை செய்தது.

97. அம்பொடு வில்லெய் தவரையுங் கொளுமே
வெம்போ தகமெனப் பாங்கி வியந்தது.

22

98. மதனுரு மதமா வொன்றே யிவர்சொல்
இதமெனப் பாங்கி நகைத்தியம் பியது.

99. இருவர்கண் முலைக்க ணீலமா தலினால்
மருவின ரிவரெனப் பாங்கி மகிழ்ந்தது.

100. கற்பித் திடும்பணி வழியே யானும்
நிற்ப னென்று தலைவனிகழ்த் தியது.

101. வெற்பிற் றமியேம் வேட மகளிர்நீர்
பொற்பழ னத்திறை யெனச்சகி புகன்றது.

102. கருப்புர முத்து கடற்றிற் கரியில்
இருப்பினும் பெரிதென் றிறைவ னுரைத்தது.

103. பலமட வாரிலுன் பான்மால் சேர்மான்
நலமறி யேனெனத் தோழி நவின்றது.

104 அவயவ முலைநகை குழலழ கிவளுக்
கிவையெனத் தலைவ னிகுளைக் குரைத்தது.

105. பூக்கலை மீக்கலை மதிவிருப் புன்றன்
மாக்கலை மதியென மன்னற் குரைத்தது.

106. அரிவை நாமமென் னாகத் திருத்தலின்
உருவுற் றேனெனத் தலைவ னுரைத்தது.

107. நின்னன் பாலவ ளுய்வா ணீயே
உன்னன் புரையெனப் பாங்கி யுரைத்தது.

108. முன்னைப் பயனின் முயற்சியாற் றலைவன்
உன்னைநம் பினனெனப் பாங்கிக் குரைத்தது.

109. வன்கண் மனமா யினையா லினியான்
என்செய் வேனென விறைவன் மொழிந்தது.

110. பெருமை யறியாப் பேதையா மாதுன்
அருமையறி யாளென் றிகுளை யறைந்தது.

111. வறியேற் கின்புயிர் வருத்த மாது
சிறிய ளலளென் றிறைசெப் பியது.

112. மன்னரு ளறிந்த பாங்கி தலைவனை
இன்ன நீயே புணர்வா யென்றது.

113. என்மருட் டுயர மெல்லாந் தலைவன்
நின் பொருட் டன்றி நீங்கா தென்றது.

114. வன்னியைக் கரியாக் கன்னியைக் கொள்கெனப்
பன்னிப் பாங்கி யுலகியல் பகர்ந்தது.

115. களவொழிந் தியாரு மறியக் கடிசெய்
தளவிலன் புறுகெனப் பாங்கி யறைந்தது.

116. வரைபடைத் தமுதம் வரச்செயல் போலும்
வரைவுரைத் ததுவெனத் தலைவன் மறுத்தது.

117 உறவோர் கொடிய ருறலோ வரிதென
அறநெறிப் பாங்கி யச்சுறுத் தியது.

118. *மைவா ரணங்கிளை தருமுத் திவையெனக்
கையுறை தலைவன் கழறிப் புகழ்ந்தது.

119. இடைக்கு விலையுண் டாகி னிதியம்
மடுத்த லெளிதெனப் பாங்கி மறுத்தது.

120. அருந்தழை மனமலர் கருகியு மதனலர்
வருந்தில வென்றவ ளுற்று துரைத்தது.

121. கதிரவன் மலைமேல் வருங்கால் வருகெனப்
பதியினை யாற்றிப் பாங்கி பகர்ந்தது.

122. எருக்கும் பனையு மெங்குமுண் டென்மயல்
அருக்கா தினியெனப் பாங்கிக் கறைந்தது.

123. பிணிக்கு மருந்து பலவுள மயலாற்
பிணிக்கு மெனக்கு மடல்பெரி தென்றது.

124. புனையிழை யவர்மயல் பொருந்தினோர் பெறுவர்
பனைமட லாலெனப் பாங்கிக் குரைத்தது.

125. படியெலா மறியும் படியா னுனை
மடலூர் வேனெனப் பாங்கிக் குரைத்தது.

126. பழுதி னடையு மிடையு மொழியும்
எழுத லரிதெனப் பாங்கி யியம்பியது.

127. பார்வையு மிடையும் பகுத்தெழு துவையேல்
தூரிகை பிடிக்கவென் றிருளைசொல் லியது.

128. அழகெலாம் வரையு மளவி லிடையே
எழுத மறந்ததென் றிறைசாற் றியது.

129. கலைசே ரிண்டகண் ணெழுதினே னுயிற்
றலைவன் யானெனத் தன்னைப் புகழ்ந்தது.

130. பல்கலை மறையாம் பயனிலை யருளிலிர்
மடலே றுதலெனப் பாங்கி வகுத்தது.

131. துணிந்துசெய் பவரைத் தடுப்பவர் யாரெனப்
பணிந்த சொல்லாற் பாங்கி பகர்ந்தது.

132. விழிமுகந் தொழில்கொளா விளையாட் காசை
மொழிவ தென்னெனப் பாங்கி மொழிந்தது.

---

* மை - மேகம். வாரணம் - சங்கு, யானை. கிளை - மூங்கில்.

133. சிறுபொறி பெரிதைச் சுடல்போ லென்னுள்
அறிவுகொண் டனளென் றண்ண லுரைத்தது.

134. பேதைத் தொழிலுந் தெரியாப் பிள்ளைக்
கேதியம் புவதென் றிகுளை சொன்னது.

135. அடுத்து மவளரு ளறியா யென்றென்
றெடுத்துத் தலைவ னிகுளைக் குரைத்தது.

136. என்பெய ருரைக்கின் மயலவட் கெழுமென
அன்புடைப் பாங்கிக் கண்ண லுரைத்தது

137. என்னை மறைத்தபி னெண்ணிய தரிதென
நன்னுதற் பாங்கி நகைத்துரை செய்தது.

138. சற்றுப் பிடியுண் டேனைத் தள்ளல்
வெற்றியோ வுனக்கென வேந்தன் மொழிந்தது.

139. என்போற் றோழிய ரிலைநீ நினைத்த
தன்பாற் செய்வனென் றண்ணற் குரைத்தது.

140. என்சொற் பலசில வேற்றூ டழைகொளும்
அன்பிற் றருகெனப் பாங்கி யறைந்தது.

141. தழைநீ யேற்ற றூன்வே ளெய்த
புழைதீர்த் திடுமெனத் தலைவன் புகன்றது.

142. மருந்து கைக்கொடு வருத்த முரைத்தல்போற்
பெருந்தகை வரவு பாங்கிபே சியது.

143. இன்பக் கலவிக் கிட்ட கொடியென
அன்பறி யாள்போற் றலைவி யறைந்தது.

144. அன்றுநம் புனத்துன் வேட்கை யானோர்
இன்றும்வந் தனரென் றிகுளை யுரைத்தது.

145. மாலா ரொருவர் வழிவரல் கண்டெனக்
கேலா துரைத்ததென் றிகுளைக்கு மறைத்தது.

146. வனசந் தருநீர் வேர்மறை யாபோல்
எனைமறைத் திடலென் றிகுளைசெப் பியது.

147. உன்றிரு மேனிக் கொப்பென லாந்தழை
இன்றுநீ கொள்கென் றிகுளை புகழ்ந்தது.

148. தெரிந்து தலைவன் றுயரஞ் செப்பிப்
பரிந்து தலைவிக்குப் பாங்கி பகர்ந்தது.

149. பிடிகளி றுரிமைகண் டயர்வுற் றனரென
மடநடைப் பாங்கி தலைவிக்கு வருத்தது.

150. தழைமலர் காவுந் தொலைத்தது தலைவன்
விழைவென் றருமை மெல்லியற் குரைத்தது.

151. இடர்நீ புரியின் மடலே றுவனெனக்
கடனறி தலைவிக்குப் பாங்கிகட் டுரைத்தது.

152. அழிந்த மனத்தோ டநேகநிட் டூரம்
மொழிந்து பாங்கி தலைவியை முனிந்தது.

153. என்மதிக் குன்மதி யீடோ வறியாய்
நின்மொழி பழுதென நேரிழை முனிந்தது.

154. ஒன்றுட லுயிருள மாநீ யுவந்திறை
தன்றழை தருகெனத் தலைவிசாற் றியது.

155. அன்பொடு தழையேற் றமைதலை வன்முன்
இன்புறப் பாங்கி யெடுத்தெடுத் துரைத்தது.

156. கண்ட வுடன்றழை காம வெந்நோய்
கொண்டமை தலைவற்குப் பாங்கி கூறியது.

157. காமயி லோடை பளிக்கறை பகலெலாம்
யாமா டிடமெனப் பாங்கி நவின்றது.

158. வேலுட னரசு மேவிடஞ் செல்வோம்
பாலமு தேயெனப் பாங்கி பகர்ந்தது.

159. மறைத்த மொழியாற் றலைவியைப் பாங்கி
நிறுத்திக் குறியிடத் துய்த்துநீங் கியது.

160. என்மன மகிழ்தர வெழின்முலை சுமந்து
பொன்வந் தனையெனத் தலைவன் புகன்றது.

161. இருவ ராகமு மியைந்த வின்பத்
தொருமை விழைவு தலைவ னுவந்தது.

162. உந்திச் சுழிக்கொவ் வாகடற் சுழியெனப்
புந்தி மகிழ்ந்து தலைவன் புகழ்ந்தது.

163. மனமுடல் வருத்தம் வாரா தினியநின்
இனமுட னேகென் றிறைவ னுரைத்தது.

164. தோற்று வணங்கலர் கைக்கொள் வாயென்
றுற்றப் பாங்கி யறியாள் போன்றது.

165. நீங்க ளுடலுயிர் யான்மன மென்னப்
பாங்கி தலைவற் கடைக்கலம் பகர்ந்தது.

166. விருந்தா யெம்மூ ரிருந்தே குவிரெனப்
பரிந்துப சாரம் பாங்கி பகர்ந்தது.

167. உங்கள்பால் விருந்தும் பாலிகை யமுதெனத்
தங்குதல் போலத் தலைவ னுரைத்தது.

168. இந்து மதிக்குமுன் றந்த மாலைபோல்
வந்த திரவென நொந்தவ ளுரைத்தது.

169. இரவியு மிரிய விராவந் தருவெனப்
பருவா லுற்றுப் பாங்கி பகர்ந்தது.

170. தனித்த காலையிற் றலைவன் வரவை
நினைத்துத் தலைவி நின்றுவருந் தியது.

171. பிரிவு பொறுத்துயிர் வாழ்தல் பெண்கட்
குரிமையென் றுறுதி தோழி யுரைத்தது

172. மான்மழ நோயைப் புலிக்கு வகுத்தல்
போன்மெனப் பாங்கியுடன் தலைவி புகன்றது.

173. பிரிந்தா லுய்யாப் பெட்புப் பாங்கிக்குத்
தெரிந்து தெளியத் தலைவிசெப் பியது.

174. அன்னை யறிந்தார் காவ லாகுமென்
றுன்னிப் பாங்கி தலைவிக் குரைத்தது.

175. பிரிவின் மாதரே பெரியர் பூவிலென்
றருமை நினைந்து தலைவியன் புற்றது.

176. அன்பர்தேர் வரலால் வேண்மதி தென்றற்
றுன்பிலெனத் தலைவிக்குத் தோழி சொல்லியது.

177. சுகத்தைச் சொலல்போற் றுயருற வென்னை
அகத்திற் செறிப்பரென் றாயிழை யுரைத்தது.

178. தத்தையைச் சொலல்போற் றலைவற்குப் பாங்கி
பத்தினி தன்னையிற் செறித்தமை பகர்ந்தது.

179. வேங்கை பூத்தலாற் றலைவியிற் செறித்தமை
பாங்கி தலைவற்குப் பரிந்துரை செய்தது.

180. இனியா மனைவிட் டேகே மென்னத்
துனியுறத் தலைவற்குத் தோழி சொல்லியது.

181. உறவாம் புனம்விட் டூர்க்குச் செல்கோம்
மறவா திருமெனப் பாங்கி வகுத்தது.

182. வறும்புனத் தழுங்கு மன்னவ னெஞ்சோ
டுறந்திற மீதென வுளைந்துளைந் துரைத்தது.

183. அன்னை பலகால் வருதலாற் றலைவன்
றன்னைப் பாங்கி வருத றடுத்தது.

184. சூல்கொண் டிடுதலா லேதுறு மோவென்
றன்பர்க்குப் பாங்கி வன்பாய் மொழிந்தது.

185. அன்னை பார்வை நகைக்கச் சுறுத்தி
மின்னைப் பாங்கி வரவுவிலக் கியது.

186. என்போ லேக றகாதென விந்திரன்
முன்சிறை யரிந்தனன் கொல்லென மொழிந்தது.

187. நீங்கும் விதியை நிகழ்த்து மிவையெனப்
பாங்கிகொண் டேகும் பொழுது பகர்ந்தது.

189. சண்பகக் காவைக் கண்டு தணந்தோன்
பண்சொற் கிளியொடு பரிந்துரை செய்தது.

190. உயிருண் பகழி மாரனேந் தினனென்
றயர்வுறுந் தலைவ னுடிடத் தழிந்தது.

191. ஊர்க்குச் சேற லருமை யுவமையாற்
றீர்க்கமா மனத்தோ டிறைசெப் பியது.

192. இருள்வயி னில்லத் தேகுந் தலைவன்
மருளும் பாங்கிக்கு வகுத்து ரைத்தது.

193. கருகுகங் குலின்வாய் வருகுவ தரிதெனப்
பருவர லுற்றுப் பாங்கி பகர்ந்தது.

196. தன்னூர் வளமவன் கேட்க வேண்டி
உன்னூர் வளஞ்சொலென் றிகுளை யுரைத்தது.

197. பாங்கி கருத்தின் பண்பறி தலைவன்
நீங்கள்வாழ் நகர்வள முரைமி னென்றது.

198. அணியும் பூச்சு மாடலுந் தலைவன்
துணியும் படிக்குத் தோழிசொல் லியது.

199. இரவில் வரவிரந் தாரெனப் பாங்கி
நிரைவளைத் தலைவிக்கு நேர்ந்து மொழிந்தது.

200. இரவில் வருகுவ ரென்ன நெஞ்சொடு
பருவர லுற்றுத் தலைவி பகர்ந்தது.

201. உற்றூர் வருதற் குன்மன மிசைந்தால்
அற்றே யெனக்கெனத் தலைவி யறைந்தது.

202. தலைவி மனந்தேற் றருமை பாங்கி
தலைவற் கின்பந் தகவே யுரைத்தது.

203. அனைதுயி லறிதற் கடுத்த வார்த்தையாற்
புனைவே லவன்வரல் பாங்கி புகன்றது.

204. மார னலரால் வருந்தித் தலைவர்
நேர்வரிவ் விரவென நேரிழைக் குரைத்தது.

205. உன்னிசை யளிகேட் டுவக்கும் பந்தரின்
மன்னுவை யெனத்தலை மகட்கொடு சென்றது.

206. வேலோ டரசு மேவிடஞ் செல்வோம்
பாலமு தேயெனப் பாங்கி பகர்ந்தது.

207. இரவிற் றுமரை யிருந்துவந் தீரெனப்
பரிவிற் றலைவியைத் தலைவன் பயின்றது.

208. தாமரை விடுத்தலாற் றாழ்த்ததென் னுயிரென்
றேமுறு தலைவ னெதிர்வந் துரைத்தது.

209. தலைவ னிரவிற் றனிவரல் கண்டு
தலைவி யிரங்கி யருமைசாற் றியது.

210. ஊரின் மனத்துணை நீபிரிந் தால்வழிப்
போர்மதன் றுணையெனத் தலைவன் புகன்றது.

211. இருவரு மொன்று யியைந்துமொன் றாகா
அருமையே யின்பமென் றண்ண லுவந்தது.

212. மாரன் மனைதிரு விவட்கிணை யலரெனப்
போர்வே லண்ணல் புகழ்ந்து ரைத்தது.

213. இருவர் மரபுக் கியையா விறைவன்
வரவெனத் தலைவி வருத்து ரைத்தது.

215. உன்னவ யவத்துக் குடைந்த விவையென
மென்மலர் காட்டிப் பாங்கிமே வியது.

216. வெஞ்சினத் தாய்விழித் தாவில மடைத்தால்
என்செய லேகென் றிகுளை யுரைத்தது.

217. களவாய் வரலொழி தாயுறங் காளென்
றுளவாய்த் தலைவற்குப் பாங்கி யுரைத்தது.

218. பாங்கி யுரைத்த கடுஞ்சொற் கண்ணல்
ஏங்கி உவமை யெடுத்து ரைத்தது.

219. வருதலைத் தடுத்த பாங்கிக் கண்ணல்
உரிமை யிலையென் றுள்கி யுரைத்தது.

220. அண்ணலூர்க் கேகு மடையா ளம்பெறின்
உண்மகிழ் வாளெனப் பாங்கி யுரைத்தது.

221. துன்னிய விருளிற் றோன்றும் வழிக்கு
மின்னிடை யுன்னி வேந்தன் சென்றது.

222. இரவிற் புள்ளொலி யெழும்பலாற் றலைவன்
வரவெனப் பாங்கி தலைவிக் குரைத்தது.

223. இரவிலுய் யானத் தேகலுந் தலைவன்
வரவறி யேனெனப் பாங்கிக்கு வருத்தது.

224. தலைவி தலைவனைத் தேடுந் தகையாற்
குலவிப் பாங்கி வெஞ்சினங் கொண்டது.

225. இரவெலாந் தேடி யுழன்று தலைவன்
பருவர லுற்று நெஞ்சொடு பகர்ந்தது.

226. என்போ னீயும் வாடினை யென்ன
முன்சேர் வனத்தைத் தலைவி மொழிந்தது-

227. தனித்தான் மாரனெய் வானென விரவில்
இனித்தான் வாராரென் றிறைவிசெப் பியது.

228. தலைவர் வந்தமை மெய்யல ராலென்
றலையா வண்ணம் பாங்கி யுரைத்தது.

229. குறிக்கு வந்தோ மிரவிலுன் னூர்க்கு
மறுப்பையென் றெழுந்தமை பாங்கி வகுத்தது.

230. பொய்யல விரவில் யான்வரல் சுழறல்
மெய்யெனத் தலைவனீர் மேவலை யென்றது.

231. கனிவீ ழோசையாற் கலங்கின ளென்னத்
துனிதீர் பாங்கி தோன்றற் குரைத்தது.

232. தாஞ்செய் சூத மலரு நம்மேல்
ஆஞ்செய லறைந்தமை பாங்கி யுரைத்தது.

233. கனிபுள் ளோசையி னுலைதலு மறியார்
இனியென் செயலென் றிறைவி நொந்தது.

234. அனைகட றுஞ்சா வாகையாற் றலைவி
நினைவிற் கிகழ்வா ணேரிழை நைந்தது.

235. இருளின் ஞாளிக் குரலிடை யூறெனப்
பருவர லுற்றுப் பாங்கி பகர்ந்தது.

236. ஊர்துஞ் சாமையாற் பிரிந்தோ ருலகத்
தார்பிழைப் பாரெனப் பாங்கி யறைந்தது.

237. மதியுயிர் நெருப்பாற் பதியுறங் காதாற்
பதிவரற் கூறெனத் தலைவி பகர்ந்தது.

238. தீபமி விரவிற் காவல ரறைதல்
சாபறை யாமெனத் தலைவி சாற்றியது.

239. மதியை மறைக்க வாழி யிலையோ
பதிவாற் கூறெனத் தலைவி பகர்ந்தது.

240. நல்வினஞ் சேர்ந்து நாயகன் வருதற்
கல்லன் மதியென் றரிவை நைந்தது.

241. கோட்டான் குழறுந் துன்னிமித் தத்தால்
வேட்டவர்க் கூறு தலைவி விளம்பியது.

242. கோழி கூவப் பொழுது விடிதலாற்
ருழ்வித ஞலெனப் பாங்கிசாற் றியது.

243. வடிவிழித் தலைவியை வந்த தேதென்
றடுதிறம் பாங்கி யறியக் கேட்டது.

244. * செவிலி யறியுஞ் சின்னத் தாலென்
றவிரிழைப் பாங்கி யாற்று வித்தது.

* இது மூலத்தில் தலைவி கூற்றாக உள்ளது.

245. பலவிடை யூற்று மிறைவர லரிதெனத்
தலைவி பாங்கியைத் தடுத்து மொழிந்தது.

246. வன்மை வரத்தை வாங்க வவரூர்
தன்னைச் செல்லத் தலைவி சாற்றியது.

247. உருக்கமு முறைப்பு மாறின வென்ன
விருப்புடைப் பாங்கி யிறைவனைப் பழித்தது.

248 புணர்ந்த பின்னர்த் தலைவி யின்பம்
உணர்ந்து கழிந்ததற் கழிந்து ரைத்தது.

249. கனவினு நீங்காக் கலவியைப் பாங்கிக்
கனநடைத் தலைவி யன்புட னுரைத்தது.

250. பிரிந்தநாட் கவினெலாம் வீணாய்ப் போயின
தெரிந்துபாங் கிக்குச் சேயிழை யுரைத்தது.

251. கலவிய தில்லா விடினென் னுயிர்க்கு
நிலையிலை யென்னப் பாங்கிக் குரைத்தது.

252. என்பசப் பவருக் கேற்ப வுரைத்தல்
நின்கட னென்று நேரிழை யுரைத்தது.

253. கனவிலு நனவிலுந் தனத்திலு மனத்திலும்
நினைவறி வாரென நேரிழைக் குரைத்தது.

254. அயலா ரலர்க்கு மநங்க னலர்க்கும்
மயலாய்ப் பதைக்குந் தலைவி வருத்தது.

255. விலங்கிரை தேடுங் கான்வரு குவரெனக்
கலங்கித் தலைவி கட்டு ரைத்தது.

256. காம மிகுதியாற் கழியைப் பார்த்துத்
தாமக் குழலி தான்புலம் பியது.

257. அன்றில்காள் பிரிந்தா லன்றே தெரியும்
என்று தலைவி யிகழ்ந்துபுலம் பியது.

258. தெள்ளிய விறைவனைச் சேராப் பிரிவாற்
கள்ளியைத் தலைவி சமங்கட் டுரைத்தது.

259. வழியொடு நடப்பவர் மாறுகொள் ளாரெனக்
கழிபெருங் காதலி கட்டு ரைத்தது.

260. இனிபுனத் துறினுங் கெற்பந் தோன்றுமென்
றுனித்தலை விக்குப் பாங்கி யுரைத்தது.

261. மாரனெய் வாளி மைக்கோ வந்ததென்
றார்வமோ டிறைவி பாங்கிக் கறைந்தது.

262. அனைமய லறியாள் வெறியெடுத் தாளயல்
இனைதறி யாதெனத் தலைவி யியம்பியது.

263. பிறர்வரை தற்குப் பேச லெல்லாம்
இறையறி யாரென் றிகுளைக் குரைத்தது.

264. இறைவரல் குரவர்க் கியம்பு கென்ன
இறைவி பாங்கிக் கினிதியம் பியது.

265. குறிப்பாற் செவிலி யறிந்தமை பாங்கி
இறைவற் குணர்த்தி வரைவுவிரை வித்தது.

266. பழிமொழி வருமெனப் பாங்கி வரையும்
வழிவிரை வாயென விறைவற்கு வகுத்தது.

267. அன்னை சுவடுகண் டறிந்தாள் வரைகென்
றுன்னிப் பாங்கி தலைவற் குரைத்தது.

268. நிசமறி யாம லசமறுத் தாரென்
றிசையப் பாங்கி யிறைக்கியம் பியது.

269. மன்னர் மணப்பேச் சுரைத்தார் வரவை
முன்னநீ ரீகெனத் தோழி மொழிந்தது.

270. தெளிநீ மனையவ ரெதிர்கொள் வாரென
அளியுடைப் பாங்கி யண்ணற் குரைத்தது.

271. இதுவிள வேனில் வரைநா ளினிவரு
வதுவலா திலையெனப் பாங்கி வகுத்தது.

272. அழகு கலவிக் கிணையிலாத் தலைவி
பழகற் கறிந்தமை பாங்கி பகர்ந்தது.

273. களவு வெளிப்பட லாற்பிற குறியிட்
டளவளா வுவையெனப் பாங்கி யறைந்தது.

274. இரவி செலுங்*கன லெண்ணி யிருத்தலால்
இரவிறை வருகென் றிகுளைசெப் பியது.

275. அரவிந் தங்கட் காதப னீயால்
இரவர லொழிகென் றிகுளைசெப் பியது.

276. இன்பமே விட்ட காலை யிராப்பகல்
அன்புடன் வருகெனப் பாங்கி யறைந்தது.

277. பகலினு மிரவினு மலருண் டிறைவ
தகவே தேரெனப் பாங்கிசாற் றியது.

278. உத்தம குணமெலா முமதே வரைதல்
உத்தம மென்று பாங்கி யுரைத்தது.

279. உன்னூர்க் கஞ்சா துடன்கொடு போகெனப்
பன்னிப் பாங்கி வரைவு கடாயது.

---

* கனல் = கன்னல் - நாழிகை.

280. அரிவை படுந்துய ராற்ற விரைந்து
வரைவா யென்னப் பாங்கி வகுத்தது.
281. தோற்று வேள்கணைத் துயர மினிமேல்
ஆற்று ளென்னப் பாங்கி யறைந்தது.
282. காவன் மிகுதியாற் றலைவிவரற் கஞ்சும்
நீவரை விரைந்தென் றிகுளை நேர்ந்தது.
283. தலைவி துயர்க்குன் னுரிமை யன்றி
நிலைவே றிலையெனப் பாங்கி யுரைத்தது.
284. கனவிற் கண்ட கால மொழியப்
புனையிழை யழுங்கல் பாங்கி யுரைத்தது.
286. மாரன் கணையான் மெய்வா டினளென
ஊரனை வரையப் பாங்கி யுரைத்தது.
287. பகற்போ யிரவில் வருவே னெனத்தன்
அகற்சி பாங்கிக் கறிய வுரைத்தது.
288. நீங்க லுறுவீர் யாங்க டணந்தாற்
றூங்குமி னென்று பாங்கி மொழிந்தது.
289. நீங்கா வுயிரு மெய்யும் வேறோ
ஈங்கே யென்னப் பாங்கிக் குரைத்தது.
290. இதமெலா மகித மினியிவட் கேகுமின்
பதமீ தென்று பாங்கி விடுத்தது.
291. வருகுதல் பிரிவன் றென்னப் பாங்கி
பிரித றலைவிக் கறிய வுரைத்தது.
292. எனைப்பிரிந் தாலு நெஞ்சே தலைவர்
உனைப்பிரி யாரென் றிறைவி யுரைத்தது.
293. வழியா கிலும்விழி பார்க்கப் பெறுதோ
கழியே யென்று தலைவிகட் டுரைத்தது.
294. பகற்பொழு திருந்தன ளென்றளி காணீர்
அகத்துரை மின்னெனத் தலைவி யறைந்தது.
295. மணக்கூட் டுள்ளுறை வேனுக் களிசெய்
திணக்குறு வீயெனத் தலைவி யிசைத்தது.
296. அன்பரூர்த் தென்றல் வருதலா லாற்றி
இன்புறு வோமெனப் பாங்கி யிசைத்தது.
297. இனிமெய் தழைத்திடு மென்று பாங்கி
துனியுறு தலைவிக்கு வரவுணர்த் தியது.
298. * ஆற்றுவித் திருந்த வருமை தலைவற்குத்
தோற்றிடும் படிக்குப் பாங்கிசொல் லியது.

* மூலத்தினின்றும் வேறுபட்டுள்ளது.

299. * பிரிவு வருத்த மாற்றி யிருந்தமை
தெரியப் பாங்கி தலைவற் குரைத்தது.

300. மதனெய் தென்னை மழுங்கு வேளம்
பதனாற் றுயரிலை யென்றிறை யறைந்தது.

301. பெண்பழி வாரா துன்புகழ்க் காகக்
கண்போற் காத்த றோழிகட் டுரைத்தது.

302. தான்சொலிற் பிரிவாற் றாளெனப் பாங்கி
மான்சொல வேண்டி வள்ள லுரைத்தது.

303. உடலிருக் கும்படி யுரைத்துச் செல்லென
மடநடைப் பாங்கி தலைவற்கு வருத்தது.

304. பிரிவு சொல்லிற் பெறுமுறை யீதென்
றுரிமை தலைவற்குப் பாங்கி யுரைத்தது.

305. என்னுயிர் காத்தன்மின் றன்னுயிர் காத்தலென்
றுன்னிப் பிரிவு பாங்கிக் குரைத்தது.

306. இருந்தா லுயிர்யான் வருந்தா தாற்றுதல்
பொருந்து மென்று பாங்கி புகன்றது.

307. பிரிவவட் குணர்த்துமுன் யான்வரு வேனென்
றுரிமை பாங்கிக்குத் தலைவ னுரைத்தது.

308. இரவில்வா ராதிருந் தாலிவ ளாற்றாள்
விரைவாய் வருகெனப் பாங்கி விடுத்தது.

309. பெண்விலைப் பரிசப் பொன்கொள வகன்றார்
உண்மெலி யேலெனத் தோழி யுரைத்தது.

310. மாலெழுந் திரங்குமென் வருத்தங் கண்டாற்
காலெழா வவர்க்கெனக் கருத்தோ டுரைத்தது.

313. அரியாற் பதைக்குமா னனங்க னம்புக்
குருகல்போ லிறைவா விகுளை யுரைத்தது.

314. இக்கார்ப் பருவ மவர்க்கிலை யோவென்
றக்கார் வண்ணம் பாங்கிக் கறைந்தது.

315. கார்க்குறி யல்ல கண்டது வேறென்
றேற்கப் பாங்கி யிறைவிக் கியம்பியது.

316. இக்குறி கார்க்கே யலதுவே றிருதை
ஒக்கவொண் ணாதெனத் தலைவி யுரைத்தது.

317. பிரிந்தா ரிடத்துஞ் சொரிந்துள் ளுருக்கல்
தெரிந்து தலைவிக்குத் தோழி யுரைத்தது.

318. பொய்யோ ரிடத்துப் பெய்யா தாதலால்
உய்வா ரவரெனப் பாங்கிக் குரைத்தது.

* மூலத்தினின்றும் வேறுபட்டுள்ளது.

319. கார்வந் திடலாற் றேர்வந் திடுமெனத்
தாரணி தலைவியைச் சகிதேற் றியது.

320. வாரியிற் றேர்மா வாரா தவர்வரல்
ஓரினெவ் வாறெனத் தலைவி மறுத்தது.

321. கார்முன் வரலாற் றும்வரு வாரெனத்
தேர்திறம் பாங்கி தேர்ந்துசெப் பியது.

322. பிரிந்த தலைவன் தலைவி வருத்தம்
தெரிந்து மனத்தொடு புலந்துசெப் பியது.

323. சூதமும் பருமமுந் தொலையக் கார்வரின்
மாதுகண் ணீர்விட்டு வருந்து மென்றது.

324. பிரிந்த தலைவன் விரைந்து செல்லெனப்
பரிந்து வலவற்குத் தெரிந்து ரைத்தது.

325. மோகந் தன்னுன் மொய்குழற் குரையென
மேகந் தன்னொடு வேந்தன் மொழிந்தது.

326. வந்தது தேரென் றவளுக் குரையெனக்
கந்தரத் துடனே காளைசெப் பியது.

327. மங்கை பாற்செலின் மழைதோற் பாயென
மங்குலை நோக்கி வள்ள லுரைத்தது.

328. தலம்புகழ் தலைவன் றேர்வரல் பாங்கி
வலம்புரி கேட்டிறை விக்கு வகுத்தது.

329. மங்குல் வருமுன் வையம் வருகை
சங்க வோசையாற் றலைவி மகிழ்ந்தது.

330. தேர்வர வுணர்த்தலாற் றிகழ்வலம் புரியே
நீவாழ் கென்று தலைவி நினைந்தது.

331. எம்மை மறவா திருந்தனை யென்றிறை
தன்முக நோக்கிப் பாங்கிசாற் றியது.

332. திறத்தொடு காண்ட லெல்லா மவளே
மறத்த லின்றென மன்ன னுரைத்தது.

333. உன்பெயர் மொழிந்துயி ராற்றிவைத் திருந்தேன்
என்பர மன்றென் றிகுளை யுரைத்தது.

334. பரிச மளித்தமை பாங்கி தலைவிக்
குரைசெய் தகத்துன் பொழிநீ யென்றது.

335. இனியனை யுளமகிழ் வெய்து மென்று
கனிமொழித் தலைவி கருத்தி லுவந்தது.

337. முந்துற வுடையோர் கந்துக மேறி
வந்தமை தமருடன் பாங்கி வகுத்தது.

338\. தணவா வருத்த முற்ற தலைவி
மணமுர சொலிகேட் டகமிக மகிழ்ந்தது.

339\. மாலையு மிட்டு மாலையும் விட்டமை
பாங்கிகண் டிறையை யோங்கவாழ்த் தியது.

340\. கிமித்தம் பார்த்துன் றலைவி நிற்பது
தமித்துப் பாரெனத் தலைவற் குரைத்தது.

341\. தெய்வந் தொழாமற்குத் தெய்வம் பணிதலைத்
தெய்வத் தலைவன் றெளிந்து மகிழ்ந்தது.

342\. தலைவிமயல் பாங்கி தானே கண்டு
நிலைத ளர்ந்துகண் ணீரைத் துடைத்தது.

343\. தலைவி பாங்கி தனக்கு மோக
நிலையுரைத் துண்மை யறத்தொடு நின்றது.

346\. தலைவர் பொய்ச்சூ டன்றல் வெற்றி
இலர்நெஞ் சிரும்பென் றிகுளை யுரைத்தது.

347\. தலைவ ரெவ்விடத் திருக்கினு மின்பம்
உலவா தெனக்கென் றிறைவி யுரைத்தது.

348 அன்பர் பிழைப்பைப் பொறுக்க முருகன்
தன்பதம் பணியப் பாங்கிசாற் றியது.

349\. தலைவி யன்னை தன்னை யில்வயின்
நிலைபெற வைத்தல் பாங்கிக் குரைத்தது.

350\. தலைவன் வரவு செவிலி யறிந்தமை
தலைவி பாங்கி தனக்கெடுத் துரைத்தது.

351\. கவலை தலைவிக் காம்படி யென்னெனச்
செவிலி பாங்கியைச் சென்று வினவியது.

353\. வெறியாட் டயர்வுழிப் பாங்கி தெய்வமே
மறிமேற் பழியோ வென்றுவா டியது.

354\. இறைவி மயக்கந் தனைக்கண் டாடிய
வெறிவிலக் கென்னெனச் செவிலி வினவியது.

355\. தலைவி தலைவன் றொடைபெறல் செவிலிக்
குலையா வண்ணம் பாங்கி யுரைத்தது.

356 சுனையி லழுந்த வெடுத்தோன் றனக்கே
மனைவி யிவளெனப் பாங்கி வகுத்தது.

357\. வனக்களிற் றுன்முன் மாயா தளித்தான்
தனக்குரி யவளெனப் பாங்கிசாற் றியது.

358\. தந்தி வலித்துயிர் தந்தார் தமக்கோ
இந்த முரசு பிறர்க்கோ வென்றது.

359. மெய்க்குறி வேறா கியதெனச் செவிலியை
இக்குறி யேதென நற்றாய் வினாயது.

360. தன்மா லதனாற் றலைவனை யணைந்தாள்
நம்மா விறாதென நற்றாய்க் குரைத்தது.

361. நற்றாய் கிளையோர்க் குற்ற துரைத்து
முற்றுந் தலைவற் பெற்றிட மொழிந்தது.

362. உன்னூர்க் குடன்கொடு போவெனப் பாங்கி
தன்மனந் தெளியத் தலைவற் குரைத்தது.

363. கடுஞ்சுரந் தலைவி கால்பொறா தென்று
* தடுஞ்சொலாற் றோழி தனக்கியம் பியது.

364. உன்னுட னேகிற் கடுஞ்சுரந் தண்ணெனும்
என்னப் பாங்கி யிறைக்கியம் பியது.

365. காமத் தீக்குக் கடுஞ்சுர மெளிதெனத்
தேமொழி யுடன்செல விறையுடன் பட்டது.

366. உடன்செல வாசை யுற்றனர் சுரத்தென
திடம்பெறத் தலைவிக்குப் பாங்கிசெப் பியது.

367. நாணிழந் தாற்பெண் ணனவெனை நவிலார்
நீணிலத் தோரென நேரிழை யுரைத்தது.

368. கற்பு நிற்பி னெக்குண மகன்றும்
பொற்பெனப் பாங்கி யவட்குப் புகன்றது.

369. அன்புடன் றலைவி யவனுடன் போகும்
இன்பம் பாங்கிக் கெடுத்தியம் பியது.

370. வம்பலர் ஆடியனை யில்லாச் சுரமே
நம்பதி யென்னத் தலைவி நயந்தது.

371. உன்னடைக் கலமென் றுவந்து தலைவன்
தன்னிடைப் பாங்கி கையடை கொடுத்தது.

372. பாங்கி தலைவியைப் பையுளெய் தாவகை
நீங்கள்போ நானலர் நீக்குவ னென்றது.

373. வன்சுரஞ் செல்லும் வகைவருந் தாமல்
மென்சொலா ளிவளுடன் வேந்தனே கியது.

374. அடுத்தது சோலையென் றன்பா லிறைமொழி
கொடுத்துத் தலைவியைக் கொண்டே கியது.

375. தலைவி வருத்தந் தானறிந் திறைவன்
இலைவளர் சோலையி லிருத்தியாற் றியது.

---

* தடும் சொல் - தடுக்கும் சொல்.

376. என்விழி குளிர்ந்த தென்றலர் சூட்டி
மன்வழி யிளைப்பை யாற்றி மகிழ்ந்தது

377. கண்டோ ரிவர்க ளழகுக் குவமை
உண்டோ வெனமிக வுவந்துநோக் கியது.

378. வழியிற் கண்டோர் வைகிப் போமென்
றொழியா வன்போ டுவந்து ரைத்தது.

379. கண்டோர் சுரத்திற் காணு ழிகைவழி
உண்டெனத் தலைவற் குவந்து ரைத்தது.

381. வம்பலர் மாளிகை வாவி நெருங்கும்
தம்பதி யணைந்தமை தலைவிக் குரைத்தது.

382. துன்னி மித்தத் துயராற் செவிலி
என்னிளங் கொடியெங் கேகின ளென்றது.

383. புவியின் மாலை தருமன் னவற்காச்
செவிலிக்குக் கற்பாற் சென்று ளென்றது.

384. அயருறு மென்னத் துயரவள் கொடுத்தல்
அயலுரைப் போர்க்குச் செவிலி யறைந்தது.

385. உடனே சுதற்கே யுரிமையாய்ப் பார்த்த
திடனறி யேனெனச் செவிலி நொந்தது.

386. கற்சுர நீங்கி வரிற்கந் தனுக்குப்
பொற்புறு வேனெனச் செவிலி புகன்றது.

387. கொடிகொழு கொம்பைப் பற்றல்போற் றலைவி
கடியெனச் செவிலிநற் றாய்க்குக் கழறியது.

388. உற்றநீ யிரங்கலென் னுளம்புழுங் கும்மென
நற்றாய் பாங்கி தன்னொடு நவின்றது.

389. பாலைக்கு நீரிலை யெனத்தாய் பதைத்துக்
கோலப் பாங்கிய ருடன்கூ றியது.

390. அயலார் தமைக்கண் டன்புட னற்றாய்
புயலார் குழலியைத் தேடிப் புகன்றது.

391. உடன்விளை யாட்டோர்க் கென்னுரைப் பேனென்
றிடருறு நற்று யிடத்தோ டுரைத்தது.

392. கருங்கொடி யென்கொடி மீளக் கரைந்தாற்
சொரிந்திடு வேன்பலி யெனச்சொல் லியது.

394. நற்று யிரவியைத் தலைவிசெல் லுஞ்சுரம்
வற்று நீழல்செ யென்னவாழ்த் தியது.

395. சிற்றிடைத் தலைவிதன் பொற்புக் கிரங்கி
நற்றாய் நெஞ்சோ டுற்றுவா டியது.

396. சரத்தின் வன்மையுந் துடியிடை மென்மையும்
உரைத்து நற்று யுளம்வா டியது.
397. பருகும் வடவையைப் பாலை யதிலே
உருகு மகட்கனை யுளம்வா டியது.
398. அன்புற் றுருயி ரிறந்தது கண்டும்
வன்புற் றனனென நற்றாய் வாடியது.
399. பார்வை மிருகங் கண்டாற் பாவையும்
நீரா யுருகு மெனத்தாய் நொந்தது.
400. ஆயமுந் தாயு மழுங்கக் கண்டோர்
சேயபொற் றலைவிக் கிரங்கி வாடியது.
401. புவியு மொருவற் கடங்கு மென்று
செவிலி நற்றாய் தனைத்தேற் றியது.
402. வழியிற் செவிலி மறையோர் தம்மை
விழியிற் கண்டிரோ வென்று வினவியது.
403. சங்க மிரண்டுந் தமிழார மிற்றும்
உங்களுக் கணிபோ லுளங்கொளு மென்றது.
404. சரத்தி லெயிற்றியைத் துணையுட னண்ணல்
வரத்தறி வீரெனச் செவிலி வருத்தது.
405. குருப்பெயர் புனைதலாற் குரவீர் விலக்கா
திருப்பதுண் டோவெனச் செவிலியியம் பியது.
406. குழையக் கண்கண் முத்தங் கொழிக்கும்
கழையைக் கண்டு செவிலி வினவியது.
407. முன்னுற விலானுடன் பின்னுறப் போன
பொன்னைச் செவிலி புறவொடு வினவியது.
408. தலைவி யுருக்கத் தருகு மருவி
மலையைக் கண்டு செவிலிவா டியது.
409. கவடு நெடிது சிறிது கவர்ந்த
சுவடுகண் டிரங்கிச் செவிலி சொன்னது.
410. மூன்று வேல்கொண் டிருதுணை யுற்றது
தோன்றின தோவெனச் செவிலி சொன்னது.
411. திருமா லெனவரு மிருவோ ரையுமீ
ரிருவிழி யாலறிந் திகலறப் புகன்றது.
412. புவியிற் றேடி மகளைக் காணுச்
செவிலி சொல்லக் கவலை கூர்ந்தது.
414. பாலையிற் றேடியும் பாவையைக் காணுள்
மாலைச்செவிலி தாய்க்கு வருத்தது.

415. என்னிளஞ் சோலை யிவையென் றண்ணல்
தன்னூர் சேர்த றலைவிக் குரைத்தது.

416. முன்செல் வோருடன் முன்செல் வலென
இன்சொலாற் றலைவி யிகுளைக்கு விடுத்தது.

417. வழிமுன் சென்றோர் வையம் வந்தமை
விழியாற் கண்டுபோங் கியர்க்கறி வித்தது.

418. ஈங்கிறை யிறைவி வந்தன ரென்னப்
பாங்கியர் நற்றாய் தனக்குப் பகர்ந்தது.

419. அண்ணல் வேட்டகம் வைகுமோ வென்ன
உண்ணெகி ழன்னை யுருகற் குரைத்தது.

420. மலைவி னம்மூர் மணஞ்செயச் சொல்லத்
தலைவி செவிலியைத் தான்வின வியது.

421. பாங்கி தலைவன் றன்மனை மணந்தமை
பூங்குழற் செவிலி தெளியப் புகன்றது.

422. தலைவன் றன்மனை வரைந்தமை செவிலி
நிலைமை நற்றாய்க்கு நேரா யுரைத்தது.

423. தலைவன் பாங்கியை நோக்கி வரைந்தமை
உலைவி னுமர்க்கெலா முரைப்பா யென்றது.

424. முன்னே நின்னூர் தன்னின் மணந்தமை
அன்னை முதலோர்க் கறைந்தே னென்றது.

425. கணங்களை நீங்குங் கடுந்துய ரல்லால்
அணங்கிலை யென்றவ ளந்தணர்க் குரைத்தது.

426. என்னைத் தலைவன் றேர்மிசைக் கண்டமை
அன்னையர்க் குரைக்கவென் றருந்தவர்க் குரைத்தது.

427. அந்தணர் பாலையி லன்புற விருவரும்
வந்தமை நற்றா யுவந்திட வுரைத்தது.

430. தலைவன் றமர்க்குப் புறங்கொடுத் தமையால்
தலைவி யுளத்தொடு தான்புலம் பியது.

431. தலைவன் றலைவி யுயர்மணங் கண்ட
உலகவர் யாரு முண்மகிழ்ந் துரைத்தது.

432. நிலைமையில் வாழ்க்கை நிறுத்தி வைத்தலால்
தலைவன் பாங்கி தன்னைப் புகழ்ந்தது.

433. இருவருந் திருமால் போல வென்றும்
மருவுமி னென்று பாங்கிவாழ்த் தியது.

435. தழையாற் றரித்தே னென்று தலைவன்
தழையத் தலைவி தானே மொழிந்தது.

436. பாங்கி தலைவனை வரையுநா ளளவுயிர்
தாங்கி யிருந்ததென் னென்றுசாற் றியது.

437. ஒருகண முகம்போற் பிரிவாற் றுமையால்
இருவ ரன்புஞ் செவிலிக் குரைத்தது.

438. இவளைப் போல வில்வாழ்க் கையினுக்
குவமை யில்லெனப் பாங்கி யுணர்த்தியது.

439. செவிலி நற்றாய்க் குன்மக ளறஞ்செய்
* நவிர மகளென நன்குணர்த் தியது.

440. தலைவனைச் சேரியிற் கண்டோர் புலவிக்
குலைவிலை தலைவிக் கெனமிக வுரைத்தது.

441. தலைவன் றீமை தனைநினைந் திறைவி
உலையு மனத்தோ டிறக்கநீங் கியது.

442. இறைவனைக் கூடியுந் துயருள தோவென
நிறைவளைப் பாங்கி நேரிழைக் குரைத்தது.

443. பருவம் வருமுன் னருமை யுற்றவர்
பிரிவைப் பாங்கிக் கரிவை யுரைத்தது.

444. இடையே புணர்ந்துந் திருமா லிடையே
விடலுண் டோவென் றிகுளைவிளம் பியது.

445. கணிகையர் விடுசெவ் வணிகண் டிழையோர்
அணியவர் கொடுமை பிணிபெரி தென்றது.

446. வெறுவாய் மெல்பவர்க் கவல்போற் செவ்வணி
உறுதல்கண் டோர்பழி யுழைய ருரைத்தது.

447. என்னல மெவரு மறியா ரறிவர்
உன்னல மென்னப் பரத்தை யுரைத்தது.

449. பரத்தை விடுப்ப வந்த தலைவன்
உரத்தை யறிந்தோ ருவந்துசொல் லியது.

450. அனுப்பும் குறிகண் டன்பர் வந்தார்
இனிச்சிவப் பாற்றென் றிகுளைசெப் பியது.

451. கறைமதி காணுங் காந்தம் போல
இறையைக் காண்பனென் றிகுளைக் குரைத்தது.

452. புலவி புணர்ச்சி யிரண்டினு மொன்று
நிலைமே லாட்ட நேர்பெற மகிழ்ந்தது.

453. பரத்தையி னீங்கிய தலைவன் பாங்கியை
வரத்தாற் புலவிநீ தீரென வகுத்தது.

---

* நவிரமகள் - மலையரசன் மகளாகிய உமாதேவியார்.

455. தலைவியை யுவந்து காணுத றவிர்ந்து
கலவிக் கிலையெனத் தலைவ னுவந்தது.

456. புலவி திருத்தத் தலைவர் வந்திடு
நிலைமை பாங்கி தலைவிக் குரைத்தது.

458. உன்விலை மாதர்க் குவப்பா காதுமக்
கென்னல மென்ன வேந்திழை யுரைத்தது.

460. வீணுரைப் பாணரைக் காணலுற் றீர்களே
பேணி யழுமென வாணுத லுரைத்தது.

461. உடைந்தா லோடு மிழையிட லாந்தலை
உடைந்தா லுறுதெனப் பாண னுரைத்தது.

462. சொன்னவை மறாஅ தென்னையு மறுத்தல்
என்னென விறலி யேந்திழைக் குரைத்தது.

464. உறவின ருடன்சென் றமையா லிவடன்
அறிவு சிறந்ததென் றிறைவ னுவந்தது.

465. ஆட்பட் டோமிவ ளடிபெற் றேமென
வாட்படு கண்ணியை வள்ள லணைந்தது.

469. வேறொருத் தியையான் விரும்பே னென்னக்
கூறித் தலைவன் பரவசங் கொடுத்தது.

471. பாலனை யெடுத்தவென் றங்கைபே ரென்னென்
றேலவார் குழலி யிறைக்கியம் பியது.

472. பாங்கி புலகியல் பகர்ந்துளந் திருத்திப்
பூங்குழன் மாதர்க் குள்ளப் புகன்றது.

473 முன்றொ ளிருளுங் களிறு மன்றே
இந்நா ளிதுவென வேந்த னினைந்தது.

474. தன்மனக் குற்றந் தனக்குத் தெரியா
துன்மனக் குற்றமென் றிகுளை யுரைத்தது.

475. துணிவாய் மைந்தனைத் தோளெடுத் தோரைப்
பணிவா யென்னப் பாங்கி பகர்ந்தது.

476. இறையவர் கோல மெல்லாங் கொண்டுநம்
இறையவர்வந் தாரென் றிவரெதிர் கொண்டது.

477. அணைந்த வின்ப மடங்கா வுளத்திற்
புணர்ந்த மன்னன் புகழ்ந்து மகிழ்ந்தது.

478 மைந்த னுரிமையால் வந்த தலைவனைச்
சிந்தித் திகுளைக்குத் தலைவி செப்பியது.

479. தென்கா லதுவே தளிர்க்கச் செய்தல்போல்
என்கா தலனுமென் றேந்திழை யுரைத்தது.

480. அருந்ததிக் குங்கற் பளித்தாய் துணையாய்
இருந்துவாழ் கென்னப் பாங்கி யிசைத்தது.

481. உணர்வுடை யோர்பா லோத நினைந்தார்
உணர்வுடை யாரென் றிகுளைக் குரைத்தது.

482. பிரிந்தா லவளுயிர் பெரும்பே றறிந்து
திருந்துணர் வுறுமெனத் தோழிசெப் பியது.

483. செல்வத் தலைமை சேரத் தலைவர்
கல்விக் ககறல் பாங்கிகட் டுரைத்தது.

484. உயர்வி லோதுவா ருளரோ தலைவர்
அயர்வொழி யாரென் றாயிழை யுரைத்தது.

486. விடந்தலைப் பட்ட தெனக்கார்ப் பருவத்
திடந்தலைப் பட்டதென் றிறைவி கவன்றது.

488. * கற்பவர் வதியக் கற்கப் போனவர்
இற்புற வாரத் தேந்திழை யுரைத்தது.

489. கற்று முடிக்கப் போனவர் நின்குழற்
சுற்று முடிக்கத் துன்னின ரென்றது.

490. † முறைசெயப் போனு ரிறைவரென் றளிகள்
நிறைகுழற் றலைவிக் கிகுளைசெப் பியது.

491. இவளைக் காவா தெவற்றையுங் காத்தல்
அவமெனப் பாங்கி யன்பர்க் குரைத்தது.

492. நீதி செலுத்த மகிழ்நரே கினரென்
றூதர வுடனே பாங்கி யறைந்தது.

493. சரற்கா லத்துத் துயருறு தலைவி
வரற்கா முற்றுப் பாங்கிக்கு வகுத்தது.

495. குளிர்க்குடைந் தவதிப் படாமற் றலைவர்
அளிக்கவந் தாரெனப் பாங்கி யறைந்தது.

496. தூதிற் பிரிவு தோழி யிணைமுலை
மாதிற் குணர்த்த மன்ன னுரைத்தது.

497. தூதிற் பிரிந்தால் மாதுக் குறுதுயர்
ஏதோ வென்னத் தோழி யுரைத்தது.

498. மோகந் தீர்க்க வரத்தூ தினுக்கே
ஏகினர் தலைவரென் றிகுளை யுரைத்தது.

499. அயின்றூர் கடுவெனத் தலைவி மறத்தல்
பயின்று ரெனமுன் பனிக்கு நொந்தது.

* கற்பவர் - கற்பையுடைய மகளிர். இற்பு - இன்பம்.
† கூற்று வேறுபட்டுள்ளது.

500. முண்டகங் கருகல் கண்டு தலைவர்
விண்டன ரென்னத் தோழிவிளம் பியது.

501. நலம்புரி தலைவர் வருத னவின்றது
வலம்புரி யென்னப் பாங்கி வகுத்தது.

502. உற்றுழிப் பிரிதல் பொற்றொடிக் குரையென்
மற்றிகழ் தலைவன் பாங்கிக்கு வகுத்தது.

503. உற்றுழி யுதவி செய்தலிற் பெரிதே
பொற்றொடிக் குதவியென் றிகுளை புகன்றது.

504. பின்பனிக் காலத் தன்பரே கினரென்
றின்புறு தோழிக் கிறைவி யுரைத்தது.

505. * என்பனிப் பவர்க்கு மிலையோ வென்று
பின்பனி யாற்றுத் தலைவிபே சியது.

506. உற்றுழிப் பிரிந்தோ ருற்றன ரென்னப்
பொற்றொடிக் கிகுளை யற்புடன் புகன்றது.

507. † நடுப்பால் காரண மென்றது வேண்டி
அடுப்பா ரென்னப் பாங்கிக் கறைந்தது.

508. பொருளுக் கேகின் மருளுற் றிவளழல்
தெருளுற் றிறைவற் கிகுளைசெப் பியது.

509. ‡ நள்ளாம் பொருளுக் குள்ள நினைந்தார்
வள்ள லென்னப் பாங்கி வகுத்தது.

510. வளமையை நாடும் வள்ளறன் பிரிவால்
இளவே னிலைக்கண் டின்ன லெய்தியது.

511. வேனி லிளமை கண்டவர் மீள்வரென்
றானுயிர் போலுந் தோழி யுரைத்தது.

512. உருவெளிப் பாடு தோன்றுத றலைவன்
மருவுதேர்ப் பாகனொடு வகுத்து ரைத்தது.

513. புலந்த தலைவன் தலைவிமெய்ப் போகம்
கலந்துகார்ப் பருவங் கண்டு மகிழ்ந்தது.

---

* கூற்று வேறுபட்டுள்ளது.

† நடுப்பால் - அறம்பொருளின்பமென்பவற்றுள் இடையிலுள்ள பகுதியாகிய பொருள்.

‡ நள் ஆம் பொருள் - இடையிலுள்ள பொருள்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - பக்க எண்]


அஞ்சான சென்னி ... 78
அஞ்சிரடிக ... 129
அஞ்சுகீர்புக்கு ... 39
அடற்சங்கரர் ... 104
அதிர்க்குமுரசமு ... 106
அதிரமுழங்கிய ... 162
அப்புறத்துள்ள ... 93
அம்பார்சடிலத்த ... 124
அரவெளிதோ ... 69
அரிக்கோட்டிற்சேரு ... 113
அரிகார்முகத்திடை ... 71
அரும்பாமுலைபங் ... 24
அரும்பான்மொழி ... 66
அலையினஞ்சுண்ட ... 34
அவ்வானவர்க்கு ... 18
அளியார்கடுக்கைய ... 103
அறந்தான்மிகவும் ... 70
அன்பணிக்காலத் ... 160
அன்போரிருவர் ... 157
அன்றிற்றம்பேடு ... 51
அன்றுகண்டோநஞ் ... 4
அன்றுநடந்த ... 129
அன்றேனல்காத்து ... 111
அன்னுயிரங்க ... 118
அனத்திருப்பா ... 81
அனைகாவலுமுன் ... 89
அனையீன்றெடுக்க ... 75
ஆகங்குழைய ... 68
ஆகவமுற்ற ... 77
ஆகாயநன்புன ... 90
ஆடும்புனலு ... 64
ஆயுந்தமிழ்த்திரு ... 146
ஆரமுதாயுடல் ... 77
ஆரூரிறைவர் ... 43
ஆலம்புனைகண்டர் ... 102
ஆவிக்கமலத் ... 54
ஆற்கேசவனுக் ... 56
ஆறிலகுஞ்சடை ... 6
ஆனேறுகைப்பவர் ... 18
இங்கேவரிற் ... 88
இசையும்பலமணி ... 14
இடைக்குப்பகை ... 157
இந்நாரிமன்மதன் ... 5
இயலோடிசை ... 85
இரவும்பகலும் ... 71
இருங்கொடியேற் ... 123
இரும்பனிநல்கு ... 160
இலவுக்கிசைந்த ... 142
இழைகிழிக்குஞ்சிறு ... 44
இன்புற்றிடுமன் ... 83
ஈமத்திலாடிய ... 32
ஈராறுதிங்களினும் ... 151
உடன்மீதுலாவ ... 107
உடுநாயகமணி ... 161
உடையாதுசெம் ... 149
உண்ணீர்மையற்ற ... 145
உவக்கின்றவல்லி ... 124
உழுங்கொழுவாலுள் ... 16
உறையிட்டகொண்டலு ... 41
உன்களங்கண்டு ... 104
ஊர்கொண்டதிங்களும் ... 117
ஊரன்புகழ்திரு ... 135
ஊரேதுதாமரை ... 30
ஊனந்தமான ... 26
ஊனுருடலைப் ... 143
எடுக்குங்கணிச்சியர் ... 81
எண்கிரைதேடி ... 63
எண்டிசைக்குஞ்செல்ல ... 12
எண்ணார்புரஞ்செற்ற ... 70
எண்போதென்போல ... 20
எதிரேசெல்வேளுக் ... 58
எந்நேரமு ... 72
எய்தற்கரியவ ... 76
எரிதோன்றிய ... 99

எல்லாரமன்ன ... 111
எள்ளப்படாத ... 144
என்கண் கலுழ்ந்து ... 120
என்பற்றவைகள் ... 79
என்மாதின்கொங்கை ... 114
என்னைப்புதிது ... 148
எனக்குந்துணை ... 92
ஏரியல்வண்ணம் ... 47
ஏரேறுசெம்பொ ... 150
ஏனமருத ... 63
ஏனாதிநாதரும் ... 92
ஒப்போதுதலற்ற ... 59
ஒருகான்மலர்முலைப் ... 30
ஒருகோட்டினிற்கு ... 33
ஒருதலைச் சேவற் ... 158
ஒருநாரி வெய்ய ... 19
ஒற்றினள் கண்ணின் ... 52
ஓதிச்செருக்கு ... 14
கங்காநதிச்சடை ... 64
கங்காளவேடந்தரி ... 21
கங்கைச் சடை......
வெற்பா ... 85
கங்கைச்சடை...வெற்பில் ... 24
கங்கையிற்றோய்ந் ... 140
கஞ்சனுமாயனுங் ... 43
கஞ்சாலயன் ... 89
கட்டுற்றசெவ் ... 5
கடநாக நின்றது ... 33
கடற்கொத்துச் ... 69
கடனீர் பருகி ... 154
கடியாரந்துற்ற ... 8
கடும்பசியால் ... 41
கடைக்கண் சிவந்து ... 54
கண்டமையாதிங் ... 17
கண்டுறை சொல்வி ... 61
கணத்துடனாடிய ... 148
கதிராழி வைத்தவர் ... 106
கந்தனைநல்கிய ... 113
கயிலைவளத்தினர் ... 123
கருகாமற்சேயிதழ் ... 118
கருந்தாமரைமலர் ... 97
கல்லுங் கரையுங் ... 88
கலைக்கேசவன்கண் ... 28
கழிகாட்டுந்தண் ... 39
கழுகுந்தொழு ... 78
கழைகோடு வில்லி ... 36
களமார் விடத்தினர் ... 25
கற்றோர் பரவிய ... 134
கறைப்பொலி ... 47
கறைமருவுங்கண்டர் ... 41
கனத்தினைக்காணு ... 60
கனம்பிரிந்தாலு ... 12
கனமுந்தியபொழில் ... 65
கனமூருந் தண்டலை ... 55
காக்கு மருந்தவர் ... 143
காசியுடன் ... 122
காதாருங்கண்ணி ... 13
காமாயுதமுஞ் ... 112
கார்க்குன்றுரித் ... 3
கார்வந்த கண்டத்த ... 103
காரணங்கோடு ... 15
காரணவற்புதர் ... 32
காரளவும்பொழி ... 91
காராகியகண்டர் ... 68
காரோடுந் தண்டலை ... 139
கால்கொண்டு ... 73
காலையில் வாருஞ் ... 97
காலையிலேகை ... 57
காவம் பருதலர் ... 24
காவிலை தேன்சொரி ... 35
காவிற்குணிம்பக்கனி ... 2
காற்றுங் கனலும் ... 82
கான்காலுங் கொன்றை ... 111
கான்முந்து கொன்றை ... 101
கானத்தெயினர் ... 33
கானவரால ... 41
கானார் கதலியுந் ... 55
கிளரிற் பொறிதான் ... 46
கிளிக்கறையான ... 53
கிளைகாட்டும் பொன் ... 16
கீதமணக்குங் ... 110
குயிற்காதலிக்குங் ... 136
குருகசைந்தாலும் ... 70
குன்றாய வில்லினர் ... 60
கூடலிழைத்த ... 102
கூற்றும் பயங்கொண்ட ... 22
கேயூர மென்பணி ... 100
கைத்தல மேற்ற ... 7

கைத்தாய் வெறுத் ... 82
கைத்திகிரிப்புயல் ... 67
கைம்மதமாவுரி ... 35
கைம்மான் பிணிக்குக் ... 85
கையாறிரண்டுடை ... 50
கையிற் கணிச்சி ... 43
கைவாய் மழுவைத்த ... 10
கைவேலினாலெமர் ... 68
கோங்கைக்களிறு ... 49
கொங்கைத்தடத் ... 119
கொடுக்கும் வரத்தி ... 161
கொண்கரைக் கூடிப் ... 57
கொந்தேறுகொன் ... 5
கொம்மை படைத்த ... 159
கொய்கின்ற மாந்தழை ... 42
கொலையானைக்கெட் ... 112
கொழுந்தருவைப் ... 66
கோலக்கொடியும் ... 122
சங்கஞ் சுமக்குஞ் ... 95
சங்காழி விட்டு ... 147
சடையூடரவணி ... 154
சாற்றும் பொழுதோர் ... 49
சிகையங்கிவண் ... 32
சிந்தாமணியில் ... 16
சிலையானவெற் ... 74
சிறைப்பட்ட தண்புன ... 52
சினைக்கேகயங்களைக் ... 136
சினையேறு சங்கு ... 45
சீதளவார்பொழி ... 153
சீதையுடன்கொண் ... 125
சீரறுகாலனை ... 132
சீரூதருள்புரி ... 54
சுந்தரர் தூதுவ ... 152
சுமைப்போலிருந்த ... 138
சுரையோட்டை ... 145
சூடுவர்நீல ... 65
சூதழகான ... 105
சூல்பற்றித்தொண்டை ... 61
சூலாயுதத்தினர் ... 45
சூலெழுமேக ... 98
செங்கட்கிளிகண் ... 83
செங்கேழலரி ... 110
செஞ்சரத்தாரவர் ... 84
செப்போதுபூண்முலை ... 61
செம்பதுமத்திரு ... 86
செம்மைகொளுஞ் ... 35
செய்ப்புண்டரீகத் ... 67
செய்யலைக்கும் ... 23
செய்யுங்கனகச் ... 96
செய்யுஞ்செயலை ... 27
செருகாலம்போற் ... 31
செருவேற்ற ... 38
செல்வாய்திருத்திய ... 34
செற்றந்தவிருன் ... 51
செற்றார்புரஞ் ... 155
செறிக்கும்பெரும் ... 115
சேணாடுகாத்து ... 80
சேணும்பர் ... 90
சேணேறுபூம்பொழில் ... 130
சேமத்தனம்வழங் ... 40
சேமேல்வருந்திரு ... 102
சேரார்புரஞ்செற்ற ... 74
சேரம்புனத்தை ... 59
சேலேய்வயற்றிரு ... 162
சேலோடைசுற்றிய ... 114
சேவாகனத்தினர் ... 155
சேவுயருங்கொடி ... 108
சேவேறுமத்தர் ... 92
சேற்றாணிறை ... 99
சையத்திழிதருங் ... 131
சைவந்தழைத்திடு ... 108
சொற்கடங்காதிரு ... 151
சோதிபரந்த ... 6
சோலையம்போது ... 66
தங்கப்பொடியை ... 12
தங்காமற்றாதுக்கு ... 157
தட்டாமதுகரம் ... 80
தடுத்தாளுன்பாலனை ... 148
தண்காட்டியநண்பு ... 39
தண்சங்கங்கோடி ... 27
தண்டோட்டுமென் ... 51
தண்ணார்கடுக்கை ... 20
தண்ணீர்முகக்கு ... 128
தத்திவருந்திரை ... 25
தந்தவிலங்கு ... 64
தந்தாசலவுரி ... 94
தந்நேரிலாதவர் ... 20
தமையாதரித்து ... 76

| | | | |
|---|---|---|---|
| தருவழகாம்பொழி | 119 | நகங்கொண்டவில் | 50 |
| தலைமேன்மதிவைத் | 42 | நகையாரஞ்சூழ் | 90 |
| தழற்காயும்வெண் | 105 | நடத்தேர்படைத் | 91 |
| தனத்திற்சிவப்புங் | 142 | நண்பார்க்குதவி | 159 |
| தாரணிகாத்துப் | 160 | நந்தனஞ்சூழ் | 39 |
| தாராதரங்க | 135 | நரையுந்திய | 98 |
| தாருக்குமுன்செல் | 131 | நல்லநிலாவின் | 135 |
| தாரொன்றுபூ | 116 | நல்லார்தொழுந் | 158 |
| தாலம்பருக | 9 | நன்மார்க்கமேதரு | 134 |
| தாளம்புதைத்த | 99 | நன்றுகற்பித்தவர் | 152 |
| திண்ணப்பொறை | 116 | நாகம்புனைபவ | 109 |
| திணையாதி | 163 | நாட்டியநாகஞ் | 107 |
| திருந்திறைக்கோ | 120 | நாலாரணன்மைந் | 19 |
| திருமேனிகாத்து | 18 | நாலாரணன்முெழு | 4 |
| திருவார்தவம்புரி | 28 | நான்குதிக்கும் | 8 |
| தில்லையிலாடுந் | 121 | நிறக்குங்கனல் | 115 |
| தீட்டியதொய்யிற் | 28 | நின்மேலுருவப் | 79 |
| தீட்டிற்பொலிமழு | 37 | நின்னுகமுமன்பர் | 137 |
| தீதுகடந்தவர் | 153 | நின்னுருயிரன்ன | 132 |
| தீபெற்றபெண் | 141 | நீகாதலித்தெந் | 64 |
| தீமைகளைந்துங் | 156 | நீங்காமன்மேகலை | 79 |
| தீயாரின்மிக்க | 63 | நீடியவேற்கண் | 143 |
| துவரேறுமென்சடை | 23 | நீடும்புணர்வின் | 57 |
| தூதனையுந்துகிரும் | 40 | நீரைமறைக்குங் | 50 |
| தூமக்கனல்கண் | 38 | நீலக்கடுவுண்ட | 122 |
| தூமாலையம்பு | 73 | நீற்கடலுண்ட | 117 |
| தூரவிருக்குஞ் | 47 | நீறுடுமேனியர் | 161 |
| தூற்றுக்குத்தூறு | 65 | நெய்யாமென | 89 |
| தெண்ணீர்பிறை | 96 | நையாவகை | 155 |
| தெரியப்படுமதன் | 44 | பகரப்பகரவரிக் | 71 |
| தெற்கும் வடக்கும் | 154 | பங்கம்பிகைக் | 94 |
| தென்கலைமாயும் | 45 | பங்கேருகமுமிர | 26 |
| தென்பால்விளங் | 79 | படமுற்றபாம்பணி | 124 |
| தென்பூவணத்துறை | 141 | பணங்காட்டரவணி | 120 |
| தேங்காவிரிசுற்று | 159 | பணத்தரவம் | 133 |
| தேம்போதணி | 75 | பணியாறணிந் | 85 |
| தேமாவனந் | 87 | பணியேறுசெங்கை | 11 |
| தேர்கொண்டகாமன் | 2 | பயங்காணுகின்ற | 113 |
| தேறியபாங்கியர் | 48 | பரையாளும்பாகத் | 133 |
| தேன்வாய்த்த | 84 | பறியார்கருங் | 83 |
| தொண்டைபழுத்த | 29 | பன்னங்கொள்கா | 23 |
| தொல்லைப்ப்ழம் | 146 | பாட்டியலூரனை | 17 |
| தோட்டானிறைந்த | 29 | பாடியசொற்குற்றம் | 1 |
| தோற்றுநிறைமதி | 89 | பாடுஞ்சுருதி | 123 |

பாடுஞ்சுரும்பிசை ... 67
பாணுற்றவண்டு ... 116
பாதஞ்சிவக்க ... 35
பாந்தளைச்சூடுங் ... 114
பாயிலைச்சூலத் ... 117
பால்போய்முதிர்ந்து ... 60
பாலாழிநஞ்சு ... 15
பாலானசெஞ்சொற் ... 49
பாலானசொல்லி ... 21
பாவகத்தேயுறை ... 151
பாவாய்விடுங் ... 58
பாளைதிறக்கப் ... 107
பாறேயுநீற்றினர் ... 29
பிள்ளைப்பிறை ... 108
பின்னித்திரைவிழும் ... 17
பின்னுஞ்சடை ... 120
பீலிக்கருங்கலை ... 127
புகமேவுமும்மை ... 59
புத்தாம்பலூறும் ... 65
புள்ளியிறைக்குஞ் ... 122
புற்றரவயங்கொண் ... 125
புற்றிலமர்ந்தவ ... 76
புற்றிலராவணி ... 147
புன்மாலைப்போது ... 55
புன்னைகஞ்சூழ் ... 149
புன்னைப்புதிய ... 140
புனத்தேபுகாமற் ... 36
புனையங்கடுக்கை ... 61
பூகம்புனை...பொதிய ... 92
பூகம்புனை...பொருப் ... 109
பூகாமியன்றிச் ... 101
பூசிலையிட்டுச் ... 49
பூணுகமானவர் ... 149
பூரியர்கண்ணி ... 13
பெருத்தகலாது ... 22
பேர்கூடுமன்னங் ... 11
பைந்தொடியாய் ... 112
பொய்போலுவதன் ... 34
பொருசிலைவேளுக் ... 154
பொரும்பாணமாக ... 62
பொழியுங்கருணைமுகத் ... 86
பொழியுங்கருணையர் ... 103
பொற்பூதரவில் ... 31
பொற்பூவின்வாச ... 27
பொற்றேருடுதாவு ... 87
பொன்போலவிழ் ... 94
பொன்வஞ்சிபோற் ... 75
பொன்னுடைளிக்கு ... 156
பொன்னேமியான் ... 93
பொன்னேவிஞெர் ... 57
போதாயமுல்லை ... 98
போதிற்செறி ... 141
போதோவிடம்பெறு ... 22
போர்காணுஞ்சூல ... 103
போரிலங்கும் ... 100
போரூருஞ்சங்கம் ... 53
மஞ்சலம்பும் ... 104
மடைகாட்டும் ... 42
மடையாரமொய்த் ... 62
மண்ணிற்படிந்து ... 81
மண்படைத்தோன் ... 95
மருங்கோலஞ்சங் ... 140
மருத்தும்பிதேனுண் ... 52
மருந்தாழியிற் ... 55
மருப்பீருங்கொங் ... 137
மருவாதவூரன் ... 37
மழைகாட்டுமோதி ... 105
மழைதவழும்பொழி ... 72
மற்றிடங்கொண்ட ... 163
மறியாருஞ்செங்கை ... 21
மறுத்தாள்சிலசொற் ... 48
மன்மதன்றேற்ற ... 46
மன்றற்கொழுந்து ... 72
மனைவாயினிற்குங் ... 59
மாகாமவாரிக் ... 19
மாநாகமொன் ... 114
மாநாரிவேளெய்த ... 48
மாமதன்றேவி ... 69
மாமால்படைத்த ... 95
மாவிட்டமங்கை ... 150
மாலுந்துதி ... 73
மாலோதி ... 14
மாறடியாக ... 147
மானேநடவு ... 54
மிகைதோற்றிய ... 9
மின்னுவியொன்றை ... 96
மின்னுளிடத்தினர் ... 86
முக்கோல்பிடித்து ... 126

முகந்தாமரை ... 87
முகைபோனகஞ்சம் ... 158
முடிக்கும்பிறை ... 88
முத்தேவர்மாதரை ... 58
முருந்தூர்நகைச்சி ... 133
முலைப்பாலொழுக் ... 144
முள்ளியற்பன்றி ... 119
முளைக்கும்பிறை ... 31
முன்னேமுகை ... 74
முன்னேயோரின்ப ... 10
மூவர்க்குமுப்பத்து ... 138
மெத்தும்பதங் ... 118
மெய்வேளுந்தேவி ... 129
மேகாடவியை ... 25
மேதக்கசண்பக ... 162
மேவுந்தலைவர் ... 51
மைச்சென்றகூந் ... 143
மையற்பெறுநெஞ் ... 115
மைவானகந் ... 74
மொழிகண்டுகிள்ளை ... 131
மொழியாள்கிளிக் ... 46
யாகத்தழற்கு ... 84
யானென்றுநீயென் ... 52
யானேசகோரஞ் ... 9
வடிக்கேகிகர் ... 126
வடியேற்றகுலத் ... 53
வண்டஞ்சிநிற்கு ... 62
வண்டாரவாரிக்கும் ... 53
வண்டாள்கடுக்கை ... 111
வரையோதனமிரு ... 26
வல்லிக்குநாணற்ற ... 10
வழுதிசெழுந்தமிழ் ... 44
வளவன்புவிக் ... 97
வன்பணியாறணி ... 128
வன்பாலெழுங்கதி ... 130
வன்புறவேளை ... 128
வாடியெழுங்கதி ... 130
வாழிமலர்த்திரு ... 77
வாளாசுகமுங் ... 30
வான்காத்தபுள் ... 138
வானிற்கருமுகில் ... 156
வானையடுத்தகழை ... 29
விடங்காட்டிய ... 118
விடத்தேர்கிளர் ... 134
விடவாளரவணி ... 127
விடைக்குன்றுகைப் ... 11
விடையியலார்கொடி ... 44
விண்ணூர் துளிக்கு ... 148
விண்ணூர்பரிதிக்கு ... 87
விண்ணிற்கலைமதி ... 37
விண்ணிற்றிகழ் ... 28
விண்ணீர்த்திவலை ... 156
வித்தாரமேனகை ... 37
விம்பாதரத்தி ... 91
விரதத்தவர் ... 82
விரும்பார்புரஞ்... கரும்பார ... 142
விரும்பார்புரஞ்...பெரும் ... 123
விழிகாட்டுநெற்றி ... 95
விழியின்பயன் ... 121
விளக்கின்றபேர ... 6
விளையாடும்பாலனை ... 149
விளையாப்பயிருக் ... 38
விற்பிடித்தெய்த ... 135
வின்னுகமானவர் ... 110
வினையிலரேத்திய ... 109
வீணைக்குலமுழங் ... 7
வீரத்தனிமழு ... 81
வீழுஞ்சுனையிற் ... 47
வீறுதியாகப்பெருமாள் ... 1
வெங்கட்செவியணி ... 106
வெஞ்சரம்போலும் ... 98
வெண்மதியாறணி ... 127
வெம்புளினக்குன் ... 93
வெம்போதகவுரி ... 8
வெய்தானநஞ்சு ... 101
வெவ்வாயர்கொன்ற ... 125
வெள்ளையெருக்கணி ... 163
வெற்பிற்பிறந்த ... 138
வெற்றிகொள் ... 121
வெறிக்குந்தளத்தை ... 78
வெறுத்தார்கொழு ... 140
வேட்டம்பலத்து ... 76
வேதாகமஞ்சொன்ன ... 152
வேதாந்தமாய்ப்பர ... 139
வேதாவின் ... 3
வேதாவுமாயனு ... 132
வேய்வீணையாகிய ... 154
வேயும்புகை ... 124

| | | | |
|---|---|---|---|
| வேலாயுதன்றந்தை | ... 137 | வேளிடும்பூசலுங் | ... 144 |
| வேலாழிநஞ்சுண்ட | ... 77 | வேளைக்கருங்குயில் | ... 7 |
| வேலோடரசு | ... 67 | வேற்றுப்புள்வங் | ... 75 |


## தனிப்பாடல்கள்

திருவாரூர்த் தலவிஷயமாகப் பிரபந்தங்கள் சில உண்டு. அவற்றை யன்றிப் பல புலவர்களால் அவ்வப்போது பாடப்பெற்ற தனிப்பாடல்கள் பல தமிழின் பலவகை நயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. அவற்றிற் சில வருமாறு :—

1. ஆனா ரிலையே யயனுந் திருமாலும்
காணா ரடிமுடிமுன் காண்பதற்கு—மேனாள்
இரவுதிரு வாரூரி லெந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

2. திருந்தா டரவணியுந் தென்கமலை யீசர்
இருந்தாடா தென்செய் திடுவார்—பொருந்த
ஒருகாலே யல்லவே யொண்டொடிக் காவன்
றிருகாலுஞ் சந்துபோ னால்.

3. ஒருமாடு மில்லாமன் மைத்துனனா ருலகமெலாம்
உழுதே யுண்டார்
நரைமாடோ வொன்றிருக்க வுழுதுண்ண மாட்டாமல்
நஞ்சை யுண்டீர்
இருநாழி நெல்லிருக்க விரண்டுபிள்ளை தாமிருக்க
இரந்தே யுண்டீர்
திருநாளு மாயிற்றே செங்கமலைப் பதிவாழும்
தியாகனாரே.

---

1 - 2. இவ்விரண்டும் காளமேகம் பாடியவை.

1. படி ஆனாரிலையேயென இயைக்க.

2. இருந்தாடழகரென்பது தியாகேசர் திருநாமங்களுள் ஒன்று. இருகால் - இருமுறை, இரண்டு கால். சந்து - தூது, மூட்டு.

3. இச்செய்யுள் திருநாளிற் பாடியது; பிக்ஷாடனத் திருநாள் போலும்.

4. நல்லாளை யிடமருவுந் தியாகையா வுமதிடத்தில்
ஞாயங் காணேம்
கல்லாலே யெறிந்தோற்குஞ் செருப்படியா லுதைத்தோற்கும்
கடிந்து போரில்
வில்லாலே யடித்தோற்குங் கொடுத்தீரே யல்லாமல்
விழிநீர் சோர
எல்லாமுன் செயலென்றே யிருப்போருக் கியாதொன்றும்
ஈகி லீரே.

5. விற்கம்பத் தடியதனு லடியுண்டான் விண்ணவரை
வேலை கொள்ளும்
நற்கம்பத் தடியானுந் தூக்கவசை யாளூரர்
நாதன் கோயிற்
பொற்கம்பத் தடியினின்று வன்மீகத் தானையுன்னிப்
போற்றி னோர்க்குச்
சொற்கம்பத் தடியப்பான் மோட்சம்பத் தடியாகத்
தோற்றுந் தானே.

6. ஐய நீபு ரங்கள் வென்ற தொக்கு மிக்க காலனூர்
அழிய வென்ற தொக்கு மற்ற னைத்து மொக்கு மாயினும்
வெய்ய காம தகன ரென்னும் விருது சின்ன வோசையால்
வெட்கி னேனு மக்கு மிந்த விருது சொல்ல வேற்குமோ
எய்ய வாசு கங்கள் பட்டு வெருவி யோடி யரணிலா
ஏழை வீடு புக்கொ ளித்து மின்னு மாரன் வருவனச்
செய்ய மேனி பாதி யும்வெ ளிப்ப டாத கமலைவாழ்
தியாக ராய ரேசி றந்த தென்றல் வாச வழகரே.

7. வீர வெண்ட யப்ர தாபர் த்யாக ராசர் கமலைசூழ்
வீதி கண்டு பவனி கண்டு விந்தை கண்டு பந்தியாய்த்
தூர நின்ற பூவை காள டுத்து நின்ற கிள்ளைகாள்
துன்ப மேய லாது பாவி சுகம றிந்த தில்லையால்

---

5. வில் கம்பத்தடி - வில்லினுடைய நடுக்கத்தைத் தரும் தடி. நல் கம் பத்து அடியான் - நல்ல தலைகள் பத்தையுடைய அடியானாகிய இராவணன்.

மார னம்பு பட்ட காய மாறு தில்லை யிரவெலாம்
மங்கை மார்தொடுத்தசண்டை மாறு தில்லையென்செய்வேன்
ஆரி ருந்து முதவி யில்லை யென்ற னாசை யொழியுமோ
அதுவு மில்லை விதியை நொந்து மாவ தில்லை காணுமே

8. விடங்காட்டிக் கண்டத்திற் றோலுரி காட்டித்தம் மெய்யிணைப்புற
றிடங்காட்டி வாலை யொருபுறங் காட்டிவண் டேறுமலர்த்
தடங்காட் டியபொழி லாரூர்த் தியாகர் தமது பொற்றாட்
படங்காட்டி யாடிநின் றாருல கேழும் பணியென்னவே.

9. ஏழைக் கிரங்கிடும் வன்மீக நாத ரெழில்வரையில்
யாழை வருத்து மொழிமட வாய்நல் லனமிருக்க
வாழை வருக்கைக் கனியிரு பாற்குடம் வைத்திருந்துங்
கூழை யெனக்களித் தீர்மறு மாற்றங் கொடுத்திடுமே.

10. நச்சணி கண்டத்த ராரூர்த் தியாகர் நளினவெற்பிற்
கச்சணி யுந்தன மாதே யிதுவென்ன காரணமோ
அச்சுத னாமத் திரண்டா மெழுத்தி னரையெழுத்தில்
வச்சிர பாணி மனையாள் பகைவந்து வாய்த்ததுவே.

---

8. தியாகேசருக்கும் பாம்புக்கும் சிலேடை. வாலை - பராசக்தியை, வாலினை. பொற்றாட்படமென்றார், தியாகேசர் ஆடரவக் கிண்கிணித்தாளுடையாராதலின். பணி - பாம்பு.

9. புறங்காட்டலென்னுந்துறை. அனமென்றது நடையை ; வாழை : துடை. வருக்கை - பலா ; மொழி. பாற்குடம் : நகில்கள். கூழை - கூந்தல், கூழினை. மறுமாற்றம் - விடை, வியஞ்சனம் அல்லது ஊறுகாய்.

10. இது தலைவன் இரவுக் குறியிடத்தே வந்து தலைவியைக் காணாமல் தான் வந்து சென்றதற்கு அடையாளமாகப் பாதிரிமரத்தில் தாமரைப்பூ மாலையை வைத்துச் சென்றானென்பதைக் கூறுவது. அச்சுதன் நாமம் : அரி ; அதன் இரண்டாமெழுத்து 'ரி' ; அதன் அரையெழுத் தென்பது பாதிரி யென்றபடி (பாதி - அரை ; அரை ரி யென்னும் பொருட்டு.) வச்சிரபாணி - இந்திரன் ; அவன் மனையாள் சசி ; இங்கே அப்பெயர் சந்திரனைக் குறித்தது ; அதன் பகை தாமரை. பாதிரியில் தாமரை வாய்த்ததென்று கொள்க.

மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL LIBRARY
40479